# பாடத்திட்டமும்

# ஆசிரியர் வழிகாட்டியும்

# DRAFT

# தரம் 1

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

**பாடத்திட்டமும்**
**ஆசிரியர் வழிகாட்டியும்**
**தரம் 1**

# DRAFT

முதற் பதிப்பு 2016
தேசிய கல்வி நிறுவகம்

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலைநோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள், தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பணியினை ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைச் செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும்போது (மாணவர் செயன்முறை) கன்யூசியஸ் (ஊழகெரஉரைள) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  "அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர்.
  ஆனால், செயல்ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும்போது,
  கற்றுக்கொள்கின்றனர்."

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும்போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்டக் கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினைத் தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் / தகுதிப்பாடுகளை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் / தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல்மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு, புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் உளப்பாங்கு (Attitute), பகுப்பாய்வு (Analysis), செயல் / செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையை நோக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற்கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறுபேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை எல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

2016 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது, 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை 8 வருட காலம் அமுல்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட பின்னடைவு பற்றிய செயலமர்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ஆரம்பக் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள் என்பனவும் இவ் மறுசீரமைப்பின்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பது ஆசிரியர்கள் தமது வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு வழிகாட்டும் அறிவுறுத்தல் வழிகாட்டியாகும். இவ் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வது ஆசிரியர்களின் பொறுப்பாகும். ஆரம்பக் கல்வி மாணவர்கள் தமது வளர்ச்சிப் பருவத்தில் மிக முக்கியமானதொரு கட்டத்தில் இருப்பவர்கள். மாணவர்களின் ஆக்கச் சிந்தனைத் திறன், சமூகத்திறன், ஆளுமைத்திறன் என்பன கட்டியெழுப்பப்படுவது இப்பருவத்திலேயாகும். இதனால் மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களைக் கட்டியெழுப்பும்போது இவ் அறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள தகவல்களும் மேலே குறிப்பிட்ட பிள்ளை விருத்திக் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் கற்றலுக்காக அவர்களது அண்மித்த சுற்றாடலை மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வயது மாணவர்களின் கற்றல் இடம்பெறுவது முற்றுமுழுதாக சூழலோடு இடைத்தொடர்பை மேற்கொள்ளும் போதேயாகும். இதனால் மாணவர்களுக்கு கற்றல் அனுபவங்களை வழங்கும்போது அண்மித்த சுற்றாடலை மிக வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட விளையாட்டுகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தமது பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியது அவர்களது முழுமையான விருத்திக்கு அவசியமானதாகும். அவ்வாறே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான தேர்ச்சிகளை எய்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்க முடியும். அதற்காக வகுப்பறைக்குள் முடியுமானவரை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தமது வகுப்பில் கற்கின்ற கற்றல் சந்தர்ப்பங்களின்போது எந்தளவுக்கு மிகச் சிறப்பாக தொடர்புபடுகின்றனர் என்பதில் எப்பொழுதும் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கணிப்பிடுதல் எனக் குறிப்பிடப்படுகின்ற இச்செயற்பாட்டின் இறுதி விளைவாக அமைய வேண்டியது சகல மாணவர்களினதும் கற்றலை விருத்தி செய்தலாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை தயார்செய்யுமுகமாக ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் பலரதும் உதவிகள் பெறப்பட்டன. இவ் அனைவரும் வழங்கிய பங்களிப்புக்காக மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அவ்வாறே எப்பொழுதும் எங்களுக்கு வழிகாட்டுகின்ற தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இந்நூலை ஆக்குமுகமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எமது திணைக்களத்தின் சகல பணியாளர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

**கே.ஏ.டி.பி. சரத்சந்திர**
பணிப்பாளர்,
முன்பிள்ளை விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

## (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல் : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல் : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

**ஆலோசனை** : **பேராசிரியர். குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**வண.கலாநிதி மாம்புளுவாவே சுமணரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு** : **எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர் (பதில் கடமையாற்றும் பணிப்பாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை)

**தொகுப்பும் இணைப்பாக்கமும்**: **எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர் (பதில் கடமையாற்றும் பணிப்பாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை)

**கலைத்திட்டக் குழு** :
**கே.ஏ.டீ.பி. சரத்சந்திர** (ஓய்வுபெற்ற பணிப்பாளர்)
**எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**எம்.ஆர்.டபிள்யு. மத்தும** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**ஆர்.எம்.கே. த சில்வா** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**வி.என்.எஸ். உதயசந்திரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**டபிள்யு.ஜீ.எஸ். குமார** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**எஸ்.எம்.எஸ். தேசப்பிரிய** (விரிவுரையாளர்)
**எச்.டபி.டபி.எம். சஜீவா ரம்புக்வெல** (விரிவுரையாளர்)
**ஜே.ஏ.நிர்மலா தமயந்தி ஜயசிங்க**(உதவி விரிவுரையாளர்)
**எச்.ஜீ. வனசேகர** (உதவி விரிவுரையாளர்)
**கே.ஆர.எம். சகுந்தலா ரணசிங்க** (உதவி விரிவுரையாளர்)

**தாய்மொழி (தமிழ்)** : **வி.என்.எஸ்.உதயசந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்

**வளப் பங்களிப்பு** : **ரீ. சந்திரிக்கா பீரிஸ்**
விரிவுரையாளர்,
ஆங்கிலக் கல்வித்துறை.


**மொழிபெயர்ப்பு** : **எம்.எச்.எம். யாக்கூத்**
(ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி)


**அட்டைப்படம்** : **ஆர்.சி.பிரதீப்குமார் (கருத்துப் பட ஓவியர்)**

**கனணி வடிவமைப்பு** : **கே. ஜெயகாந்தன்**

**மொழிச் செம்மையாக்கமும் பதிப்பும்** : **வி.என்.எஸ்.உதயசந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக் கல்வித் துறை

# ஆரம்பக் கல்வித் திட்டம் - 2016



# புதிய கல்விச் சீர்ததிருத்தங்கள்

புதிய கல்விச்சீர்திருத்தங்கள்- மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தின் விசேட பண்புகள்.

- ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **முதன்மை நிலை** | **1** | **-** | **தரங்கள் 1 உம் 2 உம்** |
| **முதன்மை நிலை** | **2** | **-** | **தரங்கள் 3 உம் 4 உம்** |
| **முதன்மை நிலை** | **3** | **-** | **தரம் 5** |

- தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காண்பதற்கு வசதியான செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

- பொதுக்கல்வி நிலை இறுதியில் மாணவர;களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி களைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத்திட்டமாக, தேர்ச்சி சார்ந்த கலைத்திட்டமாக உள்ளது.

- பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.
  - **மொழி**
  - **கணிதம்**
  - **சமயம்**
  - **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

- பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணிதத் தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.
  எடுத்துக்காட்டு: அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள்

- இத்தேர்ச்சிகளைத் தனித்தனிப் பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளை களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்படடுள்ளது. 16 கருப்பொருள்களைக் கொண்ட சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- தரம் 1 இலிருந்து செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் இரண்டாவது தேசிய மொழியும் (சிங்களம் / தமிழ்மொழிப் பாடங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 2 இலிருந்து முறைசார ஆங்கிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

- தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட இணைச் செயற்பாடுகளுக்கும் தரம் 5 இல் பிள்ளைகளின் விருப்புக்கும், தேவைக்குமேற்பப் பொருத்தமான விருப்புப் பாடங்களைக் கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பக்கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமாக மேற்கொள்ளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:
  - **விளையாட்டுக்களும் விநோதச் செயற்பாடுகளும்**
  - **செயற்பாடுகள்**
  - **எழுத்து வேலைகள்**

முதன்மை நிலை 1 இல் விளையாட்டுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதன்மை நிலைகள் மூன்றிலும் கற்றல் - கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் படிப்படியாக மாறிச் செல்லும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளையின் முன்னேற்றம், கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிப்பதற்கு முறைசாராத கணிப்பீடு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதாவது, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தொடர் கணிப்பீட்டிற்காக முன்னுரிமை பெறுகின்ற கணிப்பீட்டுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தல்.

- யாவருக்கும் கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தரநிர்ணயமுள்ள ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர்கள் கட்டாயமாக பாண்டித்தியம் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் எதிர்பார்க்கின்ற அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு முதன்மைநிலையும் ஒரே ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிட்டுத் தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து, குறித்தவொரு நோக்குடன், நியதியுடன் அடைவை ஒப்பிட்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு, நியதிசார்ந்த அடிப்படை கணிப்பீடு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 1 இன் பிள்ளைகள் தரம் 5,6 இன் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒழுங்கமைப்புடன் செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல், முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் (சிங்களம்/தமிழ்) செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணித பாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- மாணவர்களின் உடல், உள விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத்திட்டம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஒன்றிலிருந்து அறிமுகம் செய்யப்படுகின்றது.

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வருகின்ற இந்த (திருத்தியமைக்கப்பட்ட) ஆசிரியர் வழிகாட்டியானது, தமது மாணவர்க்கு மேலும் பயனுள்ள வகையிலும் தரமிக்க வகையிலும் கற்பிக்க வழிகாட்டுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைத் தரமான கற்றலின்பால் வழிப்படுத்துவதற்கான இந்த ஆசிரியர் கைந்நூலை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆங்கில பிரதான பாடங்களும் இரண்டாம் தேசிய மொழி, செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல், விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கியுள்ளது. அத்தோடு, கணிதம், சமயம் ஆகிய பாடங்களுக்கென தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் கைந்நூல்கள் உள்ளன. முதலாம் தரத்தில் கற்கும் மாணவர்களின் கணித பாடத்திற்கென கணித செயல்நூல் ஒன்றும் தாய்மொழிப் பாடத்திற்காக பாடநூலுடன் செயல்நூல் ஒன்றும் சமய பாடத்திற்காக ஒரு பாடநூலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாணவரை இனங்காணல் எனும் வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்படும் தகவல்களைக் கருத்திற்கொண்டு மாணவர்களை, எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்வதற்காக வினைத்திறனான கற்பித்தலின்பால் வழிப்படுத்துவதற்காக இந்த ஆசிரியர் கைந்நூலைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்காக, இந்த ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ள சகல விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமாகும். மேலும், அந்தந்தப் பாடப்பகுதியின் கீழ் நாளாந்த கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் அது உங்களுக்கு துணையாகும்.

தாய்மொழிப் பாடத்தில் அந்தந்தப் பாடசாலைத் தவணையில் கற்பிக்க வேண்டியவை எவை என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது. தாய்மொழிப் பாடத்தில் செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய பரப்புகளுக்கு இடையே ஒன்றிணைப்பு நிகழுமாதலால் அத்தகைய பரப்புக்குரிய பகுதிகளை வெவ்வேறாகக் கற்பித்தலாகாது. தாய்மொழிப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது அந்தந்தச் செயற்பாட்டிற்குப் பொருத்தமானவாறு பாடநூலையும் செயல்நூலையும் துணையாகக் கொள்வது இன்றியமையாதது. அவ்வாறின்றி பாடநூலையும் செயல்நூலையும் மாத்திரம் தொடர்ச்சியாகப் பயன்படுத்திச் செல்லலாகாது. மேலும், கற்றல் - கற்பித்தலின் வெற்றிக்காக மேலும் அர்த்தபுஷ்டியான பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடம், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தின் மற்றுமொரு பிரதான பாடமாகும். மாணவர்க்கு மிக நெருக்கமாக பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சூழலின்பால் கவனஞ் செலுத்தி, 16 கருப்பொருள்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவ்வொவ் வொன்றுக்குமுரிய பல செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திற்காக ஆசிரியர் வசமுள்ள ஒரேயொரு மூலாதாரம் இந்த ஆசிரியர் கைந்நூலின் உள்ளடக்கம் மாத்திரமேயாகும். சூழலில் தேடல், வரைதல், அழகியல் ஆக்கங்கள், உடற்கல்விச் செயற்பாடுகள், உணவும் போசணையும் போன்ற பல பாடப்பரப்புகளை உள்ளடக்கிய இப்பாடமானது ஓர் ஒன்றிணைந்த பாடமும் இணைப்பாக்கப் பாடமுமாகும். ... பார்த்த விடயப்பரப்பில் உள்ளடக்கி உருப்பெற்றுள்ளது. இந்த எல்லாப் பகுதிகள் தொடர்பாகவும் ஆசிரியர் பூரண விளக்கத்துடன் செயற்படுவது முக்கியமானது.

ஆக்கபூர்வமான ஆசிரியர் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறைப்பட்டிராது புதிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு மாணவர்க்கு மேலும் பயனுள்ள கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கிச் செயற்படுவதற்கு இந்த ஆசிரியர் கைந்நூல் தாராளமாக வாய்ப்பளிக்கிறது.

கற்றல் - கற்பித்தல் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக தமது சுற்றுப்புறத்தில் பெறத்தக்க இயற்கையான வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி அவற்றை ஆக்கிக் கொள்வதில் கவனஞ் செலுத்துவது முக்கியமானது. மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தி மாணவரை செயலூக்கத்துடன் கற்றலில் பங்குகொள்ளச் செய்து களிப்புடன் கற்க வகை செய்வதும் இன்றியமையாததாகும்.

செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தை, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் மட்டுமன்றி கணித பாடத்தின்போதும் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியை மாணவர்க்கு பரிச்சயப்படுத்துவதற்காக நாளாந்த வாழ்க்கையில் பயன்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைச் கற்றலுடன் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் அடங்கியுள்ள கருப்பொருள்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தேசிய மொழியை (சிங்களம்) பயன்படுத்துவது தொடர்பாகவும் இந்த ஆசிரியர் கைந்நூலில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அது சார்ந்த பாடத்திட்டமும் பல செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளதோடு அவற்றைப் பொருத்தமானவாறு பொருத்தியமைத்து, ஒழுங்கமைத்து மாணவர்க்கு வழங்குவது அவசியமாகும். செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடப் பகுதிகளைக் கற்பிக்கும்போது பொருத்தமான கற்றல் - கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகும். இவ்வாறாக ஒவ்வொரு பாடப்பகுதியின் மூலமும் எதிர்பார்க்கப்படும் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை ஆசிரியர் கணிப்பிட்டு தேவையான வழிகாட்டலையும் உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

முறைமையில் வகையிலும், முறைசார்ந்த வகையிலும் நடத்தும் கணிப்பீட்டுச் செயன்முறையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளவாறான மாணவரின் வலிவு - நலிவுகள் தொடர்பாக நாளாந்தம் நடாத்தும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது தேவையான வழிகாட்டலை வழங்குதல் வேண்டும். மாணவர்களைக் கணிப்பிடுவதற்காக உரிய கணிப்பீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணிப்பீட்டுப் படிவங்கள் இந்த ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ளன.

இப்பணியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக அந்தந்தப் பாடத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு அந்நேரத்தை உச்சளவில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும்.

முதலாம் தரத்தில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் தன்மையும் அவர்களின் கற்றல் கோலமும் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும். எனவே, அது தொடர்பாக உணர்தன்மையுடன் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒவ்வொருவரும் கவனஞ் செலுத்தி மாணவ மாணவியரை நன்கு இனங்கண்டு செயற்படுவர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
கலைத்திட்ட இணைப்பாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# நேர ஒதுக்கீடு
## முதன்மை நிலை ஒன்று (தரம் 1,2)

| | பாடம் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தாய் மொழி | 5.00 மணித்தியாலம் |
| 2. | கணிதம் | 3.30 மணித்தியாலம் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5.30 மணித்தியாலம் |
| 4. | சமயம் | 1.15 மணித்தியாலம் |
| 5. | இரண்டாம் தேசிய மொழி | 30 நிமிடம் |
| 6. | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு15நிமி) |
| 7. | ஓய்வு | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு15நிமி) |
| 8. | உணவு வேளை | 50 நிமிடம் (நாளொன்றுக்கு 10நிமி) |
| 9. | உடல் நலச் செயற்பாடுகள் | 1.40 மணித்தியாலம் (நாளொன்றுக்கு20நிமி) |
| 10. | பாடம் தொடர்பான செயற்பாடு | 30 நிமிடம் (வாரம் ஒருநாள்) |
| வாரத்திற்கான மொத்தக் காலம் | | **21 மணித்தியாலம் 15 நிமிடங்கள்** |

## தரம் ஒன்று - பாட உள்ளடக்கமும் ஆசிரியர் வழிகாட்டியும்


1.0 தாய்மொழி (தமிழ்) - அறிமுகமும் பாடத்திட்டமும் 01

தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி 14

2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - அறிமுகமும் பாடத்திட்டமும் 101

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - ஆசிரியர் வழிகாட்டி 116

01. நாமும் பாடசாலையும் 116

02. எமது வீடு 120

03. தோட்டத்திற்கு வரும் பிராணிகள் 123

04. நீருடன் விளையாட்டு 127

05. புத்தாண்டுக் காலம் 131

06. நாம் காணும் வானம் 134

07. நாம் உண்பவையும் குடிப்பவையும் 137

08. தகவல்கள் கிடைக்கும் வழிகள் 142

09. சுற்றுப் புறத்தில் நிகழும் மாற்றங்கள் 145

10. எமது நல்வாழ்வு 149

11. எனக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள் 154

12. பிரயாணம் 158

13. ஒளியுடன் / வெளிச்சத்துடன் விளையாட்டு 163

14. மனிதர் வேலை செய்யும் இடங்கள் 166

15. சுற்றுப் புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்கள் 170

16. எமது உதவி தேவைப்படுவோர் 173

3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் 176

4.0 இரண்டாவது தேசிய மொழி - பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் 196

5.0 விளையாட்டு முற்றம் 214

6.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் 218

7.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் 226


**கணிதம், சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்களும் ஆசிரியர் வழிகாட்டிகளும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.**

# 1.0 தாய் மொழி (தமிழ்) - தரம் 01

## 1.0 அறிமுகம்

செவிமடுத்தல். பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவை இரு வகைப்படும். செவிமடுத்தல் வாசித்தல் என்பன உள்ளீட்டுத் திறன்களாகும். எழுதுதல், பேசுதல் என்பன வெளியீட்டுத் திறன்களாகும். உள்ளீட்டுத் திறன்களை விருத்தி செய்தலானது, மாணவரின் வெளியீட்டுத் திறன்களின் விருத்தியில் பங்களிப்புச் செய்யும். இத்திறன்களின் விருத்திக்குப் பாடசாலைச் சூழலும் புறச்சூழலும் துணைநிற்கும். எனவே அடிப்படையான மொழித் திறன்களை விருத்தி செய்வதில் ஆரம்பக் கல்வியின் வகிபாகம் அளப்பரியதாகும்.. அடிப்படையான மொழித்திறன்கள் ஒழுங்காக முன்வைப்பதற்காக அவை வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள போதிலும் ஒன்றிணைத்த வகையில் கற்பிக்கத்தக்கவாறாக அவற்றை முன்வைத்தல் முக்கியமானதாகும்.

தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் போது தொடர்பாடல் திறன்களின் முதன்மையான ஓர் அம்சமாக எழுத்தறிவு இடம்பெறுகின்றது. கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், விளங்கிக் கொள்வதற்காக வாசித்தல், சரியாகவும், தெளிவாகவும் எழுதுதல், விளைதிறனுடையவாறு கருத்துப் பரிமாறுதல் ஆகிய தேர்ச்சிகளின்பால் மாணவரை இட்டுச் செல்வது எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதானமாக மேற்படி தொடர்பாடல் தேர்ச்சிகளுக்கு மேலதிகமாக, சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள், வேலையுலகுக்கு ஆயத்தமாதல் தேர்ச்சிகள், ஒழுகலாறு மற்றும் சமயம் சார்ந்த தேர்ச்சிகள், விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் தொடர்பான தேர்ச்சிகள், போசாக்கு மற்றும் வளர்ச்சி தொடர்பான தேர்ச்சிகள், கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகிய ஏனைய தேர்ச்சிகளும் விருத்தியடையும் வகையில் பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தற் செய்முறையை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாம் முதன்மை நிலையில் உயிரோட்டமான அடிப்படை மொழித்திறன்களாகிய செவிமடுத்தல் மற்றும் பேசுதலுக்குரிய களிபூட்டத்தக்க கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் படிப்படியாக வாசித்தல் எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களை விருத்திசெய்து கொள்வது அவசியமாகும்.

இரண்டாம், முதன்மை நிலையின் போது அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்தவாறு, குறிப்பாக செம்மையாக மொழியை விருத்தி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்றாம் முதன்மை நிலையின் இறுதியில், குறிப்பாக ஆக்கபூர்வமாகப் பேசுதல் மற்றும் ஆக்கபூர்வமாக எழுதுதல் தொடர்பான உயர்மட்டப் பாண்டியத்தியம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தாய்மொழியை நேசிக்கும் பிரசைகளின் முதன்மையான மொழி அத்திவாரத்தையும், இடைநிலைப் பருவத்தில் தாய்மொழியைப் பயில்வதற்குத் தேவையான முதன்மை அடித்தளத்தையும் இடுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.0 தரம் 1-5 இற்கான மொழித் தேர்ச்சிகள்

- கிரகித்துத் துலக்குவதற்காகச் செவிமடுப்பார்.
- செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.

- நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார்.
- விளக்கத்துடனும் தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார்.
- பேசதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- தொடர்பாடலுக்காகப் பேசுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வாசிப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.
- எழுத்துத் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.
- தொடர்பாடலுக்காக எழுதுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- கற்றல் விருத்திக்காக எழுதுவார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

## 4.0 கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

தரம் ஒன்று மொழிப் பாடத்துக்கான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது, வழிப்படுத்திய விளையாட்டுக்கள் கூடுதலாகவும் செயற்பாடுகள் போதிய அளவிலும், எழுத்துப் பயிற்சிகள் குறைந்த அளவிலும் இடம்பெறச் செய்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் சிறுகுழுக்களாக, சோடிகளாக பெரிய குழுக்களாக வகுப்பு வாரியாக, வேண்டியவிடத்துத் தனித்தனியாகச் செயற்படுத்துவதற்கும் இயங்குவதற்கும் ஏற்றவாறு செயற்பாடுகளைத் திட்டமிடுதல் வேண்டும்.

இவற்றோடு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது பாடநூல், செயல் நூல் ஏனைய வாசிப்பு நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான பொருத்தமான சந்தர்ப்பங்களிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வழிப்படுத்திய விளையாட்டுக்கள், செயற்பாடுகள் எழுத்து வேலைகள் தொடர்பான மாதிரிகளும் வழிகாட்டல்களும் இவ்வழிகாட்டியில் அடங்கியுள்ளன.

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தாய்மொழிப் பாட விருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உதவும் வகையில் பல வேலைத்திட்டங்கள் பாடசாலையில் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:

- காலைக் கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்பு மன்றங்கள்
- கலை நிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சமய நிகழ்ச்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை சுற்றுலா போன்றவை
- ஆசிரியர், பெற்றோர் தினம் போன்றவை

இவற்றைப் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் பாடசாலைக் கொள்கையாக அமைதல் வேண்டும். பாடசாலைச் சமூகமும் சமுதாயமும் இதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## 6.0 கணிப்பீடு

தரம் ஒன்றில் தாய்மொழிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையைவிட முறைசாராத கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களின் துலங்கல்களை அவதானித்து மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்குதல் வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது குறிப்பாக வழிப்படுத்திய விளையாட்டுக்கள் (Guided Play) செயற்பாடுகளின் போது, அவதானித்தல் (Observation) உற்றுநோக்குதல் (Critical Observation) வாய்மொழி வினாக்கேட்டல் (Oral questioning) என்பவை மூலம் தரம் ஒன்று மாணவர்களுக்கான தேர்ச்சிகள் அடையப்படுகின்றனவா அல்லது விருத்தி அடைகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாகக் கணிப்பீடு செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| முன் மொழித் திறன்கள் | 01. கேட்டல் பிரித்தறிகைத் திறன்களை வெளிக்காட்டுவார். | • வகுப்பில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்<br>• பாடசாலைக்கு வெளியே சுற்றாடலில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்<br>• அருகில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்<br>• தூரத்தில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்<br>• வகுப்பறையில் செயற்கையாக எழுப்பப்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்<br>• இயற்கை ஒலிகளைத் தவிர ஏற்படும் பல்வேறு ஒலிகளை இனங்காணல் |
| | 02. பார்வைப் பிரித்தறிகைத் திறன்களை வெளிக்காட்டுவார். | • ஒத்த உருவங்களைப் பொருத்துதல் / தொடர்புபடுத்துதல்<br>• வித்தியாசமான உருக்களைக் கண்டுபிடித்தல்<br>• உருத் தொகுதியொன்றில்<br>- சிறிய, பெரிய உருவை இனங்காணல்<br>- ஏதேனும் குறைபாடுடைய உருவை இனங்காணல்<br>- கூடுதலான அம்சமொன்றை இனங்காணல்<br>- அமைவு, திசை வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்<br>- அமைவிடம் வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்<br>- இரண்டு படங்களுக்கிடையே குறைந்தது மூன்று வித்தியாசங்களை இனங்காணல் |
| | 03. உள, இயக்கத் திறன்களை வெளிக்காட்டுவார். | • நுண் தசைநார் விருத்திக்கான பயிற்சிகள்<br>- கிழித்தல், வெட்டுதல், கோர்த்தல், ஒட்டுதல்<br>- உருண்டையாக்குதல், பிசைதல், பின்னுதல், அடுக்குதல்<br>- வரைதல், நிறந் தீட்டுதல், மடித்தல், அலையாக்குதல்<br>• பெருந் தசைநார் விருத்திக்கான பயிற்சிகள்<br>- ஓடுதல், நுழைதல், தென்னஞ் சிரட்டைப் பொய்க்கால், வனைதல்<br>- ஊஞ்சலாடுதல், ஏறுதல், பந்து விளையாடுதல், இழுத்துச்செல்லல், |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | | - டயர் உருட்டுதல், மிதித்தல், விதைப்பை விளையாடுதல்<br>• கண், கை இசைவாக்கப் பயிற்சிகள் |
| | 04. வாசிப்பு முன் திறன்களை வெளிக்காட்டுவார். | • சித்திரப் புத்தகங்களையும் சித்திரங்களையும் வாசித்தல்<br>• தனிப் படங்களைப் பெயரிடுதல்<br>• ஒத்த எழுத்துக்களை இணைத்தல்<br>• படத்தைப் பெயர் குறித்து அதன் முதலெழுத்தைக் கூறுதல்<br>• ஒரே எழுத்தில் தொடங்கும் படங்களைப் பெயர் குறித்தல் |
| | 05. எழுத்து முன் திறன்களை வெளிக்காட்டுவார். | • வரையறைக்குள் நிறந் தீட்டுதல்<br>• பொருட்களைச் சுற்றி வரைதல்<br>• சுவடு வரைதல்<br>• கோடுகள் வரைவதன் ஊடாக வழியைக் கண்டுபிடித்தல்<br>• புள்ளிக் கோடுகள், முறிகோடுகளை இணைத்து உருவங்கள் வரைதல்<br>• எழுத்துக்களுக்குரிய கோடுகள், வளைகோடுகளை வரைதல்<br>• எழுத்துக்களின் வடிவங்களின் மீது வரைதல்<br>• எழுத்துக்களுக்குரிய வடிவங்களை அச்சுப் பதித்தல்<br>• எழுத்துக்களுக்குரிய வடிவங்களை வரைதல்<br>• எழுத்துக்களுக்குரிய வடிவங்களை கோலமொன்றாக வரைதல்<br>• புள்ளிக் கோட்டினால் வரையப்பட்ட எழுத்துக்களின் மீது வரைதல்<br>• மணல் தட்டில் எழுதுதல்<br>• எழுத்துக்களின் மீது எழுதுதல் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_1$ $S_1$ | $L_1$ கிரகித்துத் துலக்குவதற்காகச் செவிமடுப்பார். | $L_1$ <br>• பேசுவதைச் செவிமடுத்தல்<br>• படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்<br>• கதை சொல்வதைச் செவிமடுத்தல்<br>• கதைப் படங்களைப் பார்த்து கதை சொல்வதைச் செவிமடுத்தல்<br>• எழுத்தொலிகள்<br>• குறில், நெடில் எழுத்தொலிகள்<br>• அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை, பன்மைச் சொற்கள் (படங்கள்) |
| | $S_1$ விளக்கத்துடன், தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார். | $S_1$ <br>• சுயமாகப் பேசுதல்<br>• படம் பார்த்துப் பேசுதல்<br>• சுயமாகக் கதை சொல்லல்<br>• கதைப் படங்களைப் பார்த்து கதை கூறுதல்<br>• எழுத்தொலிகள்<br>• குறில், நெடில் எழுத்தொலிகள்<br>• அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை, பன்மைச் சொற்கள் (படங்கள்) |
| $R_1$ $W_1$ | $R_1$ வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | $R_1$ <br>• படம் பார்த்து வாசித்தல்<br>• கதைப் படங்களை வாசித்தல்<br>• எழுத்துக்களின் துணையுடன் படங்களை வாசித்தல்<br>• எழுத்துக்களை வாசித்தல் (அறிமுகம்)<br>• குறில், நெடில் எழுத்துக்களை வாசித்தல்<br>• படங்ககளை வாசித்தல்<br>• அன்றாடம் பயன்படுத்தும் சொற்களின் ஒருமை, பன்மைப் படங்களை வாசித்தல் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | $W_1$ எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | $W_1$ • எழுத்து முன்பயிற்சி<br>- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி<br>- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி<br>• எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்<br>- இரட்டை றூள், நான்கு றூள் கொப்பிகளில் எழுத்துக்களை படிமுறையில் எழுதுதல் (எழுதுவதைச் சீராக்க)<br>- எழுத்துக்களின் அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து எழுதுதல்<br>• முதல் எழுத்துக்களை (30) படிமுறையில் இரட்டை றூள், நான்கு றூள் கொப்பிகளில் எழுதுதல்<br>• குறில், நெடில் எழுத்துக்கள் எழுதுதல்<br>• அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை, பன்மைச் சொற்களை எழுதுதல் (படங்களின் துணையுடன்)<br>• படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்<br>. |
| $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | $L_2$ செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_2$ • படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்<br>- ஈரெழுத்துச் சொற்கள்<br>- மூவெழுத்துச் சொற்கள்<br>- நான்கெழுத்துச் சொற்கள் |
| | $S_2$ பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_2$ • படம் பார்த்துப் பேசுதல்<br>- ஈரெழுத்துச் சொற்கள்<br>- மூவெழுத்துச சொற்கள்<br>- நான்கெழுத்துச் சொற்கள் |
| | $R_2$ வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_2$ • படம் பார்த்துப் வாசித்தல்<br>- ஈரெழுத்துச் சொற்கள்<br>- மூவெழுத்துச சொற்கள்<br>- நான்கெழுத்துச் சொற்கள்<br>• உரத்து வாசித்தல் (சொற்கள்) |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | $W_2$ எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_2$ • படம் பார்த்துப் எழுதுதல் (சொற்கள்)<br>- ஈரெழுத்துச் சொற்கள்<br>- மூவெழுத்துச சொற்கள்<br>- நான்கெழுத்துச் சொற்கள்<br>• உறுப்பமைய எழுதுதல் (சொற்கள்) |
| $L_3$ $S_3$ | $L_3$ விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார். | $L_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் |
| | $S_3$ விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார். | $S_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் |
| $R_3$ $W_3$ | $R_3$ விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வாசிப்பார். | $R_3$ • சிறுவர் பாடல்கள் (சொற்கள்)<br>• சிறுவர் கதைகள் (சொற்கள்)<br>• உரையாடல்கள் (சொற்கள்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (சொற்கள்)<br>• சித்திரங்கள் (கற்ற பாடல்கள்/ கதைகளுடன் தொடர்புடைய) |
| | $W_3$ விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்/ வரைவார். | $W_3$ • சிறுவர் பாடல்கள் (சொற்கள்)<br>• சிறுவர் கதைகள் (சொற்கள்)<br>• உரையாடல்கள் (சொற்கள்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (சொற்கள்)<br>• சித்திரங்கள் (கற்ற பாடல்கள்/ கதைகளுடன் தொடர்புடைய) |
| $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | $L_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_4$ • பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல் பரிமாற்றம்<br>- சுய விபரம் |
| | $S_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார். | $S_4$ • பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | | - கட்டளைகள் / ஏவல்கள்<br>- தகவல் பரிமாற்றம்<br>- சுய விபரம் |
| | $R_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார். | $R_4$ ● பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல் பரிமாற்றம்<br>- சுய விபரம் |
| | $W_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார். | $W_4$ ● பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல் பரிமாற்றம்<br>- சுய விபரம் |
| $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | $L_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_5$ ● சிறிய கதைகள்<br>● ஒலி மரபுச் சொற்கள<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள் (விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $S_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார். | $S_5$ ● சிறிய கதைகள்<br>● ஒலி மரபுச் சொற்கள<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள் (விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $R_5$ சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார். | $R_5$ ● சிறிய கதைகள்<br>● ஒலி மரபுச் சொற்கள்<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள் (விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $W_5$ சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார். | $W_5$ ● கதையில் வரும் சொற்கள்<br>● ஒலி மரபுச் சொற்கள<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள் (விளக்கம்)<br>● சொல்வதெழுதல் (தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்) |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_6$ $S_6$ | $L_6$ தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார். | $L_6$ <br>• நண்பர்கள்<br>• ஆசிரியர்கள்<br>• விளையாட்டுக் கடை(மாதிரி)<br>• சந்தை (உரையாடல்)<br>• தொலைபேசி (உரையாடல்) |
| | $S_6$ தொடர்பாடலுக்காகப் பேசுவார். | $S_6$ <br>• நண்பர்கள்<br>• ஆசிரியர்கள்<br>• விளையாட்டுக் கடை (மாதிரி)<br>• சந்தை (உரையாடல்)<br>• தொலைபேசி (உரையாடல்) |
| $R_6$ $W_6$ | $R_6$ தொடர்பாடலுக்காக வாசிப்பார். | $R_6$ <br>• பொருட்களின் பெயர்கள் (வகுப்பறை)<br>• உணவுப் பட்டியல் (சிற்றுண்டிச்சாலை)<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |
| | $W_6$ தொடர்பாடலுக்காக எழுதுவார். | $W_6$ <br>• பொருட்களின் பெயர்கள் (வகுப்பறை)<br>• உணவுப் பட்டியல் (சிற்றுண்டிச்சாலை)<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | $L_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_7$ <br>• கதைப் படங்கள் (விபரித்தல்)<br>• சுயசரிதை<br>• ஆத்திசூடி<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $S_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_7$ <br>• கதைப் படங்கள் (விபரித்தல்)<br>• சுயசரிதை<br>• ஆத்திசூடி<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $R_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_7$ <br>• கதைப் படங்கள் (விபரித்தல்)<br>• சுயசரிதை<br>• ஆத்திசூடி<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | $W_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_7$<br>• கதைப் படங்கள் (விபரித்தல்)<br>• சுயசரிதை<br>• ஆத்திசூடி<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | $L_8$ கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_8$<br>• வரைந்த சித்திரங்கள்<br>• பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி<br>• சுற்றுலா |
| | $S_8$ கற்றல் விருத்திக்காகப் பேசுவார். | $S_8$<br>• வரைந்த சித்திரங்கள்<br>• பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி<br>• சுற்றுலா |
| | $R_8$ கற்றல் விருத்திக்காக வாசிப்பார். | $R_8$<br>• வரைந்த சித்திரங்கள்<br>• பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி<br>• சுற்றுலா |
| | $W_8$ கற்றல் விருத்திக்காக எழுதுவார். | $W_8$<br>• வரைந்த சித்திரங்கள்<br>• பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி<br>• சுற்றுலா |
| $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | $L_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார். | $L_9$<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $S_9$ கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார். | $S_9$<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | $R_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார். | $R_9$ • ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $W_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார். | $W_9$ • ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | $L_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார். | $L_{10}$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல் (செவிமடுத்தல்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $S_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார். | $S_{10}$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல் (செவிமடுத்தல்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $R_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார். | $R_{10}$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல் (செவிமடுத்தல்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $W_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார். | $W_{10}$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல் (செவிமடுத்தல்)<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |

# தாய்மொழி தமிழ்
## ஆண்டுத் திட்டம்

| முதலாம் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 01. | **முன்மொழித் திறன்கள்**<br>• கேட்டல் பிரித்தறிகை<br>• பார்வை பிரித்தறிகை<br>• உள இயக்கத் திறன்கள்<br>• வாசிப்பு முன் திறன்கள்<br>• எழுத்து முன் திறன்கள்<br>$L_1$ $S_1$<br>$R_1$ $W_1$ | |

| இரண்டாம் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 02. | $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | |
| 03. | $L_3$ $S_3$<br>$R_3$ $W_3$ | |
| 04. | $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | |
| 05. | $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | |
| 06. | $L_6$ $S_6$<br>$R_6$ $W_6$ | |

| மூன்றாம் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 07. | $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | |
| 08. | $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | |
| 09. | $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | |
| 10. | $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | |

**தேர்ச்சி : கேட்டல் பிரித்தறிகைத் திறன்களை வெளிக்காட்டுவார்.**

**உள்ளடக்கம் :**

- வகுப்பில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்
- பாடசாலைக்கு வெளியே சுற்றாடலில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்
- அருகில் ஏற்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்
- தூரத்தில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்
- வகுப்பறையில் செயற்கையாக எழுப்பப்படும் ஒலிகளை இனங்கண்டு பெயர் குறித்தல்
- இயற்கை ஒலிகளைத் தவிர ஏற்படும் பல்வேறு ஒலிகளை இனங்காணல்

**கற்றற் பேறு :**

- ஒலிகளின் வித்தியாசங்களைச் செவிமடுப்பதன் மூலம் நுண்ணிய ஒலி வேறுபாடுகளை இனங் கண்டு கொள்வார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள் :**

- ஓகன், ஒலிநாடா, ஒலிப்பதிவுக்கருவி, கணினி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக அமரச் செய்யுங்கள். மாணவர்களை சில நிமிடங்கள் கண்களை மூடிக் கொண்டு வகுப்பறையில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுக்கச் செய்யுங்கள். முதலில் நீங்கள் செவிமடுத்த ஒலிகளை மாணவர்களுக்கு கூறுங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு குழுக்களாகக் கூறச் செய்யுங்கள். அவரக்ளை கைதட்டி, உற்சாகமூட்டுங்கள். பின்னர் எழுமாற்றாக மாணவர்களை அழைத்து அவ்வொலிகளை கூறச் செய்யுங்கள். இவ்வொலிகளை ஒலித்துக்காட்டச் செய்யுங்கள்.

**செயற்பாடு - II**

- மாணவர்களை பாடசாலைக்கு வெளியே அழைத்துச் செல்லுங்கள். அம்மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி சுற்றாடலில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுக்கச் செய்யுங்கள். அவ்வொலிகள் எவற்றினுடையவை என்பதை இனங்கண்டு கூறச் செய்யுங்கள். அதன் பின்னர் மாணவர்கள் கூறாது விட்ட ஒலிகளை நீங்கள் கூறுங்கள். அதன் பின்னர் மாணவர்களைக் கண்களை மூடிக் கொண்டு சில நிமிடங்கள் செவிமடுக்குமாறு கூறுங்கள். கண்களைத் திறக்காமல் தூரத்தே கேட்கும் ஒலிகளை அனுமானித்துக் கூறச் செய்யுங்கள். தேவையேற்படும் இடத்து மாணவர்களுக்கு உதவுங்கள்.


**செயற்பாடு - III**

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே பொது இடமொன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். வட்டமாக நிற்கச் செய்யுங்கள். மிக அருகில் மட்டும் கேட்கும் ஒலிகளைக் கூறச் செய்யுங்கள். எல்லா மாணவர்களும் விடை கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களாக மிக அருகில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு கூற ஆர்வமூட்டுங்கள். (ஒலிகளை இனங் காண்பதற்கு மாணவர்கள் அமைதியைப் பேணுவது அவசியம்)

  எடுத்துக்காட்டு :
  
  கூவி விற்போரின் ஒலிகள்
  வாகனங்களின் ஒலிகள்
  பறவைகளின் ஒலிகள்

**செயற்பாடு - IV**

- மாணவர்களை மைதானத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். கீழே காட்டப்பட்டுள்ளவாறு மாணவர்களை ஆறு வரிசையில் நிற்கச் செய்யுங்கள்.



வரிசையில் நிற்பவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்த படி படத்தில் அம்புக்குறியூடாகக் காட்டியபடி நிற்கச் செய்யுங்கள். தூரத்தில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு கூறச் செய்யுங்கள். மாணவர்கள் கூறிய பின் கண்களை மூடிக் கொண்டு செவிமடுத்துக் கூறச் செய்யுங்கள். அருகில் கேட்கும் ஒலிகளைக் கூறினால் தூரத்தில் கேட்கும் ஒலி ஒன்றை செவிமடுக்கச் செய்து அவ்வொலிதான் தூரத்தில் கேட்கும் ஒலி என விளக்கி செவிமடுக்கச் செய்யுங்கள். இச் செயற்பாட்டின் ஊடாக மாணவர்களின் கேட்கும் திறனை ஆசிரியர் இலகுவாக கணிப்பிட முடியும் எனபதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - V**

- வகுப்பறையில் செயற்கையாக எழுப்பப்படும் ஒலிகளை மாணவர்களுக்கு விளக்குங்கள். அவ்வொலிகளை மாணவர்கள் இனங்காணுகின்றார்களா என அவதானியுங்கள். வகுப்பறையில் அமர்ந்தவாறே செவிமடுக்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

  எடுத்துக்காட்டு :

  வயலின், புல்லாங்குழல், சங்கு. மணி. மிருதங்கம், சலங்கை, மத்தளம், சல்லாரி,

**செயற்பாடு - VI**

- மாணவர்களுக்கு இயற்கை ஒலிகளைத் தவிர செயற்கை ஒலிகளைச் செவிமடுக்கச் செய்வதற்காகப் பாடசாலையில் உள்ள ஓகன் வாத்தியக் கருவியைப் பயன்படுத்துங்கள். ஓகன் வாத்தியக் கருவி மூலம் பல்வேறு இசைக்கருவிகளில் ஒலிகளை எழுப்பி அதனை மாணவர்கள் இனங்கண்டு கூறச் செய்யுங்கள். ஓகன் மூலம் மழை மின்னல், இடி, வாகன ஒலி போன்றவற்றை எழுப்பி அவற்றை மாணவர்கள் இனங்கண்டு கூறவும் அவ்வொலிகளை தாமாக முன்வந்து எழுப்பிக் காட்டவும் ஊக்கப்படுத்துங்கள். ஓகன் இல்லாவிடில் கணினியைப் பயன்படுத்துங்கள். ஆசிரியரால் பல்வேறு ஒலிகளை எழுப்ப முடியுமாயின் அதனைப் பயன்படுத்த முடியும். ஒலிப்பதிவு செய்தும் பயன்படுத்த முடியும்.

**கணிப்பீடு:-**

- வகுப்பில் கேட்கும் ஒலிகளை இனங்காணல்
- பாடசாலைக்கு வெளியே சுற்றாடலில் கேட்கும் ஒலிகளை இனங்காணல்
- தூரத்தில் கேட்கும் அண்மையில் கேட்கும் ஒலிகளை இனங்காணல்
- செயற்கை ஒலிகளை இனங்காணல்

ஆகிய திறன்களை கணிப்பீடு செய்க.

**தேர்ச்சி :**
- பார்வைப் பிரித்தறிகைத் திறன்களை வெளிக்காட்டுவார்.

**உள்ளடக்கம் :**
- ஒத்த உருவங்களைப் பொருத்துதல்/ தொடர்புபடுத்துதல்
- வித்தியாசமான உருக்களைக் கண்டுபிடித்தல்
- உருத் தொகுதியொன்றில்
  - சிறிய, பெரிய உருவை இனங்காணல்
  - ஏதேனும் குறைபாடுடைய உருவை இனங்காணல்
  - கூடுதலான அம்சமொன்றை இனங்காணல்
  - அமைவு, திசை வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்
  - அமைவிடம் வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்
  - இரண்டு படங்களுக்கிடையே குறைந்தது மூன்று வித்தியாசங்களை இனங்காணல்


**கற்றற் பேறுகள் :**
- வித்தியாசங்களை இனங்காண்பதன் ஊடாக பல்வேறு வேற்றுமைகளையும் ஒற்றுமை களையும் வேறுபடுத்தி அறிந்து கொள்வார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள்:-**
- பட அட்டைகள், உண்மைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் (உண்மைப் பொருடக்ள் போன்று)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


**செயற்பாடு - I**
- மாணவ குழுக்களுக்கு வழங்கக்கூடிய சோடிக் கோட்டுப் பட அட்டைகள் பத்தினைத் தயாரித்து கொள்க. ஒவ்வொரு குழுவுக்கும் சோடிக் கோட்டுப்பட அட்டைகள் கொண்ட அட்டைப் பெட்டிகளை வழங்குங்கள். அவர்கள் அவற்றில் உள்ள ஒத்த கோட்டுருவப் படங்களைத் தெரிவு செய்ய வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*



**செயற்பாடு - II**
- மாணவர்களுக்கு வழங்கக் கூடிய நான்கு கோட்டுருவப் படங்கள் கொண்ட ஐந்து தொகுதிகளைத் தயார் செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு கோட்டுருவப் படத்தொகுதியிலும் ஒரு கோட்டுருவப் படம் வேறுபட்டதாக இருத்தல் வேண்டும். அப்படத்தை மாணவர்கள் சோடியாகவோ குழுவாகவோ தெரிவு செய்ய வாய்ப்பு வழங்குங்கள். குழுக்கள் அல்லது சோடிகளின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துப் பெட்டிகளில் இட்டு வழங்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.


*எடுத்துக்காட்டு:*



**செயற்பாடு - III**

- உருத்தொகுதி ஒன்றில் சிறிய, பெரிய உருக்களை இனங்காணும் செயற்பாட்டை முன்வையுங்கள். ஏ4 தாளில் சிறிய, பெரிய கோட்டுருப் படங்களைத் தெரிவு செய்து அமைத்துக் கொள்ளுங்கள். அவற்றில் இருந்து மாணவர்கள் சிறிய, பெரிய உருக்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.


*எடுத்துக்காட்டு:*



**செயற்பாடு - IV**

- ஏதேனும் குறைபாடுடைய உருவை உருத்தொகுதியில் இருந்து தெரிவு செய்வதற்காக செயற்பாட்டை குழுக்களாக்கி முன்வையுங்கள். ஏற்கனவே குழுக்களாக்கி வழங்கிய செயற்பாட்டைப் போன்றே இச் செயற்பாட்டையும் மேற்கொள்ளுங்கள்.


*எடுத்துக்காட்டு:*



செயற்பாடு - V

- உருத் தொகுதி ஒன்றில் கூடுதலாக அம்சமொன்றை இனங்காணும் செயற்பாடு ஒன்றை முன்வையுங்கள். (ஏற்கனவே வழங்கிய செயற்பாடுகளைப் போன்று)


*எடுத்துக்காட்டு:*



செயற்பாடு - VI

- உருத்தொகுதி ஒன்றில் அமைவு, திசை வித்தியாசமாக உள்ள உருவைத் தெரிவு செய்வதற்கான செயற்பாட்டை முன்வையுங்கள்.


*எடுத்துக்காட்டு:*



செயற்பாடு - VII

- உருத் தொகுதியொன்றில் அமைவிடம் வித்தியாசமாக உள்ள உருவைத் தெரிவு செய்யும் செயற்பாட்டை முன்வையுங்கள்.


*எடுத்துக்காட்டு:*



செயற்பாடு - **VIII**

- மாணவர்களைச் சோடிகளாக்கி இச்செயற்பாட்டை முன்வையுங்கள். மாணவர்களின் வயது மட்டத்திற்கும் விருப்புக்கும் பொருத்தமான ஒரு கோட்டுருவைக் காட்சிப்பட மொன்றைத் தெரிவு செய்யுங்கள். அதைப் பிரதி எடுத்து அக்கோட்ருவக் காட்சிப்படத்தில் ஐந்து மாற்றங்களைச் செய்து கொள்ளுங்கள். இரு படங்களையும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்கி முதற்படத்தில் இல்லாத வேறுபாட்டை இரண்டாம் படத்தில் கண்டுபிடித்து வட்டமிட வழிப்படுத்துங்கள். ஐந்து வேறுபாடுகளில் மூன்று வேறுபாடுகளைக் கண்டு பிடிததால் போதுமானது.

  ***எடுத்துக்காட்டு:***



**கணிப்பீடு:-**

- ஒத்த உருக்களை இனங்காணல்
- வித்தியாசமான உருக்களை இனங்காணல்
- உருத் தொகுதியொன்றில்
  - சிறிய, பெரிய உருவை இனங்காணல்
  - ஏதேனும் குறைபாடுடைய உருவை இனங்காணல்
  - கூடுதலான அம்சமொன்றை இனங்காணல்
  - அமைவு, திசை வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்
  - அமைவிடம் வித்தியாசமாக உள்ள உருவை இனங்காணல்
  - இரண்டு படங்களுக்கிடையே குறைந்தது மூன்று வித்தியாசங்களை இனங்காணல்

  ஆகிய திறன்களை கணிப்பீடு செய்க.

**தேர்ச்சி : உள, இயக்கத் திறன்களை வெளிக்காட்டுவார்.**

**உள்ளடக்கம் :**

- நுண் தசைநார் விருத்திக்கான பயிற்சிகள்
    - கிழித்தல், வெட்டுதல், கோர்த்தல், ஒட்டுதல்
    - உருண்டையாக்குதல், பிசைதல், பின்னுதல், அடுக்குதல்
    - வரைதல், நிறந் தீட்டுதல், மடித்தல், அலையாக்குதல்
- பெருந் தசைநார் விருத்திக்கான பயிற்சிகள்
    - ஓடுதல், நுழைதல், தென்னஞ் சிரட்டைப் பொய்க்கால், வளைதல்
    - ஊஞ்சலாடுதல், ஏறுதல், பந்து விளையாடுதல், இழுத்துச் செல்லல்,
    - டயர் உருட்டுதல், மிதித்தல், விதைப்பை விளையாடுதல்
- கண், கை இசைவாக்கப் பயிற்சிகள்

**கற்றற் பேறுகள் :**

- சுயமாக உடலையும் கைகளையும் விரல்களையும் ஒழுங்கமைப்பதன் ஊடாக உளவியக்கத் திறனை விருத்தி செய்து கொள்வார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள்:-**

- விதைப்பை, பந்து, டயர், பழைய பத்திரிகைகள், நிறத் தாள்கள்,தென்னஞ் சிரட்டைகள், நிறப் பென்சில்கள். களிமண், பசை

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


**செயற்பாடு - I**

- நுண் தசைநார் விருத்திக்கான பயிற்சிகளை வழங்கும்போது முன்பள்ளியில் வழங்கிய செயற்பாடுகளை வழங்குவதைத் தவிர்த்து அதன் வளர்சசிப் படி முறையில் அமைந்த செயற்பாடுகளை முன்வையுங்கள்.

| | | |
|---|---|---|
| - கிழித்தல் | - வெட்டுதல் | - கோர்த்தல் |
| - ஒட்டுதல் | - உருண்டையாக்குதல் | - பிசைதல் |
| - பின்னுதல் | - அடுக்குதல் | - வரைதல் |
| - நிறந் தீட்டுதல் | - மடித்தல் | - அலையாக்குதல் |

எடுத்துக்காட்டு :






**செயற்பாடு - II**

- பெருந் தசைநார் விருத்திக்கான செயற்பாடுகளை வழங்கும் போது விளையாட்டு முற்றத்திற்கு அழைத்து செல்லுங்கள். பாடசாலைகளில் விளையாட்டு முற்றம் இருப்பது அவசியம் என்பதனை நினைவிற் கொள்க. அவ்விளையாட்டு முற்றத்திலேயே பெருந் தசை நார் விருத்திக்கான செயற்பாடுகளை முன்வையுங்கள்.

| | | |
|---|---|---|
| - கிழித்தல் | - வெட்டுதல் | - கோர்த்தல் |
| - ஓடுதல் | - நுழைதல் | - தென்னஞ் சிரட்டைப் பொய்க்கால் |
| - வனைதல் | - ஊஞ்சலாடுதல் | - ஏறுதல் |
| - பந்து விளையாடுதல் | - இழுத்துச்செல்லல் | - டயர் உருட்டுதல் |
| - மிதித்தல் | - விதைப்பை விளையாடுதல் | |





**செயற்பாடு - III**





- கண், கை இசைவாக்கச் செயற்பாடுகளை வழங்கும் போது பின்வரும் அணுகுமுறைகளைப் பின்பற்றுங்கள்.

  உருத்தொகுதி ஒன்றில் இடமிருந்து வலமாகப் பெயர் குறித்தல், வலமிருந்து இடமாக பெயர் குறித்தல் பயிற்சிகளை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**


   

இடமிருந்து வலமாகப் பெயர் குறித்தல் →

← வலமிருந்து இடமாக பெயர் குறித்தல்





**எடுத்துக்காட்டு 2 :**



இடமிருந்து வலமாக → ← வலமிருந்து இடம்

***எடுத்துக்காட்டு II:***

வித்தியாசமான உருவை உருவை இனங்காண வழிப்படுத்துங்கள்.

எழுத்துருக்களிடையே வித்தியாசமான உருவை இனங்காண வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **க** | **க** | **ச** | **க** |

**கணிப்பீடு:-**

- நுண் தசைநார் விருத்தி
- பெருந் தசைநார் விருத்தி
- கண், கை இசைவாக்க விருத்தி

  ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சி : வாசிப்பு முன் திறன்களை வெளிக்காட்டுவார்.**

**உள்ளடக்கம் :-**

- சித்திரப் புத்தகங்களையும் சித்திரங்களையும் வாசித்தல்
- தனிப் படங்களைப் பெயரிடுதல்
- ஒத்த எழுத்துக்களை இணைத்தல்
- படத்தைப் பெயர் குறித்து அதன் முதலெழுத்தைக் கூறுதல்
- ஒரே எழுத்தில் தொடங்கும் படங்களைப் பெயர் குறித்தல்

**கற்றற் பேறு :-**

- எழுத்துக்களையும் வடிவங்களையும் இனங் காண்பதற்கான திறனையும் நினைவுபடுத்திக் கொள்ளும் ஆற்றலையும் பெற்றுக் கொள்வார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள்:-**

- சித்திரப் புத்தகங்கள், தனிப்படங்கள், ஒத்த எழுத்தக்கள், ஒரே எழுத்தில் தொடங்கும் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


**செயற்பாடு - I**

- தனிச் சித்தரங்கள் கொண்ட புத்தகங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். அப்புத்த கங்ளை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்துக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்கள் சித்திரங்களைப் பார்த்துக் கூறுவதற்கு ஆர்வமூட்டுக இடரப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு - II**

- பத்துப் படங்களைத் தெரிவு செய்து கொள்க. அவற்றை மாணவ குழுக்களுகேற்ப பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்க. மாணவர்களை ஐவர் கொணட குழுக்களாக்குங்கள். படங்களைப் பெட்டிகளில் இட்டு எல்லாக் குழுக்களுக்கும் வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*




படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூற மாணவர்களை ஆர்வமூட்டுங்கள். சரியாக உச்சரிக்கின்றார்களா என அவதானிக்குக. (இப்பயிற்சியை வேறுபடங்களை அறிமுகப்படுத்தி சில நாட்களுக்கு மேற்கொள்ள முடியும்.)

**செயற்பாடு - III**

- ஏற்கனவே வழங்கப்பட்ட செயற்பாட்டிற்குப் படங்களை இச்செயற்பாட்டிற்கும் பயன் படுத்துங்கள். படங்களின் பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கூறுவதற்கு வழிப்படுத் துங்கள். இச்செயற்பாட்டின் போது எல்லா மாணவர்களுக்கும் உதவுங்கள். முதல் எழுத்தைக் கூறச் சிரமப்படுபவர்களுக்கு இப்பயிற்சி அறிமுகப் பயிற்சியாகவே அமையும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு - **IV**

- ஒரே எழுத்தில் தொடங்கும் படங்களைத் தொகுதியாக்கி மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள். அவற்றை அட்டைகளில் ஒட்டி, பெட்டிகளில் இட்டே வழங்குதல் வேண்டும். மாணவர்கள் படங்களைப் பார்த்து ஒரே எழுத்தில் தொடங்கும் பெயர்களைக் கூறுவார்கள்.
  ***எடுத்துக்காட்டு:***




இப்பயிற்சி ஒலிகளை இனங்காண்பதற்கான ஆரம்பப் பயிற்சியாக அமையும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:-**

- சித்திரப் புத்தகங்களையும் சித்திரங்களையும் வாசித்தல்
- தனிப் படங்களைப் பெயரிடுதல்
- ஒத்த எழுத்துக்களை இணைத்தல்
- படத்தைப் பெயர் குறித்து அதன் முதலெழுத்தைக் கூறுதல்
- ஒரே எழுத்தில் தொடங்கும் படங்களைப் பெயர் குறித்தல்

ஆகிய திறன்களைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சி : எழுத்து முன் திறன்களை வெளிக்காட்டுவார்.**

**உள்ளடக்கம் :**

- வரையறைக்குள் நிறந் தீட்டுதல்
- பொருட்களைச் சுற்றி வரைதல்
- சுவடு வரைதல்
- கோடுகள் வரைவதன் ஊடாக வழியைக் கண்டுபிடித்தல்
- புள்ளிக் கோடுகள், முறிகோடுகளை இணைத்து உருவங்கள் வரைதல்
- எழுத்துக்களுக்குரிய கோடுகள், வளைகோடுகளை வரைதல்
- எழுத்துக்களின் வடிவங்களின் மீது வரைதல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை அச்சுப் பதித்தல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை வரைதல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை கோலமொன்றாக வரைதல்
- புள்ளிக் கோட்டினால் வரையப்பட்ட எழுத்துக்களின் மீது வரைதல்
- மணல் தட்டில் எழுதுதல்
- எழுத்துக்களின் மீது எழுதுதல்

**கற்றற் பேறு :-**

- சுயமாக எழுதுவதற்கான விருப்பையும் தன்னம்பிக்கையையும் திறனையும் பெற்று எழுதுவதற்கு ஆயத்தமாவார்.


**கற்றற் கற்பித்தல் வளங்கள் :-**

- படங்கள், பட அட்டைகள்,

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


செயற்பாடு - **I**

- மாணவர்கள் ஏற்கனவே முன்பள்ளியில் நிறந்தீட்டுவதற்காக பயிற்சிகளைப் பெற்றிருப்பர். எனவே எல்லைக்குள் நிறந்தீட்டுவதற்கான பயிற்சியை வழங்குங்கள்.
  மாணவருக்குப் பொருத்தமான கோட்டுருப் படங்களை ஏ4 தாளில் பிரதி எடுத்து வழங்கி நிறந்தீட்ட வழிப்படுத்துங்கள். நிறந்தீட்டிய பின்னர் மாணவர்களின் சித்திரங்களைக் காடசிப்படுத்தி அவர்கள் இரசிக்க வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - **II**

- மாணவர்களுக்கு சிறிய பொருட்களைக் கொடுத்து ஏ4 தாளின் மேல் வைத்து அவற்றைச் சுற்றி வரைவதற்கு ஊக்கமளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***





செயற்பாடு - **III**


- மாணவர்கள் ஏ4 தாளில் தமது விரல்களை வரைவதற்கு ஊக்கப்படுத்துங்கள். அதே போன்று நண்பர்களின் விரல்களையும் வரைய ஊக்கமளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - IV


- கோடு வரைவதனூடாக வழியைக் கண்டு பிடிக்க பின்வருமாறு தயாரித்து ஏ4 தாளில் பிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள். அவர்கள் கோடு வரைந்து வழியைக் கண்டுபிடிக்க ஊக்கமளியுங்கள்.


  ***எடுத்துக்காட்டு:***




செயற்பாடு - V

- புள்ளிக்கோடுகள், முறி கோடுகள் இணைத்து உருவங்கள் வரையும் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். (ஏ4 தாளைப் பயன்படுத்துங்கள்.)








செயற்பாடு - VI

- எழுத்துக்களை எழுத ஆரம்பிப்பதற்குரிய கோடுகள். வளை கோடுகள் ஆகியவற்றை ஏ4 தாளில் வரைந்து கொடுத்து அது போன்று வரைய மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - VII

எழுத்துக்குரிய வடிவங்களை வெட்டி எடுத்து அவற்றை மாணவர்கள் அச்சுப் பதிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***


# ப ட ச

# ய ல ம

செயற்பாடு - **VIII**

- எழுத்துக்குரிய சில பகுதிகளை வரைந்து பயிற்சி பெற மாணவர்களை வழிப்படுத்துங்கள்.


***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - **IX**

- எழுத்துக்குரிய வடிவங்களை கோலமொன்றாக வரைய வழிப்படுத்துக. (ஏ4 தாளைப் பயன்படுத்துங்கள்.)


***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - **X**

- புள்ளிக் கோட்டில் வரையப்பட எழுத்துக்களை ஏ4 தாளில் பிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்கி அதற்கு மேல் எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள்.


***எடுத்துக்காட்டு:***



செயற்பாடு - **XI**

- மாணவர்களுக்கு இச்செயற்பாடடை வழங்குவதற்காக மணல்தட்டுக்களை குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பத் தயாரித்துக் கொள்க. மணல் சுத்தமானதாகவும் மென்மையான தாகவும் இருத்தல் வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
  மாணவர்களின் கைகளைப் பிடித்து எழுத்துக்களை சொல்லிச் சொல்லி எழுதப்பழக்குங்கள். (எழுதும் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக இலகுவான எழுத்துக்களை மட்டும்) அதன் பின்னர் மாணவர்களை மணலில் நீங்கள் எழுதிய எழுத்தின் மீது மீண்டும் மீண்டும் எழுதப் பழக்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு***



செயற்பாடு - **XII**

- எழுத்துக்களை தடித்த எழுத்தில் கணினி மூலம் தயாரித்து அல்லது எழுதி பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்கி எழுத்துக்களின் மீது எழுத வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு எழுத்தையும் தனித்தனி ஏ4 தாளில் பிரதி எடுத்துக் கொள்ளுங்கள். ஆசிரியர் ஒடடுப்பலகையில் தாளை ஒட்டி அதில் எழுதுவதைப் பார்த்து மாணவர்களும் எழுத வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். (இச் செயற்பாட்டை ஒரு வாரம் தொடர முடியும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.)

  ***எடுத்துக்காட்டு:***

# ப ய

# ல ம

**கணிப்பீடு:-**

- வரையறைக்குள் நிறந் தீட்டுதல்
- பொருட்களைச் சுற்றி வரைதல்
- சுவடு வரைதல்
- கோடுகள் வரைவதன் ஊடாக வழியைக் கண்டுபிடித்தல்
- புள்ளிக் கோடுகள், முறிகோடுகளை இணைத்து உருவங்கள் வரைதல்
- எழுத்துக்களுக்குரிய கோடுகள், வளைகோடுகளை வரைதல்
- எழுத்துக்களின் வடிவங்களின் மீது வரைதல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை அச்சுப் பதித்தல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை வரைதல்
- எழுத்துக்களுக்குரிய வடிவங்களை கோலமொன்றாக வரைதல்
- புள்ளிக் கோட்டினால் வரையப்பட்ட எழுத்துக்களின் மீது வரைதல்
- மணல் தட்டில் எழுதுதல்
- எழுத்துக்களின் மீது எழுதுதல்

ஆகிய திறன்களைக் கணிப்பீடு செய்க.

## 01

**தேர்ச்சி :-**

**$L_1$** - கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார்.

**$S_1$** - விளக்கத்துடன் தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சுயமாகப் பேசுதல்
- பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுதல்
- சுயமாகக் கதை சொல்லல்
- கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை கூறுதல்
- எழுத்தொலிகள்
- குறில் நெடில் எழுத்தொலிகள்
- அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை பன்மைச் சொற்கள்(படங்கள்)

**கற்றற் பேறுகள் :-**

- ஒலிகளை, சொற்களை, பேச்சுக்களை, கருத்துக்களை நுணுக்க மாகப் புரிந்து கொண்டு உரிய முறையில் தெளிவுற வெளிப்படுத் துவார்.
- சொற்களின் ஒலி பேதங்களைப் புரிந்து கொண்டு சிறப்புறப் பயன்படுத்துவார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள்:-**

- படங்கள், பட அட்டைகள், பந்துகள், கதைப்பட அட்டைகள், கத்தரிக்கோல், பைண்டகம், ஒட்டுப்பலகை, செளுகலட்டைப்பலகை, பெட்டிகள், நிறப் பென்சில்கள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**


- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களிடையே சுயமாகப் பேசுவதற்கு வழிப்படுத்துங்கள். ஏனைய குழுக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் சுயமாக விரும்பியவற்றைப் பற்றி உரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அதன் பின்னர் குழுக்களிடையே சென்று அமர்ந்து அவர்கள் உரையாடுவதை அவதானியுங்கள். தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் நீங்களும் உரையாடலில் பங்குபற்றுங்கள். எழுமாறாக அவர்கள் உரையாடும் விடயங்களை அவதானித்து அவை தொடர்பாக வினாக்களை வினவி விடைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

*குறிப்பு :* மாணவர்கள் (புதிய) தமக்கிடையே சுமுகமான தொடர்பாடலை மேற் கொள்வதற்காகவே இச் செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன என்பதைக் கருத்திற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - II**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுக்களுக்கும் பத்து பட அட்டைகள் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள். அந்தந்த குழுக்களுக்கு பெட்டியில் உள்ள பட அட்டைகளைப் பார்த்து எல்லோரும் தமது குழுக்களிடையே கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு :*



செயற்பாடு - **III**

- ஐந்து இலகுவான படங்களைத் தெரிவு செய்து அட்டைகளில் ஒட்டிப் பெட்டிகளில் இடுங்கள். மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். சோடிகளாக மாணவர்களை மேசைக்கருகே அழையுங்கள். சோடிகளில் ஒருவர் ஐந்து பட அட்டைகளையும் பெட்டியில் இருந்து எடுத்து மற்றையவருக்குக் காண்பித்து படங்களின் பெயர்களைக் கூறுதல் வேண்டும். மற்றையவர் முதலாமவர் கூறிய ஒழுங்கில் படங்களின் பெயர்களை நினைவு படுத்திக் கூறுதல் வேண்டும்.

  அதன் பின்னர் நினைவுபடுத்திக் கூறியவர் பெட்டியில் உள்ள படங்களை எடுத்து முதலாமவருக்கு காண்பித்து படங்களின் பெயர்களைக் கூறுதல் வேண்டும். முதலாமவர் மற்றையவர் கூறிய ஒழுங்கில் நினைவுபடுத்திப் படங்களின் பெயர்களைக் கூறுதல் வேண்டும். இவ்வாறு எல்லா மாணவர்களையும் ஆசிரியர் முன்னிலையில் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

செயற்பாடு - **IV**

- மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள். தமக்கிடையே தமக்குத் தெரிந்த கதைகளைக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அக்கதைகளைச் சுயமாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். குழுக்களிடையே சென்று கதை சொல்வதை அவதானியுங்கள். மாணவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

செயற்பாடு - **V**

- மாணவர்களை வெளியிலோ, அமைதியான இடத்திற்கோ அழைத்துச் செல்லுங்கள். அங்கு மாணவர்களுக்கு விரும்பிய சிறிய கதையைச் சொல்லுங்கள். கதை மூன்று அல்லது நான்கு நிமிடங்களுக்கு மேற்பட்டதாக அமைதல் கூடாது. மூன்று அல்லது நான்கு கதாபாத்திரங்களுக்கு மேற்படாது என்பதை கவனத்திற் கொண்டு கதையைத் தெரிவு செய்யுங்கள். கதையைக் கூறும் போது அதற்குப் பொருத்தமான கற்பித்தல் வளங்களையும் பயன்படுத்துங்கள். கதையை அபிநயத்துடன் கூறிமுடித்த பின்னரே மாணவர்களிடம் வினாக்களைக் கேளுங்கள். மாணவர்கள் அனைவரும் வினாக்களுக்கு விடையளிக்க ஆர்வமூட்டுங்கள்.

  ***குறிப்பு :*** கதையை மாணவர்கள் வீட்டில் சகோதரர்களுக்கோ, பெற்றோருக்கோ கூற வேண்டும் என அறிவுறுத்துங்கள். மறுநாள் கதையைக் கூறினீர்களா என வினவி உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:* கதை,

**புத்திசாலிக் காகம்**

ஆல மர நிழலில் பாட்டி ஒருவர் வடை சுட்டு விற்று வந்தார். தினமும் ஒரு காகம் ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கும் பாட்டி வடை சுட்டு விற்பதை பார்க்கும். இதனை அவதானித்த பாட்டி வடையொன்றைக் கொடுத்தார். காகம் தனது அலகினால் கௌவியது. சிறிது தூரம் பறந்து சென்று மரக்கிளையொன்றில் அமர்ந்தது. அது ஒரு காட்டுப்பகுதி அந்த வேளையில் நரி ஒன்று வந்தது. மரக்கிளையில் அமர்ந்திருந்த காகத்தைக் கண்டது. அந்தக் காகம் வடை வைத்திருப்பதைக் கண்டது. காகத்திடம் இருந்து வடையை ஏமாற்றிப் பெற நரி எண்ணியது.

காகத்தைப் பார்த்து நரி காக்கையாரே எப்படி சுகமாக இருக்கிறீர்களா? என்று கேட்டது. அதற்குக் காகம் பதில் ஏதும் சொல்லவில்லை. பேசாமல் வடையை வாயில் கௌவிய படியே இருந்தது. நரி காகத்தைப் பார்த்து நீ இன்று மிகவும் அழகாக இருக்கின்றாய். நீ நன்றாகப் பாடுவாயாமே? எனக்காக ஒரு பாட்டுப்பாடுவாயா? என்று கேட்டது.


காகத்திற்கு நரியின் தந்திரம் புரிந்தது. தன் கால்களின் இடுக்கில் வடையை வைத்தது. பின்னர் பாடடுப் பாடியது. நரி காகத்தைப் பார்த்து இவ்வளவு அழகாகப் பாட எவராலும் முடியாது. அற்புதமான பாட்டு என்று புகழ்ந்தது. நரி தன் தந்திரம் பலிக்காததால் மீண்டும் முயற்சித்தது. நீ இப்போது நடனமாடு பார்ப்போம் என்றது. காகம் வடையை வாயில் கௌவிய படி நடனமாடியது. நரிக்கு ஏமாற்றம் சிறிது நேரம் யோசித்தது. நரியாரைப் பார்த்து காகம் என்ன யோசிக்கிறீர்கள்? நான் நடனமாடியது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கேட்டது. பாட்டும் பாடினாய், நடனமும் ஆடினாய் மிக மிக அற்புதம். எனக்காக ஆடிப் பாடி நடித்து காட்டுவாயா? என்று தயக்கத்துடன் நரி கேட்டது. அதற்குக் காகம் நான் ஆடினேன். பாடினேன். உண்மைதான் இப்போது எனக்குப் பசிக்கிறது. வடையைச் சாப்பிட்டு விட்டு ஆடிப்பாடி நடித்துக் காட்டுகிறேன் என்று கூறியது. தனது தந்திரம், இந்தக் காலக் காகத்திடம் பலிக்காது என்று எண்ணிய நரி காகத்திடம் எதுமே சொல்லாமல் அவ்விடத்தை விட்டு அகன்றது.

கதையை மாணவர்களுக்கு அபிநயத்துடன் முழுமையாகக் கூறி முடித்த பின் அக்கதை தொடர்பாக வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கு விடையளிக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். கதையில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்களை மாணவர்களுக்குக் கூறுங்கள். அச் சொற்களை மாணவர்கள் சுயமாகக் கூறுவதற்கும் ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு - VI**

- கீழே தரப்படடுள்ள கதைப்படத்தை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்க.

கதைக்கரு : வி.என்.எஸ். உதயசந்திரன் சித்திரம் : ஆர்.சி.பிரதீப்குமார்



மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குக. குழுக்களாக கதையை கட்டியெழுப்பும் குழுக்களிடையே கூறுவதற்கும் வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியர் கதைப் படங்களைப் பார்த்துக் கதையைச் சுவைபடக் கூறுங்கள். அதன் பின்னர் கதைப்படங்களில் உள்ளவற்றை விபரித்துக் கூறுவதற்கு ஆவன செய்யுங்கள்.

***குறிப்பு :*** கதைப்படங்களை பெரிதாகக் காட்சிப்படுத்த வேண்டும். கதைப்படங்களைப் பார்த்துக் கதை கூறும் போது இறந்த காலத்திற் கூற வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - VII**

- மாணவர்களுக்கு எழுத்தொலிகளை அறிமுகம் செய்யுங்கள். (முதல் எழுத்துக்களின் (30 ஒலிகளையே அறிமுகம் செய்தல் வேண்டும்) எழுத்துக்களை அட்டைகளில் எழுதி மாணவர்களுக்கு காட்சிப்படுத்தி எழுத்தொலிகளை அறிமுகம் செய்யுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**எழுத்தொலிகள்**

1. ட ப ய ம ழ
2. ர ச க த
3. அ ஆ இ

இவ்வொலிகளை மாணவர்கள் நன்கு பயிற்சி பெற, ஒலித்துப் பழக மாணவர்க்கு வாய்ப்பு வழங்குங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி வகுப்பிற்கு வெளியே அழைத்துச் சென்று உரத்து ஒலிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு - VIII**

- குறில், நெடில் எழுத்தொலிகளை மாணவர்க்கு அறிமுகம் செய்யுங்கள். ஆசிரியர் ஒலிகளைச் சரியாக உச்சரிக்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

குறில், நெடில் எழுத்துக்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்தி ஒலிகளைச் சரியாக அறிமுகம் செய்யுங்கள்.


**எடுத்துக்காட்டு :**

| | | | |
|---|---|---|---|
| ட - | டா | அ - | ஆ |
| ப - | பா | இ - | ஈ |
| ய - | யா | உ - | ஊ |
| ம - | மா | எ - | ஏ |
| ர - | ரா | ஒ - | ஓ |

*குறிப்பு :* மாணவர்களுக்கு முதல் எழுத்துக்களின் (30) ஒலிகளையே அறிமுகம் செய்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - IX**

- அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை பன்மைச் சொற்களை மாணவர்களுக்குப் படங்கள் ஊடாக அறிமுகம் செய்யுங்கள். மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒருமை பன்மைப் படங்களைப் 10 தொகுதிப் பட அட்டைகளாகத் தயாரித்துக் கொள்ளுங்கள். ***எடுத்துக்காட்டு:***



மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் 10 படத் தொகுதிகளைக் கொடுத்து ஒருமை பன்மை அட்டைகளை எதிர் எதிரே வைத்துப் படங்களைப் பார்த்து உச்சரித்துக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியர் தன்னிடம் உள்ள அட்டைகளைக் காட்டி ஒருமை, பன்மை சொற்களைக் கூறுங்கள். மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஒருமைப்பட அட்டை ஒன்றைக் கொடுத்து பன்மைப் பட அட்டையைத் தெரிவு செய்து கூற வழிப்படுத்துங்கள். இவ்வாறு எல்லா மாணவர்களையும் அழைத்து ஒருமைப் படங்களுக்கு பன்மைப் படங்களைத் தெரிவு செய்து கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு:-**

- சுயமாகப் பேச முன்வருதல்
- படம் பார்த்துப் பேசுதல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை கூறுதல்
- எழுத்தொலிகளைக் கூறுதல்
- குறில், நெடில் எழுத்தொலிகளைக் கூறுதல்
- படங்களைப் பார்த்து ஒருமை பன்மைச் சொற்களைக் கூறுதல் ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சி**

**R₁** - வாசிப்புப் பொறி முறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**W₁** - எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி
- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி
- எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்
- எழுத்துக்களின் துணையுடன் படங்களை வாசித்தல்
- எழுத்துக்களை வாசித்தல், முதல் எழுத்துக்களை (30) படிமுறையில் எழுதுதல்
- குறில் நெடில் எழுத்துக்களை வாசித்தல், எழுதுதல்
- படங்களை வாசித்து சொற்களைப் பார்த்து எழுதுதல் (இலகுவான)
- அன்றாடம் பயன்படுத்தும் சொற்களின் ஒருமை. பன்மை படங்களை வாசித்தல், சொற்களைப் பார்த்து எழுதுதல்

**கற்றற் பேறுகள் :**

- ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு, படங்களை வாசித்து ஏற்ற இறக்கங்களுடன் உரிய முறையில் முன்வைப்பார்.
- சரியான கொண்ணிலையில் அமர்ந்து, சரியாகப் பென்சிலைப் பிடித்து இலகுவான எழுத்துக்களை, சொற்களை அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி முழுமை என்பவற்றை அனுசரித்துச் சீரான முறையில் எழுதுவார்.

**கற்றற் கற்பித்தல் வளங்கள்:-**

- படங்கள், பட அட்டைகள், ஒருமை பன்மை பட அட்டைகள், இரட்டைறூள் கொப்பி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- மாணவர்களைச் சரியான கொண்ணிலையில் அமரப் பயிற்சியை வழங்குங்கள். எவ்வாறு அமர வேண்டும் என்பதனை மாணவர்களுக்கு செய்து காட்டுங்கள். சில மாணவர்களை அழைத்து அமருவதற்காக பயிற்சிகளை வழங்கி மாணவர்களை அவதானிக்கச் செய்க. அதன் பின்னர் அவர்களைப் போன்று எல்லா மாணவர்ளையும் அமரச் செய்யுங்கள். (புத்தகப்பையை உரிய இடத்தில் வைப்பதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குங்கள்.)


***எடுத்துக்காட்டு:***




**செயற்பாடு - II**


- மாணவர்கள் சரியாக அமருவதற்கான பயிற்சியைப் பெற்ற பின்னர் பென்சில் பிடிக்கும் முறையை அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். பென்சில் பிடிக்கும் முறை தொடர்பான படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள். ஆரம்ப நிலையிலேயே மாணவர்களுக்கு பென்சிலைச் சரியாகப் பிடித்து எழுதுவதற்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும். பென்சிலை நடுவிரல், ஆட்காட்டி விரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களால் தான் பிடிக்க வேண்டும் மாணவர்கள் எழுதும் போது பென்சிலைப் பிடிக்கும் முறை, எழுது பலகை, தாள் முதலியவற்றை வைத்திருக்கும் முறை ஆகியவற்றை ஆசிரியர் கவனித்து உரிய நுட்ப முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்க.

*எடுத்துக்காட்டு :*




செயற்பாடு - **III**

- மாணவர்கள் எப்படி அப்பியாசக் கொப்பிகளை மேசையில் வைத்து எழுத வேண்டும் என்பது தொடர்பாகப் பயிற்சியை வழங்குங்கள்.



செயற்பாடு - **IV**

- மாணவர்கள் இரட்டை றூள் கொப்பியில் எவ்வாறு எழுத வேண்டும். அதற்கான பயிற்சிகளை வழங்குங்கள். இரட்டை றூள் கொப்பியில் ஒரு பக்கத்தை $A_4$ தாளில் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அவர்களுக்கு எவ்வாறு எழுத வேண்டும் என்பதனை விளக்குங்கள்.


  மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து எழுதுவதற்கான பயிற்சியை வழங்குங்கள். அல்லது சிறிய குழுக்களாக்கி குழுக்களுக்கு அருகில் சென்று பயிற்சியை வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

செயற்பாடு - **V**

- எழுத்துக்களின் துணையுடன் படங்களை வாசிப்பதற்காக எழுத்துக்களுடன் கூடிய பட அட்டைகளைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பத் தயாரித்துக் கொள்ளுங்கள். (முதல் எழுத்துக்கள் 30 இற்குமான பயிற்சியை வழங்க வேண்டும் என்பதனைக் கவனத்தில் கொண்டு நாட்களைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.)

***எடுத்துக்காட்டு:***




மாணவர்கள் குழுக்களிடையே முதல் எழுத்தை படங்களில் இணைத்து கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு - **VI**

- மாணவர்கள் எழுத்துக்களை படிமுறையாக வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் வழிப்படுத்துக. (வரிவடிவத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னர் ஆசிரியர் பின்வரும் படிமுறைகளில் வரிவடிவத்தை எழுதிக்காட்ட வேண்டும். என்பதனை நினைவில் கொள்ளுங்கள். (முதல் எழுத்துக்கள் 30)

1. ட ப ய ம ழ
2. ஈ ர ச க த
3. ந ங
4. அ ஆ இ
5. எ ஏ ஞ
6. வ ல
7. ற ஐ
8. ள ன ண
9. ஒ ஓ ஔ
10. உ ஊ

*குறிப்பு:* தமிழ் எழுத்துக்கள் அவை எழுதப்படும் வடிவமைப்பைக் கொண்டு **நடுப்பகுதி எழுத்துக்கள், நடுக் கீழ்ப் பகுதி எழுத்துக்கள், நடு மேற்பகுதி எழுத்துக்கள், முப்பகுதியையும் சேர்ந்த எழுத்துக்கள்** என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

## எழுத்துக்களை எழுதும் முறை

**படிமுறை 1** இரட்டை றூள் கொப்பி

| | |
|---|---|
| ட ப ம ர ழ | இ ஈ கி கீ |
| பா மா யா | உ ஊ மு லூ |
| க ச த ந | எ ஏ செ சே |
| ங ற | ங ற |
| ல வ ன ண | ஐ கை |
| ள ஞ | ஒ ஓ கொ கோ |
| அ ஆ | ஔ கௌ |

**படிமுறை 2** நான்கு றூள் கொப்பி

கிளி கிளி கிளி கிளி

குறிப்பு :


எழுத்துக்களை முதலில் இரட்டைறூள் கொப்பியிலும் அதன் பின்னர் நான்கு றூள் கொப்பியிலும் எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்களால் நான்கு றூள் கொப்பியில் நேரடியாக எழுத முடியுமாயின் அவர்களை நான்கு றூள் கொப்பியில் எழுத வழிப் படுத்தலாம். எழுத்துக்களை மாணவர்கள் எழுதும் போது உச்சரித்துக் கொண்டே எழுதுவதற்கு ஊக்கமளியுங்கள்.


**செயற்பாடு - VII**

மாணவர்களைக் குறில், நெடில் எழுத்துக்கள் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கிக் குறில் எழுத்துக்கள் ஐந்தினையும் நெடில் எழுத்துக்கள் ஐந்தினையும் தனித்தனி அட்டைகளில் எழுதி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். குறில் எழுத்து அட்டைகளுக்குப் பொருத்தமான நெடில் அட்டைகளை தெரிவு செய்து வாசிக்கவும் அவற்றை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

**எழுத்துக்கள்**

**குறில் எழுத்துக்கள்** **நெடில் எழுத்துக்கள்**








குழுவில் உள்ள மாணவர்கள் சரியாக வாசிப்பதனையும் சரியாக எழுதுவதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

**செயற்பாடு - VIII**

- படங்களை வாசித்து அதன் கீழ் உள்ள சொற்களைப் பார்த்து எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்களைக் குழுக்களாக்கி ஐந்து பட அட்டைகளைக் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள். அவற்றை மாணவர்கள் வாசித்து விளங்கி எழுத ஆர்வமூட்டுக.


***எடுத்துக்காட்டு:***




**செயற்பாடு - IX**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒருமை பன்மைச் சொற்கள் கொண்ட ஐந்து படத் தொகுதிகளையும் பன்மைச் சொற்கள் கொண்ட ஐந்து படத் தொகுதிகளையும் பெட்டிகளில் இட்டு வழங்குங்கள். (படங்களின் கீழ் சொற்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்) அப்படத் தொகுதிகளில் ஒருமை பன்மைப் படங்களைத் தெரிவு செய்து வாசித்து அதன் கீழ் உள்ள சொற்களை எழுத ஆர்வமூட்டுக.

***எடுத்துக்காட்டு:***




**கணிப்பீடு:-**

- சரியான கொண்ணிலையில் அமருதல்
- சரியாகப் பென்சிலைப் பிடித்தல்
- எழுதுவதற்கான நுட்பங்களை அனுசரித்து எழுதுதல்
- எழுத்துக்களை வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றை கணிப்பீடு செய்க.

## 02

### தேர்ச்சிகள் :

$L_2$ - செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_2$ - பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$R_2$ - வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$W_2$ - எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

### உள்ளடக்கம் :

- ஈரெழுத்துச் சொற்கள் (படங்கள் / சொற்கள்)
- மூவெழுத்துச் சொற்கள் (படங்கள் / சொற்கள்)
- நான்கெழுத்துச் சொற்கள் (படங்கள் / சொற்கள்)
- உரத்து வாசித்தல் (சொற்கள்)
- உறுப்பமைய எழுதுதல் (சொற்கள்)

### கற்றல் பேறு :

- படங்களைப் பார்த்துக் கூறுவதைச் செவிமடுத்து, அப்படங்களைப் பார்த்துத் தானும் நினைவுபடுத்திக் கூறுவார்.
- படங்களைப் பார்த்து விளங்கி, சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- படங்களுடன்கூடிய சொற்களைப் பிழையின்றி எழுத்துக்கூட்டிச் சரியான உச்சரிப்புடன் விளங்கி முன்வைப்பார்.
- சொற்களை அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து சீரான முறையில் எழுத்துத் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- உறுப்பமைய எழுதுதல் (சொற்கள்)

### வளங்கள் :


- சிறிய பெட்டிகள், பட அட்டைகள், செருகல் அட்டைகள்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

***செயற்பாடு I :***

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஈரெழுத்துச் சொற்களுக்கான படங்கள் பத்தினை (10) அட்டைகளில் ஒட்டிப் பெட்டிகளில் இட்டு வழங்குங்கள். பத்துப் படங்கள் கொண்ட பெட்டி ஒன்றை ஆசிரியர் மேசையில் வைத்திருந்து படங்களைப் பார்த்துச் சரியாக உச்சரித்துக் கூறுதல் வேண்டும். அதன் பின்னர் குழுவில் உள்ளவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பெட்டியில் உள்ள படங்களைப் பார்த்து சரியாக உச்சரித்துக் கூறுதல் வேண்டும். அதன் பின்னர் ஒரு குழுவினர் படங்களைப் பார்த்துக் கூறும்போது மற்றைய குழுவினர்கள் அவர்கள் கூறும் படத்திற்குரிய அட்டையை உயர்த்திக் காட்டுதல் வேண்டும். இவ்வாறு எல்லாக் குழுவினர்களையும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக. ஒரு குழுவினர் கூறும்போது மற்றைய குழுவினர்கள் அவதானிக்கின்றனரா என ஆசிரியர் கவனித்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.


***எடுத்துக்காட்டு*** :



*செயற்பாடு II :*

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஈரெழுத்துச் சொற்களுக்கான படங்களுடன் சொற்கள் கொண்ட 10 அட்டைகள் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் படங்களுக்குக் கீழ் உள்ள சொற்களை எழுத்துக்கூட்டிச் சரியாக வாசிக்க வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவாக வாசிக்கச் செய்து மற்றைய குழுவினர்கள் அவர்கள் வாசிக்கும் படங்களுடன்கூடிய சொற்களைப் பெட்டிகளில் இருந்து தெரிந்து தாமும் மனதிற்குள் வாசிப்பதற்கு ஆவர்வமூட்டுங்கள். அதன் பின்னர் பத்துச் சொற்களையும் கரும்பலகையில் எழுதுங்கள். மாணவர்களை எழுமாறாக அழைத்து அச்சொற்களை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். வாசித்த பின்னர் மாணவர்களைத் தமது குழுவினருடன் சேர்ந்து வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். ஆர்வமூட்டுங்கள்.


  ***எடுத்துக்காட்டு :***




  வாசித்த சொற்களைப் பார்த்து அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து சீரான முறையில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.


*செயற்பாடு III :*

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்க. பெட்டி ஒன்றில் மூவெழுத்துச் சொற்களைக் கொண்ட படங்களைப் பெட்டி ஒன்றில் இட்டுக் கொள்ளுங்கள். வட்டவடிவமாக அமர்ந்திருக்கும் மாணவர்களுள் ஒருவரை அழைத்து அவரிடம் பெட்டியை வழங்குங்கள்.




- அவர் ஒரு படத்தைப் பார்த்துக் கூறிய பின்னர் அடுத்தவரிடம் கொடுத்தல் வேண்டும். அடுத்தவர் உரத்துப் படத்தைப் பார்த்துக் கூறிய பின்னர் மற்றையவருக்கு வழங்குதல் வேண்டும். வட்டத்தில் ஓர் இடத்தில் படங்கள் உள்ள பெட்டியை வைத்திருப்பவர் ஒவ்வொரு படமாக எடுத்துப் படத்தைப் பார்த்துக் கூறிய பின்னர் அடுத்தவருக்குக் கொடுக்க வேண்டும். படங்கள் அடுத்தடுத்தவர்களுக்குச் சரியான முறையில் மாற்றப்படுகின்றதா என்பதை ஆசிரியர் அவதானித்தல் வேண்டும். மாற்றிய பின்னர் படத்தைப் பார்த்து உரத்துக் கூறுகிறார்களா என்பதையும் ஆசிரியர் அவதானித்தல் வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்க. வட்டத்தின் முடிவில் உள்ளவரிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தல் வேண்டும். அவர் படங்கள் எல்லாவற்றையும் சேகரிக்க வேண்டுமென்பதை நினைவிற் கொளளுங்கள்.

*எடுத்துக்காட்டு :*



படத்தைப் பார்த்து மாணவர்கள் கூறும்போது அதன் பெயர்களைக் கரும்பலகையில் எழுதுதல் வேண்டும். அல்லது ஆசிரியர் ஆயத்தப்படுத்தி எழுதி வைத்துள்ள சொல் அட்டைகளைச் செருகல் அட்டைகளில் செருகுதல் வேண்டும். மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அச்சொற்களைப் பிழையின்றி வாசிக்கவும் பார்த்து எழுதவும் வழிப்படுத்துக. எழுதிய பின்னர் அச்சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கவும் ஆர்வமூட்டுங்கள்.

***செயற்பாடு IV :***

- பெட்டி ஒன்றில் மூன்றாவது செயற்பாட்டில் தரப்பட்ட சொற்களை அட்டைகளில் எழுதி இட்டுக் கொள்க. மாணவர்களை ஒருவர் பின் ஒருவராக அமரச் செய்யுங்கள்.

*முதல் மாணவர் (சொல்லட்டைப் பெட்டியை வழங்குங்கள்.)*



*இறுதி மாணவர் (பெட்டி ஒன்றை வழங்குங்கள்.)*

முதலாவது மாணவரிடம் சொல்லட்டைப் பெட்டியை வழங்குங்கள். சொல்லட்டைப் பெட்டியைப் பெற்றுக்கொண்ட மாணவர் ஒவ்வொரு சொல்லட்டையாக எடுத்து எழுத்துக்கூட்டி வாசித்த பின்னர் அடுத்தவரிடம் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு மாறிமாறி எழுத்துக்கூட்டி வாசிக்க வேண்டும். கடைசியாக உள்ளவர் சொல்லட்டைகளை வாசித்த பின்னர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். எல்லாச் சொற்களையும் மாணவர்கள் வாசித்து முடித்ததும் இறுதியிலுள்ள மாணவர் முதல் மாணவர் எழுத்துக்கூட்டி உரத்து வாசித்து மற்றவரிடம் கொடுத்ததுபோல இவர் தமக்கு முன்னுள்ள மாணவரிடம் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி எல்லோரும் வாசித்ததும் முதலாவது மாணவரிடம் எல்லாச் சொல்லட்டைகளும் சென்றுவிடும். அதனை அவர் பெட்டியில் இட்டு ஆசிரியரிடம் கொடுத்தல் வேண்டும். அதன் பின்னர் ஆசிரியர் சொல்லட்டைகளில் உள்ள சொற்களில் ஒரு எழுத்தை நீக்கிவிட்டு கரும்பலகையில் எழுதுதல் வேண்டும். மாணவர்கள் அச்சொற்களின் இடைவெளிகளில் வர வேண்டிய எழுத்துக்களையும் சேர்த்து அவர்களது அப்பியாசக் கொப்பியில் பூரணமாக எழுதுதல் வேண்டும்.

*எடுத்துக்காட்டு :*


| | | | | |
|---|---|---|---|---|
| மூ□கு | க□வு | ஆ□தை | அ□ல் | ச□கு |
| ம□ம் | வ□டு | ப□து | மு□ல் | உ□ல் |

ஆசிரியர் மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட்டு, உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உதவுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

**செயற்பாடு V :**

- மூவெழுத்துச் சொற்கள் கொண்ட படங்களைத் தெரிவுசெய்து அதற்குக் கீழே சொற்களை நீக்கி, கட்டமிட்டு எழுதி 12 அட்டைகளைத் தயாரிக்குக. பெட்டி ஒன்றில் அச்சொற்களுக்குப் பொருந்தக்கூடிய எழுத்துக்களை (அட்டையில்) எழுதி, வெட்டியெடுத்து பெட்டியில் இடுக. மேலதிகமாக சில எழுத்துக்களையும் இடுக.

***எடுத்துக்காட்டு :***






மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குக. ஒவ்வொரு குழுவுக்கும் அட்டைகளை இட்டு வழங்கி, அதன் பின்னர் தனி எழுத்துக்கள் கொண்ட அட்டைகளை வழங்குக. மாணவர் குழுக்கள் கட்டமிடப்பட்ட இடத்தில் வர வேண்டிய எழுத்துகளைக் கொண்ட பெட்டியில் இருந்து தெரிவுசெய்து எடுத்து, கட்டத்தில் வைத்து வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட சொற்களைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து, சீரான முறையில் எழுதுவதற்கு ஆர்வமூட்டுங்கள். எழுதிய சொற்களை எழுத்துக்கூட்டி உரத்து வாசிக்கவும் ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு VI :**

- நான்கு எழுத்துச் சொற்கள் கொண்ட பத்துப் (10) படங்களை அட்டை ஒன்றில் ஒட்டி, பெட்டி ஒன்றில் இடுக. மாணவர்களை வெளியில் அழைத்துச் சென்று வட்டமாக நிற்கச் செயயுங்கள். அதன் பின்னர், நான்கு எழுத்துச் சொற்கள் கொண்ட பட அட்டைகள் உள்ள பெட்டியை நடுவில் வையங்கள். வைத்த பின்னர், வட்டமாக நிற்கும் மாணவர் குழுவினரை அழைத்து பட அட்டை ஒன்றை எடுத்து உரத்துக் கூற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் உரத்து வாசித்த மாணவர் வேறு ஒரு மாணவரைச் சுட்டிக் காட்டி அழைத்து விட்டு, வட்டத்தில் தன்னுடைய இடத்திற்குச் செல்ல வேண்டும். அழைக்கப்பட்ட மாணவர் பட அட்டை ஒன்றை எடுத்து உரத்து வாசித்துவிட்டு, வேறு ஒரு மாணவரை அழைக்க வேண்டும். இவ்வாறு இந்த செயற்பாட்டைத் தொடர்ந்து செய்யுங்கள்.

***எடுத்துக் காட்டு:***






***செயற்பாடு VII :***

- நான்கு எழுத்துச் சொற்கள் கொண்ட பத்து (10) பட அட்டைகளைத் தயாரித்துக் கொள்க. அதன் மறுபக்கத்தில் படத்தின் பெயர்களைப் பெரிய எழுத்துகளில் எழுதிக் கொள்க. மாணவர்களை நான்கு குழுக்களாக்குக. குழுக்களுக்கேற்ப அட்டைகளைத் தயாரித்துக் கொள்க. அவர்களை வெளியே அழைத்துச் சென்று வரிசையாக கதிரையில் ஒருவர்பின் ஒருவராக இடைவெளிவிட்டு அமரச் செய்க.

  ***எடுத்துக்காட்டு :***

பெட்டியைப் பெற்றுக் கொண்டவர்கள்




நான்கு குழுக்களுக்கும் ஒவ்வொரு பெட்டி வீதம் வழங்குங்கள். பெட்டியைப் பெற்றுக் கொண்டவர்கள், ஒவ்வொரு எழுத்து அட்டையாக எடுத்து வாசித்துக் காட்ட வேண்டும். அதன் பின்னர் வரிசையில் பின்புறம் இருப்பவரிடம் கொடுக்க வேண்டும். அவர் அட்டைகளிலுள்ள சொற்களை வாசித்து முடித்ததும் மற்றையவரிடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு பெட்டியில் உள்ள எல்லாச் சொற்களையும் எல்லோரும் வாசித்து முடித்ததும் வகுப்பில் குழுவாக அமர்ந்து அச்சொற்களைப் பார்த்து உறுப்பமைய எழுதும் கொப்பியில் அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து எழுத வழிப்படுத்துங்கள். எழுதும்போது எழுத்துக்களை உச்சரித்து எழுத ஆர்வமூட்டுங்கள்.

***செயற்பாடு VIII :***


- நான்கு எழுத்துச் சொற்கள் கொண்ட பத்து (10) பட அட்டைகளைத் தயாரித்துக் கொள்க. அதன் மறுபக்கத்தில் நான்கு எழுத்துச் சொற்களின் கடைசி எழுத்தை நீக்கிவிட்டு கட்டமிடுங்கள். அந்தக் கட்டங்களில் வர வேண்டிய எழுத்துக்களை அட்டைகளில் எழுதி பிறிதொரு பெட்டியில் இடுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குக. ஒவ்வொரு குழுவுக்கும் பெட்டிகளை வழங்குங்கள். அவர்கள் குழுவாக இணைந்து சொற்களின் இறுதியில் நீக்கப்பட்ட எழுத்தைக் கண்டுபிடித்து, கட்டங்களின் மீது வைத்து வாசித்துக் காட்டுவதுடன் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதுவதற்கும் அச்சொற்களை உரத்து வாசிப்பதற்கும் ஆர்வமூட்டுங்கள். மாணவர்களின் கொப்பிகளைப் பார்வையிட்டு அவ்விடத்திலேயே அவர்களை உற்சாகப்படுத்துவதோடு உதவி தேவைப்படும்

மாணவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்குதல் வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு :*



பட்டம்



கப்பல்

*செயற்பாடு IX :*

- ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துச் சொற்கள் 25 கொண்ட பட அட்டைகளைத் தயாரித்துக் கொள்க. மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் 25 பட அட்டைகள் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு குழுவுக்கும் சிறிய மூன்று வெற்றுப் பெட்டிகளை வழங்குங்கள். அப்பெட்டிகளில் ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்கள், நான்கெழுத்துச் சொற்கள் கொண்ட பட அட்டைகளை வேறுபடுத்தி பெட்டிகளில் இட்டு உரத்து வாசிக்கவும், அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் ஆர்வமூட்டுங்கள்.

*செயற்பாடு X :*

- ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துச் சொற்கள் கொண்ட எழுத்து அட்டைகளைப் பெரிய பெட்டி ஒன்றில் இடுங்கள். மாணவர்களை வட்டமாக அமரச் செய்து, பெட்டியை நடுவில் வைக்குக. அதன் பின்னர் எல்லா மாணவர்களையும் பெட்டியிலிருந்து ஏதாவது ஒரு சொல்லை எடுக்கச் செய்யுங்கள். மூன்று இடங்களில் ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துக் கொண்ட அட்டைகளைத் தொங்கவிடுங்கள். மாணவர்கள் எந்தச் சொல் தம்மிடம் உள்ளதோ அச்சொல் எழுதப்பட்ட இடத்தில் போய் நிற்பதற்கு வழிப்படுத்துங்கள். நின்ற பின்னர் மாணவர்கள் சரியான இடங்களில் நிற்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அதன் பின்னர் அந்த மூன்று குழுவினரும் தம்மிடம் இருக்கின்ற சொற்களை உரத்து வாசித்த பின்னர் மற்றைய குழுவினரிடம் கொடுத்து மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். மாற்றிய பின்னர் தம்மிடம் உள்ள சொற்களை வாசித்துக் காட்ட வேண்டும். அதன் பின்னர் மற்றைய குழுவினரிடம் தமது சொற்களைக் கொடுத்து மாற்றிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் தமக்குக் கிடைத்த சொற்களை உரத்து வாசிக்க வேண்டும். இச்செயற்பாடு முடிவடைந்ததும் கரும்பலகையில் எழுதும் சொற்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதிக்காட்டுமாறு அவர்களை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- படங்களைப் பார்த்துக் கூறுதல்
- படங்களின் துணையுடன் சொற்களை வாசித்தல்
- படங்களின் துணையின்றிச் சொற்களை வாசித்தல்
- படங்களின் துணையுடன் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை இனங்காணல்
- எழுத்துக்கூட்டிச் சொற்களைத் தெளிவாக வாசித்தல்
- சொற்களை அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்து எழுதுதல் ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

✷✷✷

## 03

**தேர்ச்சிகள் :**

**L3** - விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.

**S3** - விருப்புடனும் இரசனையுடனும் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- போலச் செய்தல் (தனி நடிப்பு)
- விரல்பொம்மை உரையாடல்
- ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (செவிமடுத்துப் பேசுவதற்காக)

**கற்றல் பேறு :**

- பாடல்கள், கதைகள், உரையாடல்கள் மற்றும் தனி நடிப்பு ஆகியவற்றை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்துப் பல்வேறு வகையில் ஆக்கபூர்வமாகவும் நம்பிக்கையுடனும் வெளிப்படுத்துவார்.
- போலச் செய்தல் மூலம் தனது தனி நடிப்பாற்றலை வெளிக்கொணர்வார்.
- விரல் பொம்மைகளை அணிந்து உரையாடுவதன் மூலம் கற்பனையாற்றலையும் ஆக்கத் திறனையும் இரசனையுணர்வையும் மேம்படுத்திக் கொள்வார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களை ஆர்வமாகச் செவிமடுத்து இரசனையுடன் இயல்பாகப் பல்வேறு வகையில் வெளிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- A4 வண்ணத் தாள்கள், காகித விரல் பொம்மைகள், ஒலிப்பதிவுக் கருவி, கணினி(இணைய இணைப்பு), ஒலி - ஒளி இறுவட்டுக்கள் (பாடல்கள், கதைகள் கொண்டவை)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

***செயற்பாடு I :***

- மாணவர்களுக்குக் கடதாசியில் விசிறி ஒன்றைச் செய்வதற்கான பொருட்களைக் கொண்டுவருமாறு முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்குங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு நடுவில் நின்று கடதாசியில் விசிறி செய்யும் முறையினைச் செய்து காட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களுக்குப் படிமுறையாகச் சொல்லிக் கொடுத்து விசிறி ஒன்றைச் செய்ய வழிப்படுத்துங்கள். எல்லா மாணவர்களும் விசிறி செய்த பின்னர் பின்வரும் பாடலை அறிமுகஞ் செய்யுங்கள்.

***எடுத்துக்காட்டு*** :

**விசிறி**

விசிறி விசிறி விசிறி
வீட்டில் உள்ள விசிறி
பாட்டி செய்த விசிறி
பனை ஒலையிலே விசிறி

காற்று வீசும் விசிறி
கவரும் அழகு விசிறி
என் கையில் விசிறி
இனிய காகித விசிறி.

- வி.என்.எஸ். உதயசந்திரன்

பாடலை ஒவ்வொரு வரியாகப் பாடிக் காட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களுக்கு முதல் இரண்டு வரிகளையும் அறிமுகஞ் செய்யுங்கள்.

விசிறி விசிறி விசிறி
வீட்டில் உள்ள விசிறி

அதன் பின்னர் அடுத்த இரண்டு அடிகளையும் அறிமுகஞ் செய்யுங்கள்.

பாட்டி செய்த விசிறி
பனை ஓலையிலே விசிறி

இந்த நான்கு அடிகளையும் மாணவர்கள் மனனம் செய்து இரசனையுடன் பாட நெறிப்படுத்துங்கள். கைகளில் விசிறியை மாணவர்கள் வைத்திருந்து அசைத்தபடி பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். தேவையாயின் புத்தாக்கக் கருவிகளையும் பயன்படுத்தலாம். மாணவர்களை ஒவ்வொரு குழுவாக அழைத்துப் பாடலின் முதல் நான்கு அடிகளையும் பாட ஆர்வமூட்டுங்கள். பாடுவதற்கு முன்வரத் தயாராகும் மாணவர்களை உற்சாகமூட்டி பாடுவதற்கு வழிப்படுத்துங்கள். ஒரு குழு பாடும்போது மற்றைய குழுக்கள் அமைதியாக இருந்து செவிமடுக்க ஆவன செய்யுங்கள்.

பாடலின் மற்றைய நான்கு அடிகளையும் மறு நாள் செயற்பாடாக இதே போன்று மேற்கொள்ளுங்கள். மூன்றாம் நாள் முழுப் பாடலையும் மாணவர்கள் சுயமாகப் பாடுவதற்கான பயிற்சியை வழங்குங்கள். அவர்கள் பாடும்போது அவர்களின் உச்சரிப்பினை அவதானியுங்கள். இதேபோன்று இலகுவான, சிறிய சொற்கள் கொண்ட பாடல்களை அறிமுகஞ் செய்யுங்கள்.

***செயற்பாடு II :***

- கீழே தரப்பட்டுள்ள கதையை மாணவர்கள் விருப்புடன் இரசிக்கும் வகையில் கூறுங்கள்.
  ***எடுத்துக்காட்டு :*** கதை

**அலட்சியம்**

காட்டில் இரண்டு குரங்குக் குட்டிகள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒன்று மூத்தது. மற்றொன்று இளையது. இதிலே இளைய குரங்கு எந்த வேலையையும் யோசித்துச் செய்வதில்லை. மூத்த குரங்கு அப்படியல்ல. எந்த வேலையையும் செய்யுமுன் பல முறை சிந்திக்கும்.

அப்படித்தான் ஒரு நாள் அவை இரண்டும் மரம் விட்டு மரம் தாவிப் போய்க் கொண்டிருந்தன. திடீரென்று காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அப்பொழுது மூத்த குரங்கு இளைய குரங்கைப் பார்த்து ''தம்பி ! நாம் இப்போது இருக்கும் மரத்திலேயே இருப்போம். காற்றின் வேகம் குறைந்ததும் வேறு இடம் செல்வோம்'' என்றது.

அதைக் கேட்ட இளைய குரங்கு ''ஒவ்வொரு மரமாகத்தானே தாவ வந்தோம், இப்போது உங்களுக்கு என்ன நடந்தது'' என்று கேட்டது.

மூத்த குரங்கு இதற்கு ''தம்பி! எனக்கு ஒன்றும் நடக்கவில்லை; காற்று பலமாக வீசுகிறது; மரம் விட்டு மரம் தாவிச் செல்லும்போது நம் கைப்பிடி தவறி 'பொத்தென்று' கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது; அதற்காகத்தான் சொன்னேன்'' என்றது.

அதற்கு இளைய குரங்கு ''உங்களுக்குப் பயம் என்றால் இங்கேயே இருங்கள்; நான் தாவிச் செல்லப் போகிறேன்'' எனக் கூறியது.

மூத்த குரங்கு தம்பியைப் பார்த்து ''தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்; காற்று பலமாக வீசுகிறது; நீ கீழே விழுந்து, உனக்குப் பலமான காயம் ஏற்பட்டு விட்டால் என்னால் தாங்க முடியாது; தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்'' என்று கெஞ்சியது.''நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்; என்னால் நீண்ட நேரம் இங்கு இருக்க முடியாது; நான் போகிறேன்'' என்று கூறிவிட்டு இன்னொரு மரத்திற்குத் தாவியது. காற்று பலமாக வீசியதால் மரக்கிளை அதன் கைப்பிடிக்குள் சிக்காமல் விலகியது. கைப்பிடி தவறிய இளைய குரங்கு பொத்தென்று தரையில் விழுந்தது. வலியால் துடித்தது. மூத்த குரங்கு மரத்திலிருந்து இறங்கி, அதன் அருகே சென்றது. கவலையுடன் அதனைத் தடவியது. நான் சொன்னபடி கேட்டிருந்தால் உனக்கு


இந்த நிலை ஏற்பட்டிருக்காதே எனக் கண் கலங்கியது.

கதையை உணர்வுபூர்வமாகக் கூறினால் மட்டுமே மாணவர்கள் கதையை மகிழ்ச்சியுடன் இரசிப்பார்கள் என்பதை நினைவிற் கொள்க. கதையை வாசிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். (இக்கதையை கதைப் படங்களை வரைந்து காட்சிப்படுத்தி விளக்குவது சிறந்தது.)

கதையைக் கூறி முடித்ததும் சிறிய வினாக்களை வினவுக. ஆசிரியர் கூறிய கதையைக் குழுவாகக் கூறுவதற்கு ஆவன செய்க. குழுவில் ஒருவர் தொடங்க மற்றவர் கதையை விட்ட இடத்திலிருந்து தொடர வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**கதை கூறல்**




***செயற்பாடு III :***

- மாணவர்களுக்கு ஏற்கனவே கற்ற ''அலட்சியம்'' என்ற கதையை நினைவுபடுத்துங்கள். அக்கதையில் வரும் இரண்டு குரங்குக் குட்டிகளின் செயற்பாடுகளையும் மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் போலச் செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**போலச் செய்தல்**

- ✓ மூத்த குரங்கு
- ✓ இளைய குரங்கு
- ✓ மரம் விட்டு மரம் தாவுதல்
- ✓ பலமான காற்று வீச மரங்கள் ஆடுதல்
- ✓ மரத்தில் உள்ள குரங்குகள் பயத்தினால் நடுங்குதல்
- ✓ இளைய குரங்கு காற்று வீசும்போது மரத்திற்குத் தாவுதல்
- ✓ குரங்கு கீழே விழுதல்
- ✓ இளைய குரங்கு வலியினால் துடித்தல்
- ✓ மூத்த குரங்கு மரத்தில் இருந்து இறங்குதல்
- ✓ இளைய குரங்கைத் தடவுதல்
- ✓ மூத்த குரங்கு, இளைய குரங்கைப் பார்த்து கண் கலங்குதல்

போலச் செய்யும்போது முதலில் ஆசிரியர் போலச் செய்து காட்டிய பின்னரே மாணவர் களைப் போலச் செய்து காட்ட வழிப்படுத்த வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். (இதற்கு நாடகப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.)

***செயற்பாடு IV :***

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள். தாம் அன்றாட வாழ்வில் கண்ட மனிதர்கள் பற்றிப் போலச் செய்து காட்ட ஆர்வமூட்டுங்கள். முதலில் ஆசிரியர் சில மனிதர்களைப் போலச் செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

- ✓ தபாற்காரர்
- ✓ பொலிஸ்காரர் (போக்குவரத்து)

- ✓ மரக்கறி வியாபாரி
- ✓ மீன் வியாபாரி
- ✓ கடலை வியாபாரி
- ✓ புகையிரத நிலைய வியாபாரிகள்
- ✓ பேருந்து நடத்துநர்
- ✓ பேருந்துச் சாரதி
- ✓ முச்சக்கரவண்டிச் சாரதி
- ✓ துவிச்சக்கரவண்டிப் பயணம்
- ✓ பலூன் வியாபாரி
- ✓ தள்ளுவண்டி வியாபாரி

ஒவ்வொரு மனிதர்கள் பற்றியும் ஆசிரியர் முதலில் போலச் செய்து காட்ட வேண்டும். இதற்கு (நாடக ஆசிரியர்கள் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.) இயன்றவரை வகுப்பாசிரியரே செய்து காட்டுதல் சிறந்ததாகும். பிச்சைக்காரன், அதிஸ்டலாபச்சீட்டு விற்பனையாளர், குடிகாரன்.,மனநோயாளி ஆகியோரைப் போலச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மாணவர்களைத் தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் செய்து காட்ட ஆர்வமூட்டலாம். தனியாகப் போலச் செய்வதற்குக் கூச்சப்படும் மாணவர்களைச் சோடியாகவும் குழுவாகவும் போலச் செய்வதற்கு உற்சாகமூட்டுங்கள்.

*செயற்பாடு V :*

- மாணவர்கள் இரு பெருவிரல்களில் அல்லது சுட்டு விரல்களில் அணிந்து கொள்ளக் கூடியவாறு காகிதத்தில் மாணவர்களின் தொகைக்கேற்ப முகங்களைச் செய்து கொள்ளுங்கள். அவற்றினை மாணவர்கள் அணிந்துகொள்ளச் செய்யுங்கள். அதன் பின்னர் ஆசிரியர் தமது பெருவிரல்களில் அல்லது சுட்டு விரல்களில் அணிந்து விரல்பொம்மை உரையாடல்களைச் செய்து காட்டுதல் வேண்டும்.

*எடுத்துக்காட்டு :* **விரல் பொம்மை உரையாடல்**

**வினாமாலை**



| | |
|---|---|
| ✓ **என்ன வேண்டும்?** | **பழம் வேண்டும்.** |
| ✓ என்ன பழம்? | மாம்பழம் |
| ✓ என்ன மா? | புளி மா |
| ✓ என்ன புளி | கறிப்புளி |
| ✓ என்ன கறி? | மீன் கறி |
| ✓ என்ன மீன்? | சுறா மீன் |
| ✓ என்ன சுறா? | பால்ச் சுறா |
| ✓ என்ன பால்? | பசும்பால் |


எல்லா மாணவர்களையும் அரை வட்டமாக அமரச் செய்யுங்கள். ஆசிரியர் தனது இரு விரல்களையும் உயர்த்தி வினாமாலை உரையாடலைச் செய்து காட்ட, மாணவர்களும் ஆசிரியரைத் தொடர்ந்து இரு விரல்களையும் உயர்த்தி உரையாடுதல் வேண்டும். இவ்வுரையாடல் வினாமாலையை இரண்டு, மூன்று தடவை மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் செய்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அதன் பின்னர்,

மாணவர்கள் தாமாகவே முயற்சி செய்ய வழிப்படுத்துங்கள். மறுநாள், இதே செயற்பாட்டைச் சோடியாக அமர்ந்து உரையாட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், தனித்தனியாக அமர்ந்து உரையாட உற்சாகமூட்டுங்கள். இச்செயற்பாட்டை இரண்டு, மூன்று நாட்கள் தொடர முடியும்.

***செயற்பாடு VI :***

- 'அலட்சியம்' என்ற கதையை ஒலிப்பதிவுக் கருவி மூலம் உணர்வுபூர்வமாகவும் இரசனையுடனும் கதை கூறிப் பதிவு செய்துகொள்ளுங்கள்.
  மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று வட்டமாக அமரச்செய்யங்கள். நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வைத்து ஒலிக்கவிடுக. கதையை மாணவர்கள் இரசனையுடன் செவிமடுக்கிறார்களா என அவதானியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***



  மாணவர்கள் இரசனையுடன் செவிமடுப்பதை ஆசிரியர் உறுதிசெய்து கொள்வதற்காக வட்டமாக அமர்ந்திருக்கும் மாணவர்களைப் பின்புறமாகச் சுற்றி வந்து அவதானிக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.அதன் பின்னர் மாணவர்களிடம் பொருத்தமான வினாக்களை வினவுங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***

  1. குரங்குக் குட்டிகள் எங்கே வாழ்ந்தன.
  2. எந்த வேலையையும் யோசித்துச் செய்யாத குரங்கு எது?
  3. எந்த வேலையையும் யோசித்துச் செய்யும் குரங்கு எது?
  4. குரங்குகள் எப்படி தாவிப் பாயும்?
  5. மூத்த குரங்கு இளைய குரங்கைப் பார்த்து என்ன கூறியது?
  6. அதற்கு இளைய குரங்கு என்ன பதில் சொன்னது?
  7. உனக்குப் பயம் என்றால் இங்கேயே இரு என்று கூறிய குரங்கு எது?
  8. இளைய குரங்கு எதனால் கீழே விழுந்தது?

***செயற்பாடு VII :***

- இணையத்தளத்தின் ஊடாக 'யு - ரியூப்' இலிருந்து மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான சிறுவர் காணொளிக் கதைகள், பாடல்களைத் தெரிவுசெய்து மாணவர்கள் பார்த்துக் கேட்டு, பாடி, இரசிக்க வழிப்படுத்துங்கள். (காணொளிக் கதைகள் 3 தொடக்கம் 5 நிமிடங்களுக்கு மேற்படாதவாறும் காணொளிப் பாடல்கள் 2 நிமிடங்களுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்) காணொளிக் கதை, பாடல்களை மாணவர்கள் பார்த்து இரசித்த பின்னர், கதை தொடர்பான வினாக்களை வினவுங்கள். அதன் பின்னர் எழுமாற்றாக மாணவர்களை அழைத்து பார்த்த கதையைக் கூறுவதற்கு உற்சாகமூட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்கள் பார்த்த கதையைக் குழுவாக இணைந்து கூறுவதற்கு ஆவன செய்யுங்கள். இச்செயற்பாட்டை இரண்டு, மூன்று நாட்களுக்கு மேற்கொள்ளலாம்.

**கணிப்பீடு :**

- பாடல்கள் பாடுதல்
- கதை கூறுதல்
- போலச் செய்தல்
- விரல்பொம்மை ஊடாக உரையாடுதல்
- ஒலிநாடாக்களைச் செவிமடுத்து வினாக்களுக்கு விடை கூறுதல்
- ஒலிநாடாக்கள் ஊடாகப் பாடல்கள், கதைகளைச் செவிமடுத்து மீண்டும் கூறுதல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்க.

## தேர்ச்சிகள் :

**R3** - விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.

**W3** - விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.

## உள்ளடக்கம் :

- சிறுவர் பாடல்கள் (சொற்கள்)
- சிறுவர் கதைகள் (சொற்கள்)
- உரையாடல்கள் (சொற்கள்)
- ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (சொற்கள்)
- சித்திரங்கள் (கற்ற பாடங்கள் / கதைகளுடன் தொடர்புடைய)

## கற்றல் பேறு :

- பாடல்கள், கதைகள், உரையாடல்கள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்து விளங்கிக் கொள்ள முயற்சிப்பார். அச்சொற்களைப் பிழையின்றி எழுத முயலுவார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை எழுதி வாசிப்பார்.
- பாடல்கள் கதைகளைப் புரிந்துகொண்டு தாம் விரும்பிய வகையில் தமக்குரிய பாணியில் சித்திரமாக முன்வைத்து இருப்பார்.

## வளங்கள் :

- ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (பாடல்கள், கதைகள், உரையாடல்கள் கொண்டவை)


## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

***செயற்பாடு I :***

- ஏற்கனவே கற்ற ‘விசிறி’ என்ற பாடலிலிருந்து முதல் நான்கு வரிகளை மட்டும் இச்செயற் பாட்டிற்குத் தெரிவு செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு வரியிலும் உள்ள சொற்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதிக் கொண்டு மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுதித் தபாலுறைகளில் இட்டுக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டு :

1. K j y ht J t up

| | | |
|---|---|---|
| விசிறி | விசிறி | விசிறி |




2. இரண்டாவது வரி

| | | |
|---|---|---|
| வீட்டில் | உள்ள | விசிறி |




3. மூன்றாவது வரி

| | | |
|---|---|---|
| பாட்டி | செய்த | விசிறி |




4. நான்காவது வரி

| | | |
|---|---|---|
| பனை | ஓலையிலே | விசிறி |




ஒவ்வொரு சோடிக்கும் முதலில் பாடலின் முதல் வரியில் உள்ள சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள் கொண்ட தபாலுறைகளைச் சோடியாக வழங்குங்கள். தபாலுறையில் உள்ள


சொற்களைச் சோடியாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், முதல் வரியை ஆசிரியர் பாடிக் காட்டிய பின் மாணவர்களும் அவ்வரியைப் பாடிக்காட்ட ஆர்வமூட்டுக. மாணவர்கள் பாடிய பின்னர், அச்சொற்களை ஒழுங்குபடுத்தி வாசிக்கவும் பார்த்து எழுதவும் வழிப்படுத்துங்கள். இதே போன்று 2 ஆம், 3 ஆம், 4 ஆம் தபாலுறைகளில் உள்ள சொற்களை வாசிக்க வழிப்படுத்தி அதன் பின்னர் அச்சொற்களை ஒழுங்குபடுத்தி வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்துங்கள். அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

***செயற்பாடு II :***

- ஏற்கனவே அறிமுகஞ் செய்த பாடலின் இறுதி நான்கு வரிகளையும் வாசித்து எழுத வழிப்படுத்துங்கள். ஏற்கனவே முதலாவது செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறை களையே இச்செயற்பாட்டிலும் மேற்கொள்ளுகள்.


1. ஐந்தாவது வரி

| | | |
|---|---|---|
| **காற்று** | **வீசும்** | **விசிறி** |





2. ஆறாவது வரி

| | | |
|---|---|---|
| **கவரும்** | **அழகு** | **விசிறி** |





3. ஏழாவது வரி

| | | |
|---|---|---|
| **என்** | **கையில்** | **விசிறி** |




4. எட்டாவது வரி

| | | |
|---|---|---|
| **இனிய** | **காகித** | **விசிறி** |




***செயற்பாடு III :***

- மாணவர்களை அரைவட்டமாக அமரச்செய்யுங்கள். விசிறி என்ற பாடலை மாணவர்கள் தாளத்துடன் பாட ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், ஆசிரியர் பாடல் வரிகளை காகித அட்டைக் கீலங்களில் தனித்தனியாக எழுதிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர், பெட்டி ஒன்றில் பாடலில் வரும் சொற்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதிப் பெட்டியில் இட வேண்டும்.
  மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்தப்படும் கீலத்தில் எழுதப்பட்டுள்ள பாடல் வரியை அவதானித்து அதிலுள்ள சொற்களை அட்டைப் பெட்டியில் இருந்து தெரிந்தெடுத்து ஒட்டுப் பலகையில் ஒட்டுதல் வேண்டும். அழைக்கப்படும் ஒவ்வொரு மாணவனுக்கும் கீலங்கள் எழுதப்பட்டுள்ள பாடல் வரிகளை மாறி மாறி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும். அவற்றைப் பார்த்து வாசித்து அட்டைப் பெட்டியில் இருந்து பாடல் வரிக்குரிய சொற்களைத் தெரிவுசெய்து காட்சிப்படுத்தி வாசித்துக்காட்ட வேண்டும்.
  ***எடுத்துக்காட்டு :***

| |
|---|
| **பாட்டி செய்த விசிறி** |

| | | |
|---|---|---|
| **பாட்டி** | **செய்த** | **விசிறி** |

அதன் பின்னர், ஆசிரியர் கரும்பலகையில் எழுதியுள்ள சொற்களில் விடுபட்ட எழுத்தைக் கண்டுபிடித்து அப்பியாசக் கொப்பியில் எழுத வேண்டும். (ஆசிரியர் விடுபட்ட எழுத்துக்களை கரும்பலகையில் கட்டமொன்றினுள் எழுதிக் காட்சிப்படுத்துதல் வேண்டும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி, | டி, | லை, | ற், | ழ, | னை |

✓ வி ☐ றி ✓ ஓ ☐

✓ பாட் ☐ ✓ கா ☐ று

✓ ப ☐ ✓ அ ☐ கு

ஆசிரியர், மாணவர்கள் எழுதிய சொற்களைப் பார்வையிட்டு, பிழைதிருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். இடர்படும் மாணவர்களுக்கு அப்போதே அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

***செயற்பாடு IV :***

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற கதையின் முதல் நான்கு பந்திகளை மட்டும் ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியாகப் பிரதியெடுத்து வழங்குங்கள். அந்த நான்கு பந்திகளி லிருந்தும் சில சொற்களைத் தெரிவுசெய்து தனித்தனி அட்டைகளில் எழுதி பெட்டி ஒன்றில் இட்டுக் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

| | | | |
|---|---|---|---|
| **இரண்டு** | **மரம்** | **காற்று** | **வேகம்** |
| **அண்ணா** | **ஒன்று** | **நாம்** | **கீழே** |

ஒவ்வொரு சொல்லாக காட்சிப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். அச்சொற்களை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பிரதிகளில் தேடிக் கண்டுபிடித்து அவற்றை வெவ்வேறு நிறப் பென்சில்களால் வட்டமிட்டு வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு சொல்லையும் காட்சிப்படுத்திய பின்னர் மாணவர்கள் அச்சொற்களைக் கண்டுபிடித்திருக்கிறார்களா என்பதை அவதானியுங்கள். ஒவ்வொரு சொல்லையும் அனைவரும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், காட்சிப்பலகையில் தெரிவுசெய்து காட்சிப்படுத்திய எல்லாச் சொற்களையும் ஒன்றின்கீழ் ஒன்றாகக் காட்சிப்படுத்துக. அச்சொற்களை மாணவர்கள் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.

காட்சிப்படுத்திய சொற்களை பெட்டியில் மீண்டும் இடுங்கள். மாணவர்கள் உறுப்பமைய எழுதும்போது ஒவ்வொரு மாணவனையும் அழைத்துப் பெட்டியில் இருந்து மூன்று சொற்களை எடுத்து எழுத்துக்கூட்டி வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு V :***

- கதையின் முதல் பகுதியைப் பிரதியெடுத்து வழங்கியதுபோன்று, கதையின் அடுத்த பகுதியைப் பிரதியெடுத்து, மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி, கரும்பலகையில் காட்சிப்படுத்தப்படும் சொற்களைக் குழுக்களாகக் கண்டுபிடித்து வட்டமிட வழிப்படுத்துங்கள். (ஒவ்வொரு சொல்லாகக் காட்சிப்படுத்துங்கள்.)


***எடுத்துக்காட்டு :***

| | | | |
|---|---|---|---|
| **பயம்** | **நான்** | **காயம்** | **கைப்பிடி** |
| **அருகே** | **கண்** | **நேரம்** | **என்ன** |

வட்டமிட்ட சொற்களைக் குழுக்களாக வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொன்றாகக் காட்சிப்படுத்தப்பட்ட சொற்களை ஒன்றன்கீழ் ஒன்றாகக் காட்சிப்பலகையில் காட்சிப்படுத்துங்கள். அச்சொற்களில் நான்கு சொற்களை மாணவர்கள் சுயமாகத் தெரிவுசெய்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் அச்சொற்களைப் பார்த்து எழுத ஆர்வமூட்டுங்கள். குழுக்களிடையே தொடரொழுங்கில் ஒவ்வொரு சொல்லாக வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***




இவ்வாறு எல்லாச் சொற்களையும் வாசித்துக் காட்டுவதற்கு ஆவன செய்யுங்கள். ஒரு குழு வாசிக்கும்போது மற்றைய குழுக்கள் அமைதியாக செவிமடுக்க வேண்டும் என வலியுறுத்துங்கள்.

### *செயற்பாடு VI :*

- அலட்சியம் என்ற கதையில் வரும் இலகுவான வினைச்சொற்களைத் தெரிவுசெய்க. எக்காரணங் கொண்டும் மாணவர்களுக்கு வினைச்சொற்கள் எனக் கூறி அறிமுகஞ் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

| | | | |
|---|---|---|---|
| வந்தன | என்றது | கேட்டது | விலகியது |
| விழுந்தது | தாவியது | கூறியது | துடித்தது |

இச்சொற்களைக் கொண்டு குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டைகளைத் தயாரித்து பெட்டிகளில் இடுங்கள். அதன் பின்னர் மேலே தரப்பட்டுள்ள சொற்களைக் கரும்பலகையில் பெரிதாக எழுதி ஒவ்வொரு சொல்லாக எழுத்துக்கூட்டி வாசித்துக் காட்டுங்கள்.


***எடுத்துக்காட்டு :***

| | | | |
|---|---|---|---|
| வ | ந் | த | ன |
| கே | ட் | ட | து |
| கூ | றி | ய | து |

அதன் பின்னர், ஒவ்வொரு சொல்லையும் மாணவர்களுக்கு உரத்து எழுத்துக்கூட்டச் சொல்லி மாணவர்கள் எழுத்துக்கூட்டி மீண்டும் சொல்ல ஆர்வமூட்டுங்கள். மாணவர்களை எழுமாறாக அழைத்து கரும்பலகையில் உள்ள சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு எழுத்தட்டைகளைக் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள்.

எல்லாக் குழுக்களையும் ஒருவர்பின் ஒருவராக அமரச் செய்து முதலில் இருப்பவரிடம் எழுத்தட்டைப் பெட்டியை வழங்குங்கள். அதேவேளை வரிசையின் இறுதியில் இருப்பவரிடம் வெற்றுப் பெட்டி ஒன்றினையும் வழங்குங்கள். சொற்களை கைமாற்றி வாசித்த பின் இறுதியில் இருப்பவர் அவற்றை அந்த வெற்றுப் பெட்டியினுள் இட வேண்டும். எல்லாச் சொற்களையும் குழுவினர் வாசித்து முடித்த பின்னர், இறுதியில் இருப்பவர் அட்டைகளை எடுத்து வாசித்து தனக்கு முன்னால் உள்ளவரிடம் கொடுக்க வாசிப்பு அட்டை முதலில் இருப்பவரிடம் போய்ச் சேரும். இந்த வாசிப்புச் செயற்பாட்டு விளையாட்டை மீண்டுமொரு முறை மேற்கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு :*




எல்லாக் குழுவினரும் எழுத்துக்கூட்டி வாசித்த பின்னர், குழுவாக அமர்ந்து அச்சொற்களைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் எழுதுதல் வேண்டும். எழுதிய சொற்களை மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து வாசித்துக் காட்டுதல் வேண்டும்.

***செயற்பாடு VII :***

- மாணவர்களுக்கு ஏற்கனவே விரல்பொம்மை ஊடாக மேற்கொள்ளப்பட்ட வினா மாலை உரையாடலை மீண்டும் செய்துகாட்டுங்கள்.

| வினா | விடை |
|---|---|
| ✓ என்ன வேண்டும்? | பழம் வேண்டும். |
| ✓ என்ன பழம்? | மாம்பழம். |
| ✓ என்ன மா? | புளி மா |
| ✓ என்ன புளி | கறிப்புளி |
| ✓ என்ன கறி? | மீன் கறி |
| ✓ என்ன மீன்? | சுறா மீன் |
| ✓ என்ன சுறா? | பால்ச் சுறா |
| ✓ என்ன பால்? | பசும்பால் |

இவ்வுரையாடலை கரும்பலகையில் பெரிய எழுத்தில் எழுதி மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அதன் பின்னர், விடைப் பகுதியில் இருந்து மாணவர்கள் தமக்கு விருப்பமான மூன்று சொற்களை தமது அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியரிடம் வாசித்துக் காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.

***செயற்பாடு IX :***

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள். ஏற்கனவே ஒலிப்பதிவுக் கருவி ஊடாகச் செவிமடுத்த அலட்சியம் என்ற கதையை மீண்டும் ஒலிக்கச் செயயுங்கள். அக்கதையை மாணவர்கள் செவிமடுக்கச் செய்யுங்கள். மாணவர்களிடம் கதையின் ஊடாகக் கேட்க வேண்டிய வினாக்களை அட்டை ஒன்றில் எழுதிக் கொள்ளுங்கள். அவ்வினாக்களுக்கான விடைகளை மாணவச் சோடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டைகளில் எழுதி பெட்டியில் இட்டுக்கொள்ளுங்கள். பெட்டிகளில் மேலதிகமாக வினாக்களுடன் தொடர்பற்ற விடைகள் எழுதப்பட்ட இரண்டு அட்டைகளை இட்டுக் கொள்ளுங்கள். அதன் பின்னர் பின்வருவன போன்ற வினாக்களை வினவுங்கள். விடைப்பெட்டியில் இருந்து விடைகளைக் கண்டுபிடித்துக் கூற வழிப்படுத்துங்கள்.

1. காட்டில் எத்தனை குரங்குகள் வாழ்ந்து வந்தன?
2. குரங்குகளில் புத்திசாலிக் குரங்கு எது?
3. காட்டில் காற்று எப்படி வீசியது?
4. உனக்குப் பயம் என்றால் இங்கே இரு என்று கூறிய குரங்கு எது?
5. குரங்கு எதனால் துடிதுடித்தது?

*வினாக்களுக்கான சுருக்கமான விடை*

| | | | |
|---|---|---|---|
| **இரண்டு** | **இளையது** | **வேகமாக** | **மூத்த குரங்கு** |
| **வலியால்** | **மெல்ல** | **பயம்** | |

கண்டுபிடித்துக் கூறிய விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பில் வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். அவர்கள் எழுதிய விடைகளை ஆசிரியர் பார்வையிட்டு திருத்தங்களைச் செய்தல் வேண்டும்.

***செயற்பாடு X :***

- இணையத்தளம் ஊடாக யு-ரியூப் இல் இருந்து ஏற்கனவே தெரிவு செய்த பாடல்கள் மற்றும் கதைகளை மாணவர்கள் கணினி ஊடாகவோ அல்லது தொலைக்காட்சி ஊடாகவோ அல்லது எறிகருவி (புரொஜெக்டர்) மூலமாகவோ பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  காணொளிப் பாடல்கள் 2 நிமிடங்களுக்கு மேற்படலாகாது.
  காணொளிக் கதைகள் 3 தொடக்கம் 5 நிமிடங்களுக்குள் இருத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
  பாடல்கள், கதைகள் ஆகியவற்றை மாணவர்கள் மீண்டும் காணொளியில் பார்த்த பின்னர் அது தொடர்பில் வினாக்களை வினவி அதற்கான விடைகளைக் கேட்டறியுங்கள். செயற்பாடு ஒன்றில் மேற்கொண்ட செயற்பாட்டு அணுகுமுறையைச் செயற்படுத்துங்கள்.

***செயற்பாடு XI :***

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாடல்கள், கதைகள் ஆகியவற்றைச் சித்திரமாக வரைய ஆர்வமூட்டுங்கள். முதல் நாள், பாடல்களின் கருப்பொருளைச் சித்திரமாகவும் மறுநாள் கதையைச் சித்திரமாகவும் வரைய ஆர்வமூட்டுங்கள். வரைந்த சித்திரங்கள் தொடர்பாக மாணவர்கள் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள். மூன்றாம் நாள் மாணவர்கள் வரைந்த சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி மாதிரிச் சித்திரக் கண்காட்சியை ஏற்பாடு செய்யுங்கள். இக்கண்காட்சியை பெற்றோரும் பார்வையிட அனுமதியளியுங்கள். அவர்களின் கருத்துக்களையும் கேட்டறியுங்கள். மாணவர்களைக் கண்காட்சி ஊடாக உற்சாகப் படுத்துங்கள்.

***கணிப்பீடு :***

- சிறுவர் பாடல்களைச் செவிமடுத்துப் பாடுதல் (சொற்கள்)
- சிறுவர் கதைகளைச் செவிமடுத்துப் கூறுதல்
- உரையாடல்களில் ஈடுபடுதல்
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்துத் துலங்குதல்
- சித்திரங்கள் வரைந்து விளக்குதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## 04

## தேர்ச்சிகள் :

**$L_4$** – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.

**$S_4$** – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.

**$R_4$** – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.

**$W_4$** – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.

## உள்ளடக்கம் :

- பாடசாலையுடன் தொடர்புடைய
  - அறிவித்தல்கள்
  - அறிவுறுத்தல்கள்
  - கட்டளைகள்
  - தகவல் பரிமாற்றம்
  - சுயவிபரம்

## கற்றல் பேறு :

- பாடசாலையில் வழங்கப்படும் சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளங்கி அவற்றைப் பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ சுயமாக வெளிப்படுத்துவார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் புரிந்துகொண்டு உரியவாறு துலங்குவார்.
- சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் மற்றும் தகவல்களை வாசிக்க முயலுவார்.
- காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள், தகவல்கள் ஆகிய வற்றைத் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார்.
- தன்னைப் பற்றிய முக்கிய விபரங்களைப் பெற்றோரின் உதவியுடன் எழுதி வெளிப்படுத்து வதுடன் காட்சிப்படுத்துவார்.

## வளங்கள் :

- ஒலிப்பதிவுக் கருவி, அட்டைகள், சுயவிபரப் படிவ நகல் பிரதிகள், சொல்லட்டைகள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

***செயற்பாடு I :***

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். கீழே தரப்பட்டுள்ளவாறான அறிவித்தல்களை ஒலிப்பதிவு கருவி மூலம் பதிவு செய்து ஒலிக்கச் செய்யுங்கள். மாணவர்கள் அவதானமாகச் செயற்படுகின்றார்களா என அவதானியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு*** :

  ✓ எல்லோரும் நாளை பூக்கள் கொண்டுவருதல் வேண்டும்.


  ✓ எல்லோரும் வெள்ளிக்கிழமை சித்திரக் கொப்பி கொண்டு வரவும்.

  ஒலிக்கவிடப்பட்ட அறிவித்தல்களை மாணவர்கள் தெளிவாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அவ்வப்போது உதவுங்கள்.

  அறிவித்தல்களை கரும்பலகையில் எழுதுங்கள் (பெரிய எழுத்துக்களில்). எழுதிய அறிவித்தல்களை மாணவர்களுக்கு எழுத்துக்கூட்டி வாசித்துக் காட்டுங்கள். வாசித்துக் காட்டிய பின், மாணவர்களுக்கு ஒவ்வொரு சொற்களாகச் சொல்லிக் கொடுங்கள். அதன் பின்னர், மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் சுயமாக எழுத்துக்கூட்டி வாசிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். வாசித்த அறிவித்தல்களை (தெளிவாக) எழுத வழிப்படுத்துங்கள்.


**செயற்பாடு II :**

- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள். ஆசிரியர் நடுவில் நின்று கீழே தரப்பட்டுள்ளவாறான அறிவுறுத்தலை வழங்குங்கள்.




***எடுத்துக்காட்டு :***


- ✓ எல்லோரும் தாய்மொழிப் பயிற்சிக் கொப்பியை எடுங்கள்.
- ✓ புதிய பக்கம் ஒன்றைத் தெரிவுசெய்யுங்கள் / எடுங்கள்.
- ✓ அப்பக்கத்தின் நடுவில் பெரிய வட்டம் ஒன்றை வரையுங்கள்.



- ✓ அவ்வட்டத்தினுள்ளே பூ ஒன்றை வரையுங்கள்.



- ✓ பூவிற்கு நிறந் தீட்டுங்கள்.



அதன் பின்னர், மாணவர்களை எழுமாறாக அழைத்து ஆசிரியர் கூறிய அறிவுறுத்தல்களை மீண்டும் கூறுமாறு கூறுங்கள். இடர்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவிகளை வழங்குங்கள்.

ஆசிரியர், மாணவர்களுக்குக் கூறிய அறிவுறுத்தல்களை கரும்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும். அவ்வறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.

கரும்பலகையில் எழுதிய அறிவுறுத்தல்களை மாணவர்கள் பார்த்துக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய அறிவுறுத்தல்களை மாணவர்கள் வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள் (எழுத்துக்கூட்டி வாசித்தல் வேண்டுமென்பதை கவனத்திற் கொள்க).

இதுபோன்று வித்தியாசமான அறிவுறுத்தல் செயற்பாடுகளை மாணவர்களுக்கு முன்வைக்குக.

***செயற்பாடு III :***

- மாணவர்களை எழுந்துநிற்கச் செய்யுங்கள். அதன் பின்னர், கீழ்வரும் கட்டளைகளை வழங்கி அவர்கள் துலங்குகின்றார்களா என்பதை அவதானியுங்கள். கட்டளைகள்

அவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமானதாக அமைவதைக் கருத்திற் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

- ✓ அந்த மூலையில் உள்ள சிறிய அலுமாரியைத் திறவுங்கள்.
- ✓ உங்கள் பென்சிலை மேசைமீது வையுங்கள்.
- ✓ உங்களுடைய புத்தகப்பையை இறாக்கை மீது வையுங்கள்.

மாணவர்களுக்கு வழங்கிய கட்டளைகளைப் பெரிய அட்டைகளில் எழுதிக் காட்சிப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். மாணவர்களுக்கு அக்கட்டளைகளை வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களைச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசித்த கட்டளைகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி மீண்டும் வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.


***செயற்பாடு IV :***

- மாணவர்களை நான்கு குழுக்களாக்கி அவர்களை வரிசையாக அமரச் செய்து, தகவல் ஒன்றை நான்கு குழுக்களிலுமுள்ள முதல் மாணவர்களுக்கு ஒரே தகவலை இரகசியமாக வழங்கி, தமது குழுவிலுள்ள அடுத்த மாணவருக்கு காது வழியே கூறுமாறு கூறுங்கள். அத்தகவலை அடுத்தவர் மற்றவருக்கு இரகசியமாகக் கூறுமாறு வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவினதும் இறுதியில் அமர்ந்துள்ள மாணவர்களை அழைத்து தமக்குக் கூறப்பட்ட தகவல்களை உரத்துக் கூறுமாறு கூறுங்கள். நான்கு குழுக்களிலும் முதல் வரிசையில் அமர்ந்துள்ள நான்கு மாணவர்களையும் அழைத்து ஆசிரியர் கூறிய தகவலைக் கூறச் செய்து தகவலின் நம்பகத்தன்மையை உறுதி செய்யுங்கள். முரண்பாடுகள் காணப்படின் மீண்டும் புதிய தகவல் ஒன்றைக் கொடுத்து இரகசியத் தகவல்களாகப் பரிமாறுங்கள். இதுபோன்று வெவ்வேறு விதமாக தகவல்களைப் பரிமாறுங்கள். இச்செயற்பாடு போன்று வித்தியாசமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் வழங்க வேண்டுமென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

***எடுத்துக்காட்டு :***

**தகவல்கள்** : ✓ வாத்து நீரில் நீந்தும்.
✓ முயல் துள்ளி ஓடும்.
✓ யானை பொதி சுமக்கும்.

**வகுப்பறை ஒழுங்கமைப்பு**




இரகசியமாகக் கூறப்பட்ட தகவலை நான்கு அட்டைகளில் எழுதுங்கள். அட்டைகளில் எழுதப்பட்ட தகவலை நான்கு குழுக்களில் உள்ளவர்களும் பரிமாறி வாசிக்க வழிப்படுத்துங்கள். (ஒருவர் பின் ஒருவராக வாசிக்கச் செய்யுங்கள்). ஆசிரியர் கரும்பலகையில் அத்தகவலை எழுத வேண்டுமென்பதை நினைவிற் கொள்ளுங்கள். அத்தகவலை அப்பியாசக் கொப்பியில் மாணவர்கள் எழுத வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு V :***

- மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று வட்டமாக அமரச்செய்யுங்கள். ஒவ்வொருவராக எழும்பி தமது பெயர், வயது, இருப்பிடம், ஊர், தனது நண்பனின் பெயர், ஆசிரியரின் பெயர் ஆகியவற்றைக் கூறச் செய்யுங்கள்.

அதன் பின்னர், மாணவர்களைச் சோடிகளாக்கி, மேற்கூறியவற்றைத் தமக்கிடையே பரிமாறிக்கொள்ள வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர்கள் எல்லோருக்கும் பின்வரும் சுயவிபரப் படிவம் ஒன்றை வழங்குங்கள். அப்படிவத்தை A4 தாளில் கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து வழங்குங்கள். வீட்டிலுள்ள மூத்தவர் ஒருவர் மூலம் பூர்த்தி செய்து வருமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

**சுயவிபரப் படிவம்**

மாணவரின் புகைப்படம்

மாணவர் பெயர் : ..........................................

கற்கும் வகுப்பு : ..........................................

வயது : ..........................................................

ஊர் : ..............................................................

....................................

பெற்றோர் கையொப்பம்

***செயற்பாடு VI :***

- மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். சோடியாக்கப்பட்ட மாணவர்களால் பூரணப்படுத்திக் கொண்டு வரப்பட்ட சுயவிபரப் படிவத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், தனது சோடியின் சுயவிபரப் படிவத்தை வாங்கி வாசிக்க ஆர்வமூட்டுங்கள். சோடிகளாக வாசித்த பின்னர் அவற்றைச் சேகரித்துக் கொண்டு அவர்கள் அனைவரையும் வெளியில் அழைத்துச் சென்று வட்ட வடிவில் நிற்கச் செய்யுங்கள். ஒரு மாணவரின் சுயவிபரப் படிவத்தை வாங்கி முதலில் உள்ள மாணவரின் பெயரை வாசியுங்கள். வட்டத்தில் நிற்கும் எல்லோரும் எல்லோருடைய அட்டையிலுமுள்ள மாணவரின் பெயரை வாசிக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள். அதன் பின்னர் மாணவர்களை வகுப்பிற்கு அழைத்து வந்து, தமது நண்பர்கள் 3 பேரின் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள். (இதுபோன்று வெவ்வேறு செயற்பாடுகளை ஆசிரியர் ஆக்கி முன்வைக்க வேண்டும்.)

**கணிப்பீடு :**

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள், தகவல்களை செவிமடுத்து துலங்குதல், பரிமாறுதல், வாசித்தல், எழுதுதல்
- சுயவிபரப் படிவத்தை வாசித்தல், எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## தேர்ச்சிகள் :

**$L_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.

**$S_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.

**$R_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.

**$W_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.

## உள்ளடக்கம் :

- சிறிய கதைகள்
- ஒலி மரபுச் சொற்கள்
- விடுகதைகள்
- குறியீடுகள் (விளக்கம்)
- சொல்வதெழுதல் (தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்)

## கற்றல் பேறு :

- சிறிய கதைகள், ஒலி மரபுச் சொற்கள், விடுகதைகள் ஆகியவற்றைச் செவிமடுத்து அவற்றை மீளவும் முன்வைப்பார். உரிய வகையில் பிரயோகிப்பார்.
- விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார்.
- குறியீடுகளை இனங்காண்பதோடு விளங்கி, பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- தெரிவுசெய்யப்பட்ட சொற்களைச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார்.

## வளங்கள் :

- சிறிய கதைகள், ஒலி மரபுச் சொல்லட்டைகள், விடுகதை அட்டைகள், குறியீடுகள், சிறிய பெட்டிகள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

### செயற்பாடு I :

- கீழே தரப்பட்டுள்ளவாறான சிறிய கதையொன்றைத் தெரிவுசெய்யுங்கள். கதையை, மாணவர்களைக் கவரக்கூடிய முறையில் சொல்லி ஒலிப்பதிவுக் கருவியில் பதிவுசெய்து கொள்ளுங்கள். மாணவர்களை வட்டமாக அமரச் செய்து நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வைத்து ஒலிக்க விடுங்கள். மாணவர்கள் அமைதியாக கதையைச் செவிமடுக்க உற்சாகமூட்டுங்கள். அதன் பின்னர் கதை தொடர்பாக மாணவர்களிடம் வினாக்களை வினவுங்கள். மீண்டும் ஒலிப்பதிவுக் கருவியை இயக்கி கதையை ஒலிக்க விடுங்கள். மீண்டும் மாணவர்கள் கதையைச் செவிமடுக்கிறார்களா என அவதானிக்குக. அதன் பின்னர், மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். சோடிகளாகத் தமக்கிடையே கதை சொல்ல ஆர்வமூட்டுங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்து அவர்கள் இணைந்து செவிமடுத்த கதையை மீண்டும் கூற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், கதையில் வரும் முக்கிய சொற்களை அட்டைகளில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். அச்சொற்களைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் எழுதச் செய்யுங்கள். அதன் பின்னர், எழுதிய சொற்களை வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

  எடுத்துக்காட்டு :

**கதை**

**(நன்றி மறக்காத எறும்பு)**

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.
மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக்கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்க, கரையில் ஏறி தப்பியது அந்த எறும்பு.

மற்றொரு நாள்.

ஒரு வேடன் அந்தப் புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால், புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு.

விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாக இருக்காமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்தச் சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.

**கதையில் வரும் முக்கியமான சொற்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **கட்டெறும்பு** | **புறா** | **எறும்பு** | **கரை** | **பறந்தது** |
| **கடமை** | **வேடன்** | **சத்தம்** | **ஆபத்து** | **தப்பியது** |

***செயற்பாடு II :***

- ஏற்கனவே கூறப்பட்ட கதையை கதைப்படமாக வரைந்து, அதனை A4 அட்டையில் ஒட்டி, போதியளவு பிரதியெடுத்துக் கொள்ளுங்கள். அத்துடன் கதையில் வரும் முக்கிய சொற்களைப் போதியளவு அட்டைகளில் எழுதி பெட்டியில் இட்டுக்கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். அக்குழுக்களுக்கு கதைப்பட அட்டைகளை வழங்குங்கள். மாணவர்கள் குழுவாக அக்கதைப்பட அட்டையைப் பார்த்துக் கதை கூற வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரைத் தெரிவுசெய்து அவர்களை வகுப்பு முன்னிலையில் கதைப்படத்தைப் பார்த்து உணர்வுபூர்வமாக, சுயமாக கதை சொல்ல உற்சாகப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர் குழுக்களுக்கு கதையில் வரும் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகளை வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு :***

| | | | | |
|---|---|---|---|---|
| **இடம்** | **மரம்** | **எறும்பு** | **காற்று** | **இலை** |
| **கரை** | **வேடன்** | **நீர்** | **உயிர்** | **உதவி** |

பெட்டிகளிலுள்ள சொற்கள் அனைத்தையும் குழுவில் உள்ள அனைவரும் வாசிக்க வேண்டுமென அறிவுறுத்துங்கள். அவர்கள் வாசித்ததும் சொற்கள் கொண்ட பெட்டியை குழுக்களிடமிருந்து மீளப் பெறுங்கள். அதன் பின்னர், பெட்டியில் உள்ள சொற்களை சொல்வதெழுதலாக வழங்குங்கள். (சொல்வதெழுதலாக ஒரு சொல்லைச் சொல்லும்போது அச்சொல்லைச் சரியாக உச்சரித்து மூன்று முறை சொல்ல வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளுங்கள்.)

சொல்வதெழுதல் வழங்கப்பட்ட பின்னர், குழுக்களுக்குச் சென்று மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிடுங்கள். அதன் பின்னர், சொற்கள் எழுதப்பட்ட அட்டைப்

பெட்டியை குழுக்களுக்கு வழங்குங்கள். தாம் எழுதிய சொற்களில் எந்தச் சொல் தவறாக எழுதப்பட்டுள்ளது எனச் சொல்லட்டையுடன் ஒப்பிட்டு அச்சொல்லை அல்லது சொற்களை மீள எழுத ஆர்வமூட்டுங்கள்.

### *செயற்பாடு III :*

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஏற்கனவே கற்ற கதையை (நன்றி மறக்காத எறும்பு) தமது குழுக்களிடையே கூறச் செய்யுங்கள். அதன் பின்னர், ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரைத் தெரிவுசெய்து கதையைக் கூற ஆர்வமூட்டுக. அதன் பின்னர், ஏற்கனவே மாணவர்களுக்கு வழங்கிய சொற்கள் எழுதப்பட்ட அட்டைப் பெட்டியை வழங்குங்கள். அதில் உள்ள சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர்களிடமிருந்து சொற்கள் கொண்ட பெட்டியை மீளப் பெறுக. பெட்டியில் உள்ள சொற்களில் ஓர் எழுத்தை நீக்கிக் கரும்பலகையில் எழுதுங்கள்.
  எடுத்துக்காட்டு :

✓ **இ□ ம்** ✓ **ம□ ம்** ✓ **எ□ ம்பு**


✓ **காற்□** ✓ **இ□** ✓ **க□**

✓ **வே□ ன்** ✓ **நீ□** ✓ **உ□ ர்** ✓ **உ□ வி**

அப்பியாசக் கொப்பியில் சொற்களில் உள்ள இடைவெளியைப் பூர்த்திசெய்து எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மீண்டும் சொற்கள் கொண்ட பெட்டியை வழங்குங்கள். தாம் எழுதிய சொற்கள் சரியானவையா என பெட்டியில் உள்ள சொற்களைப் பார்த்து தெரிந்துகொள்ளவும், தவறுகளை நீக்கிக்கொள்ளவும் ஆவன செய்யுங்கள்.

### *செயற்பாடு IV :*

- மாணவர்களுக்கு ஒலி மரபுச் சொற்களை அறிமுகஞ் செய்வதற்காக எட்டுப் பிராணிகளின் பெயர்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். (தெரிவுசெய்யும் பிராணிகளின் ஒலிமரபுச் சொற்கள் இலகுவானதாக இருத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்) மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள். தெரிவுசெய்த பிராணிகளின் படங்களை குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதியெடுத்து ஒரே அளவான அட்டைகளில் ஒட்டிப் பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள்.



பிராணிகளின் ஒலி மரபுச் சொற்களையும் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டைகளில் எழுதி வேறு பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள். அதன் பின்பு பிராணிகளின் படங்களைக் காட்டி அவை எவ்வாறு ஒலி எழுப்பும் என மாணவர்களிடம் வினவுங்கள். மாணவர்களை ஒலி எழுப்ப உற்சாகமூட்டுங்கள். அதன் பின்னர், பிராணிகளின் ஒலி மரபுச் சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள். படங்களைக் காட்டி எல்லா மாணவர்களிடமும் பிராணிகளின் ஒலி மரபுச் சொற்களை வினவுங்கள். விடையளிக்கச் சிரமப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். அவர்களிடம் மீண்டும் மீண்டும் வினவுங்கள். அதன் பின்னர், மாணவர் குழுக்களுக்கு பிராணிகளின் படங்கள் கொண்ட பெட்டிகளையும் ஒலி மரபுச் சொற்கள் எழுதப்பட்ட பெட்டிகளையும் வழங்குங்கள். அவர்கள் பிராணிகளின் படங்களைத் தெரிவு செய்து அவற்றுக்கான ஒலிமரபுச் சொற்களைத் தெரிவு செய்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

அதன் பின்னர், ஒவ்வொரு குழுவுக்கும் ஆசிரியர் சென்று அவர்களுடன் இணைந்து செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

இறுதியாக, பிராணிகளின் படங்களையும் அவற்றுக்குரிய ஒலி மரபுச் சொற்களையும் காட்சிப்பலகையில் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய பிராணிகளின் பெயர்களையும் ஒலி மரபுச் சொற்களையும் மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி தமது குழுக்களிடையே வாசித்துக் காட்ட காட்சிப்படுத்துங்கள். (இச்செயற்பாட்டை குழுக்களுக்கிடையேயான போட்டிச் செயற்பாடாக மாற்றி வழங்க முடியும்)

*குறிப்பு : 5 அல்லது 8 ஒலி மரபுச் சொற்களை மட்டுமே தரம் ஒன்றில் அறிமுகஞ் செய்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.*

***செயற்பாடு V :***


- கீழே தரப்பட்டுள்ளவாறான விடுகதைகளை அட்டைக் கீலங்களில் எழுதிக்கொள்ளுங்கள். அவற்றுக்கான விடைகளை குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பட அட்டைகளாக பெட்டியில் இட்டு வழங்குவதற்குத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் விடுகதைகளைக் கொண்ட பட அட்டைகளை உள்ளடக்கிய பெட்டிகளை வழங்குங்கள். (10 விடுகதைகளுக்கு 10 விடைப் பட அட்டைகளை இடுவதுடன் மேலதிகமாக விடையுடன் தொடர்பற்ற மூன்று அல்லது ஐந்து பட அட்டைகளையும் ஒவ்வொரு பெட்டியிலும் இடுதல் வேண்டும்.)

  ஆசிரியர், குழுக்களுக்கு நடுவில் நின்று விடுகதை எழுதப்பட்டுள்ள கீலம் ஒன்றை எடுத்து உரத்து வாசிக்க வேண்டும். அதற்கான விடைப் பட அட்டையை மாணவர்கள் குழுவாகப் பெட்டியிலிருந்து எடுத்து வைத்திருக்க வேண்டும். ஆசிரியர், எந்தக் குழுவிடம் கேட்கிறாரோ அந்தக் குழு விடையைக் கூறுவதோடு பட அட்டையையும் உயர்த்திக் காட்டுதல் வேண்டும். அதன் பின்னர், ஏனைய குழுக்கள் தாம் தெரிவுசெய்த பட அட்டையை உயர்த்திக் காட்டி விடையைக் கூறுதல் வேண்டும்.

விடுகதைகள்

- **நன்றிக்கு வால், கோபத்திற்கு வாய் அது என்ன?**
- **பற்கள் இருக்கும் கடிக்க மாட்டான் அவன் யார்?**
- **காற்றைக் குடித்து காற்றிலே பறப்பான் அவன் யார்?**
- **உணவை எடுப்பான் ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?**
- **தலையைச் சீவினால் தாளிலே நடப்பான் அவன் யார்?**
- **வெள்ளை மாளிகை உள்ளே செல்ல வாசல் இல்லை அது என்ன?**
- **உருவிலே சிறியவன் உழைப்பிலே பெரியவன் அவன் யார்?**
- **மழை காலத்தில் உதவுவான் அவன் யார்?**
- **மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார்?**
- **போகும் இடம் எங்கும் கோடு கிழிப்பான் அவன் யார்?**

விடுகதைக்கான விடைப் படங்களைக் கொண்ட பெட்டி



விடுகதைக்கான விடைப் படங்களை ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். படங்களுக்குரிய பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க மாணவர்களை ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களிடம் வீட்டில் உள்ளவர்களிடம் ஒரு விடுகதையைக் கேட்டு வந்து சொல்ல வேண்டுமென அறிவுறுத்துங்கள்.


***செயற்பாடு VI :***

- மாணவர்களிடம் ஏற்கனவே கேட்கப்பட்ட விடுகதைகளுக்கான விடைகளை அட்டைகளில் எழுதி, மாணவர் குழுக்களுக்கு ஏற்ப பெட்டிகளில் இட்டு தயார்படுத்திக் கொள்ளுங்கள். விடுகதைகளுக்கான விடைப் பட அட்டைப் பெட்டிகளையும் தயார்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். ஆசிரியர் தமது மேசையில் விடுகதைகளுக்கான விடைப் பட அட்டைகளைக் கொண்ட பெட்டியை மேசையில் வைத்திருங்கள். மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஆசிரியரிடம் உள்ள விடுகதை எழுதப்பட்ட கீலங்களை எடுத்து அதிலுள்ள விடுகதையை கேட்க வேண்டும். ஒரு மாணவனிடம் ஒரு விடுகதைக்கான விடையைக் கூறுமாறு கேட்டால் போதுமானது. அவர் விடையைப் படப் பெட்டிக்குள் இருந்து தெரிவுசெய்து விடையைக் கூறுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

  எல்லா மாணவர்களும் விடுகதைகளுக்கான விடைகளைக் கூறிய பின்னர். மாணவர் குழுக்களுக்காக விடைகள் எழுதப்பட்ட அட்டைப் பெட்டிகளையும் பட விடை அட்டைப் பெட்டிகளையும் வழங்குதல் வேண்டும். ஆசிரியர் ஒலிப்பதிவுப் கருவியில் விடுகதைகளைப் பதிவுசெய்து வைத்திருந்து ஒவ்வொரு விடுகதையாக ஒலிக்கவிட வேண்டும். மாணவர்கள் குழுவாக விடுகதைக்கான பட விடைகளையும் எழுதப்பட்ட விடைகளையும் தெரிவுசெய்தல் வேண்டும். எழுதப்பட்ட விடையை எடுத்துக்காட்டி வாசித்துக் காட்டுதல் வேண்டும். அதன் பின்னர், விடுகதைக்கான விடைகள் எழுதப்பட்டுள்ள பெட்டியில் உள்ள விடை அட்டைகளைப் பார்த்து உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள். (விடுகதைகளைத் தெரிவு செய்யும்போது விடைகள் மூவெழுத்துச் சொற்களில் வருமாறு பார்த்துக்கொள்வது சிறந்தது.)

***செயற்பாடு VII :***


- மாணவர்களுக்கு முதலில் பின்வரும் இரண்டு குறியீடுகளின் படங்களை மாணவர்களுக்கு ஏற்ப அட்டைகளில் ஒட்டித் தயார்படுத்திக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.



இந்தக் குறியீடுகள் ஒட்டப்பட்ட இடங்களைக் கண்டிருக்கிறீர்களா என வினவி, குழுவாக கலந்துரையாட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், குழுக்களிடம் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.


**மலசலகூடம்** என்ற பதில் வருகிறதா என்பதை அறிந்துகொள்க. அவர்கள் அறியவில்லை யாயின் விளக்கத்தை வழங்குங்கள்.

அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் இப்படங்களை வரைந்து அதன் கீழ் ஆண், பெண் என எழுத வழிப்படுத்துங்கள்.




***செயற்பாடு VIII :***

- பின்வரும் குறியீடுகளை மாணவர் குழுக்களுக்கு ஏற்ப அட்டைகளில் எழுதிப் பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.




இக்குறியீடுகளை போக்குவரத்துக் குறியீடாக அறிமுகஞ் செய்வதைத் தவிர்க்கவும். செல்ல வேண்டிய பாதையைக் காட்டுவதற்காக பாடசாலையில் வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களை விளக்குங்கள். அதன் பின்னர், இக்குறியீடு தொடர்பாக விளக்கத்தை வழங்குங்கள். மாணவர் குழுக்களிடையே குறியீடுகளின் விளக்கத்தைக் கூறிச் செய்யுங்கள்.

↑ நேரே செல்க.

← இடப் பக்கம் செல்க.

→ வலப் பக்கம் செல்க.

அதன் பின்னர், இக்குறியீடுகளை பெரிய அட்டைகளில் எழுதி, தடி ஒன்றுடன் இணைத்து மைதானத்தில் அல்லது வெளியான இடமொன்றில் வையுங்கள்.




அதன் பின்னர், மாணவர்கள் குழுவாகச் செல்ல வழிப்படுத்துங்கள். இவ்வாறான குறியீடுகள் இடப்படுவதன் நன்மைகளைக் கேட்டறியுங்கள்.

பாடசாலையில் **அதிபர் அலுவலகம்** , **சிற்றுண்டிச்சாலை** , **ஆரம்பப் பிரிவு** ஆகியவற்றுக்குச் செல்லும் பாதையில் மேற்குறிப்பிட்ட குறியீடுகளுடன் மேலேயுள்ள அட்டைகளையும் இணைத்துக் காட்சிப்படுத்துங்கள்.

அதன் பின்னர், மாணவர்களிடம் குறியீடுகளுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர் அட்டைகளையும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், இக்குறியீடுகள் இடங்களை அடையாளங் காண மிகவும் உதவியாக உள்ளன என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள ஆர்வமூட்டுங்கள்.

மைதானத்தில் பாதை அமைத்து பின்வருமாறு பாடசாலை அமைப்பைச் செய்து காட்டுங்கள்.



இவ்வறிவுறுத்தலைப் பின்பற்றி ஒரு குழு அதிபர் அலுவலகம் நோக்கியும் மற்றைய குழு சிற்றுண்டிச்சாலை நோக்கியும் மூன்றாவது குழு ஆரம்பப் பிரிவு நோக்கியும் செல்ல வழிப்படுத்துங்கள். இக்குழுக்கள் சென்று வந்த பின்னர் மற்றைய குழுக்களுக்கும் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கிச் செயற்பட ஆவன செய்யுங்கள். அதன் பின்னர், குறியீடுகளை அப்பியாசக் கொப்பியில் வரைந்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.


↑ நேரே செல்க.


← இடப் பக்கம் செல்க.

→ வலப் பக்கம் செல்க.

*செயற்பாடு IX :*

- பின்வரும் போக்குவரத்துக் குறியீடுகளை மாணவர் குழுக்களுக்கு ஏற்ப பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி அஞ்சல் உறைகளில் இட்டுக்கொள்ளுங்கள். அதன் பின்னர், மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். மாணவர்களிடம் பேருந்துத் தரிப்பிடத்திற்குரிய குறியீட்டை அறிமுகஞ் செய்யுங்கள். அதன் பின்னர், இக்குறியீடுகள் வீதியில் ஏன் உள்ளன என்பதைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர், மாணவர்கள் வீதியில் பார்த்த குறியீடுகளைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர், குழுக்களுக்கு குறியீடுகள் உள்ள அஞ்சல் உறைகளை வழங்குங்கள். அஞ்சலுறையைத் திறந்து பார்த்து அதிலுள்ள குறியீடுகளைப் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.





இக்குறியீடுகளைக் கண்டிருக்கிறார்களா எனக் கேட்டறியுங்கள். அது தொடர்பான விளக்கத்தை வழங்குங்கள். இக்குறியீட்டின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.

அதன் பின்னர், இக்குறியீடுகளைப் பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள். அவற்றை அப்பியாசக் கொப்பியில் ஒட்டுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் கீழ் பின்வருமாறு எழுத வழிப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| பேருந்துத் தரிப்பிடம் | பாதசாரிகள் கடவை | முன்னால் சிறுவர் கடவை |

எழுதிய சொற்களை உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.

*செயற்பாடு X :*

- மாணவர்கள் இதுவரை கற்ற சொற்களைப் பட்டியற்படுத்துங்கள். அதன் பின்னர், குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சொற்களை அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள். *(ஒரு பெட்டியில் 10 சொற்கள் மட்டுமே இடம்பெற வேண்டும் என்பதுடன் இச்செயற்பாடு களும் நான்கு நாட்கள் இடம்பெறுதல் வேண்டும்.)*

***கதை - நாள் 1***

| | | | | |
|---|---|---|---|---|
| எறும்பு | புறா | வேடன் | கரை | கடமை |
| சத்தம் | ஆபத்து | இடம் | காற்று | இலை |

இச்சொற்களைப் பெட்டிகளில் இட்டு மாணவர்களுக்கு வழங்குங்கள். அச்சொற்களை மாணவர்கள் குழுவாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், பெட்டிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். அச்சொற்களை மாணவர்களுக்கு சொல்வதெழுதலாக வழங்குங்கள். மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளை குழுக்களுக்கு அருகில் சென்று பார்வையிட்டு திருத்தங்களை மேற்கொள்ளுங்கள். பிழைதிருத்தம் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

*கதை - நாள் 2*

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | நீர் | உயிர் | உதவி | பறந்தது |
| பறித்தது | தண்ணீர் | வலி | நன்றி | உருவம் |

இச்சொற்களை கரும்பலகையில் எழுதுக. அப்பியாசக் கொப்பியில் எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர். எல்லா மாணவர்களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், அச்சொற்களைச் சொல்வதெழுதுதலாக வழங்குங்கள். மாணவர் குழுக்களுக்கு அருகில் சென்று திருத்தங்களை மேற்கொள்ளுகள். பிழைதிருத்தம் செய்ய உற்சாக மூட்டுங்கள்.

*விடுகதை - நாள் 3*

விடுகதைகளைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நாய் | சீப்பு | பலூன் | பென்சில் | நத்தை |
| அகப்பை | குடை | எறும்பு | முட்டை | காளான் |

மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவும் எழுந்து நின்று பெட்டியில் உள்ள சொற்கள் அனைத்தையும் கைமாற்றிக் கைமாற்றி வாசித்துக் காட்டுதல் வேண்டும்.

இச்செயற்பாடு முடிவடைந்ததும் அச்சொற்களை மாணவர்களுக்குச் சொல்வதெழுதலாக வழங்குங்கள். அதன் பின்னர், மாணவர்கள் தமது குழுவுக்கான பெட்டியில் உள்ள சொற்களும் தாம் எழுதிய சொற்களும் சரியானவையா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென அறிவுரை வழங்குங்கள். தவறாக எழுதிய சொற்களைப் பிழைதிருத்தி எழுதி ஆசிரியரிடம் காண்பிக்க வழிப்படுத்துங்கள்.

*குறியீடுகள் - நாள் 4*

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண் | பெண் | பேருந்து | தரிப்பிடம் | சிறுவர் |
| கடவை | இடது | வலது | நேர் | பக்கம் |

மேலே தரப்பட்டுள்ள குறியீடுகளுடன் தொடர்புடைய சொற்களைப் பிறிசில் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். ஒவ்வொரு மாணவராக அழைத்துச் சிறிய கோல் ஒன்றைக் கொடுத்து ஒவ்வொரு சொல்லாகச் சுட்டி வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், பிறிசில் அட்டையை அகற்றுங்கள். ஒவ்வொரு மாணவராக அழைத்து வாசித்த சொற்களில் இரண்டு சொற்களை நினைவுபடுத்தி கரும்பலகையில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதுவதற்கு இடர்ப்படும் மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களின் உதவியுடன் சொற்களை எழுத ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மீண்டும் பிறிசில் அட்டையில் எழுதப்பட்டுள்ள சொற்களைக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- சுயமாக முன்வந்து கதை சொல்லல்
- கதையில் வரும் சொற்களை நினைவுபடுத்திக் கூறுதல்
- விடுகதைகளை விடுவித்தல்
- குறியீடுகளை இனங்காணுதலும் விளக்குதலும்
- கற்ற சொற்களைச் சொல்வதெழுதலாக எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**06**

## தேர்ச்சிகள் :

**$L_6$** – தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.

**$S_6$** – தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

## உள்ளடக்கம் :

- நண்பர்கள்
- ஆசிரியர்கள் (உரையாடல்)
- விளையாட்டுக் கடை (மாதிரி)
- சந்தை (உரையாடல்)
- தொலைபேசி (உரையாடல்)

## கற்றல் பேறு :

- எல்லோருடனும் பண்பாகவும் அன்பாகவும் நட்புறவுடனும் உரையாடுவார்.
- மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து செவிமடுத்துத் துலங்குவார்.
- பொது இடங்களிலும் கடை, சந்தை போன்ற இடங்களிலும் பண்புடன் செவிமடுத்து உரையாடித் துலங்குவார்.
- தொலைபேசியில் எவ்வாறு உரையாட வேண்டும், தொலைபேசியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்வார்.

## வளங்கள் :

- காகிதக் குவளைகள், ருவைன் நூற்பந்து, மாதிரிக் கடைக்குத் தேவையான பொருள்கள், யோக்கட் கோப்பைகள், மாதிரிச் சந்தைக்குத் தேவையான பொருள்கள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

**செயற்பாடு I :**


- மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் உரையாடித் தெரிந்துகொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். முதலில் நீங்கள் ஒரு மாணவனுடன் உரையாடித் அவனைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். உரையாடல் மூலம் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
  - ✓ பெயர்
  - ✓ வயது
  - ✓ குடும்ப உறவினர்களின் பெயர்கள்
  - ✓ உணவு (விரும்பும்)
  - ✓ விளையாட்டு (விருப்பமான)
  - ✓ விருப்பமான பழம், விருப்பமான பூ, விருப்பமான பானம், விருப்பமான சாதனம்
  - ✓ தெரிந்த பாடல், தெரிந்த கதை, தெரிந்த ஆக்கவேலை

உரையாடி முடிந்ததும் மாணவர்களை தமது சோடியுடன் உரையாடிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
உரையாடல் நிறைவுபெற்றதும் சோடியாக உரையாடிய மாணவர்கள் ஒருவரைப் பற்றிய மற்றையவர் எழுந்து நின்று அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களைக் கூறுமாறு ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். சோடியாக உரையாடித் தகவலகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் தகவல்களைக் கூறியதும் சோடிகளை மாற்றி உரையாடித் தகவல்களைப் பெற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், பெற்றுக்கொண்ட தகவல்களை எல்லா மாணவர்கள் முன்னிலையிலும் கூற வழிப்படுத்துங்கள்.
*குறிப்பு : இச்செயற்பாட்டைத் தொடராகச் செய்ய முடியும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.*

*செயற்பாடு II :*

- மாணவர்களை வட்டமாக அமரச்செய்யுங்கள். ஆசிரியரும் வட்டத்தில் ஓரிடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும். ஆசிரியரிடம் மாணவர்களைக் கேள்வி கேட்க வழிப்படுத்துங்கள். ஆசிரியரும் மாணவர்களிடத்தில் கேள்விகளைக் கேட்க வேண்டும். ஆசிரியரும் மாணவர்களும் கேள்விகளைக் கேட்டு சுமுகமாக உரையாடுதல் வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாக மாணவர்களின் தொடர்பாடல் திறனை வளர்க்க முடியும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***




*ஆசிரியர் : காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?*
*மாணவர் : சோறு*

*மாணவர் : நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்?*
*ஆசிரியர் : தோசை சாப்பிட்டேன்*

*ஆசிரியர் : உங்களுக்கு என்ன உணவு விருப்பம்?*
*மாணவர் : இடியப்பம்*

*மாணவர் : உங்களுக்கு என்ன உணவு விருப்பம்?*
*ஆசிரியர் : அப்பம்*

இவ்வாறு உரையாடல் ஆரம்பித்து விரிவடைந்து செல்லுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மாணவர்கள் சுதந்திரமாகப் பயமின்றி கேள்விகளைக் கேட்க முடியும் என்ற உணர்வை மாணவர் மனதில் ஏற்படுத்த வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு III :**

- மாணவர்களுக்கு ஏற்கனவே அறிவித்தல் வழங்கி விளையாட்டுக் கடை அமைத்து அதிலே மாதிரிப் பொருட்களை வைத்து விற்பனை செய்ய வேண்டும். எனவே அதற்கான பொருட்களை எல்லோரும் கொண்டுவருதல் வேண்டுமென முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்குங்கள். வகுப்பறைக்கு வெளியே மாணவர்களை அழைத்துச் சென்று விளையாட்டுக் கடைகளை அமையுங்கள். (தேவையேற்படின் பெற்றோரின் உதவியை நாட முடியும்.) கடையில் சிலர் வேலை செய்பவர்களாகவும் மற்றையவர்கள் பொருட்களை வாங்குபவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு இடையே பண்பான முறையில் உரையாடல்கள் அமைதல் வேண்டும். பொருட்களை வாங்குவதற்கு மாணவர்களை உற்சாகப்படுத்துங்கள். (பொருட்களை வாங்குவதற்கு கடைகளில் விற்கும் மாதிரிப் பணத்தாள்களைப் பயன்படுத்த முடியும். பணத்தாள்களை நகற்பிரதி எடுப்பதைத் தவிர்க்கவும்.
  இவ்வாறு பண்பாகவும் சுமுகமாகவும் உரையாடல் அமைதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எல்லா மாணவர்களும் மாதிரிக் கடை செயற்பாட்டில் பங்குபற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**செயற்பாடு IV :**

- மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தலை வழங்கி, அதிபரின் அனுமதியையும் பெற்றோரின் அனுமதியையும் பெற்று மாணவர்களைச் சந்தையைப் பார்வையிட அழைத்துச் செல்லுங்கள். (மாணவர்களின் பாதுகாப்பில் கூடிய கவனஞ் செலுத்துங்கள்) பொருட்கள் விற்பவர்களையும் வாங்குபவர்களையும் அவதானிக்கச் செய்யுங்கள்.

- ✓ அவர்கள் எப்படி கூவி விற்கிறார்கள்?
- ✓ வாங்குபவர் எப்படி உரையாடி வாங்குகிறார்?
- ✓ எப்படி பேரம் பேசுகிறார்கள்?

என்பவற்றை மாணவர்களை அவதானிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். சந்தையைப் பார்வையிட்ட பின்னர், வகுப்பறையில் மாணவர்களைக் குழுக்களாக்கிச் சந்தையில் என்ன நடைபெற்றதோ அதுபோல பாவனை செய்து காட்ட ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களைச் சந்தையில் பார்த்தவற்றைக் கூறுமாறு வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு V :***

- மாதிரிச் சந்தை ஒன்றை அமைக்கப் போகின்றோம் என்ற தகவலை முன்கூட்டியே பெற்றோருக்கு அறிவித்து (கொண்டுவர வேண்டிய பொருட்கள், உடைகள் என்பவற்றுக்காக) மாதிரிச் சந்தை ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**



பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்பவர்களையும் வாங்குபவர்களையும் மாண வர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்து அவர்களுக்குரிய உடைகளையும் தெரிவு செய்யுங்கள். ஏற்கனவே அவர்கள் சந்தையில் பெற்ற அனுபவத்தை மாதிரிச் சந்தையில் பிரயோகிக்கின்றார்களா என அவதானியுங்கள்.



வாங்குபவர்களும் விற்பவர்களும் சந்தையில் பண்புடன் உரையாடும் முறையைப் பின்பற்றுகிறார்களா என்பதை அவதானித்து, அவர்களை நெறிப்படுத்துங்கள். (மாதிரிச் சந்தையைப் பெற்றோரும் பார்வையிட அனுமதி வழங்கலாம்.)

**செயற்பாடு VI :**

- மாணவர்களிடம் யோக்கட் கோப்பைகளையும் / காகிதக் குவளைகளையும் ருவைன் நூற்பந்து ஒன்றையும் கொண்டு வரச் செய்க. மாணவர்களைச் சோடிகளாக்கி வகுப்பறைக்கு வெளியில் அழைத்துச் செல்லுங்கள். மாதிரித் தொலைபேசியை யோக்கட் கோப்பை (இரண்டு), நூற்பந்து ஆகியவற்றைக் கொணடு மாதிரித் தயாரியுங்கள். இருவரும் நேருக்கு நேரே சற்றுத் தொலைவில் நின்று யோக்கட் கோப்பை மூலம் உரையாட வழிப்படுத்துங்கள். முதலில் சுதந்திரமாக உரையாட அனுமதியங்கள். அதன் பின்னர், பெற்றோருடன் உரையாடுவது போன்று உரையாட அவர்களை வழிப்படுத்துங்கள். (பிள்ளை - அம்மா, அம்மா - பிள்ளை). இவ்வுரையாடல் முடிந்ததும் நண்பர்களுடன் உரையாடலை மேற்கொள்ள வாய்ப்பு வழங்குங்கள். தொலைபேசியில் உரையாடும்போது மிகவும் சுருக்கமாகவும் பண்புடனும் (குரலை உயர்த்தாமல்) உரையாட வேண்டும் என்பதை நினைவுபடுத்துங்கள்.

**தொலைபேசி உரையாடல் பின்வரும் முறையில் அமைதல் சிறப்பானது :**

A : வணக்கம்.

B : வணக்கம்.

A : நான் குமுதா பேசுகின்றேன், பாத்திமாவுடன் கதைக்க முடியுமா?

B : நான் பாத்திமாதான் கதைக்கின்றேன்.

A : நாளை பாடசாலைக்கு வரும்போது எனக்கு சிறிய பொம்மை ஒன்று கொண்டுவர முடியுமா?

B : இருந்தால் அம்மாவிடம் கேட்டு கொண்டு வருகின்றேன்.

A : நன்றி. நாளை பாடசாலையில் சந்திப்போம்.

B : நன்றி.

இவ்வாறு உரையாடல் சுமுகமாக அமைதல் வேண்டும். மாணவர்கள் சோடியாக உரையாடி முடிந்த பின்னர் ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களிடையே தகவல்களைப் பரிமாற வாய்ப்பு வழங்குங்கள. அதன் பின்னர், மாணவர்கள் ஆசிரியருடன் உரையாடுவதற்கும் (தொலைபேசி) வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- நண்பர்களுடன் நட்புடன் உரையாடுதல்
- ஆசிரியருடன் மரியாதையுடன் உரையாடுதல்
- கடையில் பொருட்களை வாங்கும்போதும் விற்கும்போதும் உரையாடுதல்
- மாதிரிச் சந்தையில் போலச்செய்து உரையாடுதல்
- தொலைபேசியில் பண்புடன் உரையாடுதல்

என்பவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

- **$R_6$** – தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- **$W_6$** – தொடர்பாடலுக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- பொருட்களின் பெயர் (வகுப்பறை)
- உணவுப்பட்டியல் (சிற்றுண்டிச்சாலை)
- ஒட்டிகள் (லேபல்கள்)

**கற்றல் பேறு :**

- வகுப்பறைப் பொருட்களின் பெயர்களை வாசித்துப் புரிந்துகொள்வதோடு தகவல்களையும் பெற்றுக்கொள்ள முயலுவார்.
- உணவுப்பட்டியல் (சிற்றுண்டிச்சாலை) ஒட்டிகள் ஆகியவற்றை வாசித்துத் தெரிந்து கொள்வதோடு தகவல்களையும் குறித்துக் கொள்வார்.


**வளங்கள் :**

- மாதிரி உணவுப்பட்டியல் (சிற்றுண்டிச்சாலை), ஒட்டிகள், சொல்லட்டைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

***செயற்பாடு I :***

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி, வகுப்பறையிலுள்ள பொருட்களின் பெயர்களை மாணவ குழுக்களுக்கு ஏற்ப அட்டைகளில் எழுதிப் பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். குழுக்களிடையே வகுப்பறைப் பொருட்கள் பற்றி உரையாட வழிப்படுத்துங்கள். உரையாடல் நிறைவுபெற்றதும் மாணவர்களிடம் வகுப்பிலுள்ள பொருட்கள் பற்றிக் கேட்டறியுங்கள். பின்னர், வகுப்பறையிலுள்ள பொருட்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளைக் கொண்ட பெட்டியைக் குழுக்களுக்கு வழங்குங்கள். குழுவில் உள்ள ஒருவர் அட்டைப் பெட்டியை எடுத்து ஒவ்வொன்றாக வாசித்து மற்றவரிடம் கொடுக்க வேண்டும். அவர் அட்டையில் உள்ள பெயர்களை உரத்துக் கூறித் தனக்கு அருகிலிருப்பவரிடம் கொடுக்க வேண்டும். சுழற்சி அடிப்படையில் எல்லோரும் வகுப்பறையில் உள்ள பொருட்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளை மூன்று முறை வாசிக்க வேண்டும். சுழற்சி அடிப்படையில் மூன்று முறை வாசிக்கிறார்களா என்பதை அவதானியுங்கள்.



இச்செயற்பாடு முடிவடைந்ததும் அட்டைப் பெட்டியில் உள்ள சொற்கள் அனைத்தையும் அவர்கள் பார்த்து உறுப்பமைய எழுத வேண்டும். எழுதிய பின்னர், எழுதிய சொற்களை எழுந்து நின்று குழுக்களுகளிடையே வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிடுங்கள். பார்வையிடும் போது சில சொற்களை மாணவர்களை வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.

*செயற்பாடு II :*

- மாணவர்களை வகுப்பறையில் உள்ள பொருட்களைச் சித்திரமாக வரைய வழிப்படுத்துங்கள். வகுப்பறையில் உள்ள பொருட்கள் சிலவற்றைத் தெரிவு செய்து அச்சொற்களில் ஓர் எழுத்தை கட்டமிட்டு அட்டைகளில் மாணவர் குழுக்களுக்கேற்ப எழுதி பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள். பிறிதொரு பெட்டியில் அட்டைகளை இட்டு மேசை மீது வைத்துக் கொள்ளுங்கள். மாணவர்கள் சித்திரம் வரைந்து கொண்டி ருக்கும் போது மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அட்டைப் பெட்டியில் இருந்து மூன்று சொற்களை எடுத்து விடுபட்ட எழுத்துக்களைக் கண்டு பிடித்துச் சொற்களை வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***

| | | |
|---|---|---|
| ✓ மே ☐ | ✓ க ☐ ரை | ✓ பென் ☐ ல் |
| ✓ புத் ☐ கம் | ✓ அ ☐ மாரி | ✓ க ☐ வு |

அதன் பின்னர், வரைந்த சித்திரங்களைக் காட்சிப்படுத்த உற்சாகமூட்டுங்கள். காட்சிப்படுத்திய சித்திரங்களை மாணவர்கள் பார்வையிடவும் ஒவ்வொருவரும் தமது சித்திரம் பற்றிக் கூறவும் வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள். பெட்டியில் உள்ள சொற்களில் விடுபட்ட எழுத்துக்களைக் குழுவாகச் சேர்ந்து கண்டு பிடிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய சொற்களை குழுவின் மத்தியில் வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள். அப்பியாசக் கொப்பிகளை ஆசிரியர் பார்வையிட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

*செயற்பாடு III :*

- மாதிரிச் சிற்றுண்டிச்சாலை ஒன்றை பெற்றோரின் உதவியுடன் அமையுங்கள். மாணவர்கள் சிலரை சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்பவர்களாக நடிக்கச் செய்யுங்கள். காட்சிப்படுத் தப்பட்டுள்ள மாதிரிச் சிற்றுண்டிச்சாலை உணவுப்பட்டியலை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களைப் பொருட்களை வாங்கச் செய்யுங்கள்.

  மாணவர்களிடம் அங்கு விற்கப்படும் உணவுப் பொருட்கள் பற்றிக் கேட்டறியுங்கள். அதன் பின்னர், மாணவர்களுக்கு விருப்பமான காலை உணவு பற்றியும் கேட்டறியுங்கள். தினமும் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்பவர்கள், இடையிடையே செல்பவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்லாதவர்கள் பற்றிய விபரங்களையும் அறிந்து கொள்ளுங்கள். (பெற்றோருடன் மாணவர்களின் உணவு தொடர்பாக கலந்துரையாடுங்கள்.)

*செயற்பாடு IV :*

- மாதிரிச் சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியல் ஒன்றைக் காட்சிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு:**

| **சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியல்** | |
|---|---|
| பயறு | வடை |
| பிட்டு | கடலை |
| தோசை | கௌபி |
| தேநீர் | பால் |

காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிறறுண்டிச்சாலை உணவுப் பட்டியலை A4 தாளில் கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து கொள்ளுங்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அதனைப் பிரதியெடுத்துக் கொள்ளுங்கள. மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவினரையும் உணவுப்பட்டியலை வாசித்துப்பார்க்குமாறு கூறுங்கள். அதன் பின்னர், ஆசிரியர் ஒவ்வொரு குழுவுக்கும் சென்று எழுமாறாக சிலரை எழுப்பி பொருட்களின்

பெயர்களைக் கேட்டுஉணவுப்பட்டியலை அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர்களை உணவுப் பட்டியலை உரத்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

***செயற்பாடு V :***

- மாதிரிச் சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியல் ஒன்றைக் காட்சிப்படுத்துங்கள். ஏற்கனவே தயாரித்த உணவுப்பட்டியலில் இடம் பெறாத பொருட்களை உணவுப்பட்டியலில் இடம் பெறச் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| **சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியல்** | |
|---|---|
| **அப்பம்** | **மோதகம்** |
| **பாயாசம்** | **பாற்சோறு** |
| **இடியப்பம்** | **உப்புமா** |
| **இட்டலி** | **முறுக்கு** |

மாணவ குழுக்களுக்கேற்ப உணவுப் பட்டியலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் பெயர்களை அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இடுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | | |
|---|---|---|---|
| **அப்பம்** | **மோதகம்** | **பாற்சோறு** | **உப்புமா** |
| **இடியப்பம்** | **முறுக்கு** | **பாயாசம்** | **இட்டலி** |

மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள். ஆசிரியரின் மேசையில் ஒரு பெட்டியை வையுங்கள். ஒவ்வொரு குழுவினரும் பெட்டியில் எழுதப்பட்டுள்ள உறைகளின் பெயர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அவர்கள் தமக்குள்ளே வாசித்துக் கொண்டிருக்கும் போது மாணவர்களை ஒவ்வொருவராக ஆசிரியர் அழைத்துப் பெட்டியில் இருந்து மூன்று அட்டைகளை எடுத்து உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். (எல்லா மாணவர்களும் வாசிக்க வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளுங்கள்.)

அதன் பின்னர், ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட பெட்டியில் உள்ள அட்டைகளில் எழுதப்பட்டுள்ள உணவுப் பொருட்களின் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு VI :***

- சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியலில் உள்ள உணவுப் பொருட்களின் பெயர்களைத் (பன்னிரண்டு பொருட்களைத்) தெரிவுசெய்து அப்பெயர்களில் ஓர் எழுத்தை நீக்கிக் கட்டமிட்டு அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள். உணவுப் பொருட்களின் பெயர்களில் நீக்கப்பட்ட எழுத்துக்களைத் தனியாக அட்டைகளில் எழுதி வெட்டியெடுத்துக் கொள்ளுங்கள். (கட்டங்களுக்குப் பொருந்தக்கூடியவாறு)

**எடுத்துக்காட்டு :**

*பெட்டி 1*

| | | | |
|---|---|---|---|
| **தோ ☐** | **வ ☐** | **அப் ☐ ம்** | **இட்ட ☐** |
| **தே ☐ ர்** | **முறுக் ☐** | **மோ ☐ கம்** | **உப் ☐ மா** |
| **பி ☐ டு** | **பாற் ☐ று** | **பா ☐** | **இடி ☐ ப்பம்** |

*பெட்டி 2*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சை | டை | ப | லி | நீ | கு |
| த | சோ | ட் | பு | ல் | ய |


ஒவ்வொரு குழுவுக்கும் இரண்டு பெட்டிகள் வீதம் வழங்குங்கள். மாணவர்கள் குழுவாக (மாதிரிச் சிற்றுண்டிச்சாலை உணவுப் பட்டியலில் இருந்த) உணவுப் பொருட்களின் பெயர்களில் உள்ள கட்டங்களில் வரவேண்டிய எழுத்துக்களைத் தெரிவுசெய்து கட்டங்களில் வைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை அறிந்து கொள்ள எல்லாக் குழுக்களுக்கும் அருகில் சென்று பார்வையிடுங்கள். அதன் பின்னர், ஆசிரியரும் தனது மேசையில் இரண்டு பெட்டிகளை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவராக அழைத்து முதலாவது பெட்டியிலுள்ள அட்டையை எடுத்து அவ்வட்டையில் உள்ள உணவுப் பொருளின் பெயரில் உள்ள கட்டத்தில் வர வேண்டிய எழுத்தை அடுத்த பெட்டியில் இருந்து தெரிவு செய்து வாசிக்க வழிப்படுத்துங்கள். (ஒருவர் இரண்டு அட்டைகளை எடுத்து கட்டங்களில் வர வேண்டிய எழுத்துக்களைச் சரியாகத் தெரிவுசெய்து வாசித்தால் போதுமானது.)

அதன் பின்னர், ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்டுள்ள 12 அட்டைகளில் உள்ள கட்டங்களில் வர வேண்டிய எழுத்துக்களைச் சரியாகத் தெரிவுசெய்து வைத்த பின்னர் அச்சொற்களைப் பார்த்து எழுத வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு VII :***

- மாணவர்கள் எல்லோரையும் ஜாம் போத்தல் ஒவ்வொன்றைக் கொண்டுவரச் செய்யுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். அவர்களிடம் உள்ள போத்தல்களில் ஐந்து தானியங்களின் பெயர்களை ஒட்டிகளில் எழுதி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கி, அவற்றைப் போத்தல்களில் ஒட்டச் செய்யுங்கள். அவற்றை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**




அதன் பின்னர், ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து அட்டைகளை வழங்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பெட்டிகளையும் வழங்குங்கள். ஒவ்வொரு குழுவிலுமுள்ள ஐந்து பேரும் ஐந்து அட்டைகளை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு போத்தலைத் தெரிவுசெய்து அப்போத்தலில் ஒட்டப்பட்டுள்ள ஒட்டியில் எழுதப்பட்டுள்ள தானியத்தின் பெயரை எழுதி, ஆசிரியரிடம் காட்டிய பின்னர் பெட்டியில் இட வேண்டும். பின்னர் குழுவினர் அமர்ந்து அவற்றை வாசிக்க வேண்டும். வாசித்த பின்னர் ஒவ்வொரு குழுவினரும் ஆசிரியரிடம் சென்று தாம் அட்டைகளில் எழுதியவற்றை வாசித்துக் காட்ட வேண்டும். அதன் பின்னர், ஒவ்வொரு குழுவினரும் கரும்பலகையில் தமக்கென ஒதுக்கப் பட்டுள்ள பகுதியில் வெண்கட்டியால் எழுத வேண்டும். அதன் பின்னர், எழுதியவற்றை குழு - வாசிப்பு முறையில் வாசிக்க வேண்டும்.(குழு முறையில் வாசிப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- பொருட்களின் பெயர்களை (வகுப்பறை) செவிமடுத்து வாசித்தல், எழுதுதல்
- உணவுப் பட்டியலில் (சிற்றுண்டிச் சாலை) உள்ளவற்றை வாசித்தல் எழுதுதல்
- ஒட்டிகளை எழுதுதல், ஒட்டுதல், வாசித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**07**

## தேர்ச்சிகள் :

$L_7$ – மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_7$ – மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.

$R_7$ – மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.

$W_7$ – மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

## உள்ளடக்கம் :

- கதைப் படங்கள்
- சுயசரிதை
- ஆத்திசூடி
- கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)
- பண்டிகைகள்

## கற்றல் பேறு :

- படங்களின் தொடர்பைக் கண்டுபிடித்து கதையொன்றைக் கட்டியெழுப்புவார்.
- தாம் அறிந்த பிராணிகள் / பழங்கள் / பொருள்கள் பற்றிய சுயசரிதைகளை மொழியாட்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக முன்வைப்பார்.
- ஆத்திசூடிப் பாடல்களை மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார்.
- கிராமிய விளையாட்டுக்களை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடி மகிழ்வுறுவார்.
- பண்டிகைகள் பற்றிய அனுபவங்களை முன்வைப்பதோடு முக்கியத்துவத்தினையும் தெரிந்து கொள்ள முன்வருவார்.

## வளங்கள் :

- கதைப் படங்கள், அட்டைகள், பசை, கத்திரிக்கோல், ஆத்திசூடி அட்டை, செலோரேப் (இருபக்க), பண்டிகைக் காட்சிகள், கிராமிய விளையாட்டுப் படங்கள், விரல் பொம்மைகள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

*செயற்பாடு I :*


- கதைகளைத் தெரிவுசெய்து ஆறு கதைப் படங்களாக வரைந்து கொள்ளுங்கள். (சித்திர ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.) கதைப் படங்களை வரைய முடியாது விடின் சிறுவர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றில் வெளிவந்த கதைப் படங்களைத் தெரிவுசெய்து அட்டைகளில் ஒட்டிக்கொள்ளுங்கள்.

**கதைக் கரு: வி.என்.எஸ்.உதயசந்திரன் படங்கள்: ஆர்.சி.பிரதீப்குமார்**







மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் கதைப்பட அட்டைத் தொகுதிகளை வழங்குங்கள். குழுக்களாக கதைப் படங்களை ஒழுங்குபடுத்திக் கதையைச் சுயமாக விபரித்துக் கூற வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் சென்று கதைப் படங்களை ஒழுங்குபடுத்திக் கதை கூறும் பாங்கினை அவதானித்து அவர்களை ஊக்கப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் மாணவர்களை ஒவ்வொருவராக ஆசிரியர் மேசைக்கு அழைத்து ஆசிரியரிடம் உள்ள கதைப் படத் தொகுதியைக் கொடுத்து கதையை ஒழுங்குபடுத்திக் கூறுவதை அவதானித்து, அவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கதையைப் பார்த்து அதில் உள்ளவற்றை சொற்களாக அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்கள் எழுதிய சொற்களை வாசிக்கச் செய்யுங்கள். அச்சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். கரும்பலகையில் எழுதிய சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்தி எழுதியவற்றைப் பார்வையிட்டு திருத்தங்களை மேற்கொள்ளுங்கள்.

**செயற்பாடு II :**

- மாணவர் விரும்பும் பிராணிகள், பழங்கள், பொருள்கள் ஆகியவற்றின் முகமூடிகளைத் தயார்செய்து கொள்ளுங்கள். ஆசிரியர் சில முகமூடிகளை அணிந்து அவற்றின் சுயசரிதையை மாணவர்களுக்குக் கூறுதல் வேண்டும்.



*எடுத்துக்காட்டு* : அன்னாசிப்பழ முகமூடி (சுயசரிதை)
எனது பெயர் அன்னாசி
நான் பழங்களின் அரசன்
நான் மிகவும் சுவையானவன்

அதன் பின்னர், மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்கள் விரும்பிய முகமூடியைத் தெரிவுசெய்து சுயசரிதையைக் கூற ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், அப்பியாசக் கொப்பியில் முகமூடியை வரைந்து நிறந்தீட்ட வழிப்படுத்துங்கள். மாணவர்கள் சுயசரிதையில் கூறிய சொற்களிலிருந்து சில சொற்களைத் தெரிவுசெய்து கரும்பலகையில் எழுதி வாசித்துக் காட்டுங்கள். வாசித்த சொற்களை மாணவர்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வகுப்பு முன் வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு III :**

- ஆத்திசூடி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| அ | → | அறம் செய விரும்பு |
| ஆ | → | ஆறுவது சினம் |
| இ | → | இயல்வது கரவேல் |
| ஈ | → | ஈவது விலக்கேல் |
| உ | → | உடையது விளம்பேல் |
| ஊ | → | ஊக்கமது கைவிடேல் |
| எ | → | எண் எழுத்து இகழேல் |
| ஏ | → | ஏற்பது இகழ்ச்சி |
| ஐ | → | ஐயம் இட்டு உண் |
| ஒ | → | ஒப்புரவு ஒழுகு |
| ஓ | → | ஓதுவது ஒழியேல் |
| ஒள | → | ஒளவியம் பேசேல் |

உயிர் எழுத்துக்களை ஒவ்வொன்றாக உச்சரித்து ஆத்திசூடியைச் பாடலாகச் சொல்லிக்கொடுங்கள். நா நெகிழ், நா பிறழ் பயிற்சிக்கு ஆத்திசூடி மிகவும் பயன்மிக்கதாக அமையும். ஆத்திசூடியை, அட்டைக் கீலங்களில் எழுதிக்கொள்ளுங்கள். மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கீலமாவது கிடைக்க ஆவன செய்யுங்கள். கீலங்களில் எழுதப்பட்டவற்றை மாணவர்கள் உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். காட்சிப் பலகையில் ஆத்திசூடியை எழுதிக் கொள்ளுங்கள். எழுதும்போது ஒவ்வொரு அடியிலும் ஒரு சொல்லை நீக்கி எழுதுங்கள்.

*எடுத்துக்காட்டு :* அறம் செய ☐

ஆறுவது ☐

நீக்கப்பட்ட சொற்களைப் பெட்டியொன்றில் இட்டுக்கொள்ளுங்கள். மாணவர்கள் தம்மிடம் உள்ள கீலத்தில் எழுதப்பட்டுள்ள ஆத்திசூடி வரியைப் பார்த்துக் காட்சிப் பலகையில் உள்ள அந்த வரியில் வரவேண்டிய சொல்லைப் பெட்டியில் இருந்து தெரிந்தெடுத்து சொல் நீக்கப்பட்ட இடத்தில் செருகுவதற்கு வழிப்படுத்துங்கள்.

ஆத்திசூடி வரிகளில் நீக்கப்பட்ட சொற்களை அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

*குறிப்பு : ஆத்திசூடியை கணினி மூலம் பெரிய எழுத்துக்களில் தயாரித்து, நகல் பிரதி எடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்கி, பெற்றோர் உதவியுடன் மனனம் செய்ய வழிப்படுத்துங்கள். (சொற்களஞ்சிய விருத்திக்காகவும்* ***நா நெகிழ், நா பிறழ்*** *பயிற்சிக்காகவும் தரப்பட்டுள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)*

*செயற்பாடு IV :*

- மாணவர்களுக்கு எமது பாரம்பரிய விளையாட்டுக்களை அறிமுகஞ் செய்யுங்கள். (எமது பாரம்பரிய விளையாட்டுக்களை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க இச்செயற்பாடு உதவும்) உங்களது பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்களில் இருந்து இலகுவான விளையாட்டுக்களைத் தெரிவுசெய்க.

  ***எடுத்துக்காட்டு*** *:* பசுவும் புலியும்
  கோழி கோட்டான்
  கிட்டிப்புள்
  நாயும் இறைச்சித்துண்டும்
  மேடு பள்ளம்

  மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் சென்று குறுகிய நேரத்திற்குள் விளையாடக்கூடிய விளையாட்டுக்களை அறிமுகஞ் செய்யுங்கள்.
  மாணவர்கள் ஒற்றுமையாக விளையாடுவதையும் பண்புடன் உரையாடுவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

  விளையாட்டினை மாணவர்கள் நிறைவு செய்ததும் விளையாட்டின்போது அவர்கள் பயன்படுத்திய வினைச்சொற்களைக் காட்சிப்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

  எடுத்துக்காட்டு : ஓடுங்கள், பிடியுங்கள், வாருங்கள்,
  தட்டுங்கள், பாயுங்கள், அடியுங்கள்

  எழுதிய சொற்களை மாணவர்களுக்கு வாசித்தக் காட்டுங்கள். அச்சொற்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

  *குறிப்பு : **வினைச்சொற்கள்** என்ற பதத்தை தரம் ஒன்று மாணவர்களுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.*

*செயற்பாடு V :*

- மாணவர்களிடம் பெற்றோரின் உதவியுடன் பண்டிகை தொடர்பான படங்களைச் சேகரித்து வருமாறு முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்குங்கள். மாணவர்கள் கொண்டு வந்த பண்டிகைகள் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள். மாணவர்களை, காட்சிப்படுத்திய படங்களைப் பார்வையிடுமாறு வழிப்படுத்துங்கள். தமது அனுபவங்களைக் கூற ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், உங்களிடமுள்ள பண்டிகை தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய பண்டிகைகளின் படங்களை மாணவர்கள் பார்வையிட்டு பண்டிகைகளின் பெயர்களைக் கூறுவதற்கு உற்சாகமூட்டுங்கள். அவர்கள் கூறிய பண்டிகைகளின் பெயர்களைக் கரும்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதுங்கள். எழுதிய பண்டிகைகளின் பெயர்களை வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களையும் ஆசிரியருடன் சேர்ந்து எழுத்துக்கூட்டி வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், பண்டிகைக் கால உணவுகளின் பெயர்களைக் கேட்டறியுங்கள். மாணவர்கள் கூறும் பண்டிகைக் கால உணவுகளின் பெயர்களைக் காட்சிப்பலகையில் எழுதுங்கள். அச்சொற்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

  மாதிரிப் பண்டிகை ஒன்றை வகுப்பறையில் பெற்றோரின் உதவியுடன் கொண்டாடுங்கள்.

**கணிப்பீடு :**

மொழியாட்சித்திறனை விருத்தி செய்து கொள்வதற்காக,

- கதைப் படங்களை ஒழுங்குபடுத்திக் கதையைக் கட்டியெழுப்புதல்
- சுயசரிதையைப் போலச் செய்தல் மூலம் முன்வைத்தல்
- ஆத்திசூடியைச் சரியாக உச்சரித்துக் கூறுதல்
- ஒற்றுமையாக, சிறந்த தொடர்பாடலுடன் விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
- பண்டிகைகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல்

  ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**08**

## தேர்ச்சிகள் :

$L_8$ – கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.

$S_8$ – கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.

$R_8$ – கற்றல் விருத்திக்காக எழுதுவார்.

$W_8$ – கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.

## உள்ளடக்கம் :

- வரைந்த சித்திரங்கள்
- பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி
- சுற்றுலா

## கற்றல் பேறு :

- அன்றாட வாழ்வில் கண்ட அனுபவங்களைச் சித்திரமாக வரைந்து முன்வைப்பார் / விபரிப்பார்.
- சித்திரங்களைப் பார்த்து இரசித்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- பார்த்த / பங்குபற்றிய சந்தர்ப்பங்களை அல்லது நிகழ்வுகளைச் சித்திரமாக வரைவதோடு அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.
- வரைந்த சித்திரங்கள், பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி மற்றும் சுற்றுலா தொடர்புடைய சொற்களை எழுத முன்வருவார் ; வாசிப்பார்.


## வளங்கள் :

- தெஹிவளை மிருகக்காட்சிசாலைக் காணொளி, சித்திரங்கள், சொல் அட்டைகள், கணினி (இணையத்தளம்)

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

**செயற்பாடு I :**

- மாணவர்களுக்கு வரைந்த சித்திரமொன்றைக் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய சித்திரம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். சித்திரத்தில் உள்ளவை தொடர்பாக வினாக்களை வினவுங்கள். அவர்கள் சுதந்திரமாகவும் உற்சாகமாகவும் விருப்புடனும் விடையளிக்க ஆர்வமூட்டுங்கள்.



**செயற்பாடு II :**

- முதல் நாளே மாணவர்களை நிறப் பென்சில்கள் அல்லது நிறச் சோக்குகளைக் கொண்டுவரச் சொல்லுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொருவருக்கும் A4 தாள்களை வழங்கி, தாளை செவ்வக வடிவில் திருப்பி வைத்திருக்குமாறு கூறுங்கள். அதன் பின்னர், மாணவர்களுக்கு விருப்பமான காட்சி ஒன்றை வரையுமாறும், வரைந்த பின் நிறந் தீட்டுமாறும் ஆலோசனை வழங்குங்கள். அவர்கள் சித்திரம் வரையும்போது எவ்விதத்திலும் இடையூறு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர், தாம் வரைந்த சித்திரம் தொடர்பாக குழுவினரிடையே உரையாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தும் பலகையில் சித்திரங்களைக் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள். அதன் பின் எல்லோரும் அனைவரது சித்திரங்களையும் பார்வையிட அனுமதியுங்கள். பார்வையிட்ட பின் காட்சிப்படுத்தப்பட்ட பலகையைச் சார்ந்தவாறு அரைவட்டமாக நிற்க வழிப்படுத்துங்கள். மாணவர்களிடம் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.

மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து,

- ✓ உங்களது சித்திரத்தைப் பற்றிக் கூறுங்கள்
- ✓ உங்களைக் கவர்ந்த சித்திரம் எது?
- ✓ ஏன் கவர்ந்தது?

மிகவும் விருப்புடன் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்கள் உங்களைப் பார்த்து உங்களுக்கு விருப்பமான சித்திரம் எது என்று கேட்பதற்கான சூழ்நிலையை உருவாக்குங்கள். எனக்கு எல்லோருடைய சித்திரங்களும் பிடித்திருக்கிறது, மிகச் சிறப்பாகச் சித்திரம் வரைந்துள்ளீர்கள் என்று எல்லோரையும் பாராட்டுங்கள். காட்சிப்படுத்தப்பட்டுள்ள சித்திரங்களில் உள்ளவற்றைப் பார்த்து ஐந்து சொற்கள் எழுதுமாறு கூறுங்கள். எழுதிய பின்னர், அச்சொற்களை வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். எல்லா மாணவர்களும் தனித்தனியாக வாசித்துக்காட்ட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு III :**

- மாணவர்களை ‘‘ப’’ வடிவில் அமரச் செய்யுங்கள் அதன் பின்னர் நீங்கள் பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் / நிகழ்வுகள் பற்றி மாணவர்களுக்கு சுவைபட விபரியுங்கள். அவர்கள் ஆச்சரியத்துடன் செவிமடுப்பதற்கு ஏற்ற வகையில் உங்களது விபரிப்பு அமைதல் வேண்டும். அதன் பின்னர், மாணவர்களை வினாக் கேட்க ஆர்வமூட்டுங்கள். ஆசிரியர் படங்களின் உதவியுடன் விபரிக்க முடியும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஆசிரியர் விபரிப்புடன் தொடர்புடைய சொற்களை அட்டைகளில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தி அச்சொற்களை வாசித்துக் காட்ட வேண்டும். அதன் பின்னர், அச்சொற்களை மாணவர்கள் பார்த்து எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களை எழுமாறாக அழைத்து, ஆசிரியர் விபரித்த நிகழ்வுகளை தமது மொழிநடையில் கூறுமாறு ஆர்வமூட்டுக. ஆசிரியர் விபரித்தவற்றை வீட்டில் உள்ளவர்களுக்கு சென்று கூற வேண்டுமென அறிவுறுத்துங்கள்.

*குறிப்பு : மாதாந்தப் பெற்றோர் சந்திப்பின்போது ஆசிரியர் கூறிய நிகழ்வுகள் பற்றி மாணவர்கள் கூறினார்களா? எனக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மாணவர்கள் கூறவில்லையாயின் அதற்கான காரணத்தைத் தேடியறிந்து பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.*

***செயற்பாடு IV :***

- மாணவர்களை வகுப்பறையில் அல்லது வெளியில் அரைவட்டமாக அமரச் செய்யுங்கள். அதன் பின்னர், மாணவர்கள் பெற்றோருடன் நின்ற, சென்ற சந்தர்ப்பங்கள் பற்றிக் கேட்டறியுங்கள். எவற்றைக் கண்டு இரசித்தார்கள் என பவ்வியமாக வினவுங்கள். ஒவ்வொருவராக அழைத்து அவர்கள் சுதந்திரமாகக் கூறுவதற்கு உற்சாகமூட்டுங்கள். அதன் பின்னர் அவர்கள் கூறியவற்றைச் செவிமடுத்து முக்கிய சொற்களை கரும்பலகையில் உறுப்பமைய பெரிய எழுத்துக்களில் எழுதுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

| | | | | |
|---|---|---|---|---|
| **கோவில்** | **மணி** | **இனிப்பு** | **பொம்மை** | **நடனம்** |
| **தேவாலயம்** | **பூக்கள்** | **உடைகள்** | **பேருந்து** | **பாட்டு** |
| **விகாரை** | **நீர்** | **காய்கள்** | **கலைவிழா** | **நாடகம்** |
| **பள்ளிவாசல்** | **கடை** | **பழங்கள்** | **வீணை** | **மேடை** |

இதுபோன்ற சொற்களைப் பார்த்து எழுதுமாறு மாணவர்களை அறிவுறுத்துங்கள். கரும்பலகையில் எழுதிய சொற்களை அட்டைகளில் எழுதி பெட்டி ஒன்றில் இடுங்கள். மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஐந்து சொற்களை எழுத்துக்கூட்டி வாசித்துக் காட்டுமாறு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர்கள் வாசித்த சொற்களில் இருந்து

ஐந்து சொற்களைத் தெரிவுசெய்து கரும்பலகையில் எழுத்தை ஒன்றை நீக்கி கட்டமிட்டு எழுதுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**(1) பூ ☐ கள் (2) நட ☐ ம்**

**(3) ஆ ☐ யம் (4) உ ☐ கம்**

**(5) ப ☐ ங்கள்**

சொற்களில் இருந்து நீக்கப்பட்ட எழுத்துக்களைக் கண்டுபிடித்து சொற்களைப் பூரணப்ப டுத்துவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட்டு பிழைதிருத்தங்களை மேற்கொள்ளுங்கள். உதவி தேவைப்படும் மாணவர் களை இனங்கண்டு, அவர்கள் சிறப்புத் தேர்ச்சியடைய உதவுங்கள்.

***செயற்பாடு V :***

- மாணவர்களுக்கு நீங்கள் சிறு வயதில் சுற்றுலா சென்ற இடமொன்றைத் தெரிவுசெய்து விபரியுங்கள். (ஞாபகமில்லையாயின் நீங்கள் பிள்ளைகளைச் சுற்றுலா அழைத்துச் சென்ற இடமொன்றை நினைவுபடுத்திக் கூறுங்கள்.) உங்களுடைய விபரிப்பு அவர்கள் சுற்றுலா சென்றது போன்ற அனுபவத்தை அளித்தல் வேண்டும். இணையத்தில் யு-ரியூப் இல் உள்ள காணொளிகளைத் தெரிவுசெய்து மாணவர்களைப் பார்வையிட ஆர்வமூட்டலாம். அங்கு இணையத்தில் சுற்றுலாப் படங்களைத் தெரிவுசெய்து ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தி விபரிக்க முடியும்.

***எடுத்துக்காட்டு :***

**சுற்றுலா இடங்கள்**

(1) மிருகக்காட்சிசாலை
(2) நூலகம்
(3) அரும்பொருட்காட்சிசாலை
(4) சிறுவர் பூங்கா
(5) வழிபாட்டுத் தலங்கள்
(6) கடற்கரை
(7) மரக்கறித் தோட்டம்
(8) தொழிற்சாலை

அதன் பின்னர், ஆசிரியர் விபரித்த சுற்றுலா அல்லது காணொளி மூலம் பார்த்த சுற்றுலாக் காட்சிகள் அல்லது சுற்றுலாப் படங்கள் போன்றவற்றை நினைவுபடுத்தி 3 சொற்களை எழுதுமாறு உற்சாகப்படுத்துங்கள். அச்சொற்களை வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

***செயற்பாடு VI :***

- மிருக்கக்காட்சிசாலை ஒன்றின் படங்களை இணையத்தளங்களிலிருந்து பெற்று படங்களைத் தாளில் பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி வகுப்பறையில் அல்லது வெளியில் உள்ள இடம் ஒன்றில் காட்சிப்படுத்துங்கள். வாருங்கள் சுற்றுலாப் படங்களைப் பார்வையிடுவோம் என்று கூறி மாணவர்களை அழைத்துச்சென்று அப்படங்களைக் காண்பித்து விளக்கமளியுங்கள். அதன் பின்னர் மாணவர்களைச் சுதந்திரமாக அப்படங்களைப் பார்வையிட அனுமதியுங்கள். அதன் பின்னர் மாணவர்களை வகுப்பறையில் அமரச் செய்து படங்களில் பார்த்த பிராணிகள் பற்றிக் கேட்டறியுங்கள். அப்பிராணிகளை நினைவுபடுத்தி அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். அப்பியாசக் கொப்பியைப் பார்வையிட்டு திருத்தங்களை மேற்கொள்ளுங்கள். உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உடனுக்குடன் உதவிகளை வழங்குங்கள். அதன் பின்னர், கொப்பியில் எழுதிய பிராணிகளின் பெயர்களைக் கூறுமாறு அறிவுறுத்துங்கள். எல்லோரும் தாம் எழுதிய பிராணிகளின் பெயர்களை வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு :**  

**செயற்பாடு VII :**

- தெஹிவளை மிருகக்காட்சிசாலை காணொளி ஒன்றை இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். பதிவிறக்கம் செய்வதற்கு பாடசாலைக் கணினிக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அல்லது கணினி தொடர்பான அனுபவம் உள்ள ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரின் உதவியைப் பெற்று மடிக்கணினி ஊடாகவோ அல்லது தொலைக்காட்சி ஊடாகவோ அல்லது எறிகருவி (புரொஜெக்டர்) ஊடாகவோ மாணவர்கள் பார்வையிட அனுமதியுங்கள். காணொளியைப் பார்வையிடுவதன் ஊடாக மாணவர்கள் சுற்றுலா சென்றது போன்ற உணர்வைப் பெற ஆவன செய்யுங்கள். அதன் பின்னர், பார்த்த காட்சிகள் தொடர்பான அனுபவங்களை ஒவ்வொருவரும் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

  மாணவர்களுக்குப் பிடித்த விலங்குகள், பறவைகள் போன்றவை பற்றிக் கேட்டறியுங்கள். உங்களுடைய வீட்டிற்கு வரும் பறவைகள் பற்றியும் நீங்களை பிராணிகளை வளர்த்தால் அவை பற்றியும் கேட்டறியுங்கள். அதன் பின்னர், காணொளியில் பார்த்த பிராணிகளின் பெயர்களைச் சுயமாக அப்பியாசக் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள். அதனை மாணவர்கள் மத்தியில் வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு :**   

***செயற்பாடு VIII :***

- தெஹிவளை மிருகக்காட்சிசாலைக் காணொளியை மாணவர்கள் பார்வையிட்ட பின்னர், அதில் மாணவர்கள் பார்வையிட்ட மிருகங்கள் மற்றும் பறவைகளின் பெயர்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அப்பிராணிகளின் பெயர்களை முதலில் பட்டியற்படுத்திக் கொள்ளுங்கள். அவற்றிலிருந்து 5 மிருகங்கள் மற்றும் 5 பறவைகளின் பெயர்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அப்பிராணிகளின் பெயர்களை மாணவர் குழுக்களுக்கு ஏற்ப அட்டைகளில் எழுதிப் பெட்டிகளில் இட்டுக்கொள்க. காணொளியில் இல்லாத 5 மிருகங்கள் மற்றும் ஐந்து பறவைகளை மேலதிகமாக எல்லாப் பெட்டிகளிலும் இடுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள். அதன் பின்னர், மாணவர்களை நோக்கி காணொளியில் பார்த்த மிருகங்கள் மற்றும் பறவைகளின் பெயர்களைப் பெட்டியிலிருந்து தெரிவுசெய்து தமது மேசை மீது வைக்க வழிப்படுத்துங்கள்.

  அதன் பின்னர், ஒவ்வொரு குழுவாக அழைத்து தெரிவுசெய்த பிராணிகளின் பெயர்களை குழுவில் உள்ள ஒவ்வொருவரும் கூற வழிப்படுத்துங்கள். (ஒருவர் இரண்டு அட்டைகள் வீதம்) எல்லாக் குழுவினரும் சரியாகக் கூறுகினறனரா என அவதானியுங்கள். மாணவர்கள் தெரிவு செய்த பத்து அட்டைகளில் உள்ள சொற்களைப் பார்த்துச் சரியாக எழுத வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- சித்திரங்களைப் பற்றிப் பேசுதல்
- சித்திரங்களைப் பற்றிப் பேசுவதைச் செவிமடுத்தல்
- அனுபவங்களைச் சித்திரமாக முன்வைத்தல்
- பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் / நிகழ்வுகள் பற்றிப் பேசுதல்
- பெற்ற அனுபவங்களைப் பற்றிப் பேசுதல்
- கற்றல் விருத்திக்காகப் பெற்ற அனுபவங்களிலிருந்து சொற்களை நினைவுபடுத்தி எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**09**

## தேர்ச்சிகள் :

**L9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.

**S9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறப் பேசுவார்.

**R9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.

**W9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.

## உள்ளடக்கம் :

- ஒலி, ஒளி இறுவட்டுக்கள்
  - சிறுவர் பாடல்கள்
  - சிறுவர் கதைகள்
  - உரையாடல்கள்
  - தகவல்கள் (பிராணிகள்)
- சிறுவர் இணையத்தளங்கள்
- சிறுவர் சஞ்சிகைகள்
- சிறுவர் நூல்கள்

## கற்றல் பேறு :

- ஒலி, ஒளி இறுவட்டுக்களின் ஊடாக கிரகித்த பாடல்கள், கதைகள், உரையாடல்கள், தகவல்கள் ஆகியவற்றை நினைவுபடுத்திக் கூறுவதோடு வினாக்களுக்கும் விடையளிப்பார்.
- சிறுவர் இணையத்தளங்களைப் பார்வையிட்டு, செவிமடுப்பதோடு கருத்தூன்றி வாசித்து ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.
- சிறுவர் சஞ்சிகைகளில் தமக்கு விருப்பமான பகுதியைப் பார்வையிட்டு ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- சிறுவர் நூல்களைப் பார்வையிட்டு அவை தொடர்பான முக்கிய தகவல்களைச் சமர்ப்பிப்பார்.

## வளகங்கள் :

- கதைகள், பாடல்கள், உரையாடல்கள் கொண்ட ஒலி - ஒளி இறுவட்டுக்கள், சிறுவர் இணையத்தளம், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள், பிராணிகள் பற்றிய தகவல்கள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

***செயற்பாடு I :***

- மாணவர்களுக்குப் பொருத்தமான, அவர்கள் விரும்பிச் செவிமடுக்கக்கூடிய பாடல்களைத் தெரிவுசெய்து அவற்றைப் பாடி ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள். மாணவர்களை வட்டமாக அமரச்செய்யுங்கள். நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வையுங்கள். ஒலி இறுவட்டை ஒலிக்கவிட்டு பாடலைக் கவனமாக இரசிக்க வழிப்படுத்துங்கள். பாடலை இரசித்த பின்னர், மீண்டும் அப்பாடலை ஒலிக்கச் செய்யுங்கள். அதன் பின்னர், பாடலுடன் தொடர்புடைய வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் மாணவர்களை எழுதச் செய்யுங்கள். எழுதிய சொற்களை வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  *குறிப்பு : இதே அணுகுமுறைகளையே ஒளி இறுவட்டுக்களைப் பயன்படுத்தும்போதும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை கவனத்திற்கொள்ளுங்கள்.*

*செயற்பாடு II :*

- மாணவர்களுக்குப் பொருத்தமான விரும்பி இரசிக்கக்கூடிய கதையைத் தெரிவுசெய்யுங்கள். கதை மிகவும் சிறியதாகவும் மாணவர்களால் இலகுவில் கிரகிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். கதை தொடர்பாக வினவப்படும் வினாக்களுக்குரிய விடைகளை அட்டைகளில் எழுதி மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பப் பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள். அக்கதையை உணர்வுபூர்வமாக வாசித்து ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள்.

**கதை**

மாணவர்களை வெளியே அழைத்துச்சென்று வட்டமாக அமரச் செய்யுங்கள். நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வைத்துக் கதையை ஒலிக்கச் செய்யுங்கள். மாணவர்கள் கதையை கவனமாகச் செவிமடுக்கிறார்களா என அவதானியுங்கள். கதையை மாணவர்கள் செவிமடுத்த பின் கதையில் வரும் பாத்திரங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவுங்கள். அவர்களை விடையளிக்கத் தூண்டுக. அதன் பின்னர், மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். வினவப்படும் வினாக்களுக்குரிய விடைகள் எழுதப்பட்ட அட்டைப் பெட்டிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். செவிமடுத்த கதையை மீண்டும் ஒலிக்க விடுங்கள்.

ஒவ்வொரு குழுவிலிருந்தும் இவ்விருவரை எழுப்பி ஒருவர் விடையைக் கூற மற்றையவர் அட்டைப் பெட்டியிலிருந்து விடை அட்டையைத் தெரிவுசெய்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். ஆசிரியரால் பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை அல்லது ஒலிப்பதிவுக் கருவியின் ஊடாகக் கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளை கரும்பலகையில் எழுதி அவ்விடைகளை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

*செயற்பாடு III :*

- கீழே தரப்பட்டவாறான உரையாடலை ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள். உரையாடல் சிறியதாகவும் யதார்த்தமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

அம்மா : கீதா சாப்பிட வா!
மகள் : இதோ வருகின்றேன்.
அம்மா : உணவு உண்பதற்கு முதலில் கைகளைக் கழுவு.
மகள் : நான் ஏற்கனவே கழுவிவிட்டேன்.
அம்மா : கைகழுவிய பின்னர் நீ வேறு பொருட்களை எடுத்தாய் தானே?
மகள் : ஆம் அம்மா.
அம்மா : அப்படியானால் மீண்டும் சவர்க்காரத்தினால் கைகளைக் கழுவு.
மகள் : சரி அம்மா.
அம்மா : மகளே உணவு உண்ட பின்னரும் கைகளைச் சவர்க்காரம் இட்டு நன்றாகக் கழுவ வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்.
மகள் : அம்மா, உணவு உண்ட பின்னர் பற்றூரிகை கொண்டு பற்களையும் சுத்தம் செய்யத்தானே வேண்டும். அப்போதுதான் நோய்க் கிருமிகள் பல் ஈறுகளில் தங்காது.
அம்மா : ஆம். உணவு உண்ட பின்னர் மட்டுமல்ல, காலையிலும் இரவிலும் பல் துலக்கி சுத்தம் செய்ய வேண்டும்.
மகள் : சரி அம்மா.

மாணவர்களை வட்டமாக அமரச் செய்க. அதன் பின்னர், ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்கச் செய்க. மாணவர்கள் உரையாடலைச் செவிமடுக்கிறார்களா என்பதை அவதானியுங்கள். உரையாடல் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். அதன் பின்னர், ஒலிப்பதிவுக் கருவியை ஒலிக்க விடுங்கள். மாணவர்கள் செவிமடுப்பதை அவதானயுங்கள். அதன் பின்னர், ஒரே தடவையில் ஐந்து மாணவர்களை எழுப்பி அவர்களிடம் உரையாடலில் கூறப்பட்ட விடயங்களைக் கேட்டறியுங்கள். அதே போன்று

அடுத்த ஐந்து மாணவர்களையும் எழுப்பி கேட்டறியுங்கள். எல்லா மாணவர்களிடமும் கேட்டறிந்த பின்னர் உரையாடல் தொடர்பாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வினாக்களை ஒலிக்கச் செய்யுங்கள். (அல்லது ஆசிரியரே வினாக்களை வினவலாம்.) வினாக்களைச் செவிமடுத்து சரியாக விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

அதன் பின்னர், பின்வருவன போன்ற அறிவுரை வாக்கியங்களை கரும்பலகையில் எழுதுங்கள். மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் அவற்றைப் பார்த்து, எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

- ✓ கைகளைக் கழுவிய பின்னர் உண்ண வேண்டும்.
- ✓ உணவு உண்ட பின்னரும் கைகளைக் கழுவ வேண்டும்.
- ✓ காலையும் மாலையும் பல்துலக்க வேண்டும்.

***செயற்பாடு IV :***

- கீழே தரப்பட்டுள்ள பிராணிகளின் தகவல்களைப் போன்ற தகவல்களைத் திரட்டி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள். பிராணிகளைத் தெரிவுசெய்யும்போது மாணவர்களின் சூழலில் காணப்படும் பிராணிகளையும் மாணவர்கள் அதிகம் விரும்பும் பிராணிகள் பற்றிய தகவல்களையுமே தெரிவு செய்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

### காகம்

தினமும் காலை நேரமானதும் நம் வீட்டருகே காகங்கள் கூடி ''கா, கா'' என்று கரைவதைக் கேட்டிருக்கிறோம். எமக்கு ஏதாவது உணவு கிடைத்தால் பெரும்பாலும் தனியே உண்டு மகிழ்வோம். காகங்கள் அப்படியல்ல. தமது இனத்தவரை கூவி அழைத்து ஒன்றாக உண்பதனைப் பார்த்திருக்கிறோம். காகங்கள் மிகுந்த புத்திசாலித்தனமானவை. ஞாபக சக்தி உடையவை. காகங்கள் பகல் நேரத்தில் உணவு தேடி நீண்ட தூரம் செல்கின்றன. காகங்கள் சில நாடுகளைத் தவிர பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் வசிக்கின்றன. காகங்கள் நிலத்திலிருந்து உயரமான இடத்திலேயே கூடுகளை அமைக்கின்றன. பெண் காகங்கள் 4 தொடக்கம் 6 முட்டைகளை இடுகின்றன.

### அணில்

உலகில் பல நாடுகளிலும் அணில்கள் வாழ்கின்றன. அவை மரங்களில் உள்ள துளைகளில் வாழ்கின்றன. அணில்களில் பலவிதமான அணில்கள் உள்ளன. இவை பழங்கள், தானியங்கள் போன்றவற்றை உண்கின்றன. இவற்றின் முன்னங்கால்கள் சற்று குட்டையாக இருக்கும். பின்னங்கால்கள் நீளமாக இருக்கும். இதனாலேயே இவற்றால் மரங்களில் வேகமாக தாவிக்குதித்து ஏற முடிகிறது. அணிலுக்கு பெரிய வால் உண்டு. அணில்களின் பின்னங்கால்களில் ஐந்து விரல்கள் உள்ளன. முன்னங்காலில் நான்கு விரல்கள் மாத்திரமே உள்ளன. விரல்கள் கூரான வடிவத்தில் அமைந்துள்ளன. அதனால் அணில்களால் மரங்களில் சுலபமாக ஏற முடிகிறது.

### கிளி

கிளிகளில் பல வகைகள் உள்ளன. கிளிகள் பழங்கள், விதைகள், பூக்களின் மொட்டுக்கள் போன்றவற்றை உண்கின்றன. கிளிகள் மரப் பொந்துகளில் வசிக்கின்றன. கிளிகளின் மூக்கு பலம் வாய்ந்தது. பறவைகளிலேயே பேசும் ஆற்றல் கிளிகளுக்கே உண்டு. இவை ஒருமுறைக்கு இரண்டு முட்டைகளே இடுகின்றன. கிளிகள் பறக்கும்போது இறக்கை களை வேகமாக அடித்து ஒருவித சத்தத்தை எழுப்பிக்கொண்டே பறக்கின்றன. கிளிகள் பெரும்பாலும் பழங்களையே விரும்பி உண்ணும்.

எந்தப் பிராணியைப் பற்றிய தகவல்களைச் சொல்லப் போகிறீர்களோ அல்லது ஒலிக்கவிடப் போகிறீர்களோ அப்பிராணி தொடர்பான படங்களைக் காட்சிப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். அப்பிராணி பற்றி மாணவர்கள் அறிந்த தகவல்களை மாணவர்களிடம் கேட்டறியுங்கள். அதன் பின்னர், அப்பிராணி பற்றிய தகவலடங்கிய ஒலி இறுவட்டை

ஒலிக்கச் செய்யுங்கள். மாணவர்கள் கவனமாகச் செவிமடுத்துக் கிரகிக்கின்றார்களா என்பதை அவதானியுங்கள். மாணவர்களை எழுப்பி வினாக்களை வினவி அவர்களை அப்பிராணி தொடர்பாக பேச வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஒலி இறுவட்டில் ஒலித்த தகவல்களில் பயன்படுத்தப்பட்ட முக்கிய சொற்களை கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொற்களை மாணவர்கள் தமது உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**பிராணி - கிளி**

- ✓ கிளிகள் ✓ பழங்கள் ✓ விதைகள் ✓ தானியங்கள் ✓ பூக்கள்
- ✓ மொட்டு ✓ மரம் ✓ பொந்து ✓ இறக்கை ✓ ஒலி

அதன் பின்னர், சில சொற்களைத் தெரிவுசெய்து அச்சொற்களில் உள்ள கட்டமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய எழுத்தைத் தெரிவுசெய்து எழுத வழிப்படுத்துங்கள்.

| ழ | ளி | க் | ந் | தை | ட் |
|---|---|---|---|---|---|

- ✓ கி ☐ கள் ✓ ப ☐ ங்கள் ✓ பொ ☐ து
- ✓ பூ ☐ கள் ✓ வி ☐ கள் ✓ மொ ☐ டு

மாணவர்கள் பிராணிகள் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் ஏற்படுவதற்காக பத்திரிகைகளில் அல்லது இணையத்தளங்களில் உள்ள தகவல்களைப் பிரதியெடுத்து அப்பியாசக் கொப்பியில் ஒட்ட வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு V :***

- மாணவர்களை கணினிக்கூடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கு மாணவர்களை சிறுவர் தகவல்களைப் பார்வையிட வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தில் சிறுவர் பாடல்கள், கதைகளைச் செவிமடுக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களை அழைத்துச் சென்று இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளைக் கேட்டறியுங்கள். மாணவர்கள் இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளை பதிவிறக்கம் செய்து, கணினி ஊடாக மாணவர்கள் பார்த்து, கேட்டு, இரசிக்க வழிப்படுத்துங்கள். பார்த்தும் கேட்டும் இரசித்த பாடல்களைப் பாடிக்காட்டியும் கதைகளை தமது பாணியில் மற்றவர்களுக்குக் கூறவும் வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளில் வரும் சொற்களை மாணவர்கள் நினைவுபடுத்தி அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

***செயற்பாடு VI :***

- வகுப்பறைப் புத்தக மூலையில் சேகரித்து வைத்திருக்கும் சிறுவர் சஞ்சிகைகளில் மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான சிறுவர் சஞ்சிகைகளைத் தெரிவு செய்யங்கள். அல்லது சிறுவர் சஞ்சிகைகளைப் பாடசாலை நூலகத்திலிருந்து அல்லது புதிதாக விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். (பாடசாலை நிதியிலிருந்து). மாணவர்களை சோடிகளாக்குங்கள். ஒவ்வொரு சோடிக்கும் ஒரு சஞ்சிகை வீதம் வழங்குங்கள். அச்சஞ்சிகைகளை அவர்கள் சுதந்திரமாகப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்குக. அவர்கள் பார்வையிடும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு சோடிக்கும் அருகில் சென்று சஞ்சிகை தொடர்பாக உரையாடுங்கள். அவர்களிடமிருந்து பின்வரும் தகவல்களை அறிந்துகொள்ளுங்கள்.
    - (1) சஞ்சிகையில் பிடித்த பக்கம்
    - (2) ஏன் அப்பக்கம் பிடித்திருக்கிறது?
    - (3) சஞ்சிகையில் உள்ள படங்களில் கவர்ந்த படம் எது? ஏன் உங்களை அப்படம் கவர்ந்தது?
    - (4) சஞ்சிகையின் முதல் பக்கத்தைப் பற்றிக் கூறச் செய்யுங்கள்.
    - (5) சஞ்சிகையின் பெயரை வாசிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், சஞ்சிகையில் உள்ள அம்சங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளியுங்கள். சஞ்சிகையில் உள்ள அம்சங்களைக் கரும்பலகையில் எழுதி வாசித்துக்காட்டுங்கள்.

| | |
|---|---|
| ✓ சஞ்சிகையின் பெயர் | ✓ கதைகள் |
| ✓ பாடல்கள் | ✓ விடுகதைகள் |
| ✓ புதிர்கள் | ✓ பழமொழிகள் |
| ✓ நகைச்சுவை | ✓ படப்புதிர் |
| ✓ நிறந் தீட்டுதல் | ✓ புள்ளிக் கோடுகளை இணைத்தல் |

இவற்றைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் எழுதவும் அவற்றை மீண்டும் வாசித்துக் காட்டவும் நினைவுபடுத்திக் கூறவும் ஆர்வமூட்டுங்கள்.

*செயற்பாடு VII :*

- வகுப்பறையில் உள்ள புத்தக மூலையில் இருந்து சிறுவர் கதை, பாடல் நூல்களைத் தெரிவுசெய்யுங்கள். அல்லது பாடசாலை நூலகத்திலிருந்து அதிபரின் அனுமதியுடன் சிறுவர் பாடல், கதை நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாணவர்களைச் சோடிகளாக்கி அவர்களுக்கு சிறுவர் நூல்கள் ஒவ்வொன்றைச் சுதந்திரமாகப் பார்வையிட உற்சாகமூட்டுங்கள். பார்வையிடும் சந்தர்ப்பத்திலேயே ஒவ்வொரு சோடிக்கு அருகிலும் சென்று பார்வையிடும் நூல்கள் பற்றிய பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

  (1) நூலின் பெயர்
  (2) எழுதியவர்கள் பெயர்
  (3) அட்டைப் படம்
  (4) படங்கள் பற்றிய கருத்து
  (5) கதைகள் / பாடல்களின் தலைப்பு

இவை பற்றி மாணவர்கள் கூறவும் வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

அதன் பின்னர், தமது கைகளில் உள்ள

  (1) நூலின் பெயர்
  (2) நூலாசிரியரின் பெயர் ஆகியவற்றை எழுத வழிப்படுத்துங்கள்.

கதையை அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுதவும் அதனை வாசித்துக்காட்டவும் வழிப்படுத்துங்கள்.

*செயற்பாடு VIII :*

- நூலொன்றை தெரிவு செய்யுங்கள். அந்த நூலின் உள்ளடக்கத் தலைப்புகளை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுதி பெட்டியில் இட்டுக்கொள்ளுங்கள் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு ஒவ்வொரு பெட்டி வீதம் வழங்குங்கள். பெட்டியில் உள்ள நூலின் உள்ளடக்கத் தலைப்புகளை குழுவில் உள்ள எல்லோரும் வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் வாசித்துக்கொண்டிருக்கும்போது குழுக்களுக்குச் சென்று குழுவிலுள்ள எல்லோரும் ஒரு அட்டையையாவது வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், நூலின் உள்ளடக்கத்தை ஒன்றன்பின் ஒன்றாக கரும்பலகையில் எழுதுங்கள். எழுதிய பின் குழுவில் உள்ளவர்கள் அட்டைப் பெட்டியிலுள்ள உள்ளடக்கத் தலைப்புகளைக் கரும்பலகையில் எழுதிய ஒழுங்கில் குழுவின் மேசை மீது வைக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், உள்ளடக்கத் தலைப்புகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு :**

- நினைவுகூருவதோடு வினாக்களுக்கு விடையளித்தல்
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறப் பேசுதல்
- ஆக்கத்திறனுடன் பொருத்தமுறப் பேசுதல்
- ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகக் கருத்தூன்றி வாசித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 10

**தேர்ச்சிகள் :**

- **$L_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் செவிமடுப்பார்.
- **$S_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் பேசுவார்.
- **$R_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- **$W_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- காட்சிப் படங்கள்
- கதைப் படங்கள்
- படம் பார்த்து வாசித்தல்
- ஒலி - ஒளி இறுவட்டுக்கள்
- இணையத்தளங்கள்
- மொழிப் பயிற்சிகள்

**கற்றல் பேறு :**

- காட்சிப் படங்களையும் கதைப் படங்களையும் மற்றும் படங்களையும் பார்த்து விளங்கி நியம மொழியில் விபரிப்பார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து / பார்த்துக் கேட்டு வினாக்களுக்கு நியம மொழியில் விடையளிப்பார்.
- செவிமடுத்த கதைகளை நியம மொழியில் சுயமாக முன்வைப்பார்.
- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை ஒலி, ஒளி இறுவட்டுக்களின் துணையுடன் வாசித்தறிவார்.
- மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைக் கருத்தூன்றிச் செவிமடுப்பதுடன் வாசித்து விளங்கி வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முயல்வார்

**வளங்கள் :**

- பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், காட்சிப்பட அட்டைகள், சொற் சக்கரம், சொல் அட்டைகள்


**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு I :**

- மாணவர்களுக்குப் பொருத்தமான காட்சிப் படமொன்றைத் தெரிவு செய்யுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப காட்சிப்படத்தைப் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். எல்லாக் குழுக்களுக்கும் காட்சிப்பட அட்டைகளை வழங்குங்கள். காட்சிப் படங்களைப் பார்த்துக் குழுவாக நிகழ்காலத்தில் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

  மாணவர்களை எழுமாறாக அழைத்து காட்சிப்படத்தைப் பார்த்துச் சுயமாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் எல்லா மாணவர்களையும் காட்சிப்படத்தைப் பார்த்து சில சொற்களை எழுதுவதற்கு ஆர்வமூட்டுங்கள். எழுதிய சொற்களை குழுக்களிடையே வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். சில சொற்களைத் தெரிவு செய்து நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிகாட்டுங்கள்.


**எடுத்துக்காட்டு :**



**செயற்பாடு II :**

- கதைக் கருவொன்றைத் தெரிவு செய்து ஆறு காட்சிப் படங்களாக வரைந்து கொள்ளுங்கள். (சித்திர ஆசிரியரின் உதவியை நாடுங்கள்) வரைந்த கதைக் காட்சிப் படங்களை மாணவ குழுக்களுக்கு ஏற்ப பிரதியெடுத்து தனித்தனி அட்டைகளில் ஒட்டி, மாணவ குழுக்களுக்கு வழங்குங்கள். (ஒரு குழுவில் ஐந்து மாணவர்கள்) ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்ட கதைப் பட அட்டைகளை (ஆறு அட்டைகள்) ஒழுங்குபடுத்தி, தமக்கிடையே கதை சொல்ல ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள். மாணவர்கள் தமது குழுக்களிடையே கதைப் படங்கள் இன்றிச் சுயமாகக் கூறுவதற்கும் தமக்கிடையே கதையைக் கட்டியெழுப்புவதற்கும் ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், கதையில் பயன்படுத்தப்பட்ட சில சொற்களைக் கொப்பியில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள். வகுப்பு முன்னிலையில் மாணவர்கள் சிலரை அழைத்துக் கதை கூறுவதற்கும் கதையில் பிடித்த கதாபாத்திரமொன்றைத் தெரிவு செய்து போலச் செய்து காட்டுவதற்கும் ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு :**



**செயற்பாடு III :**

- பிராணிகளின் படங்கள் அல்லது வீட்டுப் பொருட்கள் பற்றிய படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அவற்றிலிருந்து 10 படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப படங்களைப் பிரதிகள் எடுத்து அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு படத்தை எடுத்து சில வாக்கியங்களைக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.


**எடுத்துக்காட்டு :**




நாய் வீட்டைக் காக்கும்.
நன்றி உள்ள பிராணி.
வீட்டைச் சுற்றி வரும்.
வாலை வாலை ஆட்டும்.

எழுமாறாக சில மாணவர்களை அழைத்து ஆசிரியரிடம் உள்ள பெட்டியில் இருந்து படங்களைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த படம் தொடர்பாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அவர்கள் கூறும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பை அவதானித்துத் திருத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***






மாணவர்கள் கூறிய வாக்கியங்களிலிருந்து இரண்டு சிறிய வாக்கியங்களை கரும்பலகையில் எழுதுக. அவ்வாக்கியங்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுக. அவ்வாக்கியங்களை உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.

***செயற்பாடு V :***

- சிறுவர்களுக்கான இணையத்தளங்களில் இருந்து கணினி ஊடாக பாடல்கள், கதைகள் என்பவற்றை மாணவர்கள் பார்வையிட / செவிமடுக்க ஆவன செய்யுங்கள். பாடசாலையில் இவ்வசதி இல்லாதிருப்பின் இணையத்தளத்திலிருந்து கதைகள், பாடல்களைப் பிரதி செய்து அவற்றைச் சுவைபட மாணவர்கள் மத்தியில் முன்வையுங்கள்.

***எடுத்துக்காட்டு :***



**கர்வம்**

சஜிபிரபு மாறச்சன்

அடர்ந்த காட்டுப்பகுதியில் குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது. அங்குள்ள பொந்து ஒன்றில் வசித்த எலியைக் கண்டதும், இரண்டும் பேசிப் பழகின. சிறந்த நண்பர்கள் ஆனார்கள்.

இருந்தாலும் எலி தற்பெருமை அடித்துக் கொள்ளும். 'நான் மிகவும் வலிமையானவன். மண்ணையே துளைத்து வளை அமைத்துவிடுவேன், என்னை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. பாம்பைக்கூட விரட்டியடித்து விடுவேன்' என்று வீண் பெருமை பேசும்.

ஒருநாள் எலியும், குதிரையும் கொஞ்சம் தூரத்தில் சென்று மேய்ந்து வர முடிவு செய்தன. இரண்டும் பேசிக் கொண்டு நடந்தன. அப்போது, 'நான்தான் உன்னை வழி நடத்தி செல்வேன். நான் சண்டையில் அவனை வீழ்த்தியிருக்கிறேன், இவனை வீழ்த்தியிருக்கிறேன்' என்று தம் பட்டம் அடித்துக் கொண்டே முன் சென்றது எலி. திடீரென்று எலி நின்றது.

'ஏன் நின்றுவிட்டாய்? தொடர்ந்து செல்' என்றது குதிரை.

'உனக்கு கண் சரியாக தெரியாதா? எதிரே பார் ஆறு ஓடுகிறது, எப்படி கடப்பது?' என்று கேட்டது எலி.

'அது ஆறா? சிறிய கால்வாய் தானே இது. எளிதாக கடந்துவிடலாம்' என்றது குதிரை.

'குதிரையே இது கால்வாயா? எனக்கு ஆறுபோல்தான் தெரிகிறது, இறங்கினால் நிச்சயம் தண்ணீர் அடித்துச் சென்றுவிடும். நாம் இரண்டு பேரும் மூழ்கிவிடுவோம்' என்றது எலி.

குதிரை எலியின் பேச்சை கண்டுகொள்ளாமல் கால்வாயில் இறங்கியது, 'ஏய் எலியே, என் முழங்கால் அளவு கூட வெள்ளம் இல்லை. இதையா நீ ஆறு என்கிறாய், உடனே இறங்கிவா?' என்றது குதிரை.

'நண்பா உனக்கு வேண்டுமானால், இது குறைந்த தண்ணீராக இருக்கலாம். ஆனால் என் உருவத்திற்கு இது நதிபோல வெள்ளப்பெருக்கு தான். தயவு செய்து என்னை உன் முதுகில் ஏற்றி அக்கரையில் விடு. நான் என்னைப் பற்றி கர்வத்துடன் பேசியதை மறந்துவிடு' என்று மன்னிப்புக் கேட்டு அடங்கியது எலி.

'அப்படி வா, வழிக்கு. இனியும் வீண் பெருமை பேசி வாழாதே' என்று எலியை, தன் முதுகில் ஏற்றி அக்கரையில் விட்டது குதிரை. இரண்டும் கர்வமின்றி நண்பர்களாக வாழ்ந்தன.

*(நன்றி: தினத்தந்தி சிறுவர் மலர் - இணையப் பக்கம்)*

இக்கதையில் வரும் சொற்களை மொழிப் பிரயோகத்திற்காகப் பட்டியலிடுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **காடு** | **குதிரை** | **எலி** | **பொந்து** | **இரண்டு** | **நண்பர்** |
| **பெருமை** | **நான்** | **வளை** | **துளை** | **பாம்பு** | **நாள்** |
| **கண்** | **ஆறு** | **தண்ணீர்** | **கரை** | **முதுகு** | **வெள்ளம்** |

பரிச்சயமற்ற சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| **தற்பெருமை** | **கால்வாய்** | **தம்பட்டம்** | **கால்வாய்** |
| **நிச்சயம்** | **முழங்கால்** | **அக்கரை** | **கர்வம்** |

பரிச்சயமற்ற சொற்களை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றின் கருத்தை மாணவர்களுக்கு புரிய வையுங்கள். மேலே தரப்பட்டுள்ளவாறான சொற்களைச் சரியான உச்சரிப்புடன் மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அச்சொற்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதவும், எழுதியவற்றை வகுப்பின் முன் உரத்து வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.


**செயற்பாடு VI :**

- மொழிப் பயிற்சிகளுக்கான சிறிய அறிவுறுத்தல்களை அட்டைகளில் எழுதி மாணவர்களுக்கு வழங்கி அவற்றை உரத்து வாசிக்கவும் செவிமடுக்கவும் செவிமடுத்துப் புரிந்து பதிலளிக்கவும் ஊக்கப்படுத்தித் தெளிவூட்டிய பின்னர் மொழிப் பயிற்சிகளுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு - V**

மாணவர்களுக்குத் தெரிந்த பத்துப்படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அப்படங்களை மாணவ குழுக்களின் எண்ணிக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு :***



மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி குழுக்களுக்கு ஒவ்வொரு படப் பெட்டிகளை வழங்குங்கள். அப்படங்களை தமது குழுக்களுக்கிடையே உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசித்த பின்னர் படங்களுக்குரிய பெயர்களைப் பிழையின்றி அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.


***எடுத்துக்காட்டு:***

| | | |
|---|---|---|
| **சேவல்** | **வாத்து** | **கதிரை** |
| **மேசை** | **குரங்கு** | **அணில்** |

செயற்பாடு - **II**


மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். பத்துப் படங்களைத் தெரிவு செய்து, ஒவ்வொரு குழுக்களுக்கும் பத்துப் பட அட்டைகள் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள். அப்பெட்டியில் உள்ள பட அட்டைகளைப் பார்த்து மாணவர்கள் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன்பின்னர் அப்படங்களின் பெயர்களின் முதல் எழுத்துக்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***




செயற்பாடு - **III**

மாணவர்கள் இனங்காண இடர்ப்படும் எழுத்துக்களையும் இடர்ப்படாத எழுத்துக்களையும் கீழே தரப்பட்டுள்ளவாறு ஏ4 தாளில் கணினி அமைப்பு செய்து அல்லது எழுதி மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை அட்டைகளில் ஒட்டி வட்ட வடிவில் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவ் அட்டைகளை குழுக்களுக்கு வழங்கி தெரியாத எழுத்துக்களை இனங்காட்டவும் அவ் எழுத்துக்களை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் வழிப்படுத்துக. அவ்வெழுத்துக்களை சரியாக உச்சரிக்கவும் ஆர்வமூட்டுக.



## செயற்பாடு - IV

கீழே தரப்பட்டள்ளவாறு பத்துச் சொற்களில் உள்ள எழுத்துக்களை ஒழுங்குமாறி எழுதி மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக் கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | ம் | ழ | | ய | ல் | மு |
| கு | தி | ரை | | வ | த | ளை |
| ன | வா | ம் | | ச | கு | ங் |
| வ | ல் | ய | | ட | கு | ப |
| ண் | டு | வ | | டு | ண் | ந |

அதன் பின்னர் மாணவர்களை ஒவ்வொரு அட்டையாக எடுத்து மாறிக்கிடக்கும் எழுத்துக்களை வாசித்து இனங்கண்டு சொற்களாகக் கூறுமாறு ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். அதன் பின்னர் ஏ4 தாளில் கீழ்வருமாறு கட்டமிட்டு பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

அட்டைகளில் இடம்மாறி உள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக ஏ4 தாளில் உள்ள கட்டங்களில் எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்கள் சரியாக எழுதுகின்றார்களா என அவதானியுங்கள். அதன் பின்னர் ஏ4 தாளில் எழுதிய சொற்களை வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள். வீட்டில் சென்று அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் ஆர்வமூட்டுங்கள்.

## செயற்பாடு - V

கீழே தரப்பட்டுள்ளவாறு சொற்களில் முதல் எழுத்துக்களை நீக்கி கட்டமிட்டு கணினி மூலமோ எழுதியோ தயாரித்து கொள்ளுங்கள். அதனை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களிடம் சொற்களில் நீக்கப்பட்ட இடத்தில் வர வேண்டிய சொற்களைக் கண்டு பிடிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் சொற்களில் வர வேண்டிய எழுத்துக்களை கரும்பலகையில் எழுதிக் காட்டுங்கள். மாணவர்கள் அவ்வெழுத்துக்களை அடையாளம் கண்ட பின் அடடையில் உள்ள சொற்களைப் பூரணப்படுத்தி அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.


**முதல் எழுத்துக்களை எழுதுவோம்**

| | |
|---|---|
| ☐ ம்மா | ☐ ர் |
| ☐ டு | ☐ ணி |
| ☐ லை | ☐ ந்து |
| ☐ ட்டி | ☐ ன்று |
| ☐ ரல் | ☐ டு |
| ☐ தி | ☐ வை |

**செயற்பாடு - VI**

கீழே தரப்பட்டுள்ளவாறு சொற்சக்கரத்தை கணினி மூலம் உருவாக்கி அல்லது எழுதிக் கொள்ளுங்கள். அதன் பின்னர் மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்துக் கொள்ளுங்கள். பிரதி எடுத்த பின்னர் வட்ட வடிவில் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். வெட்டி எடுத்த பின்னர் அவற்றை அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களுக்கு அட்டைகளை வழங்குங்கள். சொற் சக்கரத்தில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கிக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் போது உதவிகளை உடனுக்குடன் வழங்குங்கள். ஆசிரியர் எழுமாற்றாக மாணவர்களை அழைத்துச் சொற்களை உருவாக்கிக் கூற ஆர்வமூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு :***






மாணவர்கள் உருவாக்கிய சொற்களை கரும்பலகையில் எழுதுங்கள். கரும்பலகையில் எழுதிய சொற்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அதன் பின்னர் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு - VII**

மாணவர்களுக்குப் பொருத்தமான பத்துப் படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அப்படங்களுக்கு உரிய சொற்களை தனித்தனியாக எழுதிக் கொள்க. மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப படங்களையும் சொற்களையும் பிரதி எடுத்து தனித்தனியாக அட்டைகளில் ஒட்டி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் படப்பெட்டி, சொற்பெட்டி என இரு பெட்டிகளை வழங்குங்கள். படம் ஒன்றை எடுத்து அப்படங்களுக்குரிய சொற்களை தெரிவு செய்து வாசித்க்காட்ட வழிப்படுத்துக.

*எடுத்துக்காட்டு :*


பொம்மை

விமானம்

குரங்கு

அதன் பின்னர் படங்களுக்குரிய சொற்களை அப்பியாச் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட வழிப்படுத்துக. (மாணவர்களுக்குப் படங்களை ஏ4 தாளில் பிரதி எடுத்துக் கொடுத்து அதற்கருகில் சொற்களை எழுதும் பயிற்சியையும் வழங்க முடியும்.)

**செயற்பாடு - VIII**

கீழே தரப்பட்டுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட சொற்களை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் எழுதி பெடடிகளில் இட்டுக் கொள்ளுங்கள். வேறு ஒரு பெட்டியில் முதல் எழுத்துக்களில் உள்ள ‘ா’ வை நீக்கினால் வரும் சொற்களைத் தெரிவு செய்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியர் கரும்பலகையில் இரு பெட்டிகளிலும் உள்ள சொற்களை எழுதி வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அச்சொற்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு :* மாலை மலை

**செயற்பாடு - IX**

சொற்களை வகைப்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள சொற்களை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுதிப் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி வெட்டி எடுத்து பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

படம் கலம்

வடம் வலம் குலம்

கடம் தலம்

தடம் குடம் நிலம்

அதன் பின்னர் மாணவ குழுக்களுக்கு இரண்டு வெற்றுப் பெட்டிகளை வழங்குங்கள். சொற்களை வேறுபடுத்தி இரு பெட்டிகளில் இட ஆர்வமூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| படம் | தலம் |
| வடம் | வலம் |
| கடம் | கலம் |
| தடம் | நிலம் |
| குடம் | குலம் |

பெட்டிகளில் இட்ட சொற்களை உரத்து வாசித்துக் காட்டிய பின்னர் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின்னரும் வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.

## செயற்பாடு - X

கீழே தரப்பட்டவாறு தெரிவு செய்யப்பட்ட சொற்களை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக் கேற்ப அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். அச்சொற்களை எழுத்துக்களாக வெட்டி வேறொரு பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள்.

| பெட்டி 1 | பெட்டி 2 |
|---|---|
| பலம் | ப ல ம் |
| கலம் | க ல ம் |
| வனம் | வ ன ம் |
| கலை | க லை |
| படம் | ப ட ம் |

அதன் பின்னர் 'ா' சொற்களின் எண்ணிக்கைக்கேற்ப ா தனித்தனியாக அட்டைகளில் வெட்டி எடுத்து மாணவ குழுக்களுக்கு வழங்குக. தனித்தனியாக வெட்டி எடுக்கப்பட்ட எழுத்துக்களில் முதல் எழுத்துக்களுடன் 'ா' சேர்த்து புதிய சொல்லை உருவாக்கி வாசித்துக் காட்ட மாணவர்களுக்கு ஆர்வமூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | | | |
|---|---|---|---|
| ப | ா | ட | ம் |
| க | ா | ல | ம் |

அதன் பின்னர் அறிமுகப்படுத்திய சொற்களையும் புதிதாக உருவாக்கிய சொற்களையும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிய சொற்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துக.

செயற்பாடு - **XI**

கீழே தரப்பட்டவாறு பயிற்சியை ஏ4 தாளில் எழுதி அல்லது கணனி மூலம் எழுத்தமைப்புச் செய்து கொள்ளுங்கள். அவற்றை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பப் பிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

வேறுபட்ட சொற்களை இனங் காண்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பா | - | **பாடம்** | **பாம்பு** | **பல்லி** |
| கா | - | **காடு** | **கால்** | **கல்** |
| சா | - | **சாலை** | **சங்கு** | **சாடி** |
| வா | - | **வானம்** | **வாத்து** | **வனம்** |
| மா | - | **மரம்** | **மாடி** | **மான்** |

மாணவர்களுக்கு இப்பயிற்சி தொடர்பான விளக்கத்தை வழங்கி வேறுபட்ட சொற்களின் கீழ் கோடிட வழிப்படுத்துங்கள். எல்லாச் சொற்களையும் மாணவர்களுடன் சேர்ந்து உரத்து வாசிக்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். வேறுபட்ட சொற்களை மட்டும் உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாண வர்களுக்கு உடனுக்குடன் உதவுங்கள்.

செயற்பாடு - **XII**

கீழே தரப்பட்டவாறு சிறிய வாக்கியங்களில் இடைவெளிகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சிகளை வழங்குங்கள். மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். கீறிட்ட இடங்களில் வர வேண்டிய சொற்களைத் தனித்தனியாக எழுதி பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிப் பெட்டிகளில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள். வாக்கிய அட்டையில் உள்ள இடைவெளிகளில் வரவேண்டிய சொற்களை பெட்டிகளில் இருந்து தெரிவு செய்து வாக்கிய அட்டைகளில் வைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

கீறிட்ட இடங்களை பூர்த்தி செய்வோம்.

1. ☐ **கடலில் செல்லும்.**
2. ☐ **புல் மேய்ந்தது.**
3. ☐ **வீட்டைக் காக்கும்.**
4. ☐ **வேகமாக ஓடும்.**
5. ☐ **மிகவும் பெரியது.**
6. ☐ **நீரில் நீந்தும்.**
7. ☐ **பாய்ந்து சென்றது.**
8. ☐ **தாவிப் பாய்ந்தது.**

சொல்லட்டைகள்

| | | | |
|---|---|---|---|
| கப்பல் | ஆடு | நாய் | குரங்கு |
| வாத்து | குதிரை | யானை | ஆமை |

இடைவெளிகளில் பூர்த்தி செய்ய வேண்டிய சொல்லட்டைகளை மாணவர் வாசித்துக் காட்ட வழிப்படுத்தி அதன் பின்னர் வாக்கியங்களை வாசித்துக் காட்டுங்கள். இடைவெளியில் சொல்லட்டைகளை வைத்து வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் வாக்கியங்களை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். இடைவெளியில் வர வேண்டிய சொற்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுத வாசித்துக் காட்ட மாணவர்களுக்கு உதவுங்கள்.

செயற்பாடு - **XIII**

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏ4 தாளில் கீழே தரப்பட்டுள்ளவாறு ஓர் எழுத்தில் கூறும் பயிற்சியை தயாரித்துக் கொள்ளுங்கள். அப்பயிற்சியைப் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். ஒரு எழுத்தில் வரும் விடைகளை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் எழுதிப் பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

ஓர் எழுத்தில் விடை கூறுவோம்

1. சுடும் எழுத்து - ◯
2. கேட்கும் எழுத்து - ◯
3. துரத்தும் எழுத்து - ◯
4. மாத எழுத்து - ◯
5. அழைக்கும் எழுத்து - ◯
6. பூசும் எழுத்து - ◯
7. சிரிக்கும் எழுத்து - ◯
8. பூக்கும் எழுத்து - ◯
9. விரட்டும் எழுத்து - ◯
10. சுட்டும் எழுத்து - ◯

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | தா | போ | தை | நீ |
| வா | மை | ஈ | பூ | சூ |

ஆசிரியர் வாசித்துக் காட்டும் போது விடைக்குரிய எழுத்தை மாணவர்கள் பெட்டியில் இருந்து தெரிவு செய்து காட்ட வேண்டும். அதன் பின்னர் விடைகளைத் தரப்பட்டுள்ள தாளில் பொருத்தமான இடத்தில் எழுத வேண்டும். எல்லா விடைகளையும் எழுதி முடிந்த பின்னர் வாக்கியங்களை வாசிக்க முயற்சி செய்ய வேண்டும்.

வாசிக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு ஆசிரியர் உடனுக்குடன் உதவ வேண்டும் என்பதனை நினைவிற் கொளளுங்கள். விடையாக வரும் எழுத்துக்களை உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- காட்சிப் படங்களைப் பார்த்து நியம மொழியில் கூறுதல்
- கதைப் படங்களைப் பார்த்து நியம மொழியில் கூறுதல்
- படம் பார்த்து வாசித்தல், நியம மொழியில் எழுதுதல்
- ஒலி - ஒளி இறுவட்டுக்களைக் கேட்டு நியம மொழியில் எழுதுதல்
- இணையத்தளங்களைப் பார்வையிட்டுப் பயன்படுத்துதல்
- மொழிப் பயிற்சிகளுக்கான அறிவுறுத்தல்களை செவிமடுத்து வாசித்து விளங்கி நியம மொழியில் விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## தாய்மொழி - தமிழ்
## மாதிரிப் பாடக் குறிப்பு

திகதி : ..................... முதல் ................... வரை                                                    வகுப்பு: தரம் 1 ......

| தேர்ச்சிகள் | உள்ளடக்கம் | கற்றற்பேறு | வளங்கள் | உத்தேச நேரம் | கற்றல் - கற்பித்தல் அனுகுமுறைகள் (செயற்பாடுகள்) | கணிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | • கதைப்படங்கள் | • படங்களின் தொடர்பபைக் கண்டு பிடித்து கதையொன்றைக் கட்டி யெழுப்புவார். | • கதைப்படங்கள் அட்டைகள் | 120 நிமிடங்கள் | • செயற்பாடு I கதைப்படங்களை ஒழுங்குபடுத்திக் கதையைக் கூறுதல் (பக்கம் 75) | • கதைப்படங்களை ஒழுங்குபடுத்திக் கதைகளைக் கட்டியெழுப்புவதைக் கணிப்பீடு செய்தல். |
| | • சுய சரிதை | • தாம் அறிந்த பிராணிகள், பழுங்கள், பொருட்கள் பற்றிய சுயசரிதைகளை மொழியாட்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக முன்வைப்பார். | • பிராணிகள், பழங்கள், பொருட்கள் ஆகியவற்றின் முகமூடிகள், விரல் மொம்மைகள் | 60 நிமிடங்கள் | • செயற்பாடு II முகமூடி அணிந்து சுயசரிதையைக் கூறுதல் (பக்கம் 76) | • மாணவர்கள் போலச் செய்வதை கணிப்பீடு செய்தல் |
| | • ஆத்திசூடி | • ஆத்திசூடிப் பாடல்களை மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார். | • ஆத்திசூடி பாடல் அடிகள் எழுதப் பட்ட அட்டைகள், சொல் அட்டைகள் | 60 நிமிடங்கள் | • செயற்பாடு III ஆத்திசூடியைப் பாடலாகச் சொல்லிக் கொடுத்தல் (பக்கம் 77) | • ஆத்திசூடியைச் சரியாக உச்சரித்துக் கூறுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய) | • கிராமிய விளையாட்டுக்களை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடி மகிழ்வுறுவார். | • கிராமிய விளையாட்டுக்களின் படங்கள், சொல் அட்டைகள் | 120 நிமிடங்கள் | • செயற்பாடு IV பாரம்பரிய விளையாட்டுக்களை அறிமுகம் செய்தல் (பக்கம் 78) | • ஒற்றுமையாக சிறந்த தொடர்பாடலுடன் விளையாட்டுக்களில் ஈடுபடுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • பண்டிகைகள் | • பண்டிகைகள் பற்றிய அனுபவங்களை முன்வைப்பதோடு முக்கியத்துவத்தினையும் தெரிந்து கொள்ள முன்வருவார். | • பண்டிகைகள் தொடர்பான படங்கள் | 60 நிமிடங்கள் | • செயற்பாடு V பண்டிகைகள் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி அனுபவங்களைக் கூறச் செய்தல் (பக்கம் 78) | • பண்டிகை தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதனைக் கணிப்பீடு செய்தல் |
| | | | | 60 நிமிடங்கள் | • மாதரிப் பண்டிகைகைக் கொண்டாட்டம் (பக்கம் 78) | • பண்டிகை தொடர்பான அனுபவங்களைப் பெறுவதனை அவதானித்துக் கணிப்பீடு செய்தல் |

# 2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

> ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் கூறு, மனிதன் மீதும் மனிதசமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்துகின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழவேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகிறது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்பால் ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கை விருத்திசெய்வதே ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பப்படும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமை யுடைய ஒருவரிடத்தே எழுத்தறிவு, கணித அறிவு, சமயம் தொடர்பான தேர்ச்சிகளோடு மேலும் பல துறைகளுக்குரிய தேர்ச்சிகளும் விருத்தியடைதல் வேண்டும். கடந்த காலங்க ளில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விப் இக்கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்களின் கீழ் அத்தேர்ச்சி களை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆனால் புதிய கலைத்திட்டத்தில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை ஒன்றில் 16 கருப்பொருள்களை மையமாகக்கொண்டு, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அழகியல், ஆக்கம், உடற்கல்வி ஆகிய துறைகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதோடு, சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களை வளப்படுத்துவதற்கும் சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தலாம். தரம் ஒன்றில் பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளினூடாக வெளிக்கொணரலாம். இப்பாடத்திற்குரிய செயற்பாடுகளை ஒழுங்கு செய்யும்போது ஆசிரிய ருக்குத் துணையாக, உதவி புரிவோர் இருப்பாரெனின் அவற்றை ஒழுங்கமைத் தல் இலகுவாக அமையும். அப்பாடசாலையிலேயே தரம் 5, 6 இல் கல்வி பயிலும் பிள்ளைகளின் உதவியை இதற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடத்ததிட்டத்ததில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதில்லை. இ ப``` ப ரு வ ப``` பிள்ளைகளின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ் வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும் போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும்சுதந்ததிரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.

எனவே, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள அந்தந்தக் கருப்பொருளின் ஊடாகக் குறித்த தேர்ச்சிகளை அடைவதற்காக, உத்தேச செயற்பாடுகளுக்குப் பதிலாக வேறு செயற்பாடுகளை நீங்கள் ஆக்கிக் கொள்ளலாம். குறித்த தேர்ச்சிகளை அடையத்தக்க வாறாகச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஆக்கிக் கொள்வது தொடர்பாக ஆசிரியர்கள் கரிசனை காட்டுதல் வேண்டும்.

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான இக்கற்றல் பரப்பினூடாக மாணவரிடத்தே பின்வரும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக்கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.
- ✓ தொடர்பானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார். சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலையுலகிற்கு தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துவார்.

## 03. முதன்மை நிலை ஒன்றில் “சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்” பாடத்துக்குரிய கற்றல் தேர்ச்சசிகள்

- ✓ பாடசாலைச் சூழலுடன் இசைவடைந்து செயற்படுவார்.
- ✓ வீட்டில் மகிழ்ச்சியுடனும், பயனுறுதியுடைய வகையிலும் ஆட்களுடன் இடைத்தொடர்பு கொள்வார்.
- ✓ தகவல்களைச் சேகரிப்பதற்காக அவதானிப்பார்.
- ✓ அனுபவங்களினூடாக இலகுவான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ பழக்க வழக்கங்களை அனுசரித்துச் செயற்படுவார்.
- ✓ பாடசாலையுடன் தொடர்புடைய கடந்தகாலத் தகவல்களைத் தேடியறிவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்வுக்காக, நற்பழக்கங்களைப் பின்பற்றுவார்.
- ✓ நட்புடன் உரையாடி, தகவல்களைச் சரியாகப் பரிமாறுவார்.
- ✓ அயற்சூழலில் நிகழும் மாற்றங்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தம்மையும் தமது அயற்சூழலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணுவதில் பங்களிப்பார்.
- ✓ ஏனையோர் விரும்பத்தக்க வகையில் தமது நடத்தைகளைப் பேணிவருவார்.
- ✓ அடிப்படை மெய்ந்நிலைகளைப் பேணிவருவார்.
- ✓ அன்றாட வேலைகளின் போது தமது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெளியைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி, விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- ✓ குறித்த நோக்கங்களைக் கொண்ட வேலைகளில் கூட்டாகவும் பொறுப்புடனும் ஈடுபடுவார்.
- ✓ சுற்றாடற் பல்வகைமை குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவ முன்வருவார்.
- ✓ காட்சிப் பலகைகளில், படங்கள், குறியீடுகள், மற்றும் எழுத்து மூலம் காட்டப்பட்டுள்ள தகவல்களைப் பெறுவார்.
- ✓ தமது அனுபவங்களைச் சித்திரங்களாகவும் உருவ ஆக்கங்களாகவும் வெளியிடுவார்.
- ✓ சுற்றாடலில் உள்ள ஒலிகள், ஓசைகள், அசைவுகளையும், அவற்றுக்குரிய பாத்திரங்களையும் போலச் செய்து காட்டுவார்.
- ✓ அபிநயம் செய்து நடித்து, ஆடிப்பாடுவார்.

- ✓ வெவ்வேறு வேலைகளின்போது இயைபாக்கத்துடன் உடலை அசைப்பார்.
- ✓ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்களை உருவாக்குவார்.
- ✓ பெற்ற அனுபவங்களையும், சேகரித்த தகவல்களையும் தனியாகவோ, கூட்டாகவோ ஒரு தொகுதியினர் முன்னிலையில் சமர்ப்பிப்பார்.
- ✓ வீட்டிலும் பாடசாலையிலும் தமது கடமைகள், பொறுப்புக்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.

## 04. "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" என்ற பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான் வழிப்படுத்தல்

- ✓ இப்பாடத்திட்டத்தில் பிள்ளையின் சுற்றாடல் 16 கருப்பொருள்கள் வாயிலாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.
- ✓ சகலவற்றையும் திருப்திகரமான அனுபவங்களாகப் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். அதற்குப் போதியளவு திட்டமிடலும் ஆயத்தமும் அவசியமாகும்.
- ✓ இங்கு தரப்பட்டுள்ள கருத்துகளுக்கேற்ப அறிமுக முறைகளையும், கற்றல் முறைகளையும் பிரயோகித்துப் பாடங்கள் திட்டமிடப்படல் வேண்டும்.
- ✓ தகவல்களைத் தேடியறிதலும் தகவல்களை அறிக்கைப்படுத்தலும் முக்கியமானவையாகும். ஆரம்பக் கட்டத்தில் வாய்மொழியாகவும் பருமட்டான படங்கள் மூலமும் தமது அனுபவங் களை வெளிப்படுத்துவதற்குப் பிள்ளைகளை ஊக்குவிக்குக. படிப்படியாக, சொற்களையும், வாக்கியங்களையும் ஓரளவு விளக்கமான படங்களையும் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துக.
- ✓ சகல, வேலைகளையும் முயற்சிகளையும் மதிக்க வேண்டும்.
- ✓ பிள்ளைகளைக் குழுக்களாக வேலைகளில் ஈடுபடுத்தவும். எனினும் ஆரம்பச் சந்தர்ப்பங்களில் குழுவில் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பாகப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதலும் உதவி புரிதலும் அவசியமாகக் கூடும்.
- ✓ ஏதேனும் கருப்பொருள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது படிப்படியாகக் குவியும் தகவல்களையும் பொருள்களையும் (படிப்படியாகக் கட்டி யெழுப்பப்படும்) ஒரு கண்காட்சியாக மாற்றுக.
- ✓ குறித்தவோர் ஒழுங்கில் கருப்பொருள்கள் முன்வைக்கப்படவில்லை. எந்தவொரு நேரத்திற்கும் பொருத்தமான கருப்பொருளை எந்த இடத்திலிருந்தும் தெரிவுசெய்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரமுண்டு. காலத்திற்குப் பொருத்தமானவாறு கருப்பொருள்களைத் தெரிவுசெய்வதனால் வளங்களைப் பயன்படுத்துதல் மிக இலகுவாக அமையும்.

## 05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

"சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். முழு வகுப்பையுமோ குழுக்களையோ தனித்தனி மாணவரையோ கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் முன்கூட்டியே இதற்காக ஆயத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.
மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள். கையாண்டு பார்த்தல், குறுஞ்செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்கள், நூல்கள், அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

## 06. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தரம் ஒன்றில் "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" பாடத்தில் நாள் முழுவதும் மேசைக்கருகில், கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக பல்வேறு மெய்ந்நிலைகளிலும் மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைக் காணக்கூடியவாறாகவே பாடசாலைக் கொள்கையும்

வேலைத்திட்டங்களும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- ✓ பாடசாலை நேரத்தினுள், தரம் ஒன்றில் கற்கும் பிள்ளைகள், பிரதானமாக விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுற்றாடலை ஒழுங்கு செய்தல்.
- ✓ திறந்த வெளியில் கற்பதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குதல்.
- ✓ பாடசாலையின் விளையாட்டுக்கள், அழகியற் செயற்பாடுகள், வேறு இணைப்பாட நடவடிக்கைகளின்போது தரம் ஒன்றின் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்தல்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில், பாடசாலையில் மேல் வகுப்புக்களில் (தரம் 5, 6 இல்) உள்ள பிள்ளைகளின் உதவியையும் பெற்றுக் கொடுத்தல்.

## 07. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவரது கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்கு செய்யும்போது, அவர்கள் கற்றல் தொடர்பாக வெளிக்காட்டும் ஆற்றல்கள், ஆற்றலின்மைகள் பற்றிய சிறப்பான விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் வேண்டும். இதற்காக வகுப்பறையில் இடையறாது நடத்தப்படும் தகவல் சேகரிப்புச் செயன்முறையே "கணிப்பீடு" என்பதால் கருதப்படுகின்றது. மாணவரைக் கணிப்பிடுவதன் நோக்கங்கள் பலவாகும். எனினும் ஆரம்பத் தரங்களில் நடத்தப்படும் கணிப்பீடானது பிரதானமான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று கண்டறிதலாகும். தமது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் அவரவருக்குப் பொருத்தமானவாறு கல்வியை வழங்குவதாயின் ஆசிரியர், ஒவ்வொரு மாணவன்.˙.மாணவி தொடர்பாகவும் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வெண்டும். கண்டறிந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் போதனை சார்ந்த பின்னூட்டலை வழங்குவதே இரண்டாவது நோக்கமாகும். எனவே ஆரம்பத் தரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீடானது, மாணவரைத் தர வரிசைப்படுத்தல், ஒரு மாணவனை மற்றொருவருடன் ஒப்பிட்டு மதித்தல், மாணவரை அவர்களது ஆற்றல்களின்படி வகைப்படுத்தல் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட ஒன்று எனக் கருதலாம்.

ஆரம்பத் தரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டை ஆசிரியரால் நடத்தப்படுகின்ற நியதி சார்ந்த, முறைசாராத தொடர்ச்சியான ஒரு கணிப்பீடு எனக் குறிப்பிடலாம். கலைத்திட்டத்தின் உத்தேச தேர்ச்சிகளுக்கு அமைய உருவாக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடக்கப்பட்டுள்ளன. மாணவர் இப் பிரமாணங்களை எந்த அளவுக்கு எட்டியுள்ளார் என்பதைக் கணிப்பீட்டினூடாக ஆசிரியர்கள் கண்டறிதல் வேண்டும்.

வினாக்கள் கேட்டல், முறைசாராத வகையில் மாணவரை அவதானித்தல், அவர்களுடன் கலந்துரையாடல், செயல் அடைவுக்கோவைகளைப் பேணிவருதல், வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற முறைசாரா உத்திகளையும் பயன்படுத்தலாம். அவற்றைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதல் ஆரம்பத் தரங்களில் வகுப்பாசிரியரின் பொறுப்பாகும். அலகு இறுதியிலோ தவணை இறுதியிலோ அன்றி, கற்பித்தற் பணிகள் நிகழும் வேளையிலேயே கணிப்பீட்டை நடத்துதல் வேண்டும். கல்வியை மேலும் சிறப்பாக மாணவர்க்கு வழங்குவதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் சிறந்த கல்வியை வழங்குவதற்காக நன்கு இனங்காணத்தக்க ஒரு செயன்முறையே கணிப்பீடு என்பதை ஆசிரியர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **1.** நாமும் பாடசாலையும் | • பாடசாலையில் காணப்படும் குறிப்பான, முக்கியமான இடங்களை இனங்கண்டு அப்பல்வகைமைக்கு இணைவாகச் செயற்படுவார்.<br>• பாடசாலையின் கருமங்களில் பங்களிப்புச் செய்து பாடசாலையின் பண்பாட்டை நன்கு நடத்திச் செல்வதற்காகச் செயற்படுவார்.<br>• பாடசாலையில் இருக்கும் பல்வேறு ஆட்களின் வகிபாகங்களை இனங்கண்டு அவர்களின்பால் உணர் தன்மையுடன் செயற்படுவார்.<br>• வகுப்பறையை அழகாகப் பேணிவருவதற்காக வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் புரிவார்.<br>• உபகரணங்களைப் பயன்படுத்தி இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• பாடசாலையின் பெறுமானத்தை மேம்படுத்திக் காட்டுவதற்காக களிப்பூட்டும் அணுகுமுறைகளைப் பயன்படுத்துவார். | • பாடசாலையில் உள்ள குறிப்பான, முக்கியமான இடங்கள் பற்றிய தகவல்கள்<br>• பாடசாலை நிலத்தின் வேறுபாடுகளை இனங்காணலும் பாதுகாப்பாக நடந்து கொள்ளலும்<br>• வகுப்பறையை அழகாகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்காகச் செய்ய வேண்டிய கருமங்கள்<br>• பாடசாலையிலும் வகுப்பறையிலும் இடம்பெறும் வழக்காறுகளை இனங்காணலும் பின்பற்றுதலும்<br>• பாடசாலைக் கொடி, பாடசாலைக் கீதம், ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல்<br>• பாடசாலையில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களும் அவற்றிற்குக் கட்டுப்படுதலும்<br>• பாடசாலையில் உள்ள வெவ்வேறு ஆட்களையும் அவர்களது வகிபாகங்களையும் இனங்காணல்<br>• வகுப்பறையை அழகாக வைத்திருப்பதற்குப் பொருத்தமான ஆக்கங்கள்<br>• விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br>• பாடசாலையின் பெறுமானத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் சார்ந்த சுயாதீனமான அசைவுச் செயற்பாடுகள் |
| **2.** எமது வீடு | • வீட்டில் உள்ளோர், வீட்டுடன் தொடர்புடையோர், வீட்டில் உள்ள பிராணிகளின்பால் நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார். | • வீட்டில் இருக்கும் உறுப்பினர்களின் பரஸ்பர பிணைப்பு வளர்ச்சியடையும் வகையில் செய்யும் கருமங்கள்<br>• வீட்டுக்கு வரும் விருந்தினர்கள், உறவினர்களின்பால் நல்ல |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • தமது கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றி, வீட்டைச் சீராக நடத்திச் செல்லப் பங்களிப்புச் செய்வார்.<br><br>• நாளாந்தம் வீட்டில் பயன்படுத்தக் கூடியவற்றை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வார்.<br><br>• வீட்டின் அழகையும் சுற்றத்தையும் பேணிவருவதற்காக பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்து களிப்புறுவார்.<br><br>• வீட்டுச் சூழலைத் துணையாகக் கொண்டு இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.<br><br>• வீட்டுச் சூழல் தொடர்பாகப் பெறும் அனுபவங்களைக் களிப்புடன் வெளிப்படுத்துவார். | மனப்பாங்குடன் செயற்படுதல்<br><br>• வீட்டிலும் வீட்டை அண்டியும் காணப்படும் பிராணிகள் தொடர்பாக உணர்தன்மை காட்டல்<br><br>• வீட்டில் நாளாந்தம் இடம்பெறும் கருமங்களின்போது வழங்கக்கூடிய பங்களிப்பு<br><br>• வீட்டுச் சூழலைச் சுத்தமாகப் பேணிவருவதற்காகச் செய்யப்படும் கருமங்கள்<br><br>• வீட்டில் உற்பத்தி செய்து கொள்ளுபவை தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுதல்<br><br>• வீட்டின் அழகுக்காகப் பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்<br><br>• வீட்டுச் சூழலுடன் தொடர்புடைய அசைவு / இயக்கச் செயற்பாடுகள்<br><br>• வீடு மற்றும் வீட்டுச் சூழல் தொடர்பான பாடல்கள், கவிதைகள் பாடுதல் / நடனமாடுதல் / நடித்தல் |
| **3.** தோட்டத்திற்கு வரும் பிராணிகள் | • அயற் சூழலில் வாழும் பிராணிகளுக்கு இடையே காணப்படும் பல்வகைமையைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>• பிராணிகளும் சூழலின் ஒரு பகுதியே எனக் கருதி பிராணிகள் குறித்து உணர் தன்மையுடன் செயற்படுவார்.<br><br>• எமது அயற் சூழலில் வாழும் பிராணிகளின் நடத்தைகளைப் போலச் செய்து ஆக்கம் சார்ந்த இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• பிராணிகளின் பல்வேறு இயல்புகளையும் நடத்தைகளையும் களிப்புடன் | • பாடசாலைத் தோட்டத்திற்கு வரும் பிராணிகளை இனங் காணல்<br><br>• பிராணிகளின் பல்வேறு இயல்புகள்<br><br>• பிராணிகளின் வாழிடங்கள்<br><br>• பிராணிகள் தொடர்பாக உணர்தன்மையுடன் செயற்படல்<br><br>• எமது சுற்றுப்புறப் பிராணிகளைப் போலச் செய்யத்தக்க சுதந்திரமான இயக்க / அசைவுச் செயற்பாடுகள்<br><br>• பிராணிகளின் வெவ்வேறு ஒலிகள், அசைவுகள் / இயக்கங்கள், மெய்ந்நிலை தொடர்பான போலச் செய்கை நடனங்கள் / நடிப்புகள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | முன்வைப்பார்.<br><br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணிகளின் வாழிட மாதிரிகளை அமைப்பார். | • பிராணிகள் பற்றிக் கூறும் பாடல்கள்<br><br>• பிராணிகளின் மாதிரிகளை அமைத்தல் / சித்திரங்கள் வரைதல் |
| **4.** நீருடன் விளையாட்டு | • நீர் பெறுமதிமிக்கதொரு வளமாகும் எனக் கருதி பயனுள்ளவாறு பயன்படுத்துவார்.<br><br>• நீரின் தன்மை மற்றும் பொருள்கள் நீருடன் நடந்துகொள்ளும் விதம் ஆகியன தொடர்பாக கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br><br>• நீரை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்வார்.<br><br>• நீரைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான விளையாட்டுகளில் ஈடுபடுவார்.<br><br>• நீரைக் கருப்பொருளாகக் கொண்ட களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • நாளாந்த நடவடிக்கைகளுக்காக நீர் பயனளிக்கும் வழிகள்<br><br>• நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்<br><br>• நீரின் வடிவமும் தன்மையும் வேறுபடும் சந்தர்ப்பங்கள்<br><br>• வெவ்வேறு பொருள்கள் நீருடனான இடைத்தொழிற்பாடுகள்<br><br>• வெவ்வேறு பொருள்கள் நீருடன் செயற்படும் விதம்<br><br>• வெவ்வேறு ஆக்கங்களுக்காக நிறமூட்டிய நீரைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய கோலங்கள்<br><br>• நீரைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய ஆக்க விளையாட்டுக்கள்<br><br>• நீரைப் பயன்படுத்தி வெவ்வேறு ஒலிகளை / நாதங்களை உற்பத்தி செய்யக்கூடிய வழிகள் |
| **5.** புத்தாண்டுக் காலம் | • புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>• புத்தாண்டுப் வழக்காறுகளின் (பாரம்பரியங்கள்) முக்கியத்து வத்தை மதித்துச் செயற்படுவார்.<br><br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் இடம்பெறும் நடவடிக்கைகள் காரணமாக நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற | • பண்டிகைக் காலங்களில் சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள்<br><br>• புத்தாண்டுப் பண்டிகைப் பாரம்பரியங்களை இனங்காணலும் பின்பற்றலும்<br><br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலம் தொடர்பான சித்திரங்கள் / சுவரொட்டிகள் ஆக்குதல்<br><br>• புத்தாண்டு விழாக்களின்போது செய்யத்தக்க களிப்பூட்டும் விளையாட்டுக்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | ஆவன செய்வார்.<br><br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் அழகை வெளிப்படுத்தும் பல்வேறு ஆக்கங்கள் செய்து களிப்புறுவார்.<br><br>• வெவ்வேறு இன மக்களின் புத்தாண்டுப் பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பார்.<br><br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துடன் தொடர்புடைய விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.<br><br>• பண்டிகைக் காலத்திற்கான சிறப்பான / குறிப்பான களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • புத்தாண்டுப் பண்டிகைக் காலத்திற்கென சிறப்பான (இலகுவான) நாட்டார் பாடல்கள், நடனங்கள் |
| **06.** நாம் காணும் வானம் | • வானத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>• சூரிய ஒளியினாலும் காற்றினாலும் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br><br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வானின் அழகையும் சூழல் மாற்றங்களையும் எடுத்துக் காட்டும் ஆக்கங்கள் செய்வார்.<br><br>• வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br><br>• வானத்தின் அழகை வெளிப்பாட்டு அசைவுகள் / இயக்கங்களின் மூலம் முன்வைத்துக் களிப்புறுவார். | • வான் பொருள்கள் தொடர்பான தகவல்கள்<br><br>• காற்றைப் பயன்படுத்தி, பொருள்களை வானில் மிதந்து செல்லச் செய்தல்<br><br>• சூரிய ஒளியின் காரணமாக சூழலில் நிகழும் மாற்றங்கள்<br><br>• நிழல் பெறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய இலகுவான ஆக்கங்கள்<br><br>• கிடையான வெளியைப் பயன்படுத்தி ஓடுதல் சார்ந்த சிறு விளையாட்டுக்கள்<br><br>• வானில் காணப்படுவன தொடர்பாக கவிதைகள், பாடல்களைப் பாடுதலும் நடனமாடுதலும் / நடித்தலும் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **7.** நாம் உண்பவையும் குடிப்பவையும் | • உணவு வகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.<br><br>• ஆரோக்கிய வாழ்வுக்காக சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பேணி வருவார்.<br><br>• உணவு அசுத்தமடையும் வழிகளை இனங்கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவன செய்வார்.<br><br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உணவு தொடர்பான ஆக்கங்கள் செய்வார்.<br><br>• சக்தி விருத்திக்கு உதவும் இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• உணவு உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய சரியான ஒழுங்குமுறையைக் காட்டும் ஆக்க நடனங்களில் / நடிப்புகளில் ஈடுபடுவார். | • உணவின் மூலம் எமது உடலுக்குக் கிடைக்கும் பயன்கள்<br><br>• வேளை உணவொன்றில் அடங்கியிருக்க வேண்டியவை<br><br>• உரிய நேரத்தில் குறித்த அளவு உணவு மற்றும் பானங்களை உட்கொள்ளல்<br><br>• ஆரோக்கிய வாழ்வுக்கு உதவும் சுகாதாரப் பழக்கங்கள்<br><br>• இயற்கையான (இயல்பான) உணவு உட்கொள்வதன் முக்கியத்துவம்<br><br>• உணவு அசுத்தமடையும் வழிகள்<br><br>• உணவு அசுத்தமடைவதைத் தவிர்க்கும் வழிகள்<br><br>• உணவு மற்றும் பானங்களை மனங் கவர்ந்த வகையில் பரிமாறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்<br><br>• சக்தி வளர்ச்சிக்குத் துணையாகும் களிப்பூட்டும் விளையாட்டுக்கள்<br><br>• உணவுடன் தொடர்புடைய சுகாதாரப் பழக்கங்களை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான நடனங்கள் / நடிப்புகள் |
| **8.** தகவல்கள் கிடைக்கும் வழிகள் | • தொடர்பாடலில் பயன்படும் வெவ்வேறு ஊடகங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.<br><br>• தொடர்பாடலுடன் இணைந்த தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.<br><br>• தகவல் தொடர்பாடலுடன் தொடர்புடைய பல்வேறு ஆக்கங்கள் செய்வார். | • எமக்குத் தகவல்கள் கிடைக்கும் ஊடகங்களும் உபகரணங்களும்<br><br>• தொடர்பாடலுக்காகப் பயன்படும் பல்வேறு தொழினுட்ப சாதனங்களைப் பயன்படுத்தல்<br><br>• தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் உபகரணங்களின் மாதிரியுருக்களைச் செய்தல்<br><br>• வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு அமைவாகச் செய்யப்படும் இயக்க / |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு துலங்கல் / எதிர்வினை காட்டியவாறு இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வெவ்வேறு தொடர்பாடல் வழிகளைப் பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டு இயக்கங்கள் / அசைவுகளை உள்ளடக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவார். | அசைவுச் செயற்பாடுகள்<br>• தொடர்பாடலின்போது குரலையும் மெய்ந்நிலைகளையும் கையாளும் வெவ்வேறு விதங்கள் |
| **9.** சுற்றுப் புறத்தில் நிகழும் மாற்றங்கள் | • சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களையும் அவை தொடர்பாக பிராணிகள் காட்டும் எதிர்வினைகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.<br>• சுற்றுப்புறத்தில் நிகழும் வெவ்வேறு மாற்றங்களின் போது பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்வார்.<br>• சுற்றுப்புறச் சூழ்நிலையில் நிகழும் மாற்றங்கள் மூலம் அசைவு / இயக்கத் தேடல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வெளியைப் பயன்படுத்தி களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • வெயில், மழை, காற்று ஆகியன தொடர்பாக சூழலில் நிகழும் மாற்றங்கள்<br>• சூழலில் ஏற்படும் மாற்றங்களின்போது பிராணிகள் காட்டும் எதிர்வினைகள்<br>• இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படத்தக்க நிலைமைகள்<br>• சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களைக் காட்டும் சித்திரங்கள்<br>• சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களின்போது பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்<br>• சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களின் மூலம் செய்யக்கூடிய சுதந்திரமான இயக்க / அசைவுச் செயற்பாடுகள்<br>• அழகியல் திறன்களின் வளர்ச்சிக்குரிய சுவாசச் செயற்பாடுகள் |
| | • நற்பண்புகளை மதித்து அக்குணாதிசயங்களைப் பேணிவர ஆவன செய்வார்.<br>• பொறுப்புக்களை நிறைவேற்றி, பொதுக் கருமங்களுக்குப் பங்களிப்புச் செய்வார். | • ஏனையோருக்கு மதிப்பளித்தல்<br>• ஏனையோருக்கு இடையூறு ஏற்படாதவாறு செயற்படல்<br>• ஏனையோரின் பண்புகளை மதித்தல் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **10.** எமது நல்வாழ்வு | • சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்டதிட்டங்களை மதித்துச் செயற்படுவார்.<br><br>• நற்பழக்கங்களைப் பேணிவர உதவும் ஆக்கங்கள் செய்வார்.<br><br>• உடல், உள தகைமையைப் பேணிவரத் துணையாகும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• களிப்பூட்டும் அணுகுமுறைகளைக் கையாண்டு நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார். | • நாளாந்த நடவடிக்கைகளின் போது தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படல்<br><br>• நாளாந்த நடவடிக்கைகளின் போது சட்டத்தை மதித்து நடந்துகொள்ளல்<br><br>• நற்பழக்கங்களை வெளிப்படுத்தும் செய்திகளைக் கொண்ட சித்திரங்கள் / சுவரொட்டிகள் ஆக்குதல்<br><br>• சோடி சோடியாகப் பங்கு கொண்டு வெற்றிபெறத்தக்க செயற்பாடுகள்<br><br>• நற்பழக்கங்கள் தொடர்பாகக் கூறும் கதைகள், பாடல்களைப் பாடுதலும் நடனமாடுதலும் / நடித்தலும் |
| **11.** எனக்குத் தேவை யானவை கிடைக்கும் வழிகள் | • தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br><br>• சந்தை ஒன்றின் தன்மையையும் தொழிற்பாட்டையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br><br>• தமக்குக் கிடைப்பவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும்<br><br>நற்பழக்கங்களைப் பேணிச் கொள்ளச் செயற்படுவார்.<br><br>• எமக்குத் தேவையானவற்றுள் சிலவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.<br><br>• நாளாந்தம் எதிர்ப்படும் பொருள்களைக் கொண்டு பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.<br><br>• உடல் தகைமை வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • எமது தேவைகளைப் பெறுவதற்காக வீட்டிலும் பாடசாலையிலும் வெவ்வேறு ஆட்கள் மூலம் கிடைக்கும் உதவிகளும் அவர்கள் செய்யும் சேவைகளும்<br><br>• சந்தை தொடர்பான நேரடி அனுபவங்கள்<br><br>• தமக்குக் கிடைப்பவற்றைப் பகிர்ந்து பரிமாறிக்கொள்வதன் முக்கியத்துவமும் அப்பழக்கத்தைப் பேணி வருதலும்<br><br>• தம்மிடமுள்ளவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்<br><br>• நாளாந்தம் உணவுக்காகப் பயன்படும் பயிர் வகைகளை இயன்ற அளவுக்கு வீட்டுத் தோட்டத்தில் செய்கை பண்ணுவதில் பங்களிப்புச் செய்தல்<br><br>• வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி நிறங்களைத் தயாரித்து அதன் மூலம் செய்யத்தக்க வடிவமைப்புகள் (Designs) |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • எமக்குத் தேவையான பொருள்கள் கிடைக்கும் இடங்களில் ஆற்றப்படும் கருமங்களை களிப்புடன் முன்வைப்பார். | • பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உடலின் நெகிழ்தன்மை வளர்ச்சிக்கு உதவும் இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br>• எமக்குத் தேவையானவை கிடைக்கும் இடங்களில் மேற்கொள்ளப்படும் கருமங்கள் தொடர்பான சிறிய கவிதைகள், பாடல்கள், நடனங்கள் |
| **12.** பிரயாணம் | • பிரயாணத்தின்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்.<br>• பொதுப் பிரயாண சேவைகள் தொடர்பாக அறிவூட்டம் பெற்று அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.<br>• பிரயாணங்களின்போது இடம்பெறக்கூடிய விபத்துக்கள் / தடங்கல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• பிரயாணங்களின்போது பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படுவார்.<br>• பிரயாண முறைகளை வெவ்வேறு ஊடகங்கள் மூலம் ஆக்குவார்.<br>• பிரயாணஞ் செய்தல் தொடர்பாக இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வெவ்வேறு பயணப் பாங்குகள் மூலம் ஆக்கபூர்வமான நடனம் / நடிப்புகளை முன்வைப்பார். | • நடக்கும்போதும் நிற்கும்போதும் அமரும்போதும் பின்பற்ற வேண்டிய சரியான மெய்ந்நிலைகள்<br>• நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றில் பயணஞ் செய்வதற்காகப் பயன்படுத்தும் வாகனங்கள் / சாதனங்கள்<br>• நடந்து செல்லும்போது எதிர்ப்படக்கூடிய தடைகளும் விபத்துக்களும் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுதலும்<br>• பயணங்களின்போது ஏனையோருக்கு உதவி புரிதலும் ஏனையவர்கள் செய்யும் உதவிகளை மதித்தலும்<br>• பிரயாணத்திற்காகப் பயன்படுத்தும் முறைகளை எடுத்துக்காட்டும் சித்திரங்கள், மாதிரியுருக்கள் ஆக்குதல்<br>• நடக்கும்போது சமநிலையைப் பேணுவதற்குரிய முதன்மையான பழக்கங்கள்<br>• வெவ்வேறு பயணப் பாங்குகளின் சந்தங்கள் / அசைவுகளைப் போலச் செய்தல் |
| **13.** ஒளியுடன் / வெளிச்சத் துடன் விளையாட்டு | • ஒளி முதல்களையும் ஒளிக்கும் - கண்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் கற்றாய்வார். | • யாதேனுமொன்றைப் பார்ப்பதற்கு ஒளியும் கண்ணின் பார்க்கும் திறனும் சமமான முக்கியத்துவம் உடையவை |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • கண்ணின் பாதுகாப்பு தொடர்பாக கவனஞ் செலுத்தி நாளாந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• இயற்கையான ஒளி வேறுபாடுகளின்படி சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் ஒளியை மாற்றத்தக்க வழிகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>• அழகுபடுத்துவதற்காக ஒளி யைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.<br><br>• இயற்கையான ஒளி தொடர்பாகக் கவனஞ் செலுத்தி பயனுள்ள வகையில் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br><br>• ஒளியைக்கொண்டு செய்யக் கூடிய, அபிநயங்கள் சார்ந்த களிப்பூட்டும் வெளிப்பாடுகளை முன்வைபபார். | • கண்ணின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்த வேண்டியவை<br><br>• ஒளிப் பரம்பலை அதிகரித்தல், குறைத்தல், ஒளியின் திசையை மாற்றுதல் ஆகியவற்றைச் செய்யக்கூடிய வழிகள்<br><br>• பல்வேறு ஆக்கங்களுக்கு அழகூட்டுவதற்காக ஒளியைப் பயன்படுத்துதல்<br><br>• நிழல் மிதித்தல் சார்ந்த விளையாட்டுக்கள்<br><br>• நிழல்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய அங்க அசைவுகள் |
| **14.** மனிதர் வேலை செய்யும் இடங்கள் | • சுற்றுப்புறச் சூழலில் மனிதன் சீவனோபாயத்திற்காக வேலை செய்யும் இடங்களையும் அவ்விடங்களில் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br><br>• பல்வேறு கருமங்களின்போது பயன்படுத்தும் ஆடையணிகள், உபகரணங்களை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br><br>• மனிதர் வேலை செய்யும் இடங்கள் சார்ந்த அசைவு களைப் போலச் செய்தல், சமநிலையைப் பேணுவதற்கான இயக்க / அசைவுச் | • சுற்றுப்புறச் சூழலில் மனிதர் சீவனோபாயத்திற்காக வேலை செய்யும் இடங்கள்<br><br>• வெவ்வேறுபட்ட வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்,<br><br>கருவிகள், ஆடையணிகள் தொடர்பான தகவல்கள்<br>• சமநிலையைப் பேணுவது தொடர்பான இயக்க / அசைவுச் செயற்பாடுகள்<br><br>• வேலை செய்யும் இடங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தும் வகையிலான சுவரொட்டிகள், சித்திரங்கள்<br><br>• வெவ்வேறு வேலைகளைச் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வேலை செய்யும் இடங்கள், அந்த இடங்களில் பயன்படுத் தப்படும் பாவனைப் பொருள்கள், உபகரணங்கள் தொடர்பாக ஆக்கங்கள் செய்வார்.<br>• மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களை களிப்புடன் வெளிப்படுத்துவார். | செய்யும்போது இடையிடையே பாடும் கவிதைகள், பாடல்கள் (இலகுவான)<br>• வெவ்வேறு இடங்களில் வேலை செய்யும் மனிதர்களின் அசைவுகளைப் போலச் செய்தல் தொடர்பான செயற்பாடுகள் |
| **15.** சுற்றுப் புறத்தில் வெவ்வேறு பட்ட இடங்கள் | • சூழலின் பல்வகைமைப்படி தாவரங் கள் (நாற்றுகள்,பூண்டுகள்) வளரும் விதத்தையும் உயிரினங்களின் செயற்பாடுகளையும் அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.<br>• சூழலில் வெவ்வேறு இடங்களில் மனிதர்களால் செய்யப்படும் மாற்றங்களை இனங்கண்டு அந்த இடங்களை சிறந்த இடங்களாக மாற்ற ஆவன செய்வார்.<br>• சூழலின் பல்வகைமைக்குப் பொருத்தமான ஆக்கங்கள் செய்து சூழலின் அழகைக் காப்பார்.<br>• பாடசாலைச் சூழலில் வெவ்வேறு தன்மையுடைய இடங்களில் அடிப்படையான உடல் தகைமை வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• சுற்றுப்புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்களில் காணப்படும் பல்வகைமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்திற்கு இசைவான அசைவுகளைக் களிப்புடன் முன்வைப்பார்.<br>• சமூகத்தில் உதவி தேவைப்படுவோரை இனங்கண்டு உதவி செய்ய ஆவன செய்வார்.<br>• வெற்றி பெறுவதற்காக ஒத்துழைத்துச் செயற்படுவார் | • சுற்றுப்புறச் சூழலின் பல்வகைமை தொடர்பான தகவல்கள்<br>• சுற்றுப்புறச் சூழலில் பல்வகைமையுள்ள சில இடங்களில் தாவரங்கள் வளரும் விதம் மற்றும் அவற்றில் வளரும் பிராணிகள் பற்றிய தகவல்கள்<br>• சுற்றுப்புறச் சூழலின் அழகைப் பேணுவதன் அவசியம்<br>• மனிதனின் தலையீட்டின் மூலம் சுற்றுப்புறச் சூழலை அழகான ஓர் இடமாக மாற்றத் தக்க வழிகள்<br>• சுற்றுப்புறச் சூழலிலிருந்து பெறும் பல்வேறு பொருள்களைக் கொண்டு செய்யத்தக்க ஆக்கங்கள்<br>• தடங்கல்கள் உள்ள ஒரு சூழலில் நடத்தல், ஓடுதல் சார்ந்த செயற்பாடுகள்<br>• சூழலில் கேட்கும் ஒலிகள், நாதங்களும், சூழலில் காணும் அசைவுகளும் / இயக்கங்களும்<br>• பாடசாலையிலும் வீட்டிலும் ஏனையோருக்குச் செய்யக்கூடிய உதவிகள்<br>• விசேட தேவையுள்ளோர் தொடர்பாக உணர்தன்மையைக் காட்டுதல் அவசியம் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| **16.** எமது உதவி தேவைப் படுவோர் | • ஏனையோருக்கு உதவும் வகையிலான ஆக்கங்கள் செய்வார்.<br><br>• பரஸ்பரம் ஒத்துழைப்பு வளர்வதற்காக இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• சமூகத்தின் வெவ்வேறு மனிதர்கள் தொடர்பான உணர் தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களில் ஈடுபடுவார். | • ஏனையோரின் உதவிகளைப் பெறும்போது மரியாதையாக நடந்துகொள்ளல்<br><br>• ஏனையோருக்கு உதவியாக அமையும் ஆக்கங்கள்<br><br>• ஒத்துழைத்து விளையாடக்கூடிய கூட்டான விளையாட்டுக்கள்<br><br>• எமது உதவி தேவைப்படும் வெவ்வேறு மனிதர்கள் / பாத்தி ரங்கள் தொடர்பான உணர்வு பூர்வமான நடிப்பு / நடனங்கள் |

## 01 கருப்பொருள் : நாமும் பாடசாலையும்

**தேர்ச்சிகள் :**

- பாடசாலையில் காணப்படும் குறிப்பான, முக்கியமான இடங்களை இனங்கண்டு அப்பல்வகைமைக்கு இணைவாகச் செயற்படுவார்.
- பாடசாலையின் கருமங்களில் பங்களிப்புச் செய்து பாடசாலையின் பண்பாட்டை நன்கு நடத்திச் செல்வதற்காகச் செயற்படுவார்.
- பாடசாலையில் இருக்கும் பல்வேறு ஆட்களின் வகிபாகங்களை இனங்கண்டு அவர்களின்பால் உணர்தன்மையுடன் செயற்படுவார்.
- வகுப்பறையை அழகாகப் பேணிவருவதற்காக வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் புரிவார்.
- உபகரணங்களைப் பயன்படுத்தி இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பாடசாலையின் பெறுமானத்தை மேம்படுத்திக் காட்டுவதற்காக களிப்பூட்டும் அணுகுமுறைகளைப் பயன்படுத்துவார்.

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையில் உள்ள குறிப்பான, முக்கியமான இடங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார் / பதிவு செய்வார்.
- பாடசாலை நிலத்தின் வேறுபாடுகள் குறித்து கவனஞ் செலுத்தி பாதுகாப்பாக நடந்து கொள்வார்.
- வகுப்பறையை அழகாகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணிவருவதில் பங்களிப்புச் செய்வார்.
- வகுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களுக்கும் / வழக்காறுகளுக்கும் இசைவடைந்து செயற்படுவார்.
- பாடசாலையில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களின்படி செயற்படுவார்.
- பாடசாலைக் கீதத்திற்கு மதிப்பளித்துச் சரியாகப் பாடுவார்.
- பாடசாலைக் கொடிக்கு மதிப்பளித்துச் செயற்படுவார்.
- பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு தனியாட்கள் மற்றும் அவர்களது வகிபாகங்களை விவரிப்பார்.
- வகுப்பறையை அழகுபடுத்துவதற்காக பொருத்தமான ஆக்கங்கள் செய்வார்.
- விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி இயக்க / அசைவுச் செயற்பாடுகள் மூலம் அசைவு இசைவாக்கத்தை வளர்த்துக் கொள்வார்.
- பாடசாலை தொடர்பாக / பாடசாலையின் வெவ்வேறு வகிபாகங்கள் தொடர்பாகக் கூறும் கதைகள், படங்களைப் பாடியவாறு நடனங்கள்/ நடிப்புகளை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- பிள்ளையை இனங்காணல்' வேலைத்திட்டத்தின் பின்னர், பாடசாலை தொடர்பாக மாணவரது மனதில் தோன்றியவை, பாடசாலையில் கண்டவை, பாடசாலையில் விளையாடிய விளையாட்டுக்கள் போன்றவை தொடர்பாக மாணவருடன் நட்புடன் உரையாடுக.
- பாடசாலை தொடர்பாக மாணவரின் அனுபவங்களை மேலும் வளர்ப்பதற்காகவும் பாடசாலையில் உள்ள முக்கியமான மற்றும் சிறப்பான இடங்களை இனங்காண்பதற்காகவும் மாணவரிடம் பாடசாலையில் அவதானிப்புச் சுற்றுலாவொன்றினை ஒழுங்குசெய்க.
- மாணவருடன் பின்வரும் இடங்களை அவதானிக்குக.
  - * அதிபர் அலுவலகம் / ஆரம்பப் பிரிவுத் தலைவர் அலுவலகம்
  - * ஆசிரியர் ஓய்வு அறை
  - * சிற்றுண்டிச்சாலை
  - * நீர் வசதி வழங்கும் இடம்
  - * விளையாட்டுத் திடல் / விளையாட்டு முற்றம்
  - * மலசலகூடம் அமைந்துள்ள இடம்
  - * மனையியற்கூடம்

* வேறு முக்கியமான இடங்கள்
* சமயக் கிரிகை நிறைவேற்றும் இடம்

மேற்படி ஒவ்வோர் இடத்தினதும்

- முக்கியத்துவம்
- அந்தந்த இடத்தில் செயற்பட வேண்டிய விதம்
- அந்தந்த இடத்தைப் பாதுகாப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் நாம் செய்யத்தக்கவை
- பாடசாலை வளவில் பாதுகாப்பற்ற இடங்கள் உள்ளனவாயின் அவ்விடங்களில் நடந்துகொள்ள வேண்டிய விதம்

போன்ற விடயங்களை மாணவருடன் கலந்துரையாடுக.

- பின்னர், மேற்படி அவதானிப்பு மூலம் பெற்ற அனுபவங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- தாம் அவதானித்த ஓர் இடத்தைத் தெரிவுசெய்து அதனைச் சித்திரமாக வரைய மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துக. அவற்றை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 2**

- பாடசாலைத் தோட்டத்தில் / வளவில் வேறுபாடுகளை அவதானிப்பதற்காக மாணவருடன் சுற்றுலா செல்க.
- அவதானிப்புச் சுற்றுலாவின்போது பின்வரும் விடயங்கள் குறித்து மாணவரது கவனத்தை வழிப்படுத்துக.
  * பாடசாலையின் அந்தந்த இடத்திற்குச் செல்லத்தக்க வழிகள்
  * அவ்வழிகள் / பாதைகளில் காணப்படும் பாதுகாப்பற்ற இடங்கள், அவ்விடங்கள் பாதுகாப்பற்றவையாக இருப்பதற்கான காரணங்கள் (பிராணிகள் காரணமாக ஏற்படக்கூடிய விபத்துக்கள், நிலத்தோற்றத்தின் தன்மை)
  * பாடசாலை நிலத்தோற்றத்தில் காணப்படும் வேறுபாடுகள் (வடிகான்கள், நீர்க் குட்டைகள், சாய்வான இடங்கள், இருண்ட இடங்கள், .... போன்றவை)
  * மாணவர் விளையாடத்தக்க இடங்கள்
- இவ்வாறாக அந்தந்த இடத்தின் தன்மைக்கேற்பச் செயற்படக்கூடிய விதத்தை மாணவருடன் உரையாடுக.
- பாடசாலை வளவில் தமது மனங் கவர்ந்த ஓர் இடத்தை சித்திரமாக வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்தி மதிப்பிடுக.

**செயற்பாடு : 3**

- வகுப்பறையிலும் பாடசாலையிலும் காணப்படும் சட்டதிட்டங்கள், வழக்காறுகள் குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க. அது தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் :
  * சமயக் கிரியைகளில் ஈடுபடும்போது செயற்பட வேண்டிய விதம்
  * மணியடித்தலுக்கு அமைய செயற்பட வேண்டிய விதம்
  * உணவு உட்கொள்ளும்போது கையாளும் பழக்கவழக்கங்கள்
  * வகுப்பறையை / வகுப்பறைச் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய விதம்
- மேற்படி செயல்களைச் செய்ய வேண்டிய விதம் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- அப்பழக்க வழக்கங்களையும் சட்டதிட்டங்களையும் தொடர்ந்தும் பேணி வர மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 4**

- வகுப்பறை நேர்த்தியின்றியும் அசுத்தமாகவும் இருப்பின் ஏற்படத்தக்க பாதகமான நிலைமைகள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் :
  * கற்றல் சூழல் மனங்கவரத்தக்கதாக அமையாமை வகுப்பறை தொடர்பான மறையான மனப்பாங்குகளைத் தோற்றுவித்தல்

* நோய்கள் ஏற்படும் ஆபத்துக் காணப்படுதல்

- பின்னர், தமது வகுப்பறையை நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அழகாகவும் பேணிவருவதற்காகச் செய்யத்தக்கவை குறித்து மாணவருடன் கலந்துரையாடி அதற்காகச் செய்யத்தக்க மாற்றங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் : * ஆசிரியரின் மேசைக்கு மேசை விரிப்பு இடுதல்
  * பூச்செண்டு, சுவரலங்காரம், பொன்மொழி அட்டைகள், கொடி அலங்காரங்கள் போன்றவற்றைத் தயாரித்தல்
  * தேவையற்றவற்றை அப்புறப்படுத்துதல் (குப்பைகூளங்கள்)
  * அசுத்தமாகியுள்ள பொருள்களைச் சுத்திகரித்தலும் வர்ணப்பூச்சு பூசுதலும்
- மேற்படி விடயங்களில் வலியுறுத்தப்படுபவற்றை வாழ்க்கைப் பழக்கங்களாக்கிக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வகுப்பை அழகுபடுத்துவதற்காகவும் சுத்தமாகப் பராமரிப்பதற்காகவும் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய ஆக்கச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 5**

- பாடசாலைக் கொடியை வகுப்பிற்குத் தருவித்துக் கொள்க.
- அதனை கவனமாக அவதானிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம் : வடிவம், நிறம், குறியீடுகள் போன்றவை
- அந்தந்தப் பாடசாலைக்கென பாடசாலைக் கொடி உண்டு என்பதையும் அதற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- பாடசாலைக் கொடி ஏற்றி வைக்கப்படும் சந்தர்ப்பங்களையும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதத்தையும் வலியுறுத்துக.
- பாடசாலைக் கீதத்தை இறுவட்டு / ஒலிப்பேழை / ஒலி - ஒளிப் பேழை ஒன்றின் துணையுடன் செவிமடுக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பாடசாலைக் கீதத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய விதத்தையும் அதனைச் சரியாகப் பாடும் விதத்தையும் மாணவர்க்கு விளக்குக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்க. அவ்விடத்தில் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்து, சரியான மெய்ந்நிலையில் நின்று பாடசாலைக் கீதத்தைப் பாடியவாறு அதற்கு மதிப்பளிக்கும் விதத்தைச் செய்து காட்டுக.
- இவ்வாறாகப் பாடசாலைக் கீதத்தைப் பாடுவதற்கு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 6**

- பாடசாலையில் வெவ்வேறு பணிகளை / பொறுப்புக்களை நிறைவேற்றுவோர் யார் என இனங் காண்க.

  உதாரணம் : * அதிபர்
  * பிரதி அதிபர்
  * பிரிவுத் தலைவர்
  * ஆசிரியர்கள்
  * மாணவர் தலைவர்கள்
  * அலுவலக உதவியாளர்கள் / ஊழியர்கள் .... போன்றோர்
- உங்களது பாடசாலையில் மேற்படி ஆட்கள் சிலர் செய்யும் வேலைகளை இனங் காண்பதற்காக மாணவருடன் நேரடியாக அவர்களைச் சந்திக்க வகைசெய்க.
- அங்கு அவர்கள் நாளாந்தம் செய்யும் வேலைகள் மற்றும் அவர்களின் பொறுப்புக்கள், அவற்றின் மூலம் பாடசாலைக்குக் கிடைக்கும் சேவைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- இவர்கள் அனைவரும் பாடசாலைக்கென பல்வேறு வேலைகளைச் செய்பவர்கள் என்பதையும் நாம் அவர்களது சேவையை மதித்துச் செயற்படுவது அவசியம் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 7**


- விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி, நரம்பு - தசை இயைபாக்கத்திற்கேற்ப இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரை விளையாட்டு முற்றத்திற்கு அழைத்துச் செல்க.
- அங்கு உள்ள ஊஞ்சல், நிறுத்தாடும் வளை, சமநிலைக் கோல், ஏணிச் சட்டகம் போன்ற உபகரணங்களையும் அவற்றின் தொழிற்பாட்டையும் விளக்குக.
- விளையாட்டு முற்றத்தினைப் பயன்படுத்தும்போது நிகழத்தக்க விபத்துக்கள் குறித்துக் கலந்துரையாடுக. அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் விதம் பற்றி மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து விளையாட்டு முற்றத்தில் உள்ள எல்லா உபகரணங்களிலும் செயற்பாடுகளில் ஈடுபட அந்தந்த இடத்தின்பால் வழிப்படுத்துக.
- குழுக்களை இடமாற்றியவாறு ஒவ்வோர் உபகரணத்திலும் ஒவ்வொருவரும் அனுபவங்களைப் பெறச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 8**

- பாடசாலை தொடர்பாகவும் பாடசாலையின் வெவ்வேறு வகிபாகங்கள் தொடர்பாகவும் கூறும் பாடல்களைத் திரட்டி வருமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் திரட்டிய பாடல்களிலிருந்து தெரிவுசெய்த பொருத்தமான சில பாடல்கள் / கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடி ஆடச் சந்தர்ப்பமளிக்குக.
- தேவைக்கேற்ப வாத்தியக் கருவிகள் / புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.

**செயற்பாடு : 9**

- பாடசாலை வளவில் இட வசதியுள்ள ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க.
- ஒரு குறித்த எல்லையினுள் சுயாதீனமாக இருக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரைப் பின்வரும் சுயாதீனமான செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இச்செயற்பாட்டிற்காகச் சற்றுப் பெரிய இலேசான றப்பர்ப் பந்துகளைப் பயன்படுத்துக.
- கைகளையும் கால்களையும் பயன்படுத்தி (எறிந்தும் உதைத்தும் உருட்டியும்) தமக்கிடையே பந்தைச் செலுத்தியவாறு சுயாதீனமாக விளையாட்டில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- தொடர்ந்தும் சில நாட்களுக்கு இவ்விளையாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.



## 02 கருப்பொருள் : எமது வீடு

**தேர்ச்சிகள் :**
- வீட்டில் உள்ளோர், வீட்டுடன் தொடர்புடையோர், வீட்டில் உள்ள பிராணிகளின்பால் நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.
- தமது கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றி, வீட்டைச் சீராக நடத்திச் செல்லப் பங்களிப்புச் செய்வார்.
- நாளாந்தம் வீட்டில் பயன்படுத்தக் கூடியவற்றை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வார்.
- வீட்டின் அழகையும் சுற்றத்தையும் பேணிவருவதற்காக பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்து களிப்புறுவார்.
- வீட்டுச் சூழலைத் துணையாகக் கொண்டு இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- வீட்டுச் சூழல் தொடர்பாகப் பெறும் அனுபவங்களைக் களிப்புடன் வெளிப் படுத்துவார்.

**கற்றற் பேறுகள்**
- வீட்டில் இருக்கும் உறுப்பினர்களுடன் இணக்கமாக, நட்புடன் செயற்பட்டு பரஸ்பரத் தொடர்பை / பிணைப்பை வளர்த்துக் கொள்வார்.
- வீட்டுக்கு வருவோர் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.
- வீட்டிலும் வீட்டை அண்டியும் வளர்க்கப்படும் பிராணிகள் தொடர்பாக உணர்தன்மையுடன் செயற்படுவார்.
- வீட்டின் மேம்பாட்டிற்காக இயன்ற வகையில் உதவி செய்வார்.
- வீட்டுச் சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணிவரப் பங்களிப்புச் செய்வார்.
- வீட்டின் அழகுக்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான ஆக்கங்கள் செய்வார்.
- வீட்டுச் சூழல் தொடர்பான இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வீடு மற்றும் வீட்டுச் சூழல் தொடர்பான பாடல்கள், கவிதைகளை நடனத்துடன் முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- பிள்ளையை இனங்காணல்' வேலைத்திட்டத்தின்போது பயன்படுத்திய "விளையாட்டு வீட்டை" (குச்சு வீடு / பொம்மை வீடு...) இக்கருப்பொருளுக்குரிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துக.
- வகுப்பு மாணவர் அனைவரும் "எமது வீட்டு" உறுப்பினர்களாக பாத்திரமேற்று அவ்வுறுப்பினர்களின் வேலைகளைப் போலச் செய்யுமாறு விளையாட்டு வீடுகளில் சுயாதீனமாகச் செயற்படச் சந்தர்ப்பமளிக்குக.
- விளையாட்டு வீடுகளில் விளையாடிய பின்னர், மாணவர் தமது வீடு தொடர்பான தகவல்களைச் சுயாதீனமாக உரையாடச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம் : * இருக்கும் உறுப்பினர்கள்
  * அவர்கள் வீட்டில் செய்யும் வேலைகள் போன்றவை
- இந்த உரையாடலின்போது வீடு ஒரு களிப்பூட்டும் இடமாவதற்கு முக்கியத்துவம் பெறும் விடயங்கள் தொடர்பாக உரையாடுக.

  உதாரணம் : * பெற்றாருடனும் ஏனைய வளர்ந்தோருடனும் அன்புடன் உரையாடுதல்
  * மதிப்பளித்தல்
  * கரிசனை காட்டுதல்
- அதற்கமைய எமது வீடும் மகிழ்ச்சிகரமான ஒரு வீடாக மாறுவதற்காக இவ்வாறாகச் செயற்படுதல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 2**
- குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான உணர்தன்மையை வெளிப்படுத்தும் பாடல்கள், கவிதைகளை முன்வைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

உதாரணம் : **என் அம்மா**

அம்மா எந்தன் அம்மாவாம்
அன்பு காட்டும் அம்மாவாம்
கட்டி அணைக்கும் அம்மாவாம்
கருணை காட்டும் அம்மாவாம்

- அப்பாடல்கள் / கவிதைகளில் இடம்பெற்றுள்ள நல்ல பண்புகள், மனப்பாங்குகளை வெளிக்கொணர்ந்து மாணவருடன் உரையாடுக.
- குடும்ப உறுப்பினர்களைச் சித்திரமாக வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- வீட்டில், சமையலறையில் பயன்படுத்தும் பாவனைப் பொருட்களை இனங்கண்டு, அவற்றைப் பயன்படுத்தி கிராமிய நடனங்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம் : * செம்பு நடனம் * அரிவு வெட்டும் நடனம்
  * சுளகு நடனம் * கோலாட்டம்
- மாணவரது முன்வைப்புகளை மதித்துப் பராட்டுக.

**செயற்பாடு : 3**

- விளையாட்டுத் திடலிற்கு அல்லது இடவசதி உள்ள ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்துக.
- பின்னர், ஒவ்வொரு மாணவராக வட்டத்தினுள்ளே அழைத்து வீட்டில் வளர்ந்தோர் செய்வதும் தாம் மிக விரும்புவதுமான ஒரு வேலையை செய்துகாட்டச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம் : * முற்றத்தைக் கூட்டிப் பெருக்குதல்
  * தேங்காய் துருவுதல்
  * ................ போன்றவை
- அம்மாணவன் செய்து காட்டிய வேலை / செயல் யாது என அனுமானித்துக் கூறுவதற்கு வட்டத்தில் இருக்கும் மற்றைய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் வட்டத்தில் இருக்கும் ஏனைய மாணவர்க்கு தத்தமது வீட்டில் அவ்வேலை செய்யப்படும் விதத்தை வட்டத்தில் தாம் இருக்கும் இடத்திலேயே நின்றவாறு செய்துகாட்டச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக ஒவ்வொருவரும் வட்டத்தின் மத்திக்கு வந்து அவ்வாறான ஒரு செயலைச் செய்துகாட்ட வழிப்படுத்துக.

**செயற்பாடு : 4**

- வீட்டில் வேலைகளின்போது ஏனையோருக்கு உதவி செய்த மாணவர்கள் யார் என வினவுக. அவ்வாறான அனுபவங்கள் உள்ள மாணவர்க்கு அது குறித்துக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் அளிக்குக.
- வீட்டில் வெவ்வேறு வேலைகளின்போது மாணவர்கள் உதவி செய்யலாமா என வினவுக.
  * வீட்டில் பயன்படுத்திய பொருள்களை உரிய இடங்களில் வைத்தல்
  * கழிவுப் பொருள்களை உரியவாறு வெளியேற்றுதல்
  * பூம்பாத்திகளுக்கும் பூச்செடிகளுக்கும் நீர் ஊற்றுதல்
  * தாம் உண்பதற்கும் பருகுவதற்கும் பயன்படுத்திய பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்து உரிய இடத்தில் வைத்தல்
  * தாம் பயன்படுத்தும் ஆடையணிகளை உரிய இடத்தில் ஒழுங்காக வைத்தல்
  * வீட்டைக் கூட்டிப்பெருக்கிச் சுத்திகரித்தல் .......... போன்றவை
- வீட்டில் வேலைகளைச் செய்வதற்கு பெற்றோர் / வளர்ந்தோர் அதிகம் பிரயத்தனப்படு கின்றமையால் அவர்களுக்கு அவ்வேலைகளின்போது இயன்ற அளவு உதவி புரிதல் வேண்டும் எனும் உணர்வு ஏற்படத்தக்க வகையில் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 5**

- வீட்டுக்கு வருகை தரும் உறவினர்கள், அன்பர்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களின் வழியே கலந்துரையாடுக.
    - * வீட்டிற்கு வரும் உறவினர், நண்பர்கள் யாவர்
    - * அவர்களை விளிக்கும் விதம்
    - * அவர்கள் எமது வீட்டிற்கு வந்து உதவி, உபகாரங்கள் செய்த சந்தர்ப்பங்கள் போன்ற விடயங்களை வெளிக்கொணர்ந்து உரையாடுக.
- அவ்வுறவினர்களை, அன்பர்களை, விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உரையாடி, இயன்ற அளவுக்கு உபசரித்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுக.
- மேலும் வீட்டிற்கு வருகை தருவோர் காரணமாக ஏற்படக்கூடிய பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் பற்றி மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- வீட்டிற்கு வருகை தரும் உறவினர்கள், அன்பர்களின்பால் நல்ல மனப்பாங்குடன் செயற்பட வேண்டிய விதம் குறித்து வகிபாகமேற்று நடித்தலில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது முன்வைப்புகளை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 6**

- தமது வீட்டிலும் வீட்டுச் சுற்றுச் சூழலிலும் காணப்படும் பிராணிகளின் படங்களைச் சேகரித்து வருமாறு மாணவர்க்கு அறிவுறுத்துக.
- அப்படங்களைத் துணையாகக் கொண்டு, பிராணிகள் தொடர்பான பின்வரும் விடயங்களை வெளிக்கொணரக்கூடியவாறு மாணவருடன் கலந்துரையாடுக.

    உதாரணம் : * வீட்டில் வளர்க்கும் பிராணிகளும் வீட்டுச் சுற்றுப்புறத்தில் சஞ்சரிக்கும் பிராணிகளும்
    * அப்பிராணிகளைக் குறிக்கும் செல்லப் பெயர்கள்
    * மனிதரை அண்டி வாழும் பிராணிகள்
- பிராணிகள் பண்டைக் காலம் முதலே மனிதருடன் நெருங்கிய நண்பர் போன்று வாழ்கின்றமையும் அப்பிராணிகளைக் கவனித்துக் கொள்வது மனிதரின் பொறுப்பாகும் என்பதையும் விளக்குக.
- பிராணிகளுக்கு உதவி புரிந்த சந்தர்ப்பங்களை முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பிராணிகள் மீது அன்பு, கருணை காட்டிய சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய கதைகளை வகுப்பில் முன்வைக்குக. அக்கதைகளின் வழியே பிராணிகள் தொடர்பான உணர்தன்மையுடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் அது எமது கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக் காட்டுக.

**செயற்பாடு : 7**

- வீட்டின் வடிவத்தைக் காட்டும் படம் வரையப்பட்ட ஓர் அட்டையை மாணவர்க்கு வழங்குக.
- நிறக் கடதாசித் துண்டுகளைப் பயன்படுத்தி ஒட்டுச் சித்திர (கொலாச்) ஆக்கங்களைச் செய்ய மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்தி மதிப்பிட்டுப் பாராட்டுக.

**செயற்பாடு : 8**

- வீட்டுடன் தொடர்புடையவாறு ஈடுபடத்தக்க விளையாட்டுக்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக. அவ்விளையாட்டுக்களில் மாணவரை குழு நிலையில் ஈடுபடுத்துக.

    உதாரணம் : * கட்டம் பாய்தல்
    * பந்தடித்தல்
    * ஓடிப் பிடித்து விளையாடுதல் போன்றவை.

## 03 கருப்பொருள் : தோட்டத்திற்கு வரும் பிராணிகள்

**தேர்ச்சிகள் :**
- அயற் சூழலில் வாழும் பிராணிகளுக்கு இடையே காணப்படும் பல்வகைமையைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகளும் சூழலின் ஒரு பகுதியே எனக் கருதி பிராணிகள் குறித்து உணர் தன்மையுடன் செயற்படுவார்.
- எமது அயற் சூழலில் வாழும் பிராணிகளின் நடத்தைகளைப் போலச் செய்து ஆக்கம் சார்ந்த இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் பல்வேறு இயல்புகளையும் நடத்தைகளையும் களிப்புடன் முன்வைப்பார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணிகளின் வாழிட மாதிரிகளை அமைப்பார்.

**கற்றற் பேறுகள் :**
- தமது சூழலில் காணப்படும் பிராணிகள் தொடர்பான தகவல்களை அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகளின் வெவ்வேறு இயல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.
- பிராணிகளின் வாழிடங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகள் தொடர்பான உணர்தன்மை யுடனான நடத்தைகளை வெளிக்காட்டுவார்.
- போலச் செய்தல் இயக்க / அசைவுச் செயற்பாடுகளைப் பயன்படுத்தி பிராணிகளின் வெவ்வேறு பயணப் பாங்கினை முன்வைப்பார்.
- பிராணிகளின் நடத்தலைப் போலச் செய்து நடத்தைகள் / நடிப்புகளை முன்வைப்பார்.
- பிராணிகள் தொடர்பான பாடல்கள் பாடுவார்.
- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சித்திரங்கள், பிராணி மாதிரியுருக்கள் அமைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- பாடசாலைத் தோட்டத்தில் அல்லது பொருத்தமான ஓர் இடத்தில் பிராணிகளை அவதானிப்பதற்காக மாணவருடன் சுற்றுலா செல்க.
- மிகக் கவனமாக, பிராணிகளை அவதானிப்பதற்காக மாணவரைக் குழுக்களாகப் பிரித்து வழிப்படுத்துக.
- அவதானிப்பின்போது பின்வரும் விடயங்கள் குறித்து மாணவரின் கவனத்தை ஈர்க்குக.

  உதாரணம் :
  * பிராணியின் பெயர்
  * பிராணியின் நிறம்
  * நடைப் பாங்கு / பயணப் பாங்கு
  * எழுப்பும் ஒலிகள் / நாதங்கள்
  * உணவு உட்கொள்ளும் விதம்
  * பிராணிகள் சஞ்சரிக்கும் இடங்கள்
- மாணவர் அப்பிராணிகளை அவதானிக்கும் வேளையில் சில பிராணிகளின் சிறப்பியல்புகளின்பால் கவனத்தை ஈர்க்குக.

  உதாரணம் :
  * சிறகுகள் உள்ளனவா? கால்கள் உள்ளனவா? எத்தனை கால்கள் உள்ளன?, நிறம் யாது?
  * குரலெழுப்பும் விதம் சமனானதா? வேறுபட்டதா?
  * அலகின் / வாயின் வடிவம் எவ்வாறானது?
  * ஒவ்வொரு வகைப் பறவையும் ஒரே விதமாகப் பறக்கின்றனவா?
  * வாலின் தன்மை எவ்வாறானது?
  * பிராணிகள் தனியே சஞ்சரிக்கின்றனவா? கூட்டமாகச் சஞ்சரிக்கின்றனவா?

- அவதானிப்புச் சுற்றுலாவின்போது தாம் கண்டவற்றை வெவ்வேறு வழிகளில் வகுப்பில் முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. (போலச் செய்தல் / வாய்மொழி மூலம்)
- தாம் விரும்பும் ஒரு பிராணியின் சித்திரம் வரைந்து வகுப்பில் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.
- பிராணிகள் தொடர்பாகக் கூறும் எளிமையான பாடல்கள் /கவிதைகளைப் பாடி, அப்பாடல்கள் / கவிதைகளுக்கு அமைய அங்க அசைவுகளைக் காட்ட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- பிராணிகளின் வாழிடங்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
- அவ்வுரையாடலின்போது வெவ்வேறு பிராணிகளின் வாழிடங்களைக் காட்டும் படங்கள், வீடியோ காட்சிகள் மற்றும் மாணவர்கள் வீட்டில் / வீட்டுத் தோட்டத்தில், சுற்றுப்புறத்தில் கண்டுள்ள வாழிடங்கள் தொடர்பான அனுபவங்களைத் துணையாகக் கொள்க.

  உதாரணம் : * குளவி, தேனி, அணில், கறையான், காகம், எறும்பு, செவ்வெறும்பு, தூக்கணாங்குருவி ........ போன்ற பிராணிகளின் வாழிடங்கள் (வடக்கு, கிழக்கு, மலைநாட்டுக்குப் பொருத்தமான உதாரணங்கள் தருக)
- மாணவரது அனுபவங்களை முன்வைக்குமாறு ஆர்வமூட்டுக.
- வசதி உள்ளதாயின் வளர்ந்தோரின் உதவியுடன் கைவிடப்பட்ட குருவிக் கூடு, தேன் வதை, அணில் கூடு போன்ற ஒன்றைப் பெற்று கவனமாக அவதானித்துப் பரிசீலிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- அவ்வாறு அவதானிக்கும்போது பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்த வழிப்படுத்துக.
  - * வாழிடத்தை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள்
  - * அவற்றின் வடிவம் யாது? அளவு யாது? அவை எவ்வாறு அடுக்கப்பட்டுள்ளன?
- அவதானித்த தகவல்களை முன்வைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 3**

- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- குழுக்களின் எண்ணிக்கையின்படி கை வில்லைகள், சிறிய தட்டுகள், சீனி ஆகியவற்றைப் பெறுக.
- தட்டுகளில் சிறிதளவு சீனி வீதம் இட்டு எறும்புகள் சஞ்சரிக்கத்தக்க இடங்களில் வைக்குக.
- சீனித் தட்டுகளுக்கு எறும்புகள் வரும்போது பின்வரும் விடயங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  முதலில் வெறுங் கண்ணாலும் பின்னர் கைவில்லையைப் பயன்படுத்தியும் பிராணிகளை அவதானிக்குமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குக.
  - * எறும்புகள் வரும் விதம்
  - * சீனி இடப்பட்டுள்ள அட்டையில் அவை நடந்துகொள்ளும் விதம்
  - * சீனிப் பளிங்குகளைக் கொண்டு செல்லும் விதம்
  - * இரண்டு எறும்புகள் சந்திக்கும்போது நடந்துகொள்ளும் விதம்
- மேற்படி அவதானிப்புகளைக் கொண்டு வெறுங் கண்ணால் அவதானித்துப் பெறுவதை விட, கூடுதலான அவதானிப்புகளை கைவில்லையைக் கொண்டு அவதானிப்பதன் மூலம் பெறலாம் என்பதை அனுபவமாகப் பெறச் சந்தர்ப்பமளிக்குக.
- பிராணிகளது பல்வேறு நடத்தைகள் தொடர்பாகக் கூறும் பாடல்கள் / கவிதைகளை மாணவருடன் சேர்ந்து கூட்டாகப் பாடுக.

  உதாரணம் :

**வண்டு**

வண்டு இங்கே பாரடா
மலரைத் தேடி வருதடா

உண்டு உண்டு தேனையே
ஒலிக்கும் பாட்டுக் கேளடா.

- அழ.வள்ளியப்பா

**செயற்பாடு : 4**

- பிராணிகளுக்கு உதவி புரிவதற்கு எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் : * உணவு கிடைக்காத சந்தர்ப்பம், நீர் கிடைக்காத சந்தர்ப்பம்
  * விபத்துக்கு ஆளாகியுள்ள சந்தர்ப்பம்
  * விடுபட முடியாதவாறு சிக்கியிருக்கும் சந்தர்ப்பம்
  * காயமடைந்துள்ள சந்தர்ப்பம், உடல் சார்ந்த அசௌகரியத்திற்கு ஆளாகியுள்ள சந்தர்ப்பம்
- இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிராணிகளுக்கு உதவி செய்ய முன்வருவதாயின் தமது பாதுகாப்புக் குறித்து கவனஞ் செலுத்துவதும் வளர்ந்தோரின் உதவியைப் பெறுவதும் அவசியம் என்பதை மாணவர்க்கு வலியுறுத்திக் குறிப்பிடுக.
- பிராணிகளைப் பராமரிப்பதும் அவற்றுக்கு உதவி புரிவதும் நாம் செய்ய வேண்டியவையாகும் என்பதை மாணவர்க்கு விளக்குக.
- அவ்வாறாகப் பிராணிகளுக்கு உதவி புரிந்த சந்தர்ப்பங்கள் தொடர்பான அனுபவங்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பிராணிகளும் எமது சூழலிலேயே வாழ்பவையாகையால் அவற்றுக்குத் தொந்தரவு செய்தலாகாது என்பதை எடுத்துக்கூறுக.


**செயற்பாடு : 5**

- பிராணிகளுக்கு அன்பு - கருணை காட்டும் சந்தர்ப்பங்கள் உள்ளடங்கிய நாட்டார் கதை, சமயக் கதை ஒன்றினைத் தேடி எடுத்து வந்து விரும்பியவாறு வகுப்பில் முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் தேடி எடுத்து வந்த கதைகளுள் ஒரு கதையைத் தெரிவுசெய்து, குழுவாகச் சேர்ந்து அக்கதையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டும் வகையில் முன்வைப்பு களைச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.
- பிராணிகள் தொடர்பாக உணர்தன்மை வெளிப்படத்தக்கவாறான பாடல்கள் / கவிதைகளை மாணவருடன் சேர்ந்து பாடுக.

**செயற்பாடு : 6**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்க.
- படத்தில் காட்டியுள்ளவாறு கோடுகள் வரைந்து எல்லைகளை அடையாளமிடுக.

உதாரணம் :




- அந்தந்தக் கோட்டின் எதிரே பிராணிகளின் பெயர் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளை வைக்குக.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்து படத்தில் காட்டியுள்ளவாறு இடப்படுத்துக.
- பெயர்ப் பலகையில் காட்டப்பட்டுள்ள பிராணிகளைப் போன்றே கோடுகளுக்கு இடையே

மாணவர்கள் செல்ல வேண்டும்.


- முதலாவது சமிக்ஞை வழங்கப்பட்டவுடன் பயணத்தைத் தொடங்கி அடுத்த கோட்டை வந்தடைதல் வேண்டும்.

  உதாரணம் : * முயல் வரிசையில் உள்ளோர் முயல் போன்று பாய்ந்து சென்று யானைகளின் கோட்டை அடைதல்

  * கிளிகள் பறந்து சுற்றிச் சென்று முயல்களின் வரிசையை அடைதல்
- இரண்டாவது சமிக்ஞை வழங்கப்பட்டவுடன் குறித்த கோடுகளுக்குரிய பெயர்ப் பலகையில் உள்ள பிராணியைப் போலச் செய்து அடுத்த கோட்டை வந்தடைதல் வேண்டும்.
- இவ்வாறாக மாணவர் ஒவ்வொருவருக்கும் மேற்படி சந்தர்ப்பங்களைப் போலச் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டை சில சுற்றுக்கள் வரை நடத்துக.

**செயற்பாடு : 7**

- ஈர்க்கு அல்லது தாங்கியாகப் பயன்படுத்துவதற்கேற்ற தடி / ஐஸ்கிறீம் காம்பு போன்றவற்றைப் பிராணி உருவங்களில் பொருத்தி பிராணிப் பொம்மைகளைத் தயார்படுத்திக் கொள்க.




- அப்பிராணிப் பொம்மைகளைப் பயன்படுத்தி உரையாடியவாறு களிப்பூட்டும் நடிப்புகளை / நடனங்களை முன்வைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- வானில் பறக்கும் சில பிராணிகளின் மாதிரியுருவங்களை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. இதற்காகத் தாவர இலைகள், கடதாசி போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
- அம்மாதிரி உருக்களைச் சற்று நீளமான தடிகளில் பொருத்தி கைகளில் தாங்கியவாறு செல்லுமாறு வழிப்படுத்துக. மாணவர்கள் மறைந்திருக்குமாறும் தடிகளில் பொருத்தியுள்ள பிராணி உருவங்கள் மாத்திரம் வெளியே தெரியும் வகையிலும் குறு மதிலொன்றுக்கு ஒரு திசைக்குப் பின்புறமாக நடந்து செல்ல மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அவ்வாறு செல்லும்போது பிராணிகள் எழுப்பும் ஒலிகளைப் போலச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 8**

- மாணவர்கள் தேடிப்பார்க்கத்தக்க சில பொருள்களைக் குறிப்பிட்டு அவற்றுள் தேடிப்பெற்ற சில பொருள்களைக் கொண்டு தாம் விரும்பிய ஒரு பிராணியின் உருவத்தை அமைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.
- அவ்வாக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

## 04 கருப்பொருள் : நீருடன் விளையாட்டு

**தேர்ச்சிகள்** :
- நீர் பெறுமதிமிக்கதொரு வளமாகும் எனக் கருதி பயனுள்ளவாறு பயன்படுத்துவார்.
- நீரின் தன்மை மற்றும் பொருள்கள் நீருடன் நடந்துகொள்ளும் விதம் ஆகியன தொடர்பாக கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- நீரை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்வார்.
- நீரைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
- நீரைக் கருப்பொருளாகக் கொண்ட களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :
- நாளாந்த நடவடிக்கைகளில் நீரின் மூலம் பெறும் பயன்களைக் கூறுவார்.
- நீர் இல்லையெனில் ஏற்படத்தக்க இடர்பாடுகளைக் கூறுவார்.
- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- பயன்படுத்தும் பாத்திரத்திற்கு அமைய நீரின் வடிவம் மாறக்கூடியது என தேடியறிவார்.
- நீர் வெவ்வேறு தன்மைகளில் வேறுபடும் விதத்தைச் சோதித்தறிவார்.
- வெவ்வேறு பொருள்களை நீரில் இடுவதால் நீரின் நிறம் வேறுபடும் விதத்தை விளக்குவார்.
- வெவ்வேறு பொருள்களை நீரில் இட்டு அவற்றை மிதப்பவை, அமிழ்பவை என வேறுபடுத்திக் காட்டுவார்.
- நிறமூட்டிய நீரைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- நீரைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நீரைப் பயன்படுத்தி வெவ்வேறு நாதங்கள் உற்பத்தி செய்யப்படும் விதத்தைக் கையாண்டு பார்ப்பார்.


**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- செய்தித்தாள்கள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள நீரின் பயன்களைக் காட்டும் படங்களைத் தேடிப் பெறுக. மாணவர் குழுக்களுக்கு அப்படங்களை வழங்குக.
- அப்படங்களைத் துணையாகக் கொண்டு, நாளாந்தம் செய்யும் பல்வேறு வேலைகளின்போது நீர் பயன்படும் விதத்தினைக் கலந்துரையாடுக.
- நீரினால் மனிதன் பெறும் பயன்களை உள்ளடக்கும் சித்திரங்களை வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக. தாம் வரைந்த சித்திரம் தொடர்பாக தமது குழுவில் ஏனையோருக்கு விவரித்துக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**
- நீர் இன்மையால் அல்லது நீர்த் தட்டுப்பாட்டினால் ஏற்படும் நிலைமைகளைக் காட்டும் படங்களின் பால் மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தாமை காரணமாக ஏற்படத்தக்க அனர்த்தங்கள் தொடர்பான கதைகளை மாணவர்க்குக் கூறுக.
- அவ்வாறான சிறிய கதைகளை நடித்துக் காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- நீரை ஏன் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என மாணவரிடம் வினவிக் கலந்துரையாடுக.
  உதாரணம் : * நீர் ஒரு வரையறுக்கப்பட்ட வளம் என்பது
  * நீர் இன்றி உயிர் வாழ முடியாது என்பது போன்றவை
- எனவே நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக வீட்டிலும் பாடசாலையிலும் நாம் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் உரையாடுக.

**செயற்பாடு : 3**
- நீரைப் பயன்படுத்திச் செய்யத்தக்க ஒரு விளையாட்டைத் திட்டமிட்டு நடாத்துக.
- பின்வரும் செயற்பாட்டை நடத்துவதற்குப் பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவு செய்க.

- செயற்பாட்டிற்காக, பின்வரும் பொருள்களைத் தேடிப் பெறுக.
    * சம அளவுடைய போத்தல்கள்
    * சம அளவுடைய புனல்கள்
    * சம அளவுடைய குவளைகள்
    * நீர் நிரம்பிய பெரிய பேசின் ஒன்று



- பாடசாலையில் உள்ள வளங்கள், இட வசதி, மாணவர் தொகை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை ஒழுங்கு செய்து நடத்த ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.
- படத்தில் காட்டியுள்ளவாறு இடவசதி உள்ள ஓர் இடத்தில் பெரிய பேசினை வைத்து நீர் நிரப்புக.
- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து படத்தில் உள்ளது போன்று பேசினைச் சூழ வரிசைகளில் நிறுத்துக. ஒவ்வொரு குழுவின் இறுதியிலும் ஒரு போத்தல், ஒரு புனல் வீதம் வைக்குக.
- ஒவ்வொரு குழுவிலும் நீர்ப் பேசினுக்கு எதிரே நிற்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் சிறு குவளை வீதம் வழங்குக.
- பேசினில் உள்ள நீரைக் கொண்டு சிறிய குவளையில் நீர் நிரப்பி அதனைக் குழுவில் ஒருவர் பின் ஒருவராக கைமாற்றி அனுப்புமாறு அறிவுறுத்துக. வரிசையில் இறுதியாக நிற்கும் மாணவர் குவளையில் உள்ள நீரை புனலின் துணையுடன் போத்தலில் ஊற்றிய பின்னர் குவளையை மீண்டும் வரிசையில் கைமாற்றி முதலில் இருப்பவருக்கு அனுப்புமாறு அறிவுறுத்துக.
  இவ்வாறாக போத்தல் நிரம்பும் வரை செயற்பாட்டைத் தொடருமாறு அறிவுறுத்துக.
  போத்தலில் முதலில் நீரை நிரப்பி முடிந்த குழு வெற்றி பெற்ற குழுவாகும்.
- இவ்வாறான மேலும் சில விளையாட்டுக்களை அமைத்துக் கொள்க.

**செயற்பாடு : 4**

- வெவ்வேறு வடிவமுள்ள இரண்டு கண்ணாடிப் பாத்திரங்களில் சம அளவு வீதம் நீர் இடுக. அந்த இரண்டு பாத்திரங்களையும் அவதானிக்கச் சந்தர்ப்பமளித்துமாணவரது அவதானிப்புகளை வெளியிடுவதற்கு ஏற்றவாறு பின்வருமாறு வினவுக.
    * இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் உயரம் பற்றி என்ன கூறலாம்?
    * இரண்டு பாத்திரங்களிலும் நீர் மட்டம் சமனானதா? இல்லையா?
    * வடிவத்திலும் அளவிலும் சமனான இரண்டு பாத்திரங்களில் முன்னைய இரண்டு பாத்திரங்களில் உள்ள நீரை ஊற்றி, அவற்றை அவதானிக்குமாறு வழிப்படுத்துக.
    * அவதானித்த சந்தர்ப்பங்கள் பற்றி எண்ணிப்பார்க்கச் சந்தர்ப்பமளிக்குக.

அவ்வாறு எண்ணிப்பார்த்த பின்னர், மாணவரது அவதானிப்புகளை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.

* அந்த அவதானிப்புகளின் படி, நீரானது நாம் அதனை இடும் பாத்திரத்தின் வடிவத்தைப் பெறுகின்றமையை விளக்குக.
* அவ்வாறாக நீரின் வடிவம் வேறுபடுவதேன் என மாணவரிடம் வினவுக.

**செயற்பாடு : 5**

- மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக. அவ்வொவ்வொரு குழுவுக்கும் ஊடுகாட்டும் தன்மையுள்ள ஒவ்வொரு கண்ணாடிக் குவளை வீதம் வழங்குக.
- அவற்றுள் ஒரு பாத்திரத்தினுள் தெளிந்த நீர் மாத்திரம் இடுக. மற்றைய பாத்திரத்தில் தெளிந்த நீருடன் பனிக்கட்டிகள் சிலவற்றையும் இடுக. பனிக்கட்டிகள் இட்ட பாத்திரத்தை வெளிப்புறத்தே தொட்டுப் பார்ப்பதற்கும் பனிக்கட்டிகளுக்கு யாது நிகழ்கின்றது என்பதையும் அவதானிக்க வழிப்படுத்துக. அவ்வாறே நீரினதும் பனிக்கட்டியினதும் வேறுபாடுகளை அனுபவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் அனுபவித்தவற்றை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.
- பனிக்கட்டி இடப்பட்ட பாத்திரங்களில் பனிக்கட்டிகள் கரையும் வரை நிகழ்பவற்றை இடையிடையே அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. அவதானிப்புகளின் பின்னர் மாணவரது கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.
- அத்தகைய பனிக்கட்டி என்பது நீரின் மற்றுமொரு வடிவமாகும் என்பதை விளங்கிக் கொள்ளத் துணைபுரிக.

**செயற்பாடு : 6**

- பெரிய வாய் உள்ள ஊடுகாட்டும் தன்மையுள்ள சற்றுப் பெரிய போத்தலொன்றைத் தேடிப் பெறுக. அதனை மாணவரது கண் மட்டத்திற்கு நேரே வைக்குக. சுற்றுப்புறத்திலிருந்து தேடிப்பெறத்தக்க சில பொருள்களை (உதாரணம் : சிறிய மரக் கட்டைகள், சிறிய கற்கள், பிளாத்திக்குப் பொருள்கள், .... போன்றவை) தடவைக்கு ஒன்று வீதம் அப்போத்தலினுள் இட்டு அப்பொருளை நீரினுள் இட்டால் மிதக்குமா, அமிழுமா என அனுமானித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர், அப்பொருள்களை ஒவ்வொன்றாக நீரில் இட்டு நிகழ்பவற்றை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. முன்னர் குறிப்பிட்டவாறு அப்பொருள்கள் ஒவ்வொன்றும் மிதக்கிறதா? அமிழ்கிறதா என மாணவரிடம் வினவுக. மாணவருடன் கலந்துரையாடி நீரில் அமிழும் பொருள்களையும் மிதக்கும் பொருள்களையும் வேறாக்குக.
- அதற்கமைய சில பொருள்களை நீரில் இட்டால் அமிழும் எனவும் மற்றும் சில பொருள்கள் நீரில் மிதக்கும் எனவும் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 7**

- சில பொருள்களை நீரில் இடுவதால் நீரின் நிறம் மாற்றமடையும் விதத்தை அவதானிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- ஊடுகாட்டும் தன்மையுள்ள சற்றுப் பெரிய போத்தல்கள் சிலவற்றையும் நீரின் நிறம் மாற்றமடைவதைப் பரிசோதிப்பதற்குப் பொருத்தமான சில பொருள்களையும் தேடிப் பெறுக. உதாரணம் : மஞ்சள் தூள், துணி நீலம், சாய வகை, .... போன்றவை.
- அந்தப் பொருள்களின் சமமான அளவுகளைத் தனித்தனியே அப்போத்தல்களில் இட்டு நீர் சேர்த்துக் கரைத்து அவதானிக்க வழிப்படுத்துக. அந்நிறப் பொருள்களைக் கரைக்கும்போது நீரின் நிறம் மாற்றமடையும் விதத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக. மாணவரது அவதானிப்புகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- இச்செயற்பாட்டைப் பொதுவான நீர், குளிர் நீர், வெந்நீர் ஆகியவற்றையும் பயன்படுத்தி நடாத்துக. அவதானிப்புகளை முன்வைப்பதற்கு / அறிக்கைப்படுத்துவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மேலும் சமமான அளவு நிறப்பொருளை வெவ்வேறு அளவு நீரில் இட்டுக் கரைத்து அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 8**

- நீருக்கு நிறமூட்டுவதற்குப் பயன்படுத்தத்தக்க இயற்கையான அல்லது செயற்கையான சில பொருள்களைத் தேடிப் பெறுக.
  உதாரணம் : பீற்றுட் கிழங்கு, செவ்வரத்தம் பூ, நீர்ச் சாயம் (Water colour), .. போன்றவை.
- அந்நிறங்களை உள்ளங்கைகளிலும் விரல்களிலும் பூசி அதனைக் கொண்டு கடதாசி மீது பல்வேறு கோலங்கள், பிராணிகள், உருவங்கள், பூக்கள் போன்றவற்றை ஆக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- வெவ்வேறு வடிவத் தாவர இலைகள், காண்கள், நெற்றுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அச்சுப்பதிப்பு மூலம் வடிவமைப்புகளை (Design) உருவாக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- நிறமூட்டிய நீர்த் துளிகளை வெண்ணிறக் கடதாசியில் இட்டு வாயினால் ஊதி கோலங்கள் உருவாக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக. ஆக்கங்களைத் திரட்டி, வகுப்பில் ஒரு கண்காட்சி நடாத்துக.

**செயற்பாடு : 9**

- நீரைப் பயன்படுத்தி எழுப்பத்தக்க வெவ்வேறு நாதங்களை உருவாக்குமாறு வழிப்படுத்துக.
- வெவ்வேறு உயர் மட்டத்திற்கு நீர் நிரப்பிய போத்தல்களினுள் வாயினால் ஊதி வெளிப்படும் ஒலிகளை அனுபவிக்கச் செய்க.
- கண்ணாடிக் குவளைகள், போத்தல், கிண்ணங்கள் போன்ற பாத்திரங்களில் வெவ்வேறு உயர மட்டங்களுக்கு நீர் இட்டு அப்பாத்திரங்களின் மீது தட்டி, ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஒலிகள் தோன்றும் விதத்தை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான ஒவ்வொரு பாத்திரம் வீதம் வழங்குக. மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக. தம்மிடமுள்ள பாத்திரத்தில் நீர் இட்டு, அவற்றின் மீது தட்டியவாறு வாத்திய இசையொன்றினை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக. குழுவாக இணைந்து ஒரே சந்தத்தின் படி தட்டியவாறு கூட்டாக குழு வாத்தியமொன்றினை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 10**

- மாணவர் ஒவ்வொருவரிடமும் இலை வகைகள் சிலவற்றைக் கொண்டு வருமாறு கூறுக.
- ஒவ்வோர் இலை வீதம் மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்கி, அந்த இலை மீது சில துளி நீர் இட்டு, அந்நீர் சிந்தாதவாறு இலை மீது அங்கு மிங்குமாக அசைக்குமாறு வழிப்படுத்துக.
- நீர்த் துளிகளை அசைத்தவாறும் விழாதவாறும் அதிக நேரம் வைத்திருக்க முயற்சிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- குழுவாக இச்செயற்பாட்டில் ஈடுபட்டுக் களிப்புற மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 11**

- சவர்க்கார நீர் அடங்கிய ஒரு பாத்திரம், சவர்க்கார நுரை எழும்புமாறு ஊதுவதற்குப் பொருத்தமான மெல்லிய குழாய் ஆகியவற்றை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று சுயாதீனமாக ஊதிச் சவர்க்கார நுரை எழும்பச் சந்தர்ப்பமளிக்குக. சவர்க்கார நீரை வாயினுள் உறிஞ்சுதலாகாது என்பதை வலியுறுத்துக.
- சவர்க்கார நுரையெழும்பும்போது இயன்ற அளவுக்கு பெரிய குமிழிகள் உருவாகுமாறு ஊத முயற்சிக்குமாறு மாணவரிடம் கூறுக.
- சவர்க்காரக் குமிழிகளை ஊதி வானின் மேலே அனுப்ப முயற்சிக்குமாறு வழிப்படுத்துக.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் சவர்க்கார நீர்ப் பாத்திரம் ஒவ்வொன்று வீதம் வழங்குக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் சவர்க்கார நீரில் பேசினில் இயன்ற அளவு அதிகமாக நுரையெழுப்ப முயற்சிக்குமாறு வழிப்படுத்துக.
  மாணவரது செயற்பாட்டை மதித்துப் பாராட்டுக.

## 05 கருப்பொருள் : புத்தாண்டுப் பண்டிகைக் காலம்

**தேர்ச்சிகள்** :
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் நிகழும் வேறுபாடுகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- புத்தாண்டுப் வழக்காறுகளின் (பாரம்பரியங்கள்) முக்கியத்துவத்தை மதித்துச் செயற்படுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் அழகை வெளிப்படுத்தும் பல்வேறு ஆக்கங்கள் செய்து களிப்புறுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துடன் தொடர்புடைய விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- பண்டிகைக் காலத்திற்கான சிறப்பான / குறிப்பான களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப் புறத்தில் நிகழும் பல்வேறு வேறுபாடுகளை விவரிப்பார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் இடம்பெறும் பாரம்பரியங்களை இனங்கண்டு அவற்றைப் பின்பற்றுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலம் தொடர்பான உள்ளக மற்றும் திறந்தவெளி கிராமிய விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
- புத்தாண்டுப் பண்டிகையின் அழகை, வெவ்வேறு சந்தர்ப்பங்களை சித்திரம் மூலம் காட்டுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துடன் தொடர்புடைய நாட்டார் பாடல்கள், படங்களை நடத்தைகளுடன் / நடிப்புடன் முன்வைப்பார்..

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- சித்திரைப் புத்தாண்டு தொடர்பாக பின்வரும் விடயங்களை முதன்மையாகக் கொண்டு மாணவருடன் சுருக்கமாக உரையாடுக.பின்வரும் விடயங்கள் தொடர்பாக வலியுறுத்துக.
  - * சித்திரைப் புத்தாண்டு என்பது யாது? (தமிழ் - சிங்களப் புத்தாண்டு)
  - * இது ஒரு தேசிய பண்டிகை
  - * இது இடம்பெறும் காலம் (வருடத்தில்)
  - * இப்பண்டிகையின் முக்கியத்துவம்
  - * புத்தாண்டுப் பண்டிகைக் கொண்டாட்டம் பண்டுதொட்டு இடம்பெற்று வருகின்றமை

**செயற்பாடு : 2**

- புத்தாண்டுக் காலத்தில் சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்கள் குறித்து மாணவரது அனுபவங்களையும் உள்ளடக்கிக் கலந்துரையாடுக.

  உதாரணம் :
  - * சுற்றுப்புறச் சூழலில் மரங்கள் பூத்தும் காய்த்தும் பூரித்திருக்கும்
  - * புத்தாண்டுக் காலத்தில் மட்டும் பூக்கும் காய்க்கும் மரங்கள் உள்ளன. உதா : முள்முருக்கு
  - * பறவைகள் அப்பழங்களைப் புசித்து மகிழ்ச்சியுடன் சஞ்சரிக்கும்
  - * குயில் கூவும் நாதம், றபான் ஓசை, பட்டாசு ஒலி போன்றவை சூழலில் கேட்டல்
- புத்தாண்டுக் காலத்தில் சுற்றுப்புறச் சூழலின் அழகைச் சித்திரமாக வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. அச்சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சித்திரைப் புத்தாண்டுக்காக வீட்டை ஆயத்தப்படுத்தும் விதம் குறித்து மாணவரது அனுபவங்களை வினவிக் கலந்துரையாடுக.

  உதாரணம் :
  - * சிலந்திவலை போன்றவற்றை நீக்கி வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தப்படுத்தல்
  - * வீட்டில் சாணம் மெழுகிச் சுத்திகரித்தல்
  - * சுண்ணாம்புப் பூச்சுப் பூசி வீட்டைப் பழுதுபார்த்தல்
  - * உணவுப் பொருள்கள் சேகரித்து ஆயத்தப்படுத்தி வைத்தல்

* பலகாரங்கள் தயாரித்தல்
* சமையலறைக்குத் தேவையான பொருள்கள், பண்டங்களை (புதிய சட்டி, பானைகள்) ஆயத்தம் செய்தல்

**செயற்பாடு : 3**

- தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றாரின் உதவியைப் பெற்று, மாதிரிப் புத்தாண்டுப் பண்டிகையொன்றினை நடத்துவதற்காக ஆயத்தங்களைச் செய்க.
- புத்தாண்டுப் பண்டிகை நடைபெறும் இடத்தையும் சுற்றுப்புறத்தையும் சுத்திகரித்தல், அலங்கரித்தல் ஆகியவற்றை மாணவரின் உதவியுடன் செய்க.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்திற்கென விசேடமான பலகாரங்கள், வாழைப்பழம் போன்ற உணவுப் பொருள்களைக் கொண்டு உணவு மேசையொன்றினைத் தயார்படுத்திக் கொள்க. இதற்குத் தேவையான பொருள்களை நேரகாலத்துடன் ஆயத்தப்படுத்திக் கொள்வது அவசியமானது.
- குறித்த தினத்தில் மாணவர் அனைவரையும் பொருத்தமான உடையணிந்து புத்தாண்டுப் பண்டிகையில் பங்கேற்கச் செய்க.
- புத்தாண்டுப் பண்டிகையின் பிரதான பாரம்பரியங்களை உள்ளடக்கிய மாதிரித் திட்டமொன்றைத் (சுப வேளைகளைக் காட்டும் வகையில்) தயாரித்துக் கொள்க.
- புத்தாண்டுப் பண்டிகை நடத்தப்படும் தினத்தில் தேசியக் கொடியையும் பாடசாலைக் கொடியையும் ஏற்றுவதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்க.
- எமது தேசியக் கொடி இலங்கையில் வாழும் எல்லா மக்கட் பிரிவினருக்கும் உரியதும் எமது நாட்டிற்கெனத் தனித்துவமானதுமாகும் என்பதையும் இவ்வாறான தேசிய பண்டிகைகளின்போது தேசியக் கொடி ஏற்றப்படும் என்பதையும் மாணவர்க்கு விளக்குக. பாடசாலைக் கொடியும் பாடசாலையில் விசேடமான சந்தர்ப்பங்களில் ஏற்றப்படும் எனக் கூறுக. இக்கொடியை ஏற்றும்போது நாம் அதற்கு மரியாதை செய்ய வேண்டிய விதத்தையும் நடந்துகொள்ள வேண்டிய விதத்தையும் விளக்குக.
- இந்த உற்சவ காலத்திற்காக அதிபரை அல்லது வேறு ஒருவரை பிரதம அதிதியாக அழைத்துக் கொள்க. பின்னர், அப்பிரதம அதிதியைக் கொண்டு தேசியக் கொடியை ஏற்றச் செய்க. தேசிய கீதத்தைப் பாடும் சந்தர்ப்பத்தில் சகல மாணவரையும் கவனமாக நிற்குமாறும் அல்லது நின்றபடி மரியாதை செலுத்துமாறும் வழிப்படுத்துக.
- இப்புத்தாண்டு உற்சவத்தின்போது பின்வரும் பாரம்பரியங்கள் எல்லாவற்றையுமோ அவற்றுள் சிலவற்றையோ செய்துகாட்டச் செய்க.
  * புண்ணிய காலத்தில் சமயக் கிரியைகளில் ஈடுபடல்
  * முகூர்த்த வேளையில் அடுப்பு மூட்டல்
  * பொங்கல் தயாரித்தல்
  * முகூர்த்த வேளையில் உணவு உண்ணல், கைவிசேடம் செய்தல் / கொடுக்கல் வாங்கல் செய்தல்
  * மூத்தோரை உபசரித்தல், வெற்றிலையைக் கையில் கொடுத்து மரியாதை செய்தல்
  * தலைக்கு மருத்துநீர் வைத்தல்
  (இச்சந்தர்ப்பங்களில் றபான் இசைத்து உற்சவம் களைகட்டச் செய்வது பொருத்தமானது)

**செயற்பாடு : 4**


- புத்தாண்டு விளையாட்டு விழாவை ஆரம்பிக்குக. இதற்காக கிராமிய விளையாட்டுக்களைத் தெரிவுசெய்து கொள்வது நல்லது. குறிப்பாக பிரதேசங்களுக்குத் தனித்துவமான, மாணவரது வயது மட்டத்திற்குப் பொருத்தமான கிராமிய விளையாட்டுக்களைத் தெரிவுசெய்து கொள்க.
  உதாரணம் : * சோகி விளையாட்டு, ஆடுபுலி ஆட்டம், கைக்குட்டை ஒளித்தல் / சீப்பு ஒளித்தல்
- இவ்விளையாட்டுக்களைத் தெரிவு செய்யும்போது மாணவரது தன்மை, தேவைகள், வகுப்பு போன்றவற்றுக்கு அமைய தனியே வெற்றி பெறுவதை விட குழுநிலையில் வெற்றி பெறத்தக்க விளையாட்டுக்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கும் தேவையெனின் தாமாக விளையாட்டுக்களை உருவாக்கிக் கொள்வதற்கும் வழி செய்க. மாணவரது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்துக. மேலும் குழுவாகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதிக்குக.

**செயற்பாடு : 5**

- புத்தாண்டின் எழில் பற்றிக் கூறும் பாடல்கள் / கவிதைகளை மூத்தோரின் உதவியுடன் தேடிப்பெற்று வகுப்புக்குக் கொண்டு வருமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் கொண்டு வரும் பாடல்கள் / கவிதைகளை ஒன்று சேர்த்து சிறிய புத்தகமொன்று (சிற்றேடொன்று) தயாரிக்குக.
- அப்படங்கள் / கவிதைகளை மாணவருடன் தாளத்திற்கேற்பப் பாடுக.
- ஊஞ்சற் பாடல் பாடியவாறு ஊஞ்சலாடல் செயற்பாடுகளில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- புத்தாண்டுடன் தொடர்புடைய சில சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டும் வகையில் வகிபாகமேற்று நடிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- களி போன்ற ஒரு பொருளைப் பயன்படுத்திப் பலகாரங்கள் / பாற்சோறு போன்ற உணவு வகைகளின் மாதிரியுருக்கள் செய்வதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.

## சடு - குடு விளையாட்டு

- வகுப்பு மாணவரை சமமான இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.




- ‘சடு - குடு’ விளையாட்டில் ஈடுபடுவதற்காக படத்தில் காட்டியுள்ளவாறு மைதானத்தை நடுக் கோட்டினால் A, B என இரு பகுதிகளாகப் பிரித்து மாணவர் குழுக்கள் இரண்டையும் தமது பகுதியினுள் மாணவர் விரும்பியவாறு இடப்படுத்துக.
- விளையாட்டைத் தொடங்க முன்னர், போட்டியிட வேண்டிய விதத்தையும் ஆட்டமிழக்கும் விதத்தையும் வெற்றி பெறும் விதத்தையும் மாணவர்க்கு விளக்குக.
- விளையாட்டை நடாத்திச் செல்வதற்காக கையில் ஊதியுடன் ஒருவர் இருப்பது பொருத்தமானது.
- ஊதியை வைத்திருப்பவர் ஊதியினால் சமிக்ஞை வழங்கிய பின்னர், ஒரு குழுவைச் (அணியைச்) சேர்ந்த ஒரு மாணவர் ‘சடு குடு’, ‘சடு குடு’ எனக் கூறியவாறு எதிர்த்தரப்பினர் மைதானத்தினுள் செல்வார். அவர் மீள தமது பகுதிக்கு வரும் வரையில் அல்லது ஆட்டமிழக்கும் வரையில் இவ்வாறு ‘சடு குடு’ எனக் கூறிக்கொண்டே இருத்தல் வேண்டும். எதிர்த்தரப்பு மைதானத்தினுள் சென்றவர் எதிர்த்தரப்பில் உள்ள ஒருவரை அல்லது சிலரை தமது கையினால் அல்லது காலினால் தொட்டுவிட்டு அவர்களிடம் பிடிபடாதவாறு மீண்டும் தமது மைதானப் பகுதிக்கு வருதல் வேண்டும்.
- இச்சந்தர்ப்பத்தில் எதிர் அணியினர் தமது பகுதிக்குள் நுழைந்தவரிடம் அகப்படாதவாறு தப்பித்து அவரைப் பிடித்து நிறுத்திக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும். இவ்வாறு வரும் மாணவரைப் பிடிக்கும்போது அவர் தப்பித்துச் செல்வாராயின் அவரைத் தொட்ட அனைவரும் ஆட்டமிழந்ததாகக் கருதப்படுவர். எனவே அவர்களை போட்டியிலிருந்து நீக்க வேண்டும்.
- பின்னர், முன்பு போன்றே ஊதியை வைத்திருப்பவர் ஊதிச் சமிக்ஞை வழங்கியவுடன் மற்றைய அணியில் உள்ள ஒரு மாணவன் எதிர் அணியின் மைதானத்தினுள் பிரவேசித்து முன்பு போன்றே செயற்படுவார். இவ்வாறாக ஒரு குழுவில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஆட்டமிழக்கும் வரை விளையாட்டைத் தொடர்ந்தும் நடாத்துதல் வேண்டும்.

  எந்தக் குழுவில் மாணவர்கள் அனைவரும் முதலில் ஆட்டமிழந்தனரோ அந்த அணி தோல்வியடைந்த அணியாகும். மற்றைய அணி வெற்றி பெற்ற அணியாகும்.

## 06 கருப்பொருள் : நாம் காணும் வானம்

**தேர்ச்சிகள்** :
- வானத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சூரிய ஒளியினாலும் காற்றினாலும் ஏற்படும் செயற்பாடுகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வானின் அழகையும் சூழல் மாற்றங்களையும் எடுத்துக் காட்டும் ஆக்கங்கள் செய்வார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வானத்தின் அழகை வெளிப்பாட்டு அசைவுகள் / இயக்கங்களின் மூலம் முன்வைத்துக் களிப்புறுவார்.

**கற்றற் பேறுகள்** :
- பகலிலும் இரவிலும் வானில் காணப்படுபவற்றை அவதானித்து அறிக்கைப் படுத்துவார்.
- பகல் வானத்தினதும் இரவு வானத்தினதும் அழகை வெளிப்படுத்துவார்.
- காற்றைப் பயன்படுத்தி பொருள்களை வானத்தில் மிதந்து செல்லச் செய்யலாம் என்பதைக் கையாண்டு பார்ப்பார்.
- சூரிய ஒளியின் செல்வாக்குக் காரணமாக தாவரங்களில் / பூண்டுகளில் நிகழும் மாற்றங்களை அவதானித்துக் கூறுவார்.
- நிழல் பெறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான ஆக்கங்கள் செய்வார்.
- கிடையான வெளியைப் பயன்படுத்தி ஓடுதல் சார்ந்த சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வானம் தொடர்பான கவிதைகள், பாடல் களுக்கு அமைய நடனமாடுவார் / நடிப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- பகலிலும் இரவிலும் வானில் காணப்படும் இயற்கையான பொருள்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.

  உதாரணம் : சூரியன், சந்திரன், முகில்கள், வானவில், உடுக்கள் (தாரகைகள் / நட்சத்திரங்கள்)
- பகலில் வானத்தை அவதானிக்கச் செல்வதற்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துக் கொள்க.

  உதாரணம் : * காட்போட் மட்டையொன்றில் தயாரிக்கப்பட்ட உருளைக் குழாய் (முகில்களை அவதானிப்பதற்காக)
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தேவையான உபகரணங்களை வழங்கி, அவதானிக்க வழிப்படுத்துக.

  உதாரணம் : * சூரியனை அவதானித்தல் - சூரியனை வெறுங் கண்ணால் பார்க்காதவாறு அதற்கான பாதுகாப்பு உத்தியொன்றைக் கையாள்க. (உபகரணம் ஒன்றைப் பயன்படுத்துக.)
  * முகில்களை அவதானித்தல் - காட்போட் குழாயின் ஊடாக
  * வானவில்லை அவதானித்தல் - வானவில் தோன்றும் சந்தர்ப்பம் ஒன்றில்
- அதன் பின்னர், பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி மாணவருடன் உரையாடுக.

  உதாரணம் : * சூரியனின் தன்மை, சூரியனின் வடிவம், நாளில் சூரியன் இருக்கும் இடம் மாற்றமடைவதுண்டா, சூரியனைக் காண முடியாத சந்தர்ப்பங்கள் உண்டா,
  * முகில்களுக்கு வடிவம் உண்டா, நிறம் உண்டா, அதன் வடிவம் எவ்வாறானது, ஒரே நிறமுடையதா? வெவ்வேறு நிறமுடையதா? முகில்கள் அசையாது உள்ளனவா? மிதக்கின்றனவா?
  * வானவில்லுக்கு நிறம் உண்டா? அதன் வடிவம் எவ்வாறானது?, சூரியனுடன் ஒப்பிடும்போது வானவில் எந்தப் பக்கத்தில் காணப்படுகிறது?, அது எவ்வளவு நேரம் இருந்தது?

மேற்படி தகவல்கள் தொடர்பாக மாணவரது அவதானிப்புகளின் வழியே கலந்துரையாடுக.

- மாணவர் அவதானித்தவற்றைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக. அவற்றை மதித்துப் பாராட்டுக.
- வீட்டில் இரவு வானத்தை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. இதற்காக சில நாள்கள் வரை கால அவகாசம் வழங்குக. இரவு வானத்தை அவதானிக்கும்போது கண்டவை தொடர்பாக மாணவரிடம் வினவுக.

  உதாரணம் : * பகல் நேர வானத்தில் கண்டவற்றைவிட வேறுபட்டவை இரவு வானில் காணப்பட்டனவா?
  * சந்திரன் எவ்வாறானது? சூரியனைப் போன்று கடுமையான சூடாக இருந்ததா?
  * சந்திரன் இரவில் ஒரே இடத்தில்தான் இருக்கின்றதா? இல்லையெனின் அதன் இடம் வேறுபடுகின்றதா?
  * உடுக்கள் எவ்வாறானவை? அவை மினுமினுக்கின்றனவா? உடுக்களை எண்ணிக் கணக்கிட முடியுமா? முடியாதா?
  * இரவு வானத்தில் முகில்கள் (மேகங்கள்) இருந்ததா?
    சந்திரன், உடுக்கள் காண முடியாத பொருள்கள் இருந்தனவா?

  என்றவாறாக மாணவரிடம் வினவுக.
- மாணவரது அவதானிப்புகளின்படி, இரவு வானம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 2**

- பகல் மற்றும் இரவு வானத்தின் வியத்தகு தன்மை பற்றி அவதானிப்புகளின் வழியே கலந்துரையாடுக.

  உதாரணம் : * முகில்களின் நிறம் வேறுபடும் விதம்
  * இரவு வானில் தாரகைகள் மினுமினுத்தல் மற்றும் தாரகைகள் பரம்பியுள்ள விதத்தின் அழகு
  * சந்திரன் காட்சியளிக்கும் விதம்
- வானத்தின் அழகு பற்றிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- மாணவர் இனங்கண்ட தகவல்களை வகுப்பறையில் அறிக்கைப்படுத்த வழிப்படுத்துக. அவை குறித்துக் கலந்துரையாடுக.
- பகல் / இரவு வானத்தின் வியத்தகு தன்மையை வெவ்வேறு ஊடகங்களைக் கொண்டு ஆக்கம் புரிய வழிப்படுத்துங்கள். மாணவரது ஆக்கங்களைத் திரட்டிக் கண்காட்சியொன்று நடாத்துக. மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.
- வானத்தில் வியத்தகு தன்மை பற்றி எழுதப்பட்டுள்ள கவிதைகள், பாடல்களை மாணவருடன் கலந்துரையாடுக. அதனுடன் ஆடிப்பாட வழிப்படுத்துக.

  உதாரணம் : **நிலா**

  முழு நிலாவும் ஒருநாள் - பின்
  முகம் மறையும் ஒரு நாள்
  வளரும் தேயும் பிறநாள் - இது
  நிலவின் வாழ்க்கைத் திருநாள்

  - கோ.பெ.நாராயணசாமி

**செயற்பாடு : 3**

- வானில் மிதந்து செல்லச் செய்யத்தக்க பொருள்கள் பற்றிய அனுகூலங்களைப் பெற மாணவரை வழிப்படுத்துக. செயற்பாட்டிற்கு முன்னதாக பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்க.

  உதாரணம் : * சிறிய கடதாசித் துண்டுகள், தாவர இலைகள், பஞ்சு போன்றவை.
- திறந்த வெளியான இடத்திற்குச் சென்று, அப்பொருள்களை வானில் மிதந்து செல்லச் செய்து அவ்வொவ்வொரு பொருளும் மிதந்து செல்லும் விதத்தில் வேறுபாடுகள் உள்ளனவா என வினவுக.
- அவற்றுள், ஒரு நூலைக் கட்டி மிதந்து செல்லச் செய்யத்தக்க பொருள்கள் எவை என்பதை இனங்கண்டு சொல்ல மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அப்பொருள்களை நூலில் கட்டி வானில் மிதந்து செல்லச் செய்வதற்காக ஓடிச் செல்லுமாறு வழிப்படுத்துக.
- மாணவர்களைக் குழுக்களாக்கி காற்றாடி (பட்டம்) செய்வதற்குத் தேவையான பொருள்களைப் பெற்று அந்தந்தக் குழுவினரின் கருத்துப்படி காற்றாடி தயாரிக்க உதவுக.

- அக்காற்றாடிகளை வானில் மிதந்து செல்லச்செய்யச் சந்தர்ப்பமளிக்குக.
- மேற்படி அவதானிப்புகளின்படி, வெவ்வேறு பொருள்களை வானில் மிதந்து செல்லச் செய்வதற்காக காற்றைத் துணையாகக் கொள்ளலாம் என்பதை எடுத்துக்கூறுக.
- காற்றின் தன்மையின்படி, பொருள்கள் மிதந்து செல்லும் தன்மை வேறுபடும் என்பதை விளங்கிக்கொள்ள மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- வானில் வெவ்வேறு பொருள்களை மிதந்து செல்லச் செய்தல் தொடர்பான அனுபவங்களைச் சித்திரமாக வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 4**

- மனிதன் மற்றும் மரஞ்செடி கொடிகள் மீது சூரிய ஒளியின் செல்வாக்கை / தாக்கத்தைக் கண்டறிவதற்காக மாணவர்களைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
    * மாணவர்க்கு சிரட்டைகள் ஆளுக்கு ஒன்றாக வழங்குக.
    * திறந்த வெளியான இடத்தில் புல் வளர்ந்துள்ள ஓர் இடத்திற்குச் சென்று, அச்சிரட்டையினால் புல்லை மூடி, சிரட்டை அசையாதவாறு அதன் மீது சுமை ஏற்றி வைக்குமாறு வழிப்படுத்துக.
    * சிரட்டையினால் மூடப்பட்டுள்ள புல்லுக்கு யாது நிகழும் என மாணவரிடம் வினவுக.
    * சில நாட்களின் பின்னர், அப்புல்லில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
- ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பின்வரும் விடயங்களின் வழியே கலந்துரையாட உதவி புரிக.
    * மூடி வைத்த புல்லில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது?
    * மூடி வைத்த புல்லுக்கும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள புல்லுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?
    * அவ்வாறு நிகழ்ந்தமைக்கான காரணம் யாது?
    * அதற்குக் காரணம் சூரிய ஒளி கிடைக்காமற் போனமையாகும் என்பதை விளக்குக.

**செயற்பாடு : 5**

- கிடை மற்றும் நிலைக்குத்து வெளியைப் பயன்படுத்தி, துள்ளிப் பாய்தல், ஓடுதல் போன்றவற்றை உள்ளடக்கிய விளையாட்டுக்களில் ஈடுபடுமாறு வழிப்படுத்துக.
- மாணவரை இடவசதி உள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்க.
- இயன்ற அளவு உயரத்திற்கு மாணவர் சுயமாக ஓடிச் செல்ல வழிப்படுத்தி, ஆசிரியையின் சமிக்ஞையின்படி பாயுமாறு வழிப்படுத்துக. இவ்வாறு சில தடவைகள் சமிக்ஞை வழங்கி பாயச் செய்க.
- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.
- அந்தந்தக் குழு விரும்பும் பறவை பற்றி வினவுக. பின்னர், அப்பறவை போன்று சஞ்சரிக்க வழிப்படுத்துக.

**செயற்பாடு : 6**

- வானில் காணப்படும் அழகை வெளிப்படுத்துவதற்காகச் சித்திரம் வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவ்வாக்கங்களைக் கொண்டு வகுப்பில் கண்காட்சியொன்று நடாத்துக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 7**

- சூரிய ஒளி படாதவாறு தலையை மறைத்துக் கொள்வதற்காக தாவர இலைகளைக் கொண்டு தொப்பி செய்வதற்குப் பொருத்தமான இலைகள் சிலவற்றைச் சேகரித்துக் கொள்க. (உதா: பலா இலை, மா இலை, ......... )
- அவற்றின் அந்தங்களில் ஈர்க்குத் துண்டுகள் போன்ற ஒரு பொருளைப் பயன்படுத்தி இலைகளை ஒன்றுடனொன்று இணைத்துத் தாம் விரும்பும் வடிவத்தில் தொப்பி ஒன்றைச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக, காட்போட் / துணி போன்றவற்றைப் பயன்படுத்தி சூரிய ஒளி படாதவாறு தலையை மறைத்துக் கொள்வதற்காகத் தொப்பி செய்யுமாறு வழிப்படுத்துக. பல நிறக் கடதாசிகள் அல்லது வேறு பொருத்தமான பொருள்களைக் கொண்டு அவற்றை ஆக்குவதற்கு வழிப்படுத்துக.

## 07 கருப்பொருள் : நாம் உண்பவையும் குடிப்பவையும்

**தேர்ச்சிகள் :**
- உணவு வகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.
- ஆரோக்கிய வாழ்வுக்காக சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பேணி வருவார்.
- உணவு அசுத்தமடையும் வழிகளை இனங்கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவன செய்வார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உணவு தொடர்பான ஆக்கங்கள் செய்வார்.
- சக்தி விருத்திக்கு உதவும் இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- உணவு உண்ணும்போது பேணிவர வேண்டிய சரியான ஒழுங்குமுறையைக் காட்டும் ஆக்க நடத்தைகளில் / நடவடிக்கைகளில் ஈடுபடுவார்..

**கற்றற் பேறுகள் :**
- உணவு வேளையொன்றில் அடங்கியுள்ளவற்றைக் குறிப்பிடுவார்.
- உணவுப் பானாதிகள் மூலம் எமது உடலுக்குக் கிடைக்கும் பயன்களை வெவ்வேறாக விவரிப்பார்.
- உணவுப் பானாதிகளை உரிய நேரத்தில் உரிய அளவுகளில் உட்கொள்வார்.
- நுகர்வுக்கான இயல்பான (இயற்கையான) உணவுகளைத் தெரிவுசெய்து கொள்வார்.
- ஆரோக்கியமான உடலைப் பேணி வருவதற்குப் பொருத்தமான சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவார்.
- உணவு அசுத்தமடையும் வழிகளைக் கூறுவார்.
- உணவைச் சுத்தமாக வைத்திருக்க ஆவன செய்வார்.
- மனங் கவரக்கூடிய வகையில் உணவு பரிமாறுவதற்குப் பொருத்தமான ஆக்கங்கள் செய்வார்.
- உடல் சக்தி வளர்ச்சிக்காக பேரியக்க, நுண்ணியக்கச் செயல்களைக் கையாள்வார்.
- நல்ல சுகாதாரப் பழக்கங்கள், நல்ல உணவுப் பழக்கங்களைக் கொண்ட செய்திகள் அடங்கிய நடனங்கள் / நடிப்புகளை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- தாம் மிகவும் விரும்பும் உணவு வகைகள் குறித்து மாணவரிடம் வினவுக.
- காலை, பகல், இரவு உணவுக்காக உண்ண விரும்பும் உணவுகள் மற்றும் ஈற்றுணவாக தாம் உண்ண விரும்பும் உணவகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- அதற்கமைய அந்தந்த மாணவர் உண்ண விரும்பும் உணவு, பான வகைகள் பற்றி வினவுக. அவை ஒன்றுக்கொன்ற வேறபட்டவை என்பன எடுத்துக்காட்டுக. உடலை ஆரோக்கியமாகப் பேணுவதே உணவ உட்கொள்வதன் மூலம் நாம் எதிர்பார்க்கப்படும் என்பதை விளக்குவதற் காகக் கலந்துரையாடுக.
- மாணவர்கள் தாம் விரும்பும் உணவகளை மாத்திரம் உண்பதாயின் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து கவனமாகச் சிந்தித்துப் பார்ப்பதற்காகச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம் : உடல் மெலிவடைதல், நோய்வாய்ப்படல் .... போன்றவை
- அதற்கமைய நாம் அன்றாடம் உரியவாறு உணவை உட்கொள்வதால் கிடைக்கும் பயன்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
  உதாரணம் : * நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற
  * உடலுக்கு சக்தி பெற
  * உடல் சீராக வளர்ச்சியடைய ... போன்றவை

**செயற்பாடு : 2**
- வெவ்வேறு உணவுப் பொருள்களைக் காட்டும் படங்களைக் கொண்டுவருமாறு மாணவர்களுக்கு கூறுக.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக. தமது குழுவில் உள்ள

உணவுப்பொருள்களடங்கிய படங்களை வகைப்படத்துமாறு குழுக்களுக்குக் கூறுக.
உதாரணம் : * பிராணிகள் மூலம் கிடைக்கும் உணவு
* தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவு

- உணவுகளை வகைப்படுத்திய பின்னர் மேற்படி இரண்டு வகைகளையும் சேர்ந்த உணவுகளை நாம் தினமும் உட்கொள்ளும் உணவு வேளைகளில் அடங்கியுள்ளனவா எனத் தேடிப்பார்க்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வேளையுணவின் போசணைத்தன்மையை அதிகரிப்பதற்காக சேர்த்துக் கொள்ளக்கூடியவற்றைப் பற்றி வினவுக.
- மாணவர் கூறும் விடைகளின்படி, கீரை வரை, மரக்கறி வகை, மீன் போன்றவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.
- அவ்வாறாக உணவுகளைப் பிரதான வேளையுணவுடன் சேர்த்துக் கொள்வதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி மாணவரக்கு அறிவூட்டம் செய்க.
  உதாரணம் : * கண் பார்வை கூர்மையாக இருப்பதற்கு
  * நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு .... போன்ற
- பதப்படுத்திய, உடன் உணவுகளின் பாகமான தன்மையும் இயற்கையானவாறு தயாரித்த உணவுகளின் முக்கியத்துவமும் வெளிக்கொணரப்படும் வகையில், பதப்படுத்திய உணவை விரும்பும் ஒரு பிள்ளை, இயற்கையான உணவை விரும்பும் ஒரு பிள்ளை ஆகிய இரண்டு பாத்திரங்களை உள்ளடக்கிய ஓர் கதையை தயாரித்து மாணவர் செவிமடுக்கத்தக்கவாறு அதனை வாசிக்குக.
- அக்கதையைச் செவிமடுத்த பின்னர், உரையாடல் நடத்தி, சுவையூட்டிகள் போன்ற இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்பட்ட உணவு பானாதிகள் காரணமாக ஏற்படக் கூடிய பாதகமான நிலைமைகள் குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க. மாணவரது பகலுணவை அவதானித்து, தரமான வேளையுணவு உட்கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மேற்படி கதையைச் செவிமடுத்த பின்னர், மேற்படி விடயங்களை வற்புறுத்தும் சுவரொட்டிகள், பதாகைகள் தயாரித்து மாணவர் ஊர்வலமொன்றினை பாடசாலையில் ஒழுங்குசெய்க.

**செயற்பாடு : 3**

- குறித்த வேளையில் குறித்த அளவுகளில் உணவு உட்கொள்ளாமையால், ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து மாணவரிடம் வினவுக. நாளாந்த வேளையுணவுகளின்போது போதுமான அளவு உணவு உட்கொள்ள வேண்டும் என்பதையும், இல்லையேல் ஏற்படக்கூடிய நிலைமைகளையும் விளக்குக.
  உதாரணம் : * சக்தி குறைவடைதல்
  * உடல் வளர்ச்சி குறைவடைதல்
  * நோய்கள் ஏற்படல
  * வகுப்பறை வேலைகளைச் சரியாகச் செய்ய முடியாமற்போதல் ... போன்றவை
- அதற்கமைய காலைவேளை உணவு உட்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி மாணவருடன் உரையாடுக.
- எமது பிரதானமான வேளையுணவுகள், அவ்வேளையுணவுகளின் போதும் நாம் உண்ணும் உணவுகள் பற்றி மாணவரிடம் வினவுக.
- நாம் குடிக்கும் பான வகைகள் சிலவற்றைக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- உணவு போன்றே பான வகைகளும் உடலுக்குத் தேவை என்பதை எடுத்துக்காட்டுக.
- சந்தையில் விலைகொடுத்து வாங்கும் பான வகைகளை விட நீரைப்பருகுவதன் முக்கியத்துவம் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் என்பன பற்றி மாணவர்க்கு விளக்குக.
- மாணவர்கள் தினசரி குடிக்கும் நீரின் அளவு பற்றி வினவிச் சுத்தமான நீரைத் தினமும் போதுமான அளவுக்குக் குடிப்பதன் முக்கியத்தவத்தை வலியுறுத்துக.

**செயற்பாடு : 4**

- வாயைச் சுத்தமாகப் பேணுவதன் முக்கியத்தவத்தை மாணவருடன் உரையாடுக.
- வாயின் சுத்தத்தைப் பேணிய, பேணாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனுகூலங்கள் அல்லது பிரதிகூலங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

- மாணவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பற்றூரிகையை வகுப்புக்குக் கொண்டு வரச் செய்து, சரியாகப் பல்துலக்கும் முறையில் பல்துலக்கச் சந்தர்ப்பமளிக்குக. பிரதான உணவின் பின்னர் பல்துலக்குவதன் அவசியத்தையும் ஒரு நாளைக்கு இரண்டு தடவையேனும் பல்துலக்குவதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 5**

- கை, கால்களின் நகங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை எடுத்துக் காட்டிக் கலந்துரையாடுக.
- சுத்தமான நகங்கள் செயற்பாட்டுக்காக, தமது நகங்களை வெட்டிச் சுத்திகரித்துக்கொண்டு வருமாறு மாணவருக்குக் கூறுக. மறுநாள் திறந்தவெளியில் வடடமாக நின்று, எல்லா மாணவர்களதும் நகங்களைப் பரிசீலித்து, சுத்தமான நகங்கள் எனக் கூறியவாறு தாளத்தின்படி கைதட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- நகம் அசுத்தமாக உள்ள பிள்ளைகள் உள்ளனராயின் மற்றுமொருவரின் உதவியுடன் அப்பிள்ளைகளின் நகங்களை வெட்டிச் சுத்தம் செய்விக்குக. கருப்பொருளை நடைமுறைப் படுத்தும் காலப்பகுதியின் பின்னரும் இச்செயற்பாடடை இடையிடையே செய்க.
- இரண்டு நீர்ப்பேசின்களைப் பயன்படுத்தி, அப்பேசின்களின் சமமான அளவு நீர் இட்டு அவற்றுள் ஒரு பேசினில் மாத்திரம் கைகளைக் கழுவுமாறு மாணவர்க்கு அறிவுறுத்துக.
- மாணவர் அனைவரும் கைகழுவி முடித்த பின்னர், கைகழுவிய பேசினில் உள்ள நீருக்கும் கைகழுவாத பேசினில் உள்ள நீருக்கும் இடையிலான வேறுபாட்டை அவதானிக்குமாறு மாணவரைக் கூறுக. அதற்கமைய எமது கைகள் எந்த அளவுக்கு அசுத்தமானது என எண்ணிப்பார்க்க வழிப்படுத்துக.
- கைகள் நன்கு சுத்தமான பின்னர் கைகளின் அழகை எடுத்துக்காட்டி, அவ்வாறு கைகளை சுத்தமாக வைத்திருக்கும் பிள்ளைகளை அனைவரும் விரும்புவர் என்பதை எடுத்துக்காட்டுக.
- அசுத்தமான கைகளால் உணவு உட்கொள்ளுவதால் எமக்குப் பல்வேறு நோய்கள் ஏற்பட இடமுண்டா என்பதை மாணவரிடம் வினவி தினமும் மாணவர்கள் உணவு உட்கொள்ளும் வேளையில் கைகளைக் கழுவிக்கொள்ளும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதுண்டா என்பது குறித்துக் கவனஞ் செலுத்துக.
- உள்ளங்கையில் ஒட்டிக்கொள்ளுமாறு உணவைப் பிசைந்து சப்புக்கொட்டி உண்ணல், வாயில் உணவு இருக்கும் போது பேசுதல் சுற்றுப்புறத்தில் சிந்துமாறு, சிதறியவாறு உணவு உண்ணல், இரண்டு கைகளாலும் உணவு உண்ணல் .... போன்றவற்றைச் செய்யும் ஒரு பிள்ளை தொடர்பான ஒரு செய்தியை மாணவருக்குக் கூறி, அப்பிள்ளை தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவுக. அவ்வாறான நடத்தைகளைத் தவிர்ப்பதை வலியுறுத்துக.
- நற்பழக்கங்கள் பற்றிக் கூறும் சிறிய பாடங்களை உருவாக்கி மாணவருடன் சேரத்து பாடுக.
- நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவதை எடுத்துக்காட்டும் வகையிலான வகிபாகமேற்று நடித்தல்களில் ஈடுபடுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 6**

- உணவு பானாதிகள் அசுத்தமடையக்கூடிய சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்களை முன்வைத்து மாணவருடன் கலந்துரையாடுக.


  உதாரணம் : * நிலத்தில் விழுவதன் விளைவாக அசுத்தங்கள் ஒட்டிக் கொள்ளல்
  * உணவைத் திறந்து வைப்பதால் ஈக்கள் போன்ற பிராணிகள் மொய்த்தல்
  * காலாவதியாகியிருத்தல்
  * பிராணிகளால் உண்ணப்பட்டிருத்தல்
  * புகை, தூசு போன்றவை ஒட்டியிருத்தல் ... போன்றவை
- இவ்வாறாக உணவு பானாதிகள் அசுத்தமடைவதை (மாசடைவதை) தவிர்ப்பதற்காக நாம் செய்யக்கூடியவை பற்றிய யோசனைகளை முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்க வீட்டில் பெற்ற அனுபவங்களை முன்வைக்க ஆர்வமூட்டுக.

**செயற்பாடு : 7**

- உணவை ஆக்கபூர்வமாகப் பரிமாறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உதாரணம் : * மேசைத்தட்டம் (Table mat) தயாரித்தல்

  * மேசைத் தட்டத்துக்குப் பொருத்தமான அளவுடையதாக பிரிஸ்டல் அட்டைத் துண்டொன்றை விரும்பிய வடிவத்தில் வெட்டிக் கொள்க.
  * பிறிஸ்டல் அட்டை மீது படத்தில் காட்டியுள்ளவாறு அல்லது வேறொரு விதத்தில் துளைகளை இட்டுக்கொள்க.



  * வெவ்வேறு வகை கழிநூல் அல்லது கம்பளி நூல்களைப் பெற்று யாதேனும் வடிவமைப்பு தோன்றும் வகையில் துளைகளின் வழியே நூலோடுவதன் மூலம் அழகான மேசைத்தட்டத்தைத் தயாரித்துக்கொள்க.

**செயற்பாடு : 8**


- சக்தி வளர்ச்சிக்கு உதவும் செயற்பாடுகள் செய்வதற்காக மாணவரைத் திறந்த வெளியாக ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- சமிக்ஞையின்படி வேகத்தைக் கூட்டியும் குறைத்தும் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

  உதாரணம் : * நின்ற இடத்தில் ஓடுதல்

  * வேகத்தை அதிகரித்தவாறு நின்ற இடத்தில் ஓடுதல்
  * நடத்தல்
  * வேகத்தை அதிகரித்தவாறு ஓடுதல்
- ஓர் எல்லையை அடையாளமிட்டு, மேற்படி செயற்பாட்டை நட்புரீதியான ஒரு போட்டியாக நடத்துக. அடையாளமிட்ட எல்லையில் மாத்திரம் செயற்பாட்டை நடத்துமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 9**

- பின்வரும் களிப்பூட்டும் செயற்பாட்டில் ஈடுபட மாணவரை வழிப்படுத்துக.
- வகுப்பு மாணவரை இரண்டு வரிசைகளில் நிறுத்துக. அக்குழுக்களை A, B எனப் பெயரிடுக. வரிசையாக நிற்கும் மாணவருக்கு எதிரே ஏறத்தாழ 2 அல்லது 3 மீற்றர் தூரத்தில் ஒரு மேசையை வைக்குக.



மேசை

மாணவர் மேசைக்குப் பொருத்தமானவாறு ஓர் உறை வகையில் இரண்டு அட்டைகள் வீதம் மேசை மீது வெவ்வேறு உணவு வகைகளின்பட அட்டைகள் சிலவற்றை மேசை மீது வைக்குக.

- ஆசிரியையின் சமிக்ஞைப்படி இரண்டு வரிசைகளிலும் முதலாவது இருக்கும் மாணவர்கள் முன்பாக வந்து அட்டைகளைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

உதாரணம்: அட்டைகளிலிருந்து ஒரு பழவகைப் பட அட்டையைத் தெரிவு செய்து எடுத்து வருக.

- அதற்கமைய குறித்த இரண்டு மாணவர்களும் மேசையின் மீது படங்களைத் தெரிவுசெய்து (உரிய படங்களைத் தனித்தனியாக) ஆசிரியைக்குக் காட்டியபின், ஓடிச்சென்று தமது குழுவுக்குரிய வரிசையின் இறுதியில் நிற்குமாறு அறிவுறுத்துக.
- பின்னர், வரிசையில் அடுத்த இரண்டு மாணவர்களும் ஓடிச்சென்று ஆசிரியை கூறும் உணவு வகையைத் முன்னர் போலத் தெரிவுசெய்து விளையாட்டில் ஈடுபடுமாறு வழிப்படுத்துக.
- இவ்வாறாக போட்டியைத் தொடர்ந்தும் நடத்துக.
- நாம் நாளாந்தம் உட்கொள்ளும் வேளை உணவுகளில் மேற்படி உணவு வகைகள் அடங்கியிருக்கும் என்பதைக் குறித்து, செயற்பாட்டின் இறுதியில் மாணவர்க்கு அறிவூட்டுக.
- சரியான அட்டையுடம் முதலில் தமது வரிசையுடன் சேர்ந்துகொள்பவருக்கு வெற்றி.

**செயற்பாடு : 10**

- காலை, பகல், இரவு உணவுக்காக நாம் உட்கொள்ளும் உணவு வகைகளின் படங்கள் அடங்கிய அட்டைத்தொகுதிகளை குழுவுக்கு ஒன்று வீதம் தயாரித்துக்கொள்க.
- மாணவரை 5 - 6 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்குக.
- பட அட்டைத் தொகுதியைக் கொண்டு ஆசிரியரது அறிவுறுத்தல்களின்படி செயற்பாட்டில் ஈடுபடுமாறு குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

  உதாரணம் : 1 படங்களைப் பயன்படுத்தி காலை உணவுக்குப் பொருத்தமான வேளையுணவு ஒன்றைத் தயாரிக்குக.

  2. படங்களைப் பயன்படுத்தி பகல் உணவுக்குப் பொருத்தமான வேளையுணவு ஒன்றைத் தயாரித்தல் .... போன்றன.
- உதவி தேவைப்படும் குழுக்களுக்குப் பின்னூட்டல் வழங்குக.
- மாணவர்களது ஆக்கங்களின்போது பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்தி பல்வகைமையான, போசாக்கான வேளையுணவுகளை எமது நாளாந்த உணவுடன் சேகரித்துக் கொள்ளலாம் என்பதை விளக்குக.

## 08 கருப்பொருள் : தகவல்கள் கிடைக்கும் வழிகள்

**தேர்ச்சிகள்** :
- தொடர்பாடலில் பயன்படும் வெவ்வேறு ஊடகங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.
- தொடர்பாடலுடன் இணைந்த தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.
- தகவல் தொடர்பாடலுடன் தொடர்புடைய பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு துலங்கல் / எதிர்வினை காட்டியவாறு இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு தொடர்பாடல் வழிகளைப் பயன்படுத்தி வெளிப்பாட்டு இயக்கங்கள் / அசைவுகளை உள்ளடக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :
- எமக்குத் தகவல்கள் கிடைக்கும் பல்வேறு ஊடகங்களை வேறாக்கி காட்டுவார்.
- தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் தொழினுட்பச் சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.
- தகவல் தொடர்பாடல் தொடர்பான உபகரணங்களின் மாதிரியுருக்கள் ஆக்குவார்.
- வெவ்வேறு சமிக்ஞைகளின்படி ஓடுதல், பாய்தல் மூலம் எதிர்வினை காட்டுவார்.
- தொடர்பாடலின்போது குரலையும் மெய்ந்நிலைகளையும் கையாளும் வெவ்வேறு முறைகளை வெளிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு : 1**

- வெவ்வேறு தொடர்பு ஊடகங்கள் மூலம் எமக்குத் தகவல்களைத் தரும் உபகரணங்களின் படங்களை மாணவர்கள் மூலம் வகுப்பில் சேகரித்துக் கொள்க.

- பின்னர் அப்படங்களைப் பயன்படுத்தி எமக்குத் தகவல்கள் கிடைக்கும் வழிகள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.

  உதாரணம் :
  * வானொலி / ரேடியோ
  * தொலைக்காட்சி
  * தொலைபேசி
  * செய்தித்தாள் / பத்திரிகை
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக. குழுவுக்கு ஒன்றாக பிறிஸ்டல் அட்டைகளைப் பகிர்ந்தளிக்குக.
- மாணவர் கொண்டு வந்த படங்களைப் பிறிஸ்டல் அட்டையில் ஒட்டுமாறு அறிவுறுத்துக.
- அதற்கமைய எமக்குத் தகவல்கள் கிடைக்கும் பல்வேறு ஊடகங்கள் உள்ளன என்பதை மாணவர்க்கு விளக்குக.

**செயற்பாடு : 2**

- தகவல்கள் கிடைக்கும் வெவ்வேறு ஊடகங்களை அறிமுகஞ் செய்வதற்காக உண்மையான தொடர்பு ஊடக உபகரணங்கள் சிலவற்றை வகுப்பறைக்குக் கொண்டு வருக.
- அல்லது அவ்வாறான உபகரணங்கள் காணப்படும் இடத்திற்குச் சென்று அவற்றை நேரடியாக பார்வையிட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அத்தொழில்நுட்ப உபகரணங்களைத் தனித்தனியாகத் தொழிற்படச் செய்து, அதிலிருந்து வெளிவரும் ஒலிகள், படங்களைச் செவிமடுக்கவும் பார்க்கவும் வழிப்படுத்துக.
- பின்னர் அவ்வாறான உபகரணங்களைக் கையாளும் விதம் பற்றிய பரிச்சயத்தைப் பெறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம் :
  * வானொலிக் கருவியைத் தொழிற்படச் செய்தல் / தொழிற்பாட்டை நிறுத்துதல்
  * தொலைக்காட்சி கருவியைத் தொழிற்படச் செய்தல் / தொழிற்பாட்டை நிறுத்துதல்

* நிகழ்ச்சிகளை மாற்றுதல்
* ஒலியைக் குறைத்தல் / அதிகரித்தல்

- இவ்வாறான உபகரணங்களைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பாகவும் வளர்ந்தோரின் உதவியுடனும் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- இந்த உபகரணங்கள் மூலம் நாம் பெறத்தக்க தகவல்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- இவ்வாறாக செய்தித்தாள், சஞ்சிகை, பதாகை போன்றவற்றின் மூலம் தகவல் கிடைக்கும் விதம் பற்றி எளிமையாகக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 3**

- பொம்மைத் தொலைபேசி ஒன்றைச் செய்வதற்குப் பொருத்தமான பொருள்களைக் (உதா: வெறும் தீப்பெட்டிகள், யோகட் கிண்ணங்கள், நூல் ......) கொண்டு வருமாறு மாணவர்க்குக் கூறுக.
- மாணவரை இரண்டு பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து வீட்டிலிருந்து கொண்டு வந்த பொருள்களைக் கொண்டு விளையாட்டுத் தொலைபேசி ஒன்றைச் செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்குக.
- தயாரித்த தொலைபேசியைப் பயன்படுத்தி செய்திகளைப் பரிமாறிக்கொள்ள மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இருவரதும் உரையாடல் தெளிவாகக் கேட்டதா என மாணவரிடம் வினவியறிக. மாணவர் பொருள்கள் கொண்டு வந்தமையைப் பாராட்டுக.

**செயற்பாடு : 4**

- ஒலிவாங்கி (மைக்ரோபோன் / நுணுக்குப்பன்னி) ஒன்றினை அல்லது அதுபோன்ற பிரதியீட்டு உபகரணம் ஒன்றை வகுப்பிற்குக் கொண்டு வருக.
- வகுப்பறையில் அல்லது பொருத்தமான ஓர் இடத்தில் சிறிய மேடையை அமைக்குக.
- ஆசிரியை குறிப்பிடும் ஒரு மாணவரிடம் ஒலிவாங்கியைக் கொடுத்து தாம் விரும்பிய ஏதேனுமொன்று பற்றி 2 - 3 வாக்கியங்கள் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக ஒவ்வொரு மாணவரும் முன்வந்து ஒலிவாங்கியில் வாக்கியங்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரைப் பாராட்டுக.

**செயற்பாடு : 5**


- குரலை ஒலிப்பதிவு செய்து கொள்வதற்குப் பொருத்தமான ஓர் உபகரணத்தை வகுப்பிற்குக் கொண்டு வருக. (செல்பேசி, கசெற் உபகரணம், ஒலிப்பதிவுக் கருவி,.... போன்ற யாதேனுமொரு உபகரணம்)
- அதனைப் பயன்படுத்தி வகுப்பில் ஒவ்வொரு மாணவரினதும் பாடல், பேச்சு, உரையாடல் போன்றவற்றை ஒலிப்பதிவு செய்க.
- ஒலிப்பதிவு செய்தவற்றை மீளச் செவிமடுக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அதற்கமைய ஒலியை ஒலிப்பதிவு செய்து, அதனை மீளச் செவிமடுக்க முடியும் என்பதை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 6**

- காட்போட் பெட்டிகள், கத்தரிக்கோல், பைண்டர் கம், வார்ணிசுக் கடதாசி, யோக்கட் கிண்ணம், போன்ற பொருள்களைக் கொண்டு வருமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அப்பொருள்களைக் கொண்டு தகவல் பெறக்கூடிய மற்றும் தகவல் வழங்கக்கூடிய ஊடகங்களுள் தாம் விரும்பும் ஓர் உபகரணத்தை ஆக்குவதற்கு மாணவர் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
  உதாரணம் : தொலைக்காட்சி, வானொலிக் கருவி
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 7**

- படத்தில் காட்டியுள்ளவாறு திறந்த வெளியான ஓர் இடத்தில் 3 கோடுகள் வரைந்துகொள்க.
- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து, அவற்றில் ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்களை முதலாவது கோட்டின் மீது வரிசையாக நிற்குமாறு அறிவுறுத்துக.
- இச்செயற்பாட்டிற்குரிய சமிக்ஞைகளை வழங்குவதற்காக ஊதி ஒன்றினைப் பயன்படுத்துக.
- அதற்கமைய பின்வரும் சமிக்ஞைகளின்படி, செயற்பாடுகளில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  * முதலாவது சமிக்ஞை - தாம் நிற்கும் கோட்டின் மீது அதே இடத்தில் இருந்தவாறு ஓடுதல்
  * இரண்டாவது சமிக்ஞை - இரண்டாவது கோடு வரை ஓடுதல்
  * மூன்றாவது சமிக்ஞை - கோட்டின் மீது துள்ளிப் பாய்தல்
  * நான்காவது சமிக்ஞை - மூன்றாவது கோடு வரை ஓடுதல்




- இவ்வாறாக பின்புறம் திரும்பி, முன்பு போன்றே சமிக்ஞைகளின்படி செயற்பட்டு மீளவும் முதலாவது கோட்டை வந்தடைதல் வேண்டும்.
- வகுப்பு மாணவர் அனைவருக்கும் இச்செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 8**

**படிமுறை 1**

- மாணவரை இருவரிருவராக குழுக்களாகப் பிரிக்குக. அதில் ஒரு சோடி மாணவர்களை ஒரு மீற்றர் இடைவெளியில் இருக்குமாறு நிற்கச் செய்க. பின்னர், பின்னையது போன்ற எளிமையான உரையாடல்களில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம் : மாணவன் 1 - சற்றுப் பொறுங்கள்
  மாணவன் 2 - ஏன் கூப்பிட்டீர்கள்?
- இந்த உரையாடல் நிகழ்ந்த விதம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக. உரையாடல் தொடர்பான பின்னைய விடயங்களை விளக்குக.

  உதாரணம் :
  * உரையாடல் தெளிவாகக் கேட்டல்
  * அதற்கமைய இருவரதும் துலங்கல்கள் தெளிவாக இருத்தல்
  * இருவரது மெய்ந்நிலைகள் நன்கு தென்படல்
  * அம்மெய்ந்நிலைகளை நன்கு விளங்கிக் கொள்ள முடிதல் போன்றவை

**படிமுறை 2**

- பின்னர் அம்மாணவர்கள் இருவரையும் ஏறத்தாழ 5 மீற்றர் தூரத்தில் நிற்கச் செய்து அதே உரையாடலை நடாத்த வழிப்படுத்துக.
- அதற்கமைய முதலாவது உரையாடலைவிட இரண்டாவது உரையாடலுக்கு அதிக பிரயத்தனமும் அதிக சத்தமும் தேவைப்பட்டது என்பதை மாணவர்க்கு வலியுறுத்துக.
- முதலாம், இரண்டாம் படிமுறைகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குக. பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்க.

  உதாரணம் :
  * முன்னைய உரையாடலைப் போன்று தெளிவாகக் கேட்க முடியாது போனமை
  * கருத்துக்களை வெளியிடுவதற்கு அதிக சப்தம் (பிரயத்தனம்) தேவைப்பட்டமை
  * முதலாவது படிமுறையின்போது முகபாவனைகள் தெளிவாகத் தெரிந்தமை
  * பிரயத்தனப்பட்டு செவிமடுக்க வேண்டியமை
- இவ்வாறாக 10, 15 மீற்றர் இடைவெளிகளில் மாணவரை நிறுத்தி உரையாடச் செய்து தொடர்ந்தும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- முதலாம், இரண்டாம் படிமுறைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடுக.

## 09 கருப்பொருள் : சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள்

**தேர்ச்சிகள் :**
- சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களையும் அவை தொடர்பாக பிராணிகள் காட்டும் எதிர்வினைகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- சுற்றுப்புறத்தில் நிகழும் வெவ்வேறு மாற்றங்களின் போது பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்வார்.
- சுற்றுப்புறச் சூழ்நிலையில் நிகழும் மாற்றங்கள் மூலம் அசைவு / இயக்கத் தேடல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெளியைப் பயன்படுத்தி களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள் :**
- மழைக்கு முன்னரும் மழைக்குப் பின்னரும் சூழலில் நிகழும் மாற்றங்களை ஒப்பிடுவார்.
- வெயில், காற்று ஆகியன காரணமாக சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களுக்குப் பிராணிகள் காட்டும் எதிர்வினைகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகளை இனங்கண்டு கூறுவார்.
- இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்களை / செல்வாக்குகளை அறிக்கைப்படுத்துவார்.
- சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களைச் சித்திரமாக வரைவார்.
- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களின்போது பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்
- சுவாசச் செயற்பாடுகள் மூலம் வெவ்வேறு பொருள்களை வானில் மிதந்து செல்லச் செய்வார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- மழைமூட்டமான வானிலை உள்ள ஒரு தினத்தில் பின்வருமாறு வினாக் கேட்டவாறு மழை தொடர்பாக மாணவரின் அனுமானங்களைக் கலந்துரையாடுக.
  உதாரணம் : * இன்று மழை பெய்யுமா?
  * ஏன் அப்படிச் சொல்றீங்க?
  * மற்றைய நாள்களை விட இன்றைய நாளில் காணப்படும் வேறுபாடு என்ன?
- பின்பு மழைக்கு முன்னரும் மழையின் பின்னரும் சுற்றுப்புறத்தை அவதானிப்பதற்குப் பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தைத் தெரிவுசெய்து கொள்க.
- மழைக்கு முன்னர் நிலத்தின் தன்மையை அவதானிக்கும்போது பின்வரும் விடயங்களை வலியுறுத்தியவாறு மாணவருடன் கலந்துரையாடுக.
  * மழைக்கு முன்னர் சூழலில் ஒளியில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டது?
  * ஒளி குறைந்ததாயின் அது ஏன் நிகழ்ந்தது?
  * சூழலில் காணப்பட்ட சூட்டுக்கு / வெப்பத்திற்கு என்ன நடந்தது?
  * காற்று வீசுவது எவ்வாறு நிகழ்கிறது?
  * மழைக்கு முன்னர் நிலத்தின் தன்மை எவ்வாறானது?

**செயற்பாடு : 2**
- மழையின் பின்னர் சூழலை அவதானிக்குமாறு மாணவருடன் களப் பிரயாணம் செல்ல ஒழுங்குகளைச் செய்க.
- இக்களப் பிரயாணத்தின்போது சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு கொள்க.
- மழையின் பின்னர் சூழலில் காணப்படும் தன்மை பற்றிக் கலந்துரையாடுக.
  உதாரணம் : * சூடு எவ்வாறானது?

    * வெளிச்சம் எவ்வாறானது?
    * காற்று இன்னும் வீசுகிறதா? அல்லது அவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?
    * நிலத்தில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது?
        - நீர் தேங்கியுள்ள இடங்கள்
        - நீர் பாய்ந்தோடியுள்ள இடங்கள்
        - மண் தேங்கியுள்ள இடங்கள்
        - மண் கழுவிச் செல்லப்பட்டுள்ள இடங்கள் போன்றவை

- நில மேற்பரப்பில் உள்ள மண்ணைச் சற்றுத் தோண்டி மண்ணின் தன்மை தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- அதற்கமைய மழைக்கு முன்னர் இருந்த நிலைக்கும் மழையின் பின்னரான நிலைக்கும் இடையேயுள்ள மாற்றங்களை அவதானிப்புகளின் வழியே மாணவருடன் கலந்துரையாடுக.
- மழைக்கு முன்னர், மழை பெய்யும் வேளை, மழையின் பின்னர் ஆகிய சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக. அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.

**செயற்பாடு : 3**

- நன்கு சூரிய ஒளி உள்ள உலர்வான வானிலை உள்ள ஒரு தினத்தில் அந்நாளின் சில சந்தர்ப்பங்களில் பாடசாலைத் தோட்டத்தில் களப் பிரயாணம் செய்க.
- அவ்வொவ்வொரு சந்தர்ப்பத்திலும் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அங்கு பின்வருவன எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஒப்பீட்டு ரீதியில் தேடியறிய மாணவர்க்கு ஆர்வமூட்டுக.
    * சூழலில், காலையில் பனித்துளிகள், புல், இலைகளில் நீர்த் துளிகள் / ஈரம்
    * சூழலில், ஒளியின் அளவில் வேறுபாடுகள் உள்ளனவா?
    * வெப்பத்தில் / சூட்டில் வேறுபாடு ஏற்பட்டுள்ளதா?
    * அதிக குளிர் உணரப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
- மாணவரது அவதானிப்புகளை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக. அதற்கமைய நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சூழல் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருக்கும் என்பதைக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 4**

- நன்கு சூரிய ஒளி கிடைக்கும் ஒரு தினத்தில் சிறிய மரக்கட்டை, சிறிய கருங்கல் துண்டு, இரும்புத்துண்டு, சிறிதளவு மணல் ஆகியவற்றைச் சிறிது நேரம் வெயிலில் வைத்து அவற்றுக்கு யாது நிகழும் என அவதானிக்க மாணவரை வழிப்படுத்துக.
- இரும்பு போன்றவை விரைவாகவும் அதிகமாகவும் வெப்பமேறும். மரக்குற்றி போன்றவை குறைவாக வெப்பமடையும் என்பதை அவதானிப்பு மூலம் இனங்காண வழிப்படுத்துக.
- அந்தந்தப் பொருள்கள் வெவ்வேறு அளவுகளில் வெப்பமேறியுள்ள விதத்தை ஒப்பிட்டு, மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவரது அனுபவங்கள் மூலம் நாளாந்த வாழ்க்கையில் தேவைகளுக்காக சூரிய ஒளி பயன்படும் விதத்தைக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 5**

- காற்று வீசுகின்ற ஒரு தினத்தில் சூழலில் நிகழும் மாற்றங்களை அவதானிப்பதற்காக மாணவருடன் சூழலில் களப் பியராணம் செய்க. (மாணவரது பாதுகாப்புத் தொடர்பாக கவனஞ் செலுத்துக.)
- சுற்றுப்புறச் சூழலில் மரங்கள், இலைகள் அசையும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
- அவை அவ்வாறு அசைவதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம் என வினவுக.
- காற்று காரணமாக அவை அசைகின்றதா என்பதையும் காற்றின் வேகத்தின்படி அவை அசைவதில் வேறுபாடுகள் ஏற்படுமா என்பதையும் விளக்குக.
- மரங்களில் இலைகள், கிளைகள் அசைவதை அவதானித்து காற்று வீசும் திசையை இனங்காண முடியுமா எனத் தேடிப்பார்க்க.

- காற்று வீசும் திசையை இனங்காண்பதற்காக மாணவரை பின்வருமாறு செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
    * பஞ்சு, இறக்கை அல்லது இலைகள் போன்ற பொருள்களை வானில் எறிந்து அவை வானில் செல்லும் திசையைக் கண்டறிக.
    * ஊதுபத்தியினைக் கொளுத்தி நிறுத்தி அதன் புகை செல்லும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
    * கடதாசியினால் சில கொடிகள் செய்து அவற்றை ஈர்க்குகளில் அல்லது வேறு குச்சிகளில் இணைத்துக்கொள்க. சில பாத்திரங்களில் மணல் நிரப்பி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கொடி வீதம் நிறுத்தி வைத்து அப்பாத்திரங்களை வெவ்வேறு இடங்களில் வைக்குக. எல்லா இடங்களிலும் கொடிகள் ஒரே திசையில் அசைகின்றதா என்பதை அவதானிக்குமாறு வழிப்படுத்துக.

**செயற்பாடு : 6**

- சுற்றுப்புறத்தில் நன்கு காற்று வீசும் ஒரு சந்தர்ப்பத்தில் மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்க.
- கண்களை மூடி காற்றில் மரங்கள் அசையும் ஒலியைச் (சலசலப்பை) செவிமடுக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- காற்று வீசும்போது மரஞ்செடி கொடிகள் அசையும் விதத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- அசைவு தேடல் செயற்பாடுகள் மூலம் அசைவுகளைப் போலச் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உதாரணம் : * யாருக்கு காற்றில் அசையும் மரங்கள் போன்று அசைய முடியும்?
    * மழையின் பின்னர் சூழலின் ஒளியின் அளவுக்கு என்ன நடந்தது?யாரும் மழைக்கு முன்னர் பறவைகள் பறந்து செல்வது போல பறந்து செல்ல முடியும்?
    * யாருக்கு முகில்கள் போல மிதந்து செல்ல முடியும்?
- காற்று வீசும்போது உடலால் உணரப்படும் மாற்றத்தைக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- காற்று வீசும் சந்தர்ப்பத்தில் காற்று வீசும் திசையிலும் அதற்கு எதிர்த் திசையிலும் ஓடச் செய்து உணரப்படும் வேறுபாட்டை ஒப்பிட்டு உரையாடுக.

**செயற்பாடு : 7**

- சுவாசச் செயற்பாடு நன்கு நிகழ உதவும் பின்வருவன போன்ற பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துக. அதற்காக பஞ்சு, இறக்கை, எருக்கலை வித்து போன்ற காற்றில் மிதந்து செல்லத்தக்க பொருள்களைக் கொண்டு வருமாறு மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- சுத்தமான காற்றோட்டம் கிடைக்கும் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க.

- மூக்கினால் ஆழமாக மூச்சு வாங்கி, கைகளை மேலே உயர்த்துமாறும் வாயினால் மூச்சை வெளிவிட்டு கைகளைக் கீழே விடுமாறும் கூறுக.
- இப்பயிற்சியைச் சில தடவைகள் செய்விக்குக.
- பின்னர், காற்றில் மிதந்து செல்லச் செய்வதற்காக கொண்டு வந்த பொருள்களை மாணவர்க்கு வழங்கி, அவற்றை உள்ளங்கையில் வைத்து வாயினால் ஊதி வானில் அதிக நேரம் வைத்திருக்க முயற்சிக்குமாறு மாணவர்க்குக் கூறுக.
- பொருள் கீழே விழாதவாறு அதிக நேரம் வானில் வைத்திருக்கும் பிள்ளையைப் பாராட்டுக.

**செயற்பாடு : 8**

- பின்வரும் சந்தர்ப்பங்களுள் பகல் வேளையில் அவதானிக்கத்தக்கவற்றைப் பாடசாலையிலும் அதிகாலையிலும் மாலையிலும் அவதானிக்கத்தக்கவற்றை வீட்டிலும் அவதானிக்க வழிப்படுத்துக.


  உதாரணம் : * அதிகாலையில் பறவைகள் உணவு தேடிச் செல்லல்
    * அதிகாலையில் சேவல் கூவுதல்
    * மாலையில் பறவைகள் கூடுகளை நாடிச் செல்லல்

* இரவில் வௌவால்கள், ஆந்தைகள் சஞ்சரித்தல்

- சுனாமி நிகழ முன்னர் பிராணிகள் தரையை நோக்கி ஓடிச் சென்ற நிகழ்வுகளை மாணவர்க்குக் கூறுக.
- காலை வேளையிலும் மாலை / இரவு வேளையிலும் விசேடமாக காணப்படும் பிராணிகள், அவற்றின் நடத்தைகள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.
- சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களுக்கு சில பிராணிகள் நேரகாலத்துடன் எதிர்வினை காட்டுகின்றமையை எடுத்துக்காட்டுக. அவ்வாறான நிகழ்வுகள், அனுபவங்களை வளர்ந்தோரிடம் வினவி அறிந்து வருமாறு மாணவரை வழிப்படுத்துக. பிரதேசத்திற்கு அமைவாக மாணவர்க்குப் பொருத்தமானவாறு உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 9**

- காற்றின் விசையால் இயங்கக்கூடிய காற்றாடி ஒன்றைத் தயார்செய்யும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக.
  தேவையான பொருள்கள் :
  - தென்னை ஓலைகள் / நீளமாக வெட்டப்பட்ட டிமை தாள் கீலங்கள்
  - ஈர்க்குகள்
- 30 cm நீளமும் 3 cm அகலமும் கொண்ட பட்டிகளைத் தயார்செய்து கொள்க.
- படத்தில் காட்டியவாறு காற்றாடி ஒன்றை அமைத்து ஈர்க்கினில் பொருத்திக் கொள்க.
- காற்றின் விசையால் இயக்க சந்தர்ப்பம் வழங்குக.




**செயற்பாடு : 10**

- அதிக மழையும் வேகமான காற்றும் உள்ள வானிலை காணப்படுமாயின் ஏற்படத்தக்கவை பற்றி மாணவரிடம் வினவுக.
- அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவர்க்கு அனுபவங்கள் உள்ளதாயின் அவற்றை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அதிக மழை, வேகமான காற்று காரணமாக இடர்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்கள் / ஒளிப்படங்கள் / காணொளிகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி அவ்வாறான சந்தர்ப்பங்களில் சூழலில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
  உதாரணம் : * மரமொன்று சரிந்து வீழ்ந்து பாதையைத் தடை செயத ஒரு சந்தர்ப்பம்
  * வீட்டுக் கூரை காற்று காரணமாக சேதமடைந்த ஒரு சந்தர்ப்பம்
  * வெள்ளம் ஏற்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம்
  * மண்ணரிப்பு ஏற்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம்
- தமது பிரதேசத்தில் கடந்த காலத்தில் அவ்வாறான அவசர சூழல் நிலைமைகள் ஏற்பட்டனவா என மாணவரிடம் வினவுக.
- அவ்வாறான சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் பற்றி மாணவரிடம் வினவுக. அவற்றை வகுப்பில் அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறான சந்தர்ப்பங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- இயற்கை அனர்த்தங்களுக்கு / இடர்களுக்கு ஆளாகியுள்ளோர் உள்ளனராயின் அவர்களுக்கு இயன்றளவுக்கு உதவி புரிய வேண்டும் என்பதையும் அவ்வாறு செய்யத்தக்க வழிகள் பற்றியும் மாணவருடன் கலந்துரையாடுக.

## 10 கருப்பொருள் : எமது நல்வாழ்வு

**தேர்ச்சிகள் :**
- நற்பண்புகளை மதித்து அக்குணாதிசயங்களைப் பேணிவர ஆவன செய்வார்.
- பொறுப்புக்களை நிறைவேற்றி, பொதுக் கருமங்களுக்குப் பங்களிப்புச் செய்வார்.
- சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்டதிட்டங்களை மதித்துச் செயற்படுவார்.
- நற்பழக்கங்களைப் பேணிவர உதவும் ஆக்கங்கள் செய்வார்.
- உடல், உள தகைமையைப் பேணிவரத் துணையாகும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- களிப்பூட்டும் அணுகுமுறைகளைக் கையாண்டு நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார்.

**கற்றற் பேறுகள் :**
- வகுப்பறையில் ஏனையோர் தொடர்பாக மதிப்பளித்துச் செயற்படுவார்.
- ஏனையோருக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் வகுப்பறைக் கருமங்களில் ஈடுபடுவார்.
- தமது வகுப்ப மாணவரின் குணாதிசயங்களை மதிப்பார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் தலைமைத்துவப் பண்புகள் / இயல்புகளை வெளிக்காட்டுவார்.
- நாளாந்த நடவடிக்கைகளின்போது சட்டத்தை மதித்து நடப்பார்.
- நற்பழக்கங்களை எடுத்துக்காட்டும் சித்திரங்கள் / சுவரொட்டிகள் ஆக்குவார்.
- சோடி சோடியாகப் பங்குகொண்டு வெற்றி பெறக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நற்பழக்கங்கள் பற்றிக் கூறும் கதைகள், பாடல்களைப் பாடியவாறு வெளிப்பாட்டு ரீதியான நடனங்கள் / நடிப்புகளில் ஈடுபடுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- ஏனையோர் அன்புடனும் ஆதரவுடனும் உரையாடும்போது எமக்கு ஏற்படும் உணர்வுகள் பற்றி தம்மை உதாரணமாகக் கொண்டு மாணவருடன் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்களை எடுத்துக் காட்டுக.

  உதாரணம் :
  * அவ்வாறு உரையாடுவோர் மீது அன்பும் கௌரவமும் ஏற்படல்
  * அவர்கள் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதில் விருப்பம் ஏற்படல்
  * அவர்கள் ஒப்படைக்கும் யாதேனும் வேலையைச் செய்ய விருப்பம் ஏற்படல்

  ... போன்ற விடயங்கள்
- இவ்வாறாகத் தமது பெற்றார், சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள் அன்புடன் உரையாடும்போது தமது உள்ளத்தை உணரப்படுபவை பற்றி மாணவரிடம் வினவுக.
- அவர்களது அன்பும் கனிவும் கிடைக்க வேண்டுமெனின் நாம் அவர்கள் மீது அன்புடனும் கண்ணியத்துடனும் கூடிய நடத்தையைக் காட்டுதல் வேண்டும் என்பதை மாணவர்க்கு விளக்குக.
- அவ்வாறே ஏனையோருடன் அன்புடனும் கண்ணியத்துடனும் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் :
  * இன்மொழி பேசுதல்
  * தேவையான சந்தர்ப்பங்களில் 'நன்றி', 'தயவுசெய்து' போன்ற சொற்களைப் பயன்படுத்துதல்
  * ஏனையோரைப் போல செய்வதை / இழிவுபடுத்துவதைத் தவிர்த்தல்
  * எவருக்கேனும் கஷ்டம் / இடர் ஏற்பட்டுள்ள வேளையில் இயன்றளவு உதவி செய்தல்
- இவ்வாறான நடத்தைகளை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் அவ்வாறான நடத்தைகளைக் கொண்ட பிள்ளைகளை அனைவரும் விரும்புவர் எனவும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 2**

- பாடசாலையில் பொருத்தமான அமைதியான ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் சென்று சௌகரியமானவாறு அமரச் செய்க. உடலுறுப்புக்களை அமைதியாக வைத்துச் சௌகரியமாக அமர்ந்து மெல்லமெல்ல கண்களை மூடி, ஆடாது அசையாது அமைதியாக இருக்கச் செய்க.
- தெளிவாகவும் மென்மையாகவும் பிள்ளைகளை அழைத்து விளித்து, ஆசிரியைக்கும் ஏனைய மாணவர்களுக்கும் கண்ணியமளித்தவாறு நடத்தவேண்டிய விதம் பற்றி எண்ணிப்பார்க்குமாறு வழிப்படுத்துக.

  உதாரணம் : * இப்போது நீங்கள் ஆசிரியை பற்றி எண்ணுங்கள்
  * ஆசிரியையுடன் அன்பாக இருக்க என்ன செய்ய வேண்டும்? மற்றைய பிள்ளைகளோடு அன்பாக இருக்க என்ன செய்ய வேண்டும்? அது பற்றி எண்ணிப்பாருங்கள்.
  * போதுமான அளவு நேரம் அமைதியாக இருந்து சிந்திக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  * **நான், ஆசிரியை மகிழத்தக்கவாறும் நான் மகிழ்ச்சியடையத்தக்கவாறும் இருப்பில் இருப்பேன். நான் எனது வகுப்பில் ஏனைய பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சி ஏற்படக் கூடிய வகையில் இருப்பேன்.**
- இப்படி வெளிப்படுத்தலை இரண்டு தடவை அல்லது மூன்று தடவை ஆசிரியர் கூறி அதனை மாணவரிடத்தில் உறுதிப்படுத்துக.
- இவ்வாறாக மனதை இதப்படுத்தலை அல்லது அமைதிப்படுத்தலை முடிவு செய்து, கண்களைத் திறக்குமாறு மாணவர்களுக்குக் கூறுக.
- ஆசிரியருடனும் ஏனைய மாணவர்களுடனும் மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வேலை செய்யும் போது அவர்களைக் கண்ணியப்படுத்தத்தக்க நடத்தைகள் பற்றி உரையாடுக.

  உதாரணம் : * காலையில் வகுப்புக்கு வருதல்
  * வகுப்பிலிருந்து வெளியே செல்ல ஆசிரியையின் அனுமதி பெறுதல்
  * மரியாதையாக விளித்தல்
  * இன்சொல் பேசுதல்
  * ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படும் செயல்களைத் தவிர்த்தல் ... போன்றவை
- மாணவரிடத்தே உறுதிப்படுத்த வேண்டிய நல்ல பழக்கங்கள் சிலவற்றை இனங்கண்டு கொள்க.
- மாணவர் அனைவரையும் மதிப்பீடு செய்யத்தக்கவாறான அப்பழக்கங்களையும் பயனையும் எழுதிய அட்டைகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- எவராவது மாணவர் ஒரு நல்ல பழக்கத்தை வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தில் அம்மாணவருக்கு உரிய நல்ல பழக்கத்தைக் காட்டும் நிரலில் நட்சத்திரமொன்றை மாணவர் விரும்பும் ஒரு குறியீட்டை இடுக.

**செயற்பாடு : 3**

- பாடசாலைத் தோட்டத்தில் பிரயாணம் ஒன்றினை ஒழுங்குசெய்க. அக்களப் பிரயாணத்தின்போது தமக்கும் ஏனையோருக்கும் சாதகமானவையாகக் காணப்படும் இடங்களையும் பாதகமானவை யாகக் காணப்படும் இடங்களையும் சந்திக்கத் தக்கவாறாக களப்பிரயாணத்தை ஒழுங்கு செய்து தேவைப்படின் அவ்வாறான சில இடங்களை அமைத்துக் கொள்க.

  உதாரணம் : * நடந்து செல்லும்போது கால்களில் மோதத்தக்க தடைகள் உள்ள இடங்கள்
  * குப்பை கூளங்கள் சிதறி அவலட்சணமாகக் காணப்படும் இடங்கள்
  * பூச்செடிகள் வளர்க்கப்பட்டுள்ள கவர்ச்சிகரமான இடங்கள்
  * நன்கு கூட்டிச் செருக்கிச் சுத்தமாக வைக்கப்பட்டுள்ள இடங்கள்
  * நேர்த்தியாக பேணிவரப்பட்டுள்ள இடங்கள்
- சாதகமான நிலையில் காணப்படும் இடங்களுக்காக மஞ்சள் நிறக் கொடிகளுக்குப் பாதகமான நிலையில் காணப்படும் இடங்களுக்காக கரும் ஊதா நிறக் கொடிகளும் தயார்ப்படுத்திக் கொள்க.
- மாணவருடன் களப்பிரயாணம் சென்று குறித்த இடங்களில் கொடிகளை நட்டுவைக்க வழிப்படுத்துக.

- களப்பிரயாணத்தின்போது திரும்பி வரும்போது கொடிகள் நட்ட இடங்களில் சற்று நேரம் தரித்து அந்த இடங்கள் அவ்வாறு காணப்படுவதற்கான காரணங்களை வினவுக.
- களப்பிரயாணத்தின் முடிவில் மாணவருடன் உரையாடி, அவர்களது கருத்துக்களையும் துணையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மாணவருக்குப் **பொருத்தமானவாறு பேச்சு மொழியில்** வலியுறுத்துக.
    * எமக்கும் ஏனையோருக்கும் சாதகமான இடங்கள் காணப்படு வதற்கான காரணம், ஏனையோருக்குச் சாதகமானவாறு நடந்துகொள்வோர் இருத்தலாகும்.
    * எமக்கும் ஏனையோருக்கும் பாதகமான இடங்கள் அவ்வாறு காணப்படு வதற்கான காரணம் ஏனையோருக்கும் பாதகமானவாறு நடந்து கொள்வோர் இருத்தலாகும்.
- பின்னர் மாணவரை அமைதிப்படுத்தி அவர்களது மனங் கவரத்தக்க சொற்களிலும் வகையிலும் அமைந்த எண்ணிப்பாடும் வகையில் பின்வரும் வினாக்களை முன்வைக்குக.
    * வகுப்பில் ஏனையோருக்கு இடைஞ்சலாகும் செயல்கள் எதனையும் நான் செய்வதுண்டா?
    * அவை எவ்வாறான செயல்கள்?
    * அவற்றை நான் செய்யாதிருக்க முடியாதா? .... போன்றவை.
- உரத்து வாசிப்பதற்காக வகுப்பில் பின்வரும் வாசகத்தைக் காட்சிப்படுத்தி வைக்குக.
  **“நான் மற்றையோருக்கு உதவி செய்யும் ஒரு பிள்ளையாவே இருப்பேன்.”**
- அமைதியாகச் சிந்தித்துப்பார்க்கச் சந்தர்ப்பமளித்து பின் மேற்படி வாசகத்தை மாணவருடன் சேர்ந்து வாசிக்குக. அவ்வாறு மூன்று தடவை வாசித்த பின்னர், இரண்டு வாரகாலத்துக்கு காலையிலும் வாசிக்குக. வாசகத்தை தொடர்ந்தும் வகுப்பில் கட்சிப்படுத்துக.

**செயற்பாடு : 4**

- நல்ல பழக்கங்கள் பற்றிக் கூறும் தாம் எழுதிய ஒரு சிறிய பாடலை / கவிதையை பகுதிபகுதியாக ஆடிப்பாடி முன்வைக்குக.
  உதாரணம் :

  **கண்ணே மணியே**

  கண்ணே மணியே எழுந்கிடு
  காலைக் கடனை முடித்திடு
  திண்ணை மேலே அமர்ந்திடு
  தினமும் பாடம் படித்திடு

- நூல்களில் இருந்து பெற்ற இவ்வாறான பாடல்கள் / கவிதைகளை மாணவருடன் கலந்துரையாடுக.
  உதாரணம் :

  **மகிழலாம்**
  ஓடி ஓடி ஆடலாம்
  ஒன்று கூடி வாழலாம்
  பாடிப் பாடி நடிக்கலாம்
  பண்பு தன்னை வளர்க்கலாம்

- அப்பாடல்களுக்காக பொருத்தமான ஆடல், பாடல்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- அப்பாடல்களில் / கவிதைகளில் அடங்கியுள்ள நற்பழக்கங்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
- வகுப்பில் வழமையாக, தினமும் பொருத்தமானதொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு பாடலை / கவிதையைப் பாடி, அதில் அடங்கியுள்ள நற்பழக்கங்களைக் கைக்கொள்வதற்காக மாணவர் மனதில் திடசங்கற்பத்தை ஏற்படுத்துக.

**செயற்பாடு : 5**

- நற்பழக்கங்களை வெளிப்படுத்தும் சித்திரங்கள், கலந்துரையாடல்களை ஆக்குவதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- நீங்கள் ஒரு நல்ல பிள்ளையாயின் கையை உயர்த்தக் கூறுங்கள்.
- தாம் ஏன் நல்ல பிள்ளை என ஒவ்வொரு மாணவரிடமும் வினவுக.
- அவர்கள் கூறுபவற்றை மதித்துப் பாராட்டுக.
- அவர்கள் கூறிய நற்பழக்கங்களைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக.
- நல்ல பழக்கங்களைக் காட்டும் பாடல்கள் மற்றும் சித்திரங்களைச் செய்தித்தாள்கள், சஞ்சிகைகளிலிருந்து தேடி வகுப்புக்குக் கொண்டு வருமாறு மாணவர்க்குக் கூறுக.

  உதாரணம் : * நண்பர்களுக்கு உதவுதல்
  * பாடசாலை, வகுப்பு, வீடு ஆகியவற்றுக்கு உதவுதல்
  * சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க உதவுதல்
  * பிராணிகளுக்கு அன்பு / ஆதரவு காட்டுதல்
  * ஒற்றுமையாகச் செயற்படுதல்
  * வளர்ந்தோருக்கு / மூத்தோருக்கு கண்ணியம் வழங்குதல்
  * காலையில் நித்திரை விட்டு எழும்புதல் .... போன்றவற்றைக் காட்டும் படங்கள்
- மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் பிறிஸ்டல் அட்டை ஒவ்வொன்று வழங்கி, தமது குழுவினரிடம் உள்ள படங்களைப் பயன்படுத்தி “நற்பழக்கங்களைப் பழகிக்கொள்வோம்” எனும் தலைப்பில் ஒரு சுவரொட்டியைத் தயாரிக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அவற்றில் காணப்படும் நற்பழக்கங்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
- சுவரொட்டிகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.

**செயற்பாடு : 6**

- தேவையான சந்தர்ப்பங்களில் தலைமைத்துவம் ஏற்றுச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக மாணவர்க்கு கதைகள் சொல்லுங்கள்.
  உதாரணம் : வலையில் சிக்கிய (புறாக்களின்) பறவைகளின் கதை
- புத்திசாலித்தனம், குழு மீது காட்டும் அன்பு ஆகியவற்றைக் கொண்டே ஒருவர் குழுவின் தலைவராக நியமிக்கப்படுகிறார் என்பதை மாணவர்க்கு விளக்குக. மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களுள் ஒருவரைத் தலைவராக நியமிக்குக. (ஆசிரியர் செய்க.)
- அத்தலைவர் கையை அசைத்தல், துள்ளிப் பாய்தல், பாட்டுப் பாடுதல், வாத்து போன்று நடந்து செல்லல் போன்ற செயல்களில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்துக.
- தலைவர் செய்பவற்றை ஏனையோர் போலச் செய்தல் வேண்டும். பெயரிடப்பட்ட தலைவர் தாம் செய்யும் செயலை ஆசிரியரின் சமிக்ஞை கிடைத்த பின்னர் நிறுத்துதல் வேண்டும்.
- இவ்வாறாக ஏனைய மாணவர்க்கும் தலைவராகச் செயற்படச் சந்தர்ப்பமளிக்குக.
- இதனை ஒரு களிப்பூட்டும் செயற்பாடாக நடத்த ஆவன செய்க.

**செயற்பாடு : 7**

- வகுப்பறையிலும் பாடசாலையிலும் நாளாந்தக் கருமங்களை இலகுபடுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சில சட்டதிட்டங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.


  உதாரணம் : * பாடசாலையின் பிரதான மணியோசைக்கு உரிய வேளைகளில் கட்டுப்படல்
  * வகுப்புக்கு வெளியே செல்லும்போது அனுமதி பெறல்
  * வகுப்பிலிருந்து வெளியேறும்போது மாணவர்கள் வரிசையில் செல்லுதல்
- சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதால் மாணவர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள், ஏற்படும் சௌகரியங்கள் என்பவற்றைக் கலந்துரையாடுக.
- சட்டதிட்டங்களைப் பின்பற்றாமையால் மாணவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் கலந்துரையாடுக.
- அதற்கமைய பாடசாலையிலும் வகுப்பறையிலும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவதன் அவசியத்தை விளக்குக.

செயற்பாடு : 8

- தமது நண்பர்களின் நற்பண்புகளை மதிக்கும் பழக்கத்தை மாணவரிடத்தே ஏற்படுத்துக. அதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் "நிறக்கடதாசி வட்டம்" ஒவ்வொன்று வீதம் வழங்குக.
- மாணவரை வட்டமாக நிறுத்துக.
- வகுப்பில் எவருக்கும் தொல்லை கொடுக்காத தாம் மிக விரும்பும் நண்பரைத் தேடி தமது நிறக் கடதாசி வட்டத்தை அவருக்கு வழங்குமாறு மாணவர்க்குக் கூறுக.
- பின்னர், அந்தந்த மாணவனுக்குக் கிடைத்துள்ள நிறக் கடதாசி வட்டங்கள் தொடர்பாக விசாரணை செய்க.
- அதிக தொகை வட்டங்களை வைத்துள்ள மாணவரை எதிரே வருமாறு அழைக்குக.
- அம்மாணவரை அதிகமான மாணவர்கள் விரும்புகின்றமைக்கான காரணத்தை மாணவரிடம் வினவுக.
- அவரது நற்குணங்களைப் பாராட்டுக.
- மாணவர்கள் நல்லவர் எனக் கூறப்பட்ட அவருக்கு ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள கிரீடத்தை அணிவிக்குக. ஏனையோர் கைதட்டி அவரைப் பராட்டச் செய்க.
- இவ்வாறாக வகுப்பறையில் நாளாந்தம் மாணவர் செய்யும் நற்செயல்களை மதித்துப் பாராட்டி மென்மேலும் நல்லவற்றைச் செய்யத் தூண்டுக.

செயற்பாடு : 9

- நாம் தனியே செய்ய முடியாத ஒரு வேலையைச் செய்வதற்காக வேறு ஒருவரின் உதவியைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.
    * விரைவாகச் செய்ய முடிதல்
    * களைப்பு குறைதல்
    * தனியே வேலை செய்வதை விட ஏனையோருடன் சேர்ந்து செய்வதால் மகிழ்ச்சி ஏற்படல்
- வகுப்பு மாணவரை இருவரிருவராக குழுக்களாக்குக.
- ஒவ்வொரு சோடியிலும் மாணவரை A, B எனப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு மூன்று கோடுகள் வரைக.




- A எனக் குறிக்கப்பட்ட மாணவர்களை முதலாவது கோட்டின் மீது நிறுத்துக.
- B எனக் குறிக்கப்பட்ட மாணவர்களை இரண்டாவது கோட்டின் மீது நிறுத்துக.
- A மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 30 $cm$ நீளமான ஒவ்வொரு பிளாத்திக்கு குழாய்த்துண்டு அல்லது வேறு பொருத்தமான பொருள் வீதம் வழங்குக. (இவ்விளையாட்டின்போது மாணவரது பாதுகாப்புக் குறித்து கவனஞ் செலுத்துக.)
- ஆசிரியையின் கட்டளைப்படி A குழு மாணவர்கள் ஓடிச்சென்று B குழுவில் தமது இணை மாணவர்களிடம் (குழாய்த் துண்டை) பொருளைக் கொடுக்க வேண்டும். பின்னர் B குழு மாணவர்கள் மூன்றாவது கோட்டை நோக்கி ஓடிச் செல்ல வேண்டும்.
- முதலில் மூன்றாம் கோட்டை அடைந்த மாணவருக்கு (குழுவுக்கு) வெற்றி கிட்டும்.

## 11 கருப்பொருள் : எமக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள்

**தேர்ச்சிகள் :**
- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.
- சந்தை ஒன்றின் தன்மையையும் தொழிற்பாட்டையும் இனங்கண்டு அறிக்கைப் படுத்துவார்.
- தமக்குக் கிடைப்பவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் நற்பழக்கங்களைப் பேணிச் கொள்ளச் செயற்படுவார்.
- எமக்குத் தேவையான சிலவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.
- நாளாந்தம் எதிர்ப்படும் பொருள்களைக் கொண்டு பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- உடல் தகைமை வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- எமக்குத் தேவையான பொருள்கள் கிடைக்கும் இடங்களில் ஆற்றப்படும் கருமங்களை களிப்புடன் முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள் :**
- பெற்றார், வளர்ந்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றோர் எமக்கு உதவி செய்யும் விதத்தைக் கலந்துரையாடுவார்.
- எமது தேவைகளை நிறைவேற்றும் பெற்றார், மூத்தோர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் செய்யும் சேவைகள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயறபடுவார்.
- சந்தையொன்றின் செயற்பாடு தொடர்பாக தமது அனுபவங்களை விவரிப்பார்.
- தமக்குக் கிடைப்பவற்றைப் பகிர்ந்து பரிமாறிக் கொள்வார்.
- தமக்குக் கிடைப்பவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- நாளாந்த உணவிற்காக நாமே உற்பத்தி செய்துகொள்ளக்கூடியவற்றை வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வதில் பங்களிப்புச் செய்வார்.
- இயற்கையாக, சூழலிலிருந்து பெறக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தித் தயாரித்த வர்ணங்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உடலின் நெகிழ்தன்மை வளர்ச்சிக்காகச் செயற்படுவார்.
- நாளாந்தத் தேவைகள் தொடர்பான இடங்கள், ஆட்கள் சார்ந்த கவிதைகள், பாடல்கள், நடத்தைகள் / நடிப்புகளை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- எமக்கு உதவி செய்யும் வெவ்வேறு தனியாள்கள் மற்றும் அவர்கள் செய்யும் உதவிகள் பற்றிப் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடுக.
  - * எமக்கு உதவி செய்வோர் யாவர் என மாணவருடன் கலந்துரையாடுக. (பெற்றார், ஆசிரியர்கள், உறவினர்கள், சகோதர சகோதரிகள், நண்பர்கள், ஏனையோர்)
- தமக்கு உதவி செய்தல், ஒருவர் தொடர்பாகவும் அவர் செய்த உதவிகள் தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்க மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமளிக்குக.
- இக்கலந்துரையாடலின் வழியே எமது நாளாந்த வாழ்க்கையில் ஏனையோரின் உதவி தேவை என்பதையும் தாமும் இயன்ற அளவுக்கு ஏனையோரின் உதவி புரிதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துக.
- உதவி பெறும் விதம் மற்றும் அல்லது உதவி பெறுவதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு விளக்குக.

**செயற்பாடு : 2**
- சந்தையிலிருந்து வீட்டுக்கு வாங்கி வரும் பல்வேறு பொருள்களின் பெயர்ச்சுட்டிகள், சுற்றுறைகள் சிலவற்றை மாணவரைக் கொண்டு வகுப்பறைக்குத் தருவித்துக் கொள்க.

- அவற்றைத் துணையாகக் கொண்டு, எமக்கு நாளாந்த வாழ்க்கையில் தேவைப்படுபவற்றுள் சில பொருள்களைச் சந்தையிலிருந்து பெற நேரிடும் என்பதைக் கலந்துரையாடல் மூலம் விளக்குக.
- நாம் நாளாந்தம் பயன்படுத்தும் பொருள்கள், பண்டங்களின் படங்களை (உதாரணமாக உணவுகள், பான வகைகள், கறிச்சரக்குகள், காய்கறிகள், பழவகைகள், பற்பசை, சவர்க்காரம் ... போன்ற) நறுக்கி அட்டைகளில் ஒட்டித் தயார்ப்படுத்தி வைத்துக் கொள்க.
- மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரித்து சிவப்பு நிற, பச்சை நிற என இரண்டு பெட்டிகளைத் தயார்ப்படுத்தி, கடையிலிருந்து வாங்கும் பொருள்களை சிவப்பு நிறப்பெட்டியிலும் வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறும் பொருள்களைப் பச்சை நிறப் பெட்டியிலும் (தெரிவு செய்து) இடுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இரண்டு பெட்டிகளிலும் சரியான பொருள்கள் இடப்பட்டுள்ளனவா எனப் பரிசீலிக்குக.
- இச்செயற்பாட்டின் மூலம் வீட்டுத் தோட்டத்திலும் வீட்டிலும் உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய பொருள்கள் தொடர்பாக மாணவரிடம் வினவிக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 3**

- தமது வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணத்தக்க பயிர்களைப் பயிரிடுவதற்குப் பெற்றாருக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் சிறிய சாடியில் அல்லது சிறிய பாத்திரத்தில் அல்லது பாடசாலைத் தோட்டத்தில்ஓர் இடத்தில் தயார்ப்படுத்திய ஓர் இடத்தில் (செழிப்பான மண் உள்ள) பயிர் நாற்றுக்களை நாட்டச் சந்தர்ப்பமளிக்குக. தமது பெயரையும் தரத்தையும் பொருத்தமானவாறு எழுதிச் சாடியில்/ குறித்த இடத்தில் ஒட்டிவைக்க வழிப்படுத்துக.
- மிளகாய், கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணத்தக்க காய்கறி வித்துக்களை அல்லது வல்லாரை பொன்னாங்கண்ணி போன்ற நாற்றுக்களைத் தருவித்து அவற்றைச் சாடிகளில் நடுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அத்தாவரங்களுக்கு தினமும் நீர் ஊற்றிப் பராமரிக்க வழிப்படுத்துக.
- அத்தாவரங்கள் வளரும் விதத்தை வாராவாரம் அவதானித்து அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- நாளாந்தம் தேவைப்படுபவற்றை வீட்டுத்தோட்டத்தில் பயிரிட்டக் கொள்வதால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக. (உதாரணம்: சுத்தம், பணம் மீதமாதல், புத்தம்புதிய தன்மை, ....)
- இவ்வாறாக நாளாந்த உணவுக்காக, சுத்தமான, புத்தம் புதியவற்றை வீட்டுத்தோட்டத் திலேயே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுக.

**செயற்பாடு : 4**

- பிரதேசத்தில் நடத்தப்படும் ஒரு சந்தையில் வியாபார நிலையத்தில் நேரடி அனுபவங்களைப் பெறுவதற்கான மாணவருடன் களப்பிரயாணம் செய்க.
- சந்தையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தை வழிப்படுத்துக.
  * சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பண்டங்கள்
  * அவை விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள விதம்
  * பண்டங்களை வாங்குவோர் நடந்து கொள்ளும் விதம்
  * சந்தையில் பல்வேறு பொருள்கள் பொதியிடப்பட்டுள்ள விதம்
- மாணவர் பெற்ற நேரடி அனுபவங்களைக் கொண்டு அவர்கள் அறிந்த உணர்ந்த விடயங்களை வகுப்பில் அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- பாடசாலை வளவில் மாதிரிச் சந்தையொன்று நடத்தி மாணவர் ஏற்கனவே பெற்ற அனுபவங்களை மேலும் உறுதிப்படுத்த வகை செய்க.

**செயற்பாடு : 5**

- கடந்த காலத்தில் தாம் பயன்படுதிக் கழித்த பொருள்கள் தொடர்பாக மாணவரிடம் வினவுக. (உதாரணம்: விளையாட்டுப் பொருள்கள், தண்ணீர்ப் போத்தல்கள், பென்சில் கூராக்கும் உபகரணம் .... போன்றவை)
- அப்பொருள்களைக் கழித்தொதுக்கியமைக்கான காரணங்கள் பற்றி மாணவரிடம் வினவி, கலந்துரையாடுக.

உதாரணம் : * விளையாட்டுப் பொருள்கள் உடைந்து போதல்
* தண்ணீர்ப் போத்தல் உடைந்து போதல் போன்றவை

- இவ்வாறான பொருள்களைக் கொண்டு உச்ச அளவுக்குப் பயன்பெறாதது கழித்தொதுக்குவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக இக்கலந்துரையாடலின்போது மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- மேலும், தாம் பயன்படுத்திய பொருள்களைச் சரியாகவும் பாதுகாப்பாகவும் கையாள்வதன் முக்கியத்தவத்தை மாணவர்க்கு வலியுறுத்துக.

உதாரணம் : * பென்சில் - உச்ச அளவுக்குப் பயன்படுத்தல் (கையால் பிடித்துப் பயன்படுத்தக் கூடிய அளவைக் கருத்திற் கொண்டு)
* தமது புத்தகங்கள், தண்ணீர்ப் போத்தல், பாடசாலைப் புத்தகப்பை, பாதணிகள், அழிறப்பர், கத்தரிக்கோல் போன்றவற்றை வீண்விரயஞ் செய்யாது பயன்படுத்துதல் போன்றவை)

- இவ்வாறாகத் தாம் பயன்படுத்துபவற்றைச் சிக்கனமாக, கவனமாகப் பயன்படுத்தியோரைப் பாராட்டுக.

**செயற்பாடு : 6**

- பகிர்ந்து பரிமாறிக் கொள்வதன் (தயாள குணத்தின்) முக்கியத்துவத்தையும் அதன் மூலம் தமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி பற்றியும் மாணவருடன் உரையாடுக.
- இந்த உரையாடலின்போது தமக்குத் தேவையானவற்றை சிலவேளைகளில் ஏனையோரிடம் பெறநேரிடும் என்பதையும் ஏனையோரின் தேவைகளின் போது நாமும் எமது பொருள்களைப் பகிர்ந்து பரிமாறிப் பயன்படுத்துதல் அவசியம் என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் கலந்துரையாடுக.
- தம்மிடமுள்ளவற்றை தமது நண்பர்களுடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளத்தக்க விதத்தை மாணவருடன் கலந்துயைராடுக. (உதாரணம்: பென்சில் இல்லாத ஒரு மாணவனுக்கு தம்மிடம் உள்ள ஒரு பென்சிலைக் கொடுத்தல்)
- ஏனையோருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு பொருளையும் மகிழ்ச்சியுடன் கொடுத்தலும் இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏனையோருக்கும் கொடுத்து உதவ வேண்டும் என்பதை மாணவருக்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 7**

- இயற்கையாக நிறங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தத்தக்க பொருள்கள் பற்றி மாணவரிடம் வினவுக.

உதாரணம் : * செங்கல் தூள்
* கரி
* கறுத்தப் பூ
* பீற்றூட் கிழங்கு
* செவ்வரத்தம் பூ

- அப்பொருள்களின் தூளை/ சாற்றைப் பயன்படுத்தி, நிறங்கள் தயாரிக்கத்தக்க விதத்தைக் கையாண்டு பார்க்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அந்நிறங்களைப் பயன்படுத்தி, சேம்பமிலைக் காம்புத்துண்டு, வாழையிலைக் காம்புத்துண்டு, வெண்டிக்காய்த்துண்டு போன்றவற்றினால் வடிவமைப்புக் கோலங்கள் அமைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 8**

- உடலின் நெகிழ்தன்மையைப் பேணும் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான சில பொருள்களைச் சேகரித்துக்கொள்க.

உதாரணம்: பந்து, வளையங்கள், வித்துப்பைகள், டயர், பாய்வதற்குப் பொருத்தமான நீண்ட கயிறு .... போன்றவை.

- அவற்றைப் பயன்படுத்தி நடத்தத்தக்க அசைவு/ இயக்கச் செயற்பாடுகளைத் திட்டமிடுக.

உதாரணம் : பந்து எறிதலும் / வளையம் எறிதலும் பிடித்தலும் தாம்பு தாண்டல் (Skipping), டயரின் வழியே புகுந்து செல்லல் ... போன்றவை

**செயற்பாடு : 9**

- சந்தையில் அல்லது பண்டங்கள் வாங்கும் யாதேனும் ஓர் இடத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பாத்திரமேற்று நடிப்பொன்றினை (போலச் செய்தல்) முன்வைக்குமாறு மாணவருக்கு வழிப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம் : ஒரு வியாபாரி/ பொருள் வாங்கும் ஒருவர் .... போன்றவை
- பின்வருவன போன்ற பாடல்களுக்காக நடிப்புக்களை முன்வைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

***வாழை***

எங்கள் வீட்டுத்
தோட்டம் தன்னிலே
இரண்டு வாழை மரங்கள

தங்கம் போலே
மஞ்சள் நிறத்தில்
தகதகக்கும் பழங்கள்

வாழை மரத்தில்
இலைகள் பூக்கள்
வண்ணம் பச்சை சிவப்பு

வாழை மரம் போல்
இலைபோல் காய் போல்
மற்றவர்க்கு உதவுதல் சிறப்பு.
- கவிஞர்.செல்ல கணபதி

- மாணவரது முன்வைப்புக்களைப் பாராட்டுக.

## 12 கருப்பொருள் : பிரயாணம்

**தேர்ச்சிகள் :**
- பிரயாணத்தின்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்.
- பொதுப் பிரயாண சேவைகள் தொடர்பாக அறிவூட்டம் பெற்று அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.
- பிரயாணங்களின்போது இடம்பெறக்கூடிய விபத்துக்கள் / தடங்கல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- பிரயாணங்களின்போது பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- பிரயாண முறைகளை வெவ்வேறு ஊடகங்கள் மூலம் ஆக்குவார்.
- பிரயாணஞ் செய்தல் தொடர்பாக இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு பயணப் பாங்குகள் மூலம் ஆக்கபூர்வமான நடனம் / நடிப்புகளை முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள் :**
- நடக்கும்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்.
- அமர்தலிக்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்.
- நிற்றலின்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்
- நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றில் பயணஞ் செய்யும் வாகனங்களைப் பெயரிடுவார்.
- நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றில் பிரயாணஞ் செய்யும் வாகனங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கூறுவார்.
- நடந்து செல்லும்போது எதிர்நோக்கப்படும் தடைகள், விபத்துக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தித் தமக்கான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வார்.
- பயணங்களின்போது ஏனையோருக்கு வழங்கக்கூடிய உதவிகளை இனங் கண்டு, உதவி தேவைப்படுவோருக்கு உதவி செய்வார்.
- ஏனையோரிடமிருந்து கிடைக்கும் உதவிகள் தொடர்பான உடன்பாடான வகையில் எதிர்வினை காட்டுவார்.
- பிரயாணங்களுக்காகப் பயன்படுத்தும் முறைகளை எடுத்துக்காட்டும் சித்திரங்கள், மாதிரியுருக்களை ஆக்குவார்.
- சமநிலையைப் பேணியவாறு சரியாக நடந்து கொள்வார்.
- வெவ்வேறு பயணப் பாங்குகளைப் போலச் செய்து களிப்புறுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- நாம் நாளாந்தம் வேலைகளைச் செய்யும் போது வெளிக்காட்டும் வெவ்வேறு மெய்ந் நிலைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக. அவ்வாறான மெய்ந்நிலைகளை அவதானிப்பதற்காக ஒரு களப்பிரயாணம் ஒழுங்கு செய்க.
- இவ்வாறான மெய்ந்நிலைகளை அவதானிப்பதற்கான பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவு செய்து கொள்க.

  உதாரணம் : * அருகில் உள்ள ஒரு வகுப்பறை
  * மனிதர் பயணிக்கும் பெருந்தெரு/ பாதை
- அக்களப் பிரயாணத்தின்போது பின்வரும் மெய்ந்நிலைகள் மீது கவனஞ் செலுத்துக.

  உதாரணம் : * உட்கார்ந்திருக்கும் வெவ்வேறு மெய்ந்நிலைகள்
  * நிற்கும் வெவ்வேறு மெய்ந்நிலைகள்
  * பாரம் தூக்கும் போதும், பாரத்தைத் தூக்கிச் செல்லும் போதும் காட்டும் வெவ்வேறு மெயந்நிலைகள்
- அம்மெய்ந்நிலைகளைச் செய்து காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உதாரணம் : * கதிரையில், வாங்கில் அமர்ந்திருக்கும் விதம்
  * புத்தகப் பையை கதிரை மீது வைத்துக் கதிரையில் அரைவாசி மீது அமர்ந்திருக்கும் விதம் .... போன்ற மெய்ந்நிலைகள்
- அமர்தல் தொடர்பாகச் சமூகத்தில் காணப்படும் பழக்கவழக்கங்களை இனங்கண்டு அவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் : * சில சந்தர்ப்பங்களில் மூத்தோர் நின்றிருக்கும்போது தாம் அமர்ந்திருப்பது பொருத்தமற்றது என்பது

* ஆசிரியர் மற்றும் குருமாரைக் கண்டவுடன் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும் என்பது


- தவறான அமர்வு மெய்ந்நிலைகள் காரணமாக, உடலில் ஏற்படும் அசௌகரியங்கள், ஏற்படத்தக்க கோளாறுகள் போன்றவை பற்றிக் கலந்துரையாடுக. அதற்கமையச் சரியான மெய்ந்நிலைகளில் அமர்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.
- சரியாக அமர்தலின்போது பின்வரும் விடயங்களின்பால் மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
  உதாரணம் :
  * கதிரையின் நான்கு கால்களிலும் சரியாக அமர்தல்
  * கதிரைமீது கால்களை வைப்பதைத் தவிர்த்தல்
  * முன்னால் உள்ள கதிரை மீது கால்கள் இடுவதைத் தவிர்த்தல்
  * ஏனையோருக்கு பாதுகாப்பானவாறு அமர்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்
- அமரும்போது தமது ஆடையணிகளைச் சரி செய்து அமருதல் வேண்டும் என்பதை விளக்குக.
- இந்த அவதானிப்புக் களப் பிரயாணத்தின்போது நிற்கும் மெய்ந்நிலைகளை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. சரியான, தவறான நிற்கும் நிலைகளை மாணவரைக் கொண்டு செய்து காட்ட வழிப்படுத்தி சரியான நிற்கும் மெய்நிலையைப் பேணிவருவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக.
- மேற்படி சரியான, தவறான மெய்ந்நிலைகளை உள்ளடக்கிய சுவரொட்டிகள் தயாரிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.
- வகுப்பறையில் இம்மெயந்நிலைகளைத் தினமும் பேணிவருவது தொடர்பாக மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 2**

- நடத்தல் செயற்பாடுகளில் பரிச்சயம் பெறுவதற்காக, விளையாட்டு முற்றத்துக்கு அல்லது வேறு வசதிகள்உள்ள ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்க. நடத்தல் தொடர்பான பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.
  உதாரணம் :
  * சுயாதீனமாக நடந்து செல்லல் (மெல்ல, வேகமாக)
  * ஒரு கோட்டின் வழியே நடத்தல் (மெல்ல, வேகமாக)
  * இடது புறமாக/ வலது புறமாகத்திரும்பி நடத்தல் (மெல்ல, வேகமாக)
  * பாதங்களை அருகருகே வைத்து நடத்தல்
  * பாதங்களை தூரத்தூர வைத்து நடத்தல்
  * ஒருவர் பின் ஒருவராக வரிசையாக நின்று முன்னால் நிற்பவரின் தோள்களைப் பிடித்தவாறு புகையிரதம் போன்று நடந்து செல்லல்
  * கைகளை இருபுறமாகவும் நீட்டியவாறு நடத்தல்
  * யாதேனும் பாரத்தை (உதாரணம்: ஒரு புத்தகம்) தலைமீது வைத்து, கையால் பிடித்தவாறு தோளில் தொங்கவிட்டவாறு நடத்தல் போன்ற வெவ்வேறு நடத்தல் சந்தர்ப்பங்களில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 3**

- வகுப்பு மாணவரை சமமான இரண்டு குழுக்களாகப் பிரிக்குக. அக்குழுக்களை A, B எனப் பெயரிடுக.
- பின்னர், வெளியில் இடவசதி உள்ள ஓர் இடத்தில் பின்வரும் படத்திற்போன்று மூன்று கோடுகள் வரைந்து கொள்க.




- A குழு மாணவரை 1 ஆம் இலக்கக் கோட்டின் மீது நிறுத்துக.
- B குழு மாணவரை 2 ஆம் இலக்கக் கோட்டின் மீது நிறுத்துக.

- இலக்கம் 1 கோட்டின் மீது நிற்கும் மாணவர் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு புத்தகம்/ வித்துப்பை போன்ற ஒவ்வொன்று வழங்குக.
- ஆசிரியையின் சமிக்ஞைப்படி தமது தலைமீது புத்தகத்தை / வித்துப்பையை வைத்து கையால் பிடிக்காது சமநிலையைப் பேணியவாறு 2 ஆம் இலக்கக் கோட்டின்மீது தமக்குச் சமாந்தரமாக நிற்கும் மாணவன் இருக்கும் இடம் வரையில் நடந்து சென்று அவருக்குப் புத்தகத்தை/ வித்துப்பையைக் கொடுத்தல் வேண்டும்.
- பின்னர் 2 ஆம் இலக்க கோட்டில் உள்ள மாணவர்கள் அவ்வித்துப்பையை/ புத்தகத்தைத் தமது தலைமீது வைத்துக் கையால் பிடிக்காது சமநிலையைப் பேணியவாறு போட்டி முடிவுக்கோட்டை நோக்கி நடந்து செல்ல வேண்டும்.
- போட்டியின் இடைநடுவே புத்தகம்/ வித்துப்பை விழுந்துவிடுமாயின் அம்மாணவன் மீண்டும் தாம் போட்டியைத் தொடங்கிய கோட்டிலிருந்து மீண்டும் முன்னர் போன்று நடந்து செல்ல ஆரம்பித்தல் வேண்டும்.
- விரைவாகப் போட்டியை முடித்த மாணவர் சோடிகளை விசேடமாகப் பாராட்டுக. ஏனையோரையும் பாராட்டி ஆர்வமூட்டுக.

**செயற்பாடு : 4**

- மாணவர் விளையாடுவதற்காகப் பயன்படுத்தும் வெவ்வேறு விளையாட்டு வாகனங்களை வகுப்புக்கு கொண்டு வரச் செய்க.
- அவற்றைப் பயன்படுத்தி விளையாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
- அவ்விளையாட்டுப் பொருள்கள் தொடர்பாகக் கலந்துரையாடி அவற்றைப் பொருத்தமானவாறு பிரித்து வேறாக்க வழிப்படுத்துக.

  உதாரணம் : * தரையில் பயணிக்கும் வாகனங்கள்
  * நீரில் பயணிக்கும் வாகனங்கள்
  * வானத்தில் பயணிக்கும் வாகனங்கள்
- பின்னர் அவ்வொவ்வொரு வாகனத்தினதும் உள்ள குறிப்பான வித்தியாசங்களை அவதானிக்கு மாறு மாணவரை வழிப்படுத்துக.

  உதாரணம் : * சில்லுகள் உள்ளனவா? உள்ளனவாயின் எத்தனை சில்லுகள் உள்ளன?
  * சில்லுகளின் அளவு, சில்லுகளின் வடிவம், சில்லுகளின் வடிவத்தை மாற்றினால் அவ்வாகனத்தில் பயணிக்க முடியுமா?
  * வாகனங்களின் வடிவத்தில் யாதேனும் வித்தியாசம் உள்ளதா?
  * பயணிக்கும் இடத்தைப் பொறுத்து வடிவத்தின் வேறுபாடு உண்டா?
  * இவ்வாகனங்களில் கொண்டு செல்லுபவை யாவை?

  என்றவாறாக வினவி, இவைபற்றிய வேறுபாடுகளைத் தேடியறிய வழிப்படுத்துக.
- மாணவரை திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- நிலத்தில், நீரில், வானத்தில் பயணிக்கும் வாகனங்கள் போன்ற மாணவர் ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பியவாறு பல்வேறு வாகனங்கள் தொடர்பான அனுபவங்கள் கிடைக்கும் வகையில் மாறிமாறிப் பயணிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் விரும்பும் வாகனங்களைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக. அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக. மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.
- வெவ்வேறு வாகனங்களின் மாதிரியுருக்களை அமைத்து அவற்றைக் கொண்டு விளையாடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 5**

- வாகனங்கள் போன்று பயணம் செய்து களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- அதற்காக வகுப்பு மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.
- இடவசதி உள்ள ஓர் இடத்தைத் தெரிவு செய்து விளையாடுவதற்குப் போதுமான இடவசதி இருக்குமாறு நான்கு புறமாகவும் நான்கு எல்லைக்கோடுகளை அடையாளமிட்டு ஒரு குழுவினரைப் புகையிரதம் போன்று வரிசையாக நிறுத்துக. ஏனைய மாணவரை தாம் விரும்பும் இடங்களில் இருக்குமாறு இடமளிக்குக.

- புகையிரத்தின் முதலில் இருக்கும் மாணவன், ஏனைய மாணவரைப் பிடிக்க ஆயத்தமாவார். ஏனையோர் தப்பிப்பதற்காக ஓடிச் செல்வர். பிடிபட்ட மாணவரும் புகையிரதத்தின் பின்னால் இணைந்து கொள்ளல் வேண்டும்.
- இவ்வாறாக சுயாதீனமாக இருக்கும் மாணவர்கள் முடிவடையும் வரை விளையாடுதல் வேண்டும்.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து புகையிரதங்களில் எண்ணிக்கையை அதிகரித்து வியைாட்டை நடத்தலாம்.
- ஒரு குறித்த அளவு நேரத்துள் அதிக தொகை மாணவரைப் பிடித்த புகையிரதம் வெற்றி பெறும்.

**செயற்பாடு : 6**
- உடலின் சமநிலையைப் பேண உதவும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.
- இந்த விளையாட்டுக்காக, சைக்கிள்களில் இருந்து கழற்றி ஒதுக்கிய டயர், றிம் போன்ற சிலவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்க.
- வகுப்பு மாணவரை இடவசதி உள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று ஏறத்தாழ 5 பேர் கொண்ட சில குழுக்களாகப் பிரித்து பின்னர், ஒவ்வொரு குழுவுக்கும் சில டயர்கள், றிம்களை வழங்கி, அவற்றைச் சமனிலையைப் பேணியவாறு கைகளால் உருட்டிச் செல்ல வழிப்படுத்துக.
- வகுப்பு மாணவர் அனைவருக்கும் விளையாடச் சந்தர்ப்பமளிக்கும் வகையில் இச்செயற்பாட்டை நடாத்துக.

**செயற்பாடு : 7**
- நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு தேவைகளுக்காக நடந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படுவதுமுண்டு என்பதை மாணவருடன் கலந்துரையாடுக.
- அவ்வாறு நடந்து செல்லும்போது எதிர்ப்படத்தக்க தடைகள், நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாகக் அக்கலந்துரையாடலில் கவனஞ் செலுத்துக.

  உதாரணம் : * நடந்து செல்லும் பாதையில் இருக்கும் பிராணிகள் காரணமாக ஏற்படும் தடங்கல்கள்
  * பாதையைக் கடக்கும் வேளையில் நிகழத்தக்க விபத்துக்கள் ... போன்றன

- இவ்வாறான தடங்கல்கள் ஆபத்துக்களை எதிர்கொண்ட மாணவர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் எதிர்கொண்ட அனுபவங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- நடந்து செல்லும்போது நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்வதற்காக மாணவரைத் திறந்த வெளியாக ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- அந்த இடத்தை அடையப் பல்வேறு தடங்கல்களைத் தாண்டிச் செல்ல நேரிடும் வகையில் அமைக்குக.

  உதாரணம் : * நீர் நிரம்பிய குட்டை, ஒற்றையடிப்பாதை, மணல் நிரம்பிய சாக்கு உணவு (பாய்ந்து செல்வதற்காக) ... போன்றவை

- அத்தடைகளைத் தாண்டியவாறு மாணவருடன் அப்பாதையில் பாதுகாப்பாகச் செல்க.
- இவ்வாறான தடைகள், ஆபத்துக்கள் காரணமாக ஏற்படத்தக்க இடர்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் : * பிரயாணத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய முடியாமற்போதல்
  * பயணம் தடைப்படல்
  * காயம் ஏற்படல்
  * சிகிச்சை பெற நேரிடுதல்

- இதற்கமைய, எதிர்ப்படும் தடைகளையும் ஆபத்துக்களையும் தாண்டிப் பாதுகாப்பாகப் பயணஞ் செய்வது குறித்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.

**செயற்பாடு : 8**
- பயணஞ் செல்லும்போது எமக்கு ஏனையோரின் உதவி தேவையாகும் சந்தர்ப்பங்களும் ஏனையோருக்கு நாம் உதவி செய்யவேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு என்பது குறித்து மாணவர்க்கு விளக்குக. இல்லையேல் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட இடமுண்டு என்பதை எடுத்துக்காட்டுக.

- ஏனையோரிடம் உதவி பெறுவதைவிட ஏனையோருக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- பயணஞ் செய்யும்போது ஏனையோருக்கு அசௌகரியங்கள், இடைஞ்சல்கள் ஏற்படாதவாறு செயற்படல் வேண்டுமென்பதை வலியுறுத்துக.
- பயணஞ் செய்தல் தொடர்பாக பின்பவருவனவற்றைப் போலச் செய்யுமாறு மாணவரை வழிப் படுத்துக. பயணஞ் செய்யும்போது ஏனையோருக்கு இடைஞ்சல்கள், தடைகள் எற்படாதவாறு பயணிக்கும் விதம்

  உதாரணம் : * அமைதியாகப் பயணித்தல்

  * ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு பணித்தல்
- பயணிக்கும்போது ஏனையோருக்கு உதவி செய்யும் சந்தர்ப்பங்கள்

  உதாரணம் : * அமருவதற்கு ஆசனம் தேவைப்படும் ஒருவரைக் கண்டவுடன் அவருக்கு தமது ஆசனத்தை வழங்குதல்

  * பயணப்பைகள், பொதியுடன் பயணஞ் செய்வோரின் விருப்பின்படி அவரக்ளில் அப்பொருள்களைப் பொறுப்பேற்றுப் பாதுகாப்பாக வைத்திருத்தலும் திருப்பி ஒப்படைத்தலும்
- பயணிக்கும் வேளையில் ஏனையோருக்கு உதவி செய்யும் விதத்தைக் காட்டும் சித்திரங்கள் வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக. மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.
- மனிதர் பயணஞ் செய்யும் வெவ்வேறு மெய்ந்நிலைகளைக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

## 13 கருப்பொருள் : ஒளியுடன் விளையாட்டு

**தேர்ச்சிகள் :**
- ஒளி முதல்களையும் ஒளிக்கும் - கண்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் கற்றாய்வார்.
- கண்ணின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்தி நாளாந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- இயற்கையான ஒளி வேறுபாடுகளின்படி சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் ஒளியை மாற்றத்தக்க வழிகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அழகுபடுத்துவதற்காக ஒளியைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- இயற்கையான ஒளியின் செல்வாக்குகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி பயனுள்ள வகையில் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- ஒளியைக்கொண்டு செய்யக் கூடிய அபிநயங்கள் சார்ந்த களிப்பூட்டும் வெளிப்பாடு களை முன்வைபபார்.

**கற்றற் பேறுகள் :**
- யாதேனுமொன்றைப் பார்ப்பதற்காக ஒளியும் கண்ணின் பார்வையும் அவசியம் என்பதைச் சோதித்து அறிக்கைப்படுத்துவார்.
- கண்ணின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ஒளியைப் பரப்பும், குறைக்கும், அதிகரிக்கும் உத்திகளைக் கையாண்டு பார்ப்பார்.
- அழகூட்டுவதற்காக ஒளியைப் பயன்படுத்தக்கூடிய அலங்கரிப்புகளைச் செய்வார்.
- நிழலை மிதித்தல் தொடர்பான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நிழல் மூலம் வெவ்வேறு அங்க அசைவுகளை ஏற்படுத்துவதில் களிப்புடன் பங்குபற்றுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- யாதேனுமொன்றைப் பார்ப்பதற்கு ஒளியும் கண்ணின் பார்வையும் தேவை என்பதை வலியுறுத்துவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- சற்றுப் பெரிய காட்போட் பெட்டியொன்றினுள் யாதேனுமொரு சிறு பொருளை இட்டு அப்பெட்டியினுள் ஒளி புகாதவாறு மூடுக.
- பெட்டியினுள் ஒரு பக்கத்தில் சிறிய துவாரமிட்டு அதனூடாக பெட்டியினுள் உள்ள பொருளை இனங்காண முயற்சிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பெட்டியினுள் உள்ள பொருளை இனங்காண முடிந்ததா என மாணவரிடம் வினவுக.
- பெட்டியினுள் ஒளி புகக்கூடியவாறு மேலுமொரு துவாரமிட்டு உள்ளே உள்ள பொருளை இனங்காண மீண்டும் முயற்சிக்கச் சந்தர்ப்பமளிக்குக. மாணவரது கருத்துக்களை வினவுக.
- இவ்வாறாக ஒளிபுகும் துவாரத்தின் பருமனைப் படிப்படியாக அதிகரித்துப் பொருளைப் பார்க்கச் சந்தர்ப்பமளிக்குக. இதற்காகப் படிப்படியாக துவாரத்தின் பருமன் அதிகரித்துச் செல்லுமாறு தயார்படுத்திய சில பெட்டிகளையும் பயன்படுத்தலாம்.
- ஒளி நன்கு கிடைக்கும் போது யாதேனுமொன்றினைத் தெளிவாகப் பார்க்க முடியும் என்பதை உறுதிப்படுத்துக.

**செயற்பாடு : 2**
- வெண்ணிற டிமைத் தாளொன்றினைப் பலகையில் ஒட்டுக. அதன் மீது மின்சூள் ஒளியைப் பாய்ச்சி அதன் மீது யாதேனுமொரு பொருளின் நிழலை விழச் செய்க.
- மின்சூளை அணைத்து விடுக. நிழலுக்கு யாது நிகழ்ந்தது என மாணவரிடம் வினவுக.
- பின்னர் திறந்த வெளியில் சூரிய ஒளி நன்கு பதிந்துள்ள ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் சென்று, தமது நிழலை அவதானிக்க வழிப்படுத்துக. சூரிய ஒளி நேரடியாக விழாத ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் சென்று தமது நிழலை அவதானிக்குமாறு கூறுக.
- அதற்கமைய நிழல் தோன்றுவதற்கு ஒளி தேவை என்பதையும் ஒளி இல்லாதபோது நிழல் தோன்றுவதில்லை என்பதையும் மாணவர்க்கு வலியுறுத்துக.

**செயற்பாடு : 3**

- நன்கு சூரிய ஒளி படும் ஓர் இடத்தில் ஒரு தடியை / தூணை நட்டு, நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிழலின் அந்தம் காணப்படும் இடத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- நிழலின் அந்தம் அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடுவதற்காக நிறக் கொடிகள் சிலவற்றைப் பயன்படுத்துக.
- அதற்கமைய வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சூரியனின் அமைவின்படி, நிழலின் அளவு / நீளம் வேறுபடுகின்றமையை விளங்கிக் கொள்ளச் செய்க.

**செயற்பாடு : 4**

- ஒளியை / வெளிச்சத்தை வெவ்வேறு இடங்களுக்குச் செலுத்தும் விதத்தைக் கையாண்டு பார்ப்பதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காகப் பின்வரும் பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்க.
- முகம் பார்க்கும் கண்ணாடிகள், நீர்ப் பாத்திரம், ஒளியைத் தெறிக்கச் செய்யும் பொருள்கள், ஒளியைத் தெறிக்கச் செய்யாத பொருள்கள் சில (உதாரணம் : உலோகத் துண்டுகள், சிறிய மரக் கட்டை, பிளாத்திக்கு, ... போன்றவை)
- மாணவரைச் சூரிய ஒளி உள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று மேற்படி ஒவ்வொரு பொருளின் மீதும் ஒளிபடச் செய்து அவ்வொளியை வேறோர் இடத்திற்குத் திருப்பி அனுப்ப முடியுமா எனக் கையாண்டு பார்க்க வழிப்படுத்துக.
- அதன் மூலம் ஒளியை வேறோர் இடத்திற்குத் திருப்பி அனுப்புவதற்காகப் பொருள்களை இனங்காணச் செய்க. அவற்றுள் வலிமைமிக்க பொருளாக முகம் பார்க்கும் கண்ணாடியை (தளவாடியை) அறிமுகஞ் செய்க.
- பின்னர், மாணவர்க்கு முகம் பார்க்கும் கண்ணாடிகளை வழங்கி ஆசிரியை சுட்டிக்காட்டும் இடத்திற்கும் உலோகப் பண்டத்தின் மீதும் பேசினில் உள்ள நீரின் மீதும் படுமாறு அக்கண்ணாடியைப் பயன்படுத்தி சூரிய ஒளியைத் திருப்பி அனுப்புமாறு செய்து நிகழ்பவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- எல்லா மாணவர்களும் தம்மிடமுள்ள முகம் பார்க்கும் கண்ணாடியைக் கொண்டு சூரிய ஒளியை ஒரு குறித்த இடத்தில் படச் செய்யுமாறு வழிப்படுத்தி நிகழ்பவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக. நிகழ்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுக.
- இவ்வாறாகவே மெழுகுதிரி ஒளி, மின்சூள் ஒளி, குப்பி விளக்கு ஒளி ஆகியவற்றையும் தெறிக்கச் செய்ய முடியுமா எனக் கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத்துக. மாணவரது கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 5**

- இயற்கை ஒளிகள், செயற்கை ஒளிகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உதாரணம் :

  | **இயற்கை ஒளிகள்** | **செயற்கை ஒளிகள்** |
  | --- | --- |
  | சூரிய ஒளி | மின்சூள் ஒளி |
  | சந்திர ஒளி | மெழுகுதிரி ஒளி |
  | | குப்பி விளக்கு ஒளி |

- ஒளியின் அளவைக் கூட்டியும் குறைத்தும் நேரிடும் ஒரு சந்தர்ப்பம் பற்றி மாணவரிடம் வினவுக.

  உதாரணம் : * கடுமையான சூரிய ஒளி படும் வேளைகளில் நிழல் பெறுவதற்காக
  * இருண்ட, ஒளி போதாத சந்தர்ப்பங்களில் ஒளியை அதிகரிப்பதற்காக
- இயற்கை ஒளியைக் குறைக்கத்தக்க வழிகளையும் செயற்கை ஒளியை கூட்ட அல்லது குறைக்கத்தக்க வழிகளையும் கையாண்டு பார்க்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இதற்காக ஒளியைக் கூட்டவும் குறைக்கவும் தக்கவாறான ஒரு எண்ணெய் விளக்கைப் பயன்படுத்துக. அதன் ஒளியைக் கூட்டத்தக்க விதத்தைச் சுட்டிக்காட்டுக.
- இவ்வாறாக வேறு செயற்கை ஒளியைக் கூட்டவும் குறைக்கவும் தக்க வழிகளைப் பரிசோதிக்கத்தக்கவாறு கலந்துரையாடுக.

  உதாரணம் : * திரைச்சீலை இடுவதன் மூலம் ஒளியைக் கட்டுப்படுத்தல்
  * கட்டடங்களில் கூரை இடுவதன் மூலம் ஒளியைக் கட்டுப்படுத்தல்
  * மறைப்புத்திரை மூலம் (Blinds)

* குடை மூலம்
* பயிர்ச் செய்கையின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு மறைப்புகள்

- இயற்கை ஒளியைக் கூட்டத்தக்க, குறைக்கத்தக்க வழிகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 6**

- நிழலை மிதித்தல் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- திறந்த வெளியான ஓர் இடத்தில் / திடலில் ஒரு வரையறுக்கப்பட்ட பகுதியை வேறாக்கி மாணவரைச் சோடி சோடியாகப் பிரிக்குக.
- அப்பகுதியினுள் ஒரு மாணவன் ஓடும் வேளையில் மற்றைய மாணவர் அம்மாணவரது நிழலை மிதிக்குமாறு அறிவுறுத்துக.
- நிழலை மிதித்த பின்னர் இருவரும் இடம்மாறி மீண்டும் விளையாட்டை நடாத்திச் செல்ல வழிப்படுத்துக.

**செயற்பாடு : 7**

- சூரிய ஒளி உள்ள ஒரு காலை வேளையில் தமது நிழலை நோக்கியவாறு உடலின் வெவ்வேறு பகுதிகளை அசைக்குமாறு வழிப்படுத்துக.
- பின்னர் மாணவனை இருவர் கொண்ட குழுக்களாக்குக. முன்பு போன்றே சோடியில் ஒருவர் தமது உடலைச் சந்தப்படி அசைக்கச் செய்து அந்நிழலைப் பார்த்து அதனைப் போலச் செய்யுமாறு வழிப்படுத்துக.
- இச்செயற்பாட்டை குழுவில் மாணவர் இருவரும் இடம்மாறி மீண்டும் நடத்துமாறு அறிவுறுத்துக.
- இவ்வாறாக மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரித்து அக்குழுவின் ஒரு மாணவனை முன்னே பார்த்து நிற்குமாறு அறிவுறுத்துக. அம்மாணவன் செய்யும் அசைவுகளைப் பார்த்து தன் நிழலின் சந்தத்திற்கேற்ப ஏனைய மாணவர்க்கு அசைவுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 8**

- நன்கு சூரிய ஒளி உள்ள ஒரு நாளில் மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்க.
- நிழல் அற்ற, சூரிய ஒளி நன்கு பதிந்துள்ள ஓர் இடத்தில் நின்றவாறு சூரிய ஒளி பதிந்துள்ள சுற்றுப்புறச் சூழலை அவதானிக்கச் செய்க.
- நிழல் உள்ள ஓர் இடத்திற்குச் சென்று அவ்விடத்தில் நின்றவாறு சூரிய ஒளி பதிந்துள்ள சுற்றுப்புறச் சூழலை அவதானிக்குமாறு வழிப்படுத்துக.
- இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அனுபவித்த நிலைமைகள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- அதற்கமைய கடுமையான சூரிய ஒளி வரும் போது உடலில் ஏற்படும் அசௌகரியங்கள், குறிப்பாக கண்களில் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- கடுமையான சூரிய ஒளியிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து மேலும் வலியுறுத்தியவாறு மாணவருடன் கலந்துரையாடுக.
- ஏற்கனவே தேடிப் பெற்று வைத்துள்ள ஊடுகாட்டும் தன்மையுடனான தாள்களின் ஊடாகச் சூழலை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- ஊடுகாட்டும் தன்மையுள்ள வெவ்வேறு நிறப் பொருள்களின் ஊடாகச் சூழலை அவதானிக்கும்போது அனுபவித்த களிப்பூட்டும் உணர்வை வெளிப்படுத்துமாறு ஆர்வமூட்டுக.

**செயற்பாடு : 9**

- வெவ்வேறு வடிவ வெளிச்சக் கூடுகள் ஆக்கி அவற்றுக்கு ஒளி வழங்கி நிறமூட்டுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- மாணவரது கருத்துக்களின்படி, வெவ்வேறு வடிவமுடைய வெளிச்சக் கூடுகள் அமைக்குமாறு அவர்களுக்கு ஆர்வமூட்டுக.
- ஆக்கிய வெளிச்சக்கூடுகளுக்கு ஒளியூட்டி ஒளி பரவும் விதத்தை அனுபவித்துக் களிப்புறச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

## 14 கருப்பொருள் : மனிதர் வேலை செய்யும் இடங்கள்

**தேர்ச்சிகள்** :
- சுற்றுப்புறச் சூழலில் மனிதன் சீவனோபாயத்திற்காக வேலை செய்யும் இடங்களையும் அவ்விடங்களில் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- பல்வேறு தொழில்களில் ஆற்றப்படும் வேலை மற்றும் அவ்வேலைகளின்போது பயன்படுத்தப்படும் ஆடையணிகள், உபகரணங்களை இனங்கண்டு அறிக்கைப் படுத்துவார்.
- வேலை செய்யும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் இடங்கள் சார்ந்த அசைவு களைப் போலச் செய்தல், சமநிலையைப் பேணுவதற் கான இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வேலை செய்யும் இடங்கள், அந்த இடங்களில் பயன்படுத் தப்படும் பாவனைப் பொருள்கள், உபகரணங்கள் தொடர்பாக ஆக்கங்கள் செய்வார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களைக் களிப்புடன் வெளிப்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :
- சுற்றுப்புறச் சூழலில் தனியாட்கள் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களை அறிக்கைப்படுத்துவார்.
- வேலை செய்யும் இடங்களில் பயன்படுத்தும் உபகரணங்கள், கருவிகள், ஆடையணிகள் தொடர்பான தகவல்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சமநிலையைப் பேணியவாறு வெவ்வேறு இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வேலை செய்யும் வெவ்வேறு இடங்கள் தொடர்பான சுவரொட்டிகள், சித்திரங்கள் ஆக்குவார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான பாடல்கள், கவிதைகள் பாடுவார்.
- வேலை செய்யும் இடங்களில் மனிதரின் பல்வேறு அசைவுகளைக் சந்தப்படி முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**
**செயற்பாடு : 1**
- மனிதர் நாளாந்த வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக பல்வேறு வேலைகளிலும் தொழில்களிலும் ஈடுபடுகின்றமையை விளக்கி மாணவருடன் உரையாடுக.
- அக்கலந்துரையாடல்களுக்காக படங்கள், ஓவியங்கள், ஒளிப்படங்கள், ஒலி - ஒளிப் பேழைகள், இறுவட்டுக்கள் (DVD / VIDEO) போன்றவற்றுள் தேடிப் பெறத்தக்கவற்றைப் பயன்படுத்துக.
- மாணவர்கள் இலகுவாகச் சென்றடையக்கூடிய கட்டடம் நிர்மாணிக்கப்படும் இடம் / செங்கல் உற்பத்தி செய்யும் இடம் / வயல் / சேனை / சிறிய தொழிற்சாலை (நெசவு / மர வேலை...) போன்ற குறைந்தபட்சம் இரண்டு வேலைத்தளங்களைத் தெரிவு செய்து கொள்க. வேலைத்தளத்தைப் பார்வையிடச் செல்ல முன்னர், பின்வரும் விடயங்களின் கீழ் செய்ய வேண்டியவை குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
    * வேலைத்தளத்தில் உரையாட வேண்டிய விதம்
    * வேலைத்தளத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதம்
    * தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளல்
    * ஒற்றுமையாக செயற்படுவதன் முக்கியத்துவம்
    * அவதானிக்க வேண்டியவை

உதாரணம் :
* வேலை செய்யும் சந்தர்ப்பங்களில் அணியும் ஆடைகள்
* வேலைத்தளம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதம் (உதா: கட்டடங்கள், நிலம் பண்படுத்தல், ....... போன்றவை)
* பயன்படுத்தும் உபகரணங்கள் (உதா: சுவர்ச் சுத்தியல், வாள், மண்வெட்டி, ..... போன்றவை)

* பயன்படுத்தும் பொறிகள் (உதா: தையற்பொறி, கைத்தறி, ஊது துருத்தி, .. போன்றவை)
* வேலைத்தளத்தில் மனிதர் ஈடுபடும் பல்வேறு வேலைகள்
* மனிதர் தமது பாதுகாப்புக்காகப் பயன்படுத்துபவை

போன்றவை தொடர்பாகக் கவனஞ் செலுத்துமாறு மாணவரை வழிப்படுத்துக.

- நீங்கள் அவதானித்த வேலைத்தளத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள் மாதிரியொன்றினை அல்லது அதன் ஒளிப்படம் ஒன்றினை வசதியிருப்பின் உடன் கொண்டு வருக.

**செயற்பாடு : 2**

- வேலைத்தளத்தில் கண்டவை / பார்த்தவை குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- அக்கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக வெவ்வேறாகக் கவனத்தை ஈர்க்குக.
    * வேலைத்தளத்தில் இருந்தோர் அணிந்திருந்த ஆடையணிகளின் தன்மை, நிறம், பாதணிகளின் தன்மை, ஆடையணிகளைப் பயன்படுத்துவதற்கான காரணம் எவையான இருக்கக்கூடும்? .... போன்றவை
    * வேலைத்தளம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விதம் (கட்டடங்களின் தன்மை, நிலம் தயார்படுத்தப்பட்டிருந்த விதம், கூரையின் தன்மை.... போன்றவை)
    * வேலைத்தளத்தில் மனிதர் செய்த பல்வேறு வேலைகளும் அவர்களது ஒத்துழைப்பும்
    * மனிதர் பாதுகாப்புக்காகப் பயன்படுத்திய சாலைகள்
    * எமக்காக யாதேனுமொன்றை வழங்குவதற்காக / உற்பத்தி செய்வதற்காக அவர்கள் வருத்தி உழைக்கின்றமை
    * பயன்படுத்திய கருவிகள், உபகரணங்கள் (கருவிகள் / உபகரணங்களின் தன்மை, அவை எந்த வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டது போன்றவை)
- மேலே கலந்துரையாடிய விடயங்களின்படி, வேலைத்தளம் என்பது பல்வேறு வேலைகள் செய்யப்படும் ஓர் இடமாகும் என்பதையும் அந்த இடங்களில் செய்யப்படும் வேலைகளை நாம் மதிக்க வேண்டும் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக் கூறுக.
- மாணவர் அவதானித்த வேலைத்தளங்களின் வெவ்வேறு சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 3**

- அவதானித்த வேலைத்தளத்தில் உற்பத்தி செய்யப்படுபவற்றால் எமக்குக் கிடைக்கும் பயன்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
  (உதா: நெல் / அரிசி, புடைவை, தேங்காய், தேங்காயெண்ணெய், ..... போன்றவை)
- அப்பொருள்கள் இல்லையேல் எமக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அதற்கமைய வேலை செய்யும் மனிதர்கள் எமக்குத் தேவையானவர்கள் என்னும் உணர்வு ஏற்படும் வகையில் கலந்துரையாடலை நடாத்துக.
- அவ்வாறானவர்கள் மதிப்பளித்துக் கௌரவிப்பதற்குப் பொருத்தமானவர்கள் எனும் உணர்வு ஏற்படுமாறு கலந்துரையாடுக.
- இவ்வாறு வேலை செய்யும்போது நட்பு, கூட்டுணர்வு, சட்டத்தை மதிக்கும் தன்மை, அர்ப்பணிப்பு போன்ற பண்புகளின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுக.
- அபிநயம் மூலம் சுயாதீனமாக அசைவுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- தாய், தந்தை உட்பட குடும்பத்தைச் சேர்ந்தோர் யாதேனும் வேலையில் ஈடுபடுவார்களாயின் தாமும் அவ்வேலையில் உதவி புரிவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.
- அவர்கள் எமக்காக வருத்தி உழைக்கின்றமையையும் எனவே பெற்றார் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடன் நன்மனப்பாங்குடன் செயற்பட வேண்டும் என்பதையும் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 4**

- வேலைத்தளங்களில் நிகழ்கின்ற விபத்துக்கள் தொடர்பான செய்திகள் அடங்கிய சுவரொட்டிகளை ஆக்குமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.


- அதற்கான இலகுவாகப் பெறத்தக்க படங்கள், வரைந்த சித்திரங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்க.
- அந்த வேலைத்தளத்திற்குரிய பட அட்டைகளைக் குழுக்களுக்கு வழங்கி சுவரொட்டி ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வேலைத்தளங்களை அவதானித்தவர் பெற்ற அனுபவங்களைக் கொண்டு மாணவர்கள் இலகுவாக ஆக்கக்கூடிய சில உபகரணங்களை இனங்கண்டு கொள்க.
  உதாரணம் : மண்வெட்டி, அரிவாள், மண்வாள், மண்கோலி (Shovel) போன்றவை
- கழித்து ஒதுக்கப்பட்ட பொருள்கள், சூழலில் தேடிப்பெறத்தக்க பொருள்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி அவ்வுபகரணங்களின் மாதிரிகளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 5**

- முற்காலத்தில் மனிதர் செய்த பல்வேறு வேலைகளின்போது இடையிடையே களைப்பைப் போக்கிக்கொள்வதற்காக பாடல்கள், கதைகள் போன்றவற்றைப் பாடியமையைக் கலந்துரையாடல் மூலம் விளக்குக.
  உதாரணம் : * அரிவு வெட்டும் வேளைகளில் - அரிவு வெட்டுப் பாடல்கள்
  * படகோட்டும் வேளைகளில் - படகோட்டல் பாடல்கள்
  * சுரங்க அகழ்வு வேளைகளில் - சுரங்க அகழ்வுப் பாடல்கள்
  * நாற்று நடும் வேளைகளில் - நாற்று நடும் பாடல்கள்
  * வலை இழுக்கும் வேளைகளில் - வலை இழுப்புப் பாடல்கள்
- அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் பாடியதும் மாணவர்கள் பாடத்தக்கதுமான எளிமையான சிறிய சில நாட்டார் பாடல்களைத் தெரிவுசெய்து கொள்க.
  அவற்றை மாணவர்களுடன் சேர்ந்து பாடுக.
  பாடலுக்கு ஏற்ப சைகைகள், அங்க அசைவுகளைக் காட்ட மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள். (பாடி, ஆடச் சந்தர்ப்பமளிக்குக.)

**செயற்பாடு : 6**

- வகுப்பு மாணவரை 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு ஏறத்தாழ 50 மீற்றர் தூரத்தினுள் எல்லைகளை அடையாளமிடுக.




- ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்களைப் படத்தில் காட்டியவாறு நிறுத்துக.
- படத்தில் காட்டியவாறு முதலாவது எல்லைக் கோட்டின் மீது சற்று இடைவெளி தூரத்தில் 5 புத்தகங்களையும் இரண்டாவது எல்லைக் கோட்டின் மீதும் சற்றுத் தூரத்தில் 5 வித்து உறைகளையும், மூன்றாவது எல்லைக் கோட்டின் மீது சம அளவு நீர் அடங்கியுள்ள 5 பாத்திரங்களையும் வைக்குக.
- ஆசிரியர் சைகை வழங்கியவுடன் விளையாட்டை ஆரம்பிக்குக. அதற்கமைய மாணவர்கள் முதலாவது எல்லைக் கோடு வரை ஓடிச்சென்று அங்குள்ள புத்தகங்களுள் ஒன்றை எடுத்து தலை மீது வைத்து கைகளால் பிடிக்காது, இரண்டாவது எல்லைக் கோடு வரையில் செல்ல வேண்டும்.

- இரண்டாவது எல்லைக் கோட்டின் மீது தாம் கொண்டு வந்த புத்தகத்தை வைத்து அங்கு உள்ள வித்து உறைகளுள் ஒன்றை எடுத்து தலை மீது வைத்து (கைகளால் பிடிக்காது) மூன்றாவது எல்லைக்கோடு வரை செல்ல வேண்டும்.
- தாம் கொண்டு வந்த வித்து உறையை மூன்றாவது எல்லைக் கோட்டின் மீது வைத்து, அங்கு உள்ள நீர்ப் பாத்திரத்தில் ஒன்றை எடுத்துப் பிடித்தவாறு அதில் உள்ள நீர் சிந்தாதவாறு இரண்டு கைகளாலும் முடிவுக் கோடு வரையில் செல்ல வேண்டும்.
- விளையாட்டின்போது சமநிலை அற்றுப்போய் புத்தகமோ, வித்து உறையோ விழுந்து விடுமாயின் அவர் மீண்டும் குறித்த தொடக்க எல்லைக்குச் சென்று மீண்டும் பயணத்தைத் தொடங்குதல் வேண்டும்.

  உதாரணம் : ஒருவர் இரண்டாவது எல்லைக் கோட்டில் இருந்து மூன்றாவது எல்லைக் கோட்டை நோக்கிச் செல்லும்போது வித்து உறை விழுந்துவிட்டால் அவர் மீண்டும் இரண்டாவது எல்லைக் கோட்டிற்குச் சென்று விளையாட்டைத் தொடர வேண்டும்.
- விளையாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, விரைவாக முடிவுக்கோட்டை அடையும் மாணவர்களைப் பாராட்டுக. ஏனையோருக்கு மேலும் சிறப்பாக விளையாட ஆர்வமூட்டுக.

## 15 கருப்பொருள் : சுற்றுப்புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்கள்

**தேர்ச்சிகள்** :
- சூழலின் பல்வகைமைப்படி தாவரங்கள் (நாற்றுகள், பூண்டுகள்) வளரும் விதத்தையும் உயிரினங்களின் செயற்பாடுகளையும் அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சூழலில் வெவ்வேறு இடங் களில் மனிதனால் செய்யப் படும் மாற்றங்களை இனங் கண்டு அந்த இடங்களை சிறந்த இடங்களாக மாற்ற ஆவன செய்வார்.
- சூழலின் பல்வகைமைக்குப் பொருத்தமான ஆக்கங்கள் செய்து சூழலின் அழகைக் காப்பார்.
- பாடசாலைச் சூழலில் வெவ்வேறுபட்ட இடங்களின் படி, அடிப்படை உடல் தகைமை வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சுற்றுப்புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்களில் காணப்படும் பல்வகைமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களுக்கு இசைவான அசைவு களைக் களிப்புடன் முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- சுற்றுப்புறச் சூழலில் வெவ்வேறு இடங்களில் உள்ள வேறுபாடுகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சுற்றுப்புறச் சூழலின் வெவ்வேறு இடங்களின் தன்மைகளின்படி, தாவரங்கள்/ நாற்றுகள் / பூண்டுகள் வளரும் தன்மையில் காணப்படும் வேறுபாடுகளை முன்வைப்பார்.
- சுற்றுப்புறச் சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகள் தொடர்பான தகவல்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சூழலின் அழகை மதித்து அதனைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்வார்.
- சுற்றுப்புறச் சூழலில் தெரிவுசெய்த இடங்களை அழகிய இடங்களாக மாற்றப் பங்களிப்புச் செய்வார்.
- சுற்றுப்புறச் சூழலின் வெவ்வேறு இடங்களிலிருந்து பெற்ற பொருள்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- இயற்கையான தடங்கல்கள் மற்றும் ஏற்படுத்திய தடங்கல்கள் உள்ள ஒரு சூழலில் நடத்தல், ஓடுதல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சூழலில் கேட்கும் ஒலிகள், நாளங்கள் மற்றும் காணும் அசைவுகளை சந்தத்திற்கு இசைவானவாறு வெளிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**
**செயற்பாடு : 1**
- வெவ்வேறு இடங்களில் பூண்டுகள்/ தாவரங்கள் வளரும் விதத்தில் உள்ள வேறுபாடுகளை இனங்காண்பதற்காகப் பாடசாலைச் சுற்றுப்புறச் சூழலில் அமைந்துள்ள பொருத்தமான ஓர் இடத்தை அவதானிப்பதற்காக மாணவருடன் களப்பிரயாணம் செய்க.
- அக்களப்பிரயாணத்தின் போது பின்வரும் விடயங்களில் மாணவரது கவனத்தை ஈடுபடுத்துக.
  உதாரணம் :
  * தாவரங்கள்/ பூண்டுகள் வளரும் தன்மையை இனங்காணல்
  * தாவரங்கள் நன்கு வளந்துள்ள/ வளந்திராத இடங்கள்
  * தண்டுகள் மற்றும் வேர்களில் உள்ள வேறுபாடுகள்
  * அவதானித்த இடங்களில் உள்ள தாவரங்கள் ஒரு வகையை சேர்ந்தவையா இல்லையா
- தெரிவு செய்த இடங்களில் மண்ணின்தன்மையை இனங்காணல்
  * கற்கள் உள்ள / கற்கள் இல்லாத
  * மணல் உள்ள/ மணல் இல்லாத
  * மண்ணின் இளக்கம்/ இறுக்கமான தன்மை
  * மண்ணின் உலர்வான/ ஈரலிப்பான தன்மை
- மேற்படி தகவல்களைக் கொண்டு அந்தந்த இடங்களில் காணப்படும் வேறுபாடுகளின்படி தாவரங்கள்/ பூண்டுகள் வளருவதில் வேறபாடுகள் உண்டா என மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 2**

- சுற்றுப்புறத்தில் வெவ்வேறு இடங்களின் வேறுபாடுகளின்படி அவற்றின் குறிப்பாக சஞ்சரிக்கும் பிராணிகளை இனங்காண்பதற்காக அவதானிப்பு நடத்துவதற்குப் பொருத்தமாக சில இடங்களைத் தெரிவு செய்து கொள்க.
- மாணவரை அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்க.
- அந்த இடங்களில் வாழும் பிராணிகள் தொடர்பாகப் பின்வரும் தகவல்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உதாரணம் : * அந்தந்த இடங்களில் சஞ்சரிக்கும் பராணிகள் எவை?
  * அவற்றின் உடலின் தன்மை எவ்வாறானது? (நிறம், வடிவம் ....)
  * நடந்துகொள்ளும் விதம் (தனியாக, கூட்டாக ...)
- மாணவர் அவதானித்த தகவல்கள் தொடர்பாக உரையாடுக. அதற்கமைய இடத்துக்கு அமைய அங்கு சஞ்சரிக்கும் பிராணிகள் வேறுபடுகின்றமையை மாணவருக்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 3**

- தமது பாடசாலைச் சுற்றுப்புறத்தை அவதானிப்பதற்காக மாணவருடன் களப்பிரயாணம் செய்க.

  உதாரணம் : * நிழலான இடங்கள்
  * அதிக சூரிய ஒளிபடும் இடங்கள்
  * மலசலகூடங்கள் அமைந்துள்ள இடங்கள்
  * விளையாடுவதற்கு இடவசதி உள்ள இடங்கள்
  * பயிர்செய்கை பண்ணப்பட்டுள்ள இடங்கள்
- மாணவர் அவதானித்த இடங்களுள் அவர்கள் மிக விரும்பும் மற்றும் விரும்பாத இடங்கள் எவை என அவர்களிடம் வினவுக. அவ்வொவ்வொரு இடத்தையும் விரும்புவதற்கும் விரும்பாமைக்கும் காரணங்களை வினவிக் கலந்தரையாடுக.
- மாணவர் குறிப்பிட்ட அவர்கள் விரும்பும் அழகிய இடங்களைப் பாதுகாப்பதற்காக நாம் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் உரையாடுக.

  உதாரணம் : * அந்த இடங்களில் குப்பை கூளங்களைக் கொட்டுவதைத் தவிர்த்தல்
  * அந்த இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க உதவி செய்தல்
- மாணவர் விரும்பாத ஓர் இடத்தை இனங்கண்டு அந்த இடத்தையும் விருப்புக்குரிய இடமாக மாற்றுவதற்காகச் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் வினவுக.

  உதாரணம் : * விளையாட்டுத்திடல் / மைதானம் - துத்திரித்தாவரங்களைப் பிடுங்கி நீக்குதல்
  * குப்பை கொட்டும் இடம் - குப்பைக் கூடைகள் வைத்தல்
  * புல் வளர்ந்துள்ள இடங்கள் - புல்லைப் பிடுங்கி நீக்குதல்
  * பாசி படிந்துள்ள / வளர்ந்துள்ள இடங்கள் - வளர்ந்தோரின் உதவியுடன் அவற்றைச் சுரண்டிக் கழுவிச் சுத்திகரித்தல்
- மாணவர் முன்வைத்த யோசனைகளைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தத் திட்டமிடுக.

  உதாரணம் :

  (பின்வரும் உரையாடல்களைப் பாத்திரமேற்று முன்வைப்பதில் மாணவரை ஈடுபடுத்துக.)


**நுளம்பும் பிள்ளையும்**

| | | |
|---|---|---|
| நுளம்பு 1 | : | இன்று எனக்கு முட்டையிட நல்ல இடம் கிடைத்துள்ளது. |
| பிள்ளை 1 | : | பாடசாலையில் கண்ட கண்ட இடங்களில் குப்பை கொட்டுவதால் டெங்கு நுளம்பு பரவும். |
| நுளம்பு 2 | : | இதே வருகிறார் எனக்கு வயிறு புடைக்க உணவு |
| பிள்ளை 2 | : | நாங்கள் இந்த நிர் நிரம்பிய தகரப்பேணிகள், பிளாத்திக்கு, இலைகளை அப்புறப்படுத்துவோம் |
| நுளம்பு 1 | : | ஐயோ, இனி நான் எங்கே போய் முட்டை இடுவேன்! |

- மாணவர் பெரிதும் விரும்பும் இடத்தைச் சித்திரமாக வரையுமாறு அறிவுறுத்துக.
- மாணவரது முன்வைப்புகளை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 4**

- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- இடவசதி உள்ள ஓர் இடத்தில் மாணவரை அழைத்துச் சென்று மாணவர் குழுக்களை வெவ்வேறாக வட்டமாக நிறுத்துக.
- ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொருவரை படத்தில் உள்ளது போன்று வட்டத்தின் மத்திக்கு வருமாறு அறிவுறுத்துக.



- குழுவுக்கு ஒன்று வீதம் விதந்துரைகள் வழங்குக. வட்டத்தின் மத்தியில் இருக்கும் மாணவனுக்கும் வட்டத்தில் நிற்கும் மாணவருக்கும் இடையே 2 மீற்றர் தூரம் இருப்பது போதுமானது)
- வட்டத்தின் மத்தியில் இருக்கும் மாணவனின் கையில் வித்துப் பையை வழங்குக.
- அம்மாணவனைச் சுற்றி ஒரு சிறு வட்டம் வரைந்து விளையாட்டின்போது அவ்வட்டத்திற்கு வெளியே வருதலாகாது என அறிவுறுத்துக.
- மத்தியில் இருக்கும் மாணவன் அவ்வித்துப்பையை வட்டத்தில் நிற்கும் மாணவரை நோக்கி எறியுமாறும் அதனைப் பிடிக்கும் மாணவன், அவ்வித்துப்பையை மீண்டும் வட்டத்தின் மத்தியில் இருக்கும் மாணவனுக்கு எறியுமாறும் அறிவுறுத்துக.
- இவ்வாறாக மாணவர் அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டை நடத்துக.
- மற்றைய மாணவர்களுக்கும் வட்டத்தின் மத்திக்கு வந்து செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளித்தவாறு செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்திச் செல்க.
- வட்டத்தின் மத்தியில் இருக்கும் மாணவனுக்கும் மற்றைய மாணவருக்கும் இடையிலான தூர அளவை மாற்றியவாறு செயற்பாட்டை நடத்துக.

**செயற்பாடு : 5**

- பல்வேறு ஒலிகள் எழுப்பப்படும் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க.
- அந்த இடத்தில் சுற்றுப்புறத்தைக் கவனமாக அவதானிக்குமாறு மாணவர்க்கு அறிவுறுத்துக.
- அவதானிக்கும்போது மரஞ்செடிகொடிகளும் அவற்றின் இலைகளும் அசையும் விதம், பிராணிகளின் நடத்தை போன்றவற்றின்பால் மாணவரின் கவனத்தைத் திருப்புக.
- அவதானிப்பின் போது கண்ட அசைவுகளைப் போலச் செய்யுமாறு சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் அனைவருக்கும் கண்களை முடிக்கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- சுற்றுப்புறத்தில் கேட்கும் ஒலிகளை நன்கு செவிமடுக்குமாறு கூறுக.
  உதாரணம் : * வாகனங்களின் ஒலிகள்
  * பிராணிகளின் ஒலிகள்
- மாணவர்க்கு கண்களைத் திறக்குமாறு கூறுக.
- கண்களை மூடிக்கொண்டிருந்தபோது தமக்குக் கேட்ட ஒலிகள் எவை என அனுமானித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 6**

- சுற்றுப்புறச் சூழலில் தேடிப்பெறத்தக்க வெவ்வேறு நிறமுள்ள தாவர இலைகளை வகுப்பறைக்குக் கொண்டு வருக.
- மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- குழுவுக்கு ஒன்று வீதம் பிரிஸ்டல் அட்டை வழங்குக.
- அதில் தாம் சூழலில் கண்ட யாதேனும் ஓர் உருவத்தின் புறவரிப்படத்தை வரையுமாறு கூறுக.
  உதாரணம் : * பூச்சாடி * தாவர இலை
  * பூ * பப்பாசிப்பழம்
- சேகரித்த தாவர இலைகளைக் கொண்டு அப்புற வரிப்படத்தின் மீது கொலாஜ் (ஒட்டுச் சித்திரம்) ஆக்கமொன்று தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுக.

## 16 கருப்பொருள் : எமது உதவி தேவைப்படுவோர்

**தேர்ச்சிகள் :**
- சமூகத்தில் உதவி தேவைப்படுவோரை இனங்கண்டு உதவி செய்ய ஆவன செய்வார்.
- வெற்றி பெறுவதற்காக ஒத்துழைத்துச் செயற்படுவார்
- ஏனையோருக்கு உதவி யளிக்கும் வகையிலான ஆக்கங்கள் செய்வார்.
- பரஸ்பரம் ஒத்துழைப்பு வளர்ச்சியடைவதற்காக இயக்க / அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சமூகத்தின் வெவ்வேறு ஆட்கள் தொடர்பான உணர் தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள் :**
- பாடசாலையிலும் வீட்டிலும் உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரிவார்.
- விசேட தேவையுள்ள ஆட்கள் தொடர்பாக உணர்தன்மையுடன் செயற்படுவார்.
- ஏனையோரின் உதவியைப் பெறும்போது மரியாதையான பண்புகளை வெளிப்படுத்துவார்.
- பரஸ்பர ஒத்துழைப்புடன் மற்றுமொருவருக்கு உதவியாக அமையும் ஆக்கங்கள் செய்வார்.
- ஒத்துழைத்து நடக்க வேண்டிய கூட்டான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- ஏனையோர் தொடர்பாக உணர்தன்மையுடன் செயற்படுவதன் முக்கியத் துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வகிபாகங்களையும் நடித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
- பாடசாலையிலும் வீட்டிலும் ஏனையோருக்காகச் செய்யக்கூடிய உதவிகள் எவை என்பது தொடர்பாக மாணவரது கவனம் ஈர்க்கப்படும் வகையில் கலந்துரையாடல் நடத்துக.
- தாம் ஏனையோருக்கு உதவி செய்த சில சந்தர்ப்பங்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக. வீட்டில் செய்த உதவிகளையும் பாடசாலையில் செய்த உதவிகளையும் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- ஏனையோருக்கு உதவி செய்வதைப் போன்றே உங்களுக்கு உதவி செய்தோருக்கு பிரதி உபகாரம் செய்வதும் முக்கியமானது என்பதையும் எடுத்துக்காட்டுக.
- இவ்வாறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டிய இன்சொற்களை அறிமுகஞ் செய்க.
  உதாரணம் : தயவு செய்து .....
- இவ்வாறான இன்சொற்களை வழமையாகப் பயன்படுத்துமாறு மாணவரைப் பழக்கப்படுத்துக.
- இவ்வாறான பிரயோகங்களை உள்ளடக்கிய முன்வைப்புகளைச் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது முன்வைப்புகளை மதித்துப் பாராட்டுக.

**செயற்பாடு : 2**
- பாடசாலையிலோ வீட்டிலோ ஏனையோரின் உதவி தேவைப்படுவோர் தொடர்பாக மாணவரிடம் வினவுக.
- அவ்வாறானோருக்காக நாம் எவ்வாறான உதவிகளைச் செய்யலாம். அவ்வாறான உதவிகளை எவ்வாறு பெறலாம், எச்சந்தர்ப்பங்களில் உதவி செய்யலாம், அதற்காக வளர்ந்தோரின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறலாம் போன்ற விடயங்களுடன் மாணவருடன் உரையாடுக.
- மாணவர் வீட்டில் ஏனையோருக்கு வழங்கும் உதவிகளை வரைவதற்காக உதவிப் புத்தகம் ஒன்றைப் பேணிவர மாணவரை வழிப்படுத்துக.
- எமது உதவி தேவைப்படுவோர் மீது உணர்தன்மையுடன் செயற்பட்டு அவர்களுக்கு உதவி செய்யும் விதத்தைக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களில் மாணவரை ஈடுபடுத்துக.

**செயற்பாடு : 3**

- கண்பார்வையற்றோர், காதுகேளாதோர், பேச முடியாதோர், வேறு உடல் ஊனமுற்றோர், வயோதிபர், சக்தியற்றோர் போன்றோருக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்கள் சித்திரங்களை மாணவர்க்குக் காட்சிப்படுத்துக.
- எல்லோரும் சமமான ஆற்றல்களைக் கொண்டவர்கள் அல்லர். எனவே உதவி தேவைப் படுவோருக்கும் நாம் உதவி செய்தல் வேண்டும் என்பதையும் அவ்வாறாக நாம் செய்யக்கூடிய உதவிகள் எவ்வாறானவை என்பதையும் பற்றி மாணவரது கவனம் ஈர்க்கப்படும் வகையில் உரையாடல் நடத்துக.
- உதவி தேவைப்படுவோரை இழிவுபடுத்துதலாகாது என்பதையும் அவ்வாறானோருக்கு உதவி புரிவது எமது கடமை என்பதையம் அவ்வாறு உதவி செய்வதால் கிடைகதும் மகிழ்ச்சியும் திருப்தியும் மிக உயர்வானவை என்பதையும் எடுத்துக்காட்டுக.
- நாம் மற்றொருவரின் உதவியைப் பெறும்போது அல்லது உதவி கோரும்போது மரியாதையாக நடந்து கொள்வதன் முக்கியத்துவம் பற்றியும் அது நல்ல ஒருவரின் நடத்தைப் பண்பாடு என்பதையும் அவ்வாறான இயல்புகளைச் சிறுபராய முதலே வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் விளக்குக.

**செயற்பாடு : 4**

- எமது உதவி தேவைப்படும் வளர்ந்தோர் முதியோர் ஒருவருக்கு வழங்கக் கூடியவாறான வாழத்து மடலொன்று தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
  உதாரணம் : * சுகமான வாழ்வு வேண்டிப் பிராத்தித்தல் அட்டை
  * நீண்ட ஆயுள் வேண்டிப் பிராத்தித்தல் அட்டை
- தேவையான பொருள்களைத் தேடிப் பெறுக.
- இதற்காக கழித்தொதுக்கும் கடதாசி, உலர்த்திய மலர்கள், இலைகள் போன்றவற்றை பயன்படுத்தி அழகிய ஆக்கம் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் இவ்வாறான ஆக்கங்கள் செய்து அவற்றை ஏனையோருக்கு வழங்கி மகிழ்ச்சியடையச் செய்வதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு விளக்குக.
- இவ்வாறாக மேலும் ஆக்கங்கள் செய்யுமாறு மாணவர்க்கு ஆர்வமூட்டுக.


**செயற்பாடு : 5**

- ஏனையோரின் ஒத்துழைப்புடன் செய்யத்தக்க பின்வவருவன போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  உதாரணம் : படமொன்றின் சில பிரதிகளைத் தயாரித்துக் கொள்க. அப்படத்தின் ஒவ்வொரு பிரதியையும் வெவ்வேறு விதமாக ஐந்து துண்டுகளாக வெட்டுக. ஒரு படத்துக்கு துண்டுகளைத் தனித்தனியே ஐந்து உறைகளில் இடுக.
- இவ்வாறாக ஐந்து படத்தின் துண்டுகளையும் உறைகளில் இட்டுக்கொள்க.
- மாணவனைக் குழுக்களாகப் பிரித்து குழுவுக்கு ஒன்று வீதம் அவ்வுறைகளை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமக்குத் தேவையான படப்பகுதிகளை மற்றை குழுக்களிலிருந்து பெற வேண்டும். தம்மிடம் மேலதிகமாக உள்ள பகுதிகளை மற்றைய குழுக்களுக்குக் கொடுத்தல் வேண்டும் எனக் கூறுக.
- ஒவ்வொரு குழுவும் படத்தின் துண்டுகளைச் சரியாகப் பொருத்தியமைத்துப் படத்தைப் பூர்த்தி செய்த பின்னர் கைதட்டிப் பாராட்டுக.

**செயற்பாடு : 6**


- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு சில குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவையும் வரிசையாக நிறுத்தி சற்றுப் பெரிய ஒவ்வொரு பந்து வீதம் வழங்குக.
- ஆசிரியர் சமிக்ஞை வழங்கிய பின்னர் ஒவ்வொரு வரிசையிலும் முதலில் நிற்கும் மாணவன், தமது கால்களுக்கு ஊடாக இரண்டாவதாக உள்ள மாணவனுக்கு பந்தை அனுப்புதல் வேண்டும்.
- இரண்டாவது மாணவன் அவ்வாறே மூன்றாம் மாணவனுக்குப் பந்தை அனுப்புதல் வேண்டும்.
- இவ்வாறாக தொடங்கும்போது விரைவாக பந்தை இறுதியில் உள்ள மாணவனுக்கு அனுப்பிய குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

- விளையாட்டின் இறுதியில் ஒருவருக்கொருவர் உதவி செய்தவாறு கூட்டாக, ஒரே நோக்கத் திற்காகச் செயற்படும்போது வெற்றிபெறுவது இலகுவானது என்பதை ஆசிரியர் வலியுறுத்திக் குறிப்பிடுக.



**செயற்பாடு : 7**

- தொப்பிகள் சிலவற்றைப் பெறுக.
- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக. தடவைக்கு 3 அல்லது 4 குழுக்கள் வீதம் வகுப்பின் எதிரே அழைக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு மாணவர் இருவருக்கு இடையிலான தூரம் ஏறத்தாழ நான்கு மீற்றர் (4 $m$) ஆகுமாறு மாணவரை வரிசைகளில் நிறுத்துக ஒவ்வொரு குழுவிலும் முதலில் இருக்கும் மாணவனிடம் ஒவ்வொரு தொப்பி வீதம் வழங்குக.




- ஆசிரியை வழங்கும் சமிக்ஞையின்படி ஒவ்வொரு குழுவிலும் முதலாவதாக இருக்கும் மாணவன் ஓடிச்சென்று இரண்டாவதாக இருப்பவரின் தலையில் தொப்பியை அணிவித்த பின் இரண்டாம் மாணவன் நின்ற இடத்தில் நிற்றல் வேண்டும்.
- இவ்வாறாக குழுவில் இரண்டாவதாக நின்ற மாணவன் மூன்றாவது மாணவரின் தலையிலும் மூன்றாவது மாணவன் நான்காவது மாணவனின் தலையிலும் என்றவாறாக தொப்பியை அணிவித்து அந்தந்த மாணவர் நின்ற இடத்தில் நிற்றல் வேண்டும்.
- தொப்பியை அணிவித்ததன் பின்னர் முன்னைய மாணவன் செய்தது போன்றே, குறித்த இடத்தில் போய் நிற்றல் வேண்டும். இவ்வாறாக குழுவின் இறுதியில் உள்ள மாணவர் வரையில் இச்செயற்பாட்டைச் செய்க. குழுவில் இறுதியாக நிற்கும் மாணவன் தொப்பியை அணிந்து போட்டியை நிறைவு செய்யும் மாணவனை போட்டி முடிவுக் கோடுவரையில் ஓடிச் செல்ல வேண்டும்.
- போட்டி முடிவுக்கோட்டுக்கு முதலாவதாக வந்த குழு வெற்றி பெற்ற குழுவாகும்.
- இறதியில் குழுவாக ஒரே நோக்கத்துடன் செயற்படுவதால் வெற்றிபெறுவது இலகுவாகும் என்பதை ஆசிரியர் வலியுறுத்துதல் வேண்டும்.

# 3.0 செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்

## அறிமுகம்

கல்வி மறுசீரமைப்பின்கீழ், முதலாந்தர முதலே, தொடர்பாடலுக்காகவும் கிரகித்தலுக்காகவும் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்கு, நாட்டின் சகல மாணவர்க்கும் சந்தர்ப்பமளிக்க ஆவண செய்யப்பட்டுள்ளது. மூன்றாந் தரத்தில் முறைசார்ந்த வகையில் ஆங்கில மொழி கற்பிக்கத் தொடங்க முன்னர், அறிமுகஞ் செயய்ப்படும் இந்த அம்சம் செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம் எனப்படுகின்றது. இப்பொருனினால் சுட்டிக்காட்டப் படுவதற்கிணங்க, மாணவர்கள் செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரையாடலுக்காக ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. சிறப்பறிவுள்ள ஆசிரியரொருவரைக் கொண்டு முறைமையான வகையில் ஆங்கில மொழி கற்பித்தல் இங்கு எதிர்பார்க்கப்படவில்லை.

இப்பாடத்திட்டம், தேசிய கல்வி நிறுவக ஆங்கில மொழித் துறையினரால் குறிப்பாக முதலாந் தரத்தில் கற்பிக்கும் ஆசிரியரினால் கற்பிக்கத்தக்கவாறாகவும் சுற்றாடற் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கணித பாடங்களைக் கற்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றுடன் தொடர்புபடுத்திக் கொள்ளத்தக்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம் கேட்டல், பேச்சு ஆகியவற்றில் கூடுதல் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இப்புதிய அம்சத்தினை சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திலும் கணித பாடத்திலும் பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்தின் வழியே பின்வரும் பிரதான குறிக்கோள்களை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

- நாளாந்த வாழ்க்கையில் தேவைப்படும் எளிமையான சில ஆங்கிலச் சொற்களை அடிக்கடி செவிமடுக்கவும் கூறவும் செய்து சிறுபராய முதலே பிள்ளைகளை ஆங்கிலப் பதங்களின்பால் பரிச்சயப்படுத்துதல்.
- தொடர்பாடலுக்காகவும் கிரகித்தலுக்காவும் எளிமையான ஆங்கிலத்தை பயன்படுத்தப்படும் கற்றற் சூழலை வகுப்பறையிலும் அதற்கு வெளியேயும் உருவாக்குதல்.
- ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதில் மாணவரிடத்தே காணப்படும் பின்னடைவுகளை நிவர்த்தி செய்தல்.
- மூன்றாந் தரம் முதல் முறைசார்ந்த ஆங்கில மொழியை கற்பதற்காக மாணவரிடம் தோன்றத்தக்கவாறு பின்னணியை அமைத்தல்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

- மாணவர் விளையாடுவதற்காக எளிமையான ஆங்கில மொழிப்பயன்பாடு வகுப்பாசிரியரினையே அறிமுகஞ் செய்யப்படுதல் வேண்டும்.
- இதற்காக விசேட பாடவேளைகளை ஒதுக்க வேண்டிய தேவை கிடையாது.
- மாணவர்கள், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், கிணதம் ஆகிய பாடங்கள் தொடர்பான செயற்பிரிவுகளிலும் களிப்பூட்டும் வேலைகளிலும் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களிலேயே செய்றாபடு சார்ந்த ஆங்கில மொழிக்கான சந்தர்ப்பங்களை வெளிக்கொணர்ந்து கொள்ள வேண்டும்.
- செயற்பாடுகளில் ஈடுபட்டு, தமது தாய்மொழியில் கற்றல் - கற்பித்தற் செயன்முறை இடம்பெறும் சந்தர்ப்பங்களில் மாணவர் நிதமும் காணும் பொருள்களின் பெயர்களை ஆங்கில மொழியில் எளிமையோ ஆங்கில வினைச் சொற்கள் கட்டளைகள் போன்றவற்றை அறிமுகஞ் செய்யத்தக்க சந்தர்ப்பங்களை நயமாக வெளிப்படுத்த முயற்சி செய்தல் வேண்டும்.
- மாணவருடன் சுயாதீனமாக நடந்து கொள்ளும்பொது அவர்களுக்கு ஆங்கில மொழியில் வளித்தல், வாழ்த்துத் தெரவித்தல், ஆசிர்வாதித்தல் போன்றனவும் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எளிமையான வாய்மொழி மூல ஆங்கிலத்தை அறிமுகஞ் செய்யத்துணையாகக் கொள்ளலாம்.

- பிள்ளைகள் வாழும் சுற்றுப்புறத்தில் காணப்படுகின்ற நிதமும் கண்களில் படும் பொருள்கள், காதுகளில் கேட்கும் வினைச்சொற்கள், கட்டளைகள், ஆசிர்வாதகங்கள் போன்றவற்றில் உள்ளடக்கிய எளிமையான ஆங்கில சொற்களஞ்சியத்தைத் தெரிவு செய்து அச்செறர்களஞ்சியத்தை ஆசிரியருக்கும் மாணவருக்கும் சுமையாகாதவாறு மகிழ்ச்சிகரமாக அவரவர்க்கிடையே தொடர்பாடல் சந்தர்ப்பங்களைக் கட்டியெழுபிக் கொள்ளப் பொருத்தமானவாறு பயன்படுத்துவதே ஆசிரியரிடம் குறிப்பாக எதிர்பார்க்கப்படுகின்றது.
- உதாரணமாக கவனத்திற்கொள்ளத்தக்க, எளிமையான ஆங்கில மொழிச் சொற்களங்சியத்தை இதன் இறுதியில் தரப்பட்டுள்ளது. நாளாந்த வாழ்க்கையில் மாணவர்க்கு நிதமும் எதிர்படும் பொருள்களில் ஆங்கில மொழிப் பிரயோகங்களையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமான எளிய வினைச் சொற்கள், விளிப்புக்கை, கட்டளைகள் போன்றன அடங்கியுள்ளன. மாணவருக்கு நெருக்கமான சுழலின்படி இந்த சொற் களஞ்சியத்தின் புதிய சொற்களைச் சேர்ப்பதன் மூலம் அல்லது குறைப்பதன் 5லம் பொருத்மான மாற்றியமைத்துக் கொள்ளும் சதந்திரம் ஆசிரியருக்கு உண்டு. இங்கு தரப்பட்டுள்ள, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கணிதம் ஆகிய படங்களின் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன. எல்லாச் சொற்களையும் பயன்படுத்துவது எதிர்பார்க்கப்படவில்லை. மேலும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடு பாடத் தேர்ச்சிகளுக்குரியதாக முன்வைக்கப்பட்டுள்ள செயற்பாடகளையும் ஆங்கில பாடங்களையும் ஆசிரியரது விருப்பத்தின்படி மாற்றியமைத்துக் கொள்ள சுதந்திரம் உண்டு.
- அத்தோடு கணித பாடம் தொடர்பாக செயற்பாடுகள் சார்ந்த ஆங்கிலத்துக்கான சொற்களஞ்சிய மொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் சார்ந்த செயற்பாடகள் பாடத்தையும் கணித பாடத்தைக் கற்பிக்கும் போதும் பொருத்மான சந்தர்ப்பங்களில் செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலத்தைப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்குவது ஆசிரியரின் பொறுப்பாகும்.
- தேசிய கல்வி நிறுவக ஆங்கிலக்கல்வித் துறையினரால் செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்துக்காகவும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு மொடியுலம் உண்டு. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடக் கருப்பொருள்களின்படி கூட்டமாக்கப்பட்ட சொற்களஞ்சியமும் உத்தேச செயற்பாடுகளும் மேலும் அறிவுறுத்தல்களும் உதவிகளும் அதில் அடங்கியுள்ளன. ஆங்கிலமொழியல் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மொடியுல் ஆசிரியரது வேலைகளை இலகுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- சரியான உச்சரிப்புக்கான வழிகாட்டலாகவும் சரியான சந்தர்ப்பத்தில் பாடுவதற்காக உதவியாகவும் தேசிய கல்வி நிறுவக ஆங்கில மொழித்துறையனரால் தயாரிக்கப்பட்டுள்ள 1 ஆம் 2 ஆம் தரங்களுக்குரிய பாடல்களைக் கொண்ட ஒரு ஒலிப்பேழையும் உள்ளது. அந்தந்தத் தரத்திற்கான பாடல்களை வகுப்பில் பாடுவதற்காக இந்த ஒலிப்பேழையை ஆசிரியர்கள் பயன்படுத்தலாம்.
- ஆசிரியர் நாளாந்தம் பயன்படுத்தக்கூடிய வகுப்பறைப் பிரயோகங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.
- சரியாக ஆங்கில மொழிச் சொற்களை உச்சரிப்பதற்கு தொடர்பாக கவனஞ் செலுத்துக. தேவையொன்றை இதற்காக பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களதும் ஆங்கில பாட ஆசிரியை ஆலோசகரதும் உதவியை பெற்றுக்கொள்ளலாம். மேலும் பிரதேச ஆங்கில மொழி உதவு நிலையங்ளின் (Regirnal English Support Centres) சேவைகளைப் பெற்று ஆசிரியர்களின் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்வதற்கும் இந்த சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கப்படுகின்றது.

**விசேடமாகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்**

- வாய்மொழி மூல ஆங்கிலத்தை அறிமுகஞ் செய்யும் செயன்முறையின் கீழ்
  - முறைசார்ந்த ஆங்கில மொழி கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவது எதிர்பார்க்கப்பட வில்லை
  - ஆங்கில அரிச்சுவடியில் உள்ள எழுத்துக்களையோ ஆங்கிலச் சொற்களையே எழுதக் கற்பிப்பதே வாசிப்பதே எதிர்பார்க்கப்படவில்லை.
  - விசேட நூல்களைப் பய்படுத்துவதும் அவசியமன்று

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **01. We and the School** | The student will be able to<br>- Use the vocabulary relevant to the theme<br><br>- Greet someone<br><br>- Ask questions<br><br>- E.g. What's your name? | **Vocabulary :**<br><br>Principal/Vice Principal/Office/Class RoomTeacher/Children/Friend /Bell/Tap/ CanteenWell / Vase / Toilet / Library / Play ground/Main hall / Computer / Desk / Chair / Dustbin/Duster<br><br>**Structures :**<br>Good Morning!Good Morning teacher!<br>Good morning children!<br>What's your name?I'm…………………..<br><br>**Activities :**<br><br>Song1.<br><br>1. Good Morning to you//<br>Good morning dear children<br>Good Morning to you<br>Good Morning to you//<br>Good morning dear teacher<br>Good Morning to you<br><br>2. Bits of Paper //<br>Lying on the ground<br>Make the place untidy//<br>Pick them up//<br><br>**Activity 09**<br>Pass the Ball |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **02. Our Home** | Use the vocabulary relevant to the theme | **Vocabulary :**<br><br>Mother / Father / Sister / Brother / Grand Father/Grand Mother / Uncle /Aunt /Son / Daughter / Friends / Cat / Dog / Fish / Parrot /Rabbit / Clean / Rice / Knife<br><br>**Structures :**<br><br>Thank you.<br><br>You're welcome<br><br>Good Morning<br>Good Afternoon<br>Good Evening<br>Good Night<br><br>Good bye<br><br>**Activities:**<br><br><u>Song</u><br><br>Good Morning dear father, dear father, dear father<br>Good Morning dear father<br>Good morning to you<br>Good morning////<br>Good Morning dear father<br>Good morning to you<br><br>Good Morning dear mother……….<br><br>Good Morning dear brother………..<br><br>Good Morning dear sister…………….. |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **03. Animals that come into the garden** | Identify vocabulary items related to the theme | **Vocabulary :**<br><br>Garden / Dog / Cat / Birds / Cow / Crow / Cock / Hen/Butterfly / Parrot / Pigeon /Squirrel / Hand / Leg/Tail / Beak / Red / Blue /Green / Yellow / White / Black/Brown<br><br>**Structures :**<br><br>Do you have a pet?<br><br>Yes/ No<br><br>**Activities:**<br><br>Song<br><br>In my garden I see a cow<br>Moo-moo-moo-moo<br>Good morning cow<br><br>In my garden I see a hen<br>Cluck- cluck-cluck-cluck<br>This is my hen<br><br>In my garden I see a bird<br>Cheep- cheep- cheep-cheep<br>A beautiful bird<br><br>**Activity - 06**<br><br>Move like that animal<br>(rabbit, monkey, parrot) |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **04. Play with water** | Identify vocabulary items related to the theme<br><br>Use given verbs to express meaning | **Vocabulary :**<br><br>Water/Drink/Cook/Bathe/Wash/Dance / Soap/Basin / Flower /Red / Blue / Sugar / Salt<br><br>**Structures :**<br><br>I wash……………..<br><br>I eat……………<br><br>I drink………………<br><br>**Activities :**<br><br>Song<br><br>Swim, swim, swim together//<br>All in the water<br><br>Wash, wash, wash together//<br>All in the water<br><br>Bathe, bathe, bathe together//<br>All in the water<br><br>Play, play, play together//<br>All in the water<br><br>**Activity - 03**<br>Pass the water |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **05. Sinhala & Tamil New Year Season** | Use relevant vocabulary items to the theme<br><br>Express what they like | **Vocabulary :**<br><br>Paint / Polish / Wash / Clean / Curtain / Milk Rice / Sweets / Banana (Plantain) / Cake /Shirt / Sarong /Saree/ Frock /T-Shirt/ Short<br><br>**Structures:**<br><br>Mother has………..<br><br>I like……………..<br><br>**Activities:**<br><br>**Song**<br><br>Happy New Year to you<br>Happy New Year to you<br>Happy New Year dear children<br>Happy New Year to you<br><br>Happy New Year to you<br>Happy New Year to you<br>Happy New Year dear teacher<br>Happy New Year to you<br><br>**Activity - 03**<br><br>New year games |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **06. The Sky we see** | Identify vocabulary items related to the theme.<br><br>Ask question using "What" | **Vocabulary:**<br><br>Day time / Sky /Blue / White / Clouds / Clear / Sun / Orange /Red / Aero plane / Birds / Kite / Fly /Night time / Moon / Stars / Dark / Owl / Bat / Rain / Thunder / Dark<br><br>**Structures:**<br><br>What Colour is the…………………<br><br>**Activities:**<br><br>**Song**<br>I see the moon, the moon sees me<br>I see the stars, one, two, three<br><br>I see the sun, the sun sees me<br>I see the clouds, one, two, three<br><br>Birds fly in the sky sha la la la la<br>Planes fly in the sky sha la la la la<br>Kites fly in the sky sha la la la la<br>They all fly in the sky<br><br>**Activity 02**<br>Jump. Let's catch the clouds<br><br>**Activity 03**<br>Let's fly the parachute |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **07. Things we eat and drink** | Identify vocabulary items relevant to the theme<br><br>Express likes | **Vocabulary :**<br><br>Milk / Rice / Fruits / Fruit salad / Mango / Orange/Bananas (Plantain)/Apple/Pineapple/ watermelon /Papaw/Vegetables/Carrot / Beans/Beet root/ leeks/Bread /Hoppers / String hoppers/Curry/Fish/Meat /Ice cream / Breakfast / Lunch / Dinner<br><br>**Structures :**<br><br>I like……………and …………………<br><br>I eat/ drink …………….in the morning<br><br>**Activities:**<br><br>**Song**<br><br>I drink milk in the morning<br>I drink milk in the morning<br>I drink milk in the morning<br>And then I go to school<br><br>I drink tea in the morning<br>I drink tea in the morning<br>I drink tea in the morning<br>And then I go to school<br><br>**Activity 09**<br><br>Select the card |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **08. How information is received** | Identify vocabulary items relevant to the theme.<br><br>Use polite forms of language | **Vocabulary:**<br><br>Good Morning/Please/Thank you /Excuse me/ Hello! / Bye! / Eyes / Ears/ Television / Radio/ News Paper / Telephone / Home work<br><br>**Structures:**<br><br>I'm …………….<br><br>Hold on please<br><br>**Activities:**<br><br>**Song**<br><br>Tring Tring Tring //<br>Hello…. Hello….<br>I'm Shehan//<br>Heshan please//<br><br>Hold on Shehan//<br>Hold on please<br>Tring….//<br><br>**Activity -07**<br><br>Listen & Do |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **09. Changes in the environment** | Use vocabulary related to the environment.<br><br>Identify the changes in the environment. | **Vocabulary:**<br><br>Clean / Wind / Cold / Hot / Beautiful / Sweep / Neat / Broom / Elk broom /Dust Bin / Rain / Umbrella / Class room / Bits of paper / Bits of foods / litter<br><br>**Structures:**<br><br>It's ……………<br><br>A/An<br><br>**Activities:**<br><br>**<u>Song</u>**<br><br>"I hear thunder//"<br><br>**<u>Activity 06</u>**<br>Who can do? |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **10. Our well-being** | Identify vocabulary items related to the theme | **Vocabulary:**<br><br>Help / Kind / Love / Happy/ Clean / Fresh<br><br>**Structures:**<br><br>**Activities:**<br><br>**Song**<br><br>This is the way we brush our teeth<br>brush our teeth//<br>This is the way we brush our teeth<br>Early in the morning<br><br>**Activity 01**<br><br>Close your eyes<br><br>Breath in & Breath out |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| 11. **How we get our needs** | Name some vocabulary related to the theme.<br><br>Learn requests for things politely. | **Vocabulary:**<br><br>Shirt / water bottle / Book / pencil /school bag/ Lunch box/ rice/ jam/ fish / dhal / potato / carrot / Ginger /curry leaves /chilies / boutique / seller /Super market / fair / Vegetables / fruits / pocket<br><br>**Structures:**<br>Please give me………<br>Can I have …………<br>Here you are<br>Thank you.<br><br>**Activities:**<br>**Song**<br><br>Can I have a bottle please, a bottle please,<br>a bottle please? //<br>Can I have a bottle please?<br>Yes, here you are //<br>Can I have a bag please, a bag please,<br>a bag please? //<br>Can I have a bag please?<br>Yes, here you are //<br>Can I have a doll please, a doll please,<br>a doll please? //<br>Can I have a doll please?<br>Yes, here you are //<br><br>**Activity - 09**<br>Role play |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **12. Transport** | Identify names of vehicles. | **Vocabulary:**<br>Car / Bus / Van / Lorry / Truck / Jeep / Bicycle / Motor Cycle / Tractor / Bowser / Train / Helicopter / Aeroplane / Jet / Ship / Boat / Canoe /Traffic lights Stop / Get Ready / Go / Red / Orange / Green /Yellow / Zebra crossing / Pavement / Left / Right / Police officer<br><br>**Structures:**<br><br>I see…………………<br><br>This is a ……………….<br><br>I come by……………<br><br>I walk to school<br><br>**Activities:**<br><br>**Song**<br><br>I see a car<br>You see a car<br>Beep, Beep, Beep<br>We see a car.<br><br>I see a bus<br>You see a bus<br>Broom, Broom, Broom<br>We see a bus.<br><br>I see a train<br>You see a train<br>Puff, Puff, Puff<br>We see a train.<br><br>**Game**<br>Move like the vehicle |

| Theme | Objectives | Content |
| --- | --- | --- |
| **13. Play with light** | Identify some vocabulary items relevant to the theme<br><br>Use the question form. | **Vocabulary:**<br>Sun / Star / Moon / Tree / Shadow / Light / Dark /Torch / Lamp / Bulb / Hot / Cold / Bird / Eyes / day time /night / bright<br><br>**Structures:**<br><br>It's………………<br><br>Is it …………………….?<br><br>**Activities:**<br><br>**<u>Song</u>**<br><br>I like red light//<br>I like green<br>I like you and //<br>You like me// |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **14. Places where people work** | Identify vocabulary items related to the theme<br><br>Name the places of work | **Vocabulary:**<br><br>Uniform / School / Principal / Teacher / Hospital /Doctor / Nurse / Post Office / Postman / Paddy field / Farmer / Mammoty / Paddy /Seed / Building site / Building / Tractor / Driver / Workers / Factory / Hats / Gloves<br><br>**Structures:**<br>He is …………….<br>She is ………………<br>What is she/he?<br><br>**Activities:**<br><br><u>Song</u><br>The farmer saws the seeds<br>The farmer saws the seeds//<br>Hey ho the dairy O'<br>The farmer saws the seeds<br><br>The farmer cuts the grain//<br>Hey ho the dairy O'<br>The farmer cuts the grain<br><br>**Activity 05**<br>Fix the picture/ Show the picture<br><br>**Activity 07**<br>Select & Win |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **15. Different Places in the environment** | Identify some vocabulary items relevant to the theme | **Vocabulary:**<br><br>Sand / Garden / Tree / Leaf / Stone / Fruit / Field / Colours / Mango / Jack / Orange / Coconut / Soil / Plant / Flowers / Hill / River / Stream / Swamp /Fence<br><br>**Structures:**<br>There's…………..<br><br>There are…………..<br><br>**Activities:**<br>**Song**<br>Red & yellow//<br>Green, blue and white//<br>Colours of the flowers//<br>We like them//<br><br>**Activity**<br>Pass the seeds bag |

| Theme | Objectives | Content |
|---|---|---|
| **16. People who need our help** | Identify vocabulary items related to the theme<br><br>Use simple commands.<br><br>Use polite requests. | **Vocabulary:**<br><br>Very Good / Well done / My Grand Mother / My grand Father / Help / Blind /Deaf / Cripple /Wheel Chair / Walking stick / Crutches /White cane<br><br>**Structures:**<br>I can't……………….<br><br>Can You help me?<br>Thank you very much<br>Let's go home<br><br>**Activities:**<br>**Song :**<br>I can't see //<br>Can you help me<br>I can't see<br><br>I can help you//<br>Take the cane//<br><br>Thank you very much//<br>Let's go home//<br><br>**Activity - 09**<br>Hat game |

# Classroom Language

**Greeting & Wises**

Good morning!

Good afternoon!

Good evening!

Good Bye!

Good Luck!

All the best!

Happy Birthday!

Happy New Year!

Merry Christmas!

Happy Christmas!

**Requests**

May I come in?

May I go out?

Silence please

Listen to me please

Hurry up please

Be quiet

Be careful

**Polite forms**

Thank you

Please, excuse me

I’m sorry

**Praising**

Good

Very good

That’s right

Well done

I like it

**Simple commands**

Hands up

Hands down

Run

Jump

Start

Clap your hands

Look at me

Form a line

Form a circle

Don’t go out

Get ready

**Simple question forms**

Who is shouting?

What’s this?

What’s that?

What is it?

Is it a ………….?

Is that a ………….?

Are you ready?

## கணித பாடத்தில் அறிமுகங் செய்யப்படும் சொற்கள்

| | |
|---|---|
| Add | One |
| Big | Order |
| Balance | Red |
| Count | Rectangle |
| Eight | Second |
| Four | Six |
| Five | Seven |
| Finish | Short |
| Front | Size |
| Game | Small |
| Little | High |
| Two | Patterns |
| Ten | |
| Three | |
| Tall | |
| Weight | |
| Length | |
| Mathematics | |
| Money | |

# 4.0 இரண்டாவது தேசிய மொழி - சிங்களம்

## அறிமுகம்

ஓர் இலங்கையர் என்ற வகையில் நாட்டில் தம்முடன் வாழும் சகோதர மக்களின் மொழியைக் கற்பதன் மூலம் ஒருவரோடொருவர் புரிந்துணர்வுடன் செயற்படும் திறனை மாணவரிடம் வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை நோக்காகக் கொண்டு, இரண்டாவது தேசிய மொழியொன்றினைக் கற்பிப்பதன் மூலம் குறித்த மொழியில் ஒவ்வொருவரும் பாண்டித்தியம் பெறுதல் வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படவில்லை. மாறாக, தொடர்பாடல் திறன்களை ஓரளவு வளர்த்துக் கொள்வதும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதுமே எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலூக்கமுள்ள தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முதன்மையான அடித்தளத்தை அமைத்துக் கொள்வதற்கும் இரண்டாந் தேசிய மொழியொன்றினைக் கற்பது தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய முதலாம் முதன்மை நிலையில் இரண்டாம் தேசிய மொழியின் கீழ்ப் பின்வரும் தேர்ச்சிகளை அடையும் நோக்குடன் இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மொழித்திறன் பரப்புக்களான செவிமடுத்தல், பேசுதல் ஆகியன தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமே இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவரது வயது, முதிர்ச்சி, அனுபவங்கள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டே இத்தேர்ச்சிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**ஆரம்பக் கல்விப் பருவத்துக்குரிய தேர்ச்சிகள் (இரண்டாவது தேசிய மொழி)**

- நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்கள் - வாக்கியங்களைப் பயன்படுத்திப் பேசுவார்.
- சிங்களத்தில் கூறுபவற்றை செவிமடுத்து பொருளுள்ள வகையில் துலங்குவார்/ எதிர்வினை காட்டுவார்.
- மொழியைக் கையாளும்போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- ஏனையோரது முன்னிலையில் தமது கருத்தையும் வெளிப்படுத்த முன்வருவார்.
- வாசிப்புத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- பாடல்கள், கவிதைகளை செவிமடுத்தும் பாடியும் இரசிப்பார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாள்வதன் மூலம் களிப்புறுவார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாளும் திறன்களை மதிப்பார்.

**முதன்மை நிலை ஒன்றிற்குரிய நிலைக்குரிய தேரச்சிகள்**

- நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரியாதையாகவும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.
- தம்மைப்பற்றிய தகவல்களைச் சரியாகவும் தெளிவாகவும் நட்புடனும் வெளியிடுவார்.
- பாடசாலையில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, நட்புடனும் மரியாதையாகவும் வேண்டுகோள்விடுப்பார்.

- பாடசாலையில், தமக்கு வழங்கப்படும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.
- தமக்கு நெருக்கமானோரிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.
- எண்களை இனங்கண்டு தெளிவாகவும் சரியாகவும் உச்சரித்து வாசிப்பார்.
- நிறங்களின் பெயர்களை இனங்கண்டு, சரியான உச்சரிப்புடன் கூறுவார்.
- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

**தரம் ஒன்றிற்குரிய தேர்ச்சிகள்**

- ஒருவரைச் சந்திக்கும்போதும் அவரைப் பிரிந்து செல்லும் போதும் மரியாதையுடனும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.
- தனது பெயரைச் சரியாகவும் நட்புடனும் கூறுவார்.
- தமது வகுப்பு நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள்கள் விடுப்பார்.
- வகுப்பறையில் ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.
- தமது நெருங்கிய நண்பர்களிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.
- 1 தொடக்கம் 5 வரையிலான எண்களைத் சிங்கள மொழியில் கூறுவார்.
- ஐந்து நிறங்களின் பெயர்களைச் சரியாகச் சிங்களத்தில் கூறுவார்.
- எளிமையான பாடல்கள் கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

இரண்டாவது தேசிய மொழி (சிங்கள மொழி)க்குரிய உத்தேச தேர்ச்சிகளை திட்டமிட்ட செயற்பாடுகளின் துணையுடன் அடைவதற்கு ஆவன செய்தல் அவசியமாகும். மாணவரை உரிய தேர்ச்சிகளின்பால் இட்டுச் செல்வதற்காக இங்கு விதந்துரக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும் தேவைக்கேற்ப சமயோசிதமான செயற்பாடுகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கும் ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

# இரண்டாவது தேசிய மொழி (சிங்களம்) பாடத்திட்டம்

**அறிமுகம்**

2007 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்படும் கல்வி மறுசீரமைப்புக்களின்படி சிங்கள மொழி மூல மாணவர்க்கு தமிழ் மொழியையும் தமிழ்மொழி மூல மாணவர்க்கு சிங்கள மொழியையும் இரண்டாந் தேசி மொழியாக முதலாம் தரம் தொடக்கம் கற்பிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2016ஆம் ஆண்டிலிருந்து அறிமுகஞ் செய்யப்படும் கல்வி மறுசீரமைப்புக்கள் மூலம் அவ்வாசிரியர் வழிகாட்டி மேலும் விருத்தி செய்து முன்வைக்கப்பட்டுள்ளது. இது நடைமுறைப்படுத்தப்படும் விதம் பற்றித் திருத்தியமைக்கப்பட்ட ஆசிரியர் வழிகாட்டியில் இரண்டாவது தேசிய மொழிப் பகுதியில் உள்வாங்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

- ஒருவரைச் சந்திக்கும்போதும் அவரைப் பிரிந்து செல்லும்போதும் மரியாதையுடனும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.

  ආයුබෝවන් ஆயுபோவன் (வணக்கம்)

**தேர்ச்சி**

- தனது பெயரைச் சரியாகவும் நட்புடனும் கூறுவார்.

| | | |
|---|---|---|
| මම | மம | நான் |
| මගේ නම | மகே நம | எனது பெயர் |

**தேர்ச்சி**

- தனது வகுப்பு நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள் விடுப்பார்.

| | | |
|---|---|---|
| ගන්න | Gகன்ன | (எடுங்கள்) |
| දෙන්න | dh தென்ன | (தாருங்கள்) |
| යන්න | யன்ன | (போங்கள்) |
| එන්න | என்ன | (வாருங்கள்) |
| කියන්න | கியன்ன | (சொல்லுங்கள்) |
| ගයන්න | Gகயன்ன | (பாடுங்கள்) |
| බලන්න | Bபளன்ன | (பாருங்கள்) |
| ලියන්න | லியன்ன | (எழுதுங்கள்) |
| හිනාවෙන්න | ஹினாவென்ன | (சிரியுங்கள்) |

**தேர்ச்சி**

- வகுப்பறையில் ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.

| | | |
|---|---|---|
| නැගිටින්න | நெGகிட்டின்ன | (எழும்புங்கள்) |
| වාඩිවෙන්න | வாடிவென்ன | (இருங்கள்) |
| අත්පුඩි ගසන්න | அப்புடிGகசன்ன | (கை தட்டுங்கள்) |
| දුවන්න | dhதுவன்ன | (ஓடுங்கள்) |
| නවතින්න | நவ(த்)தின்ன | (நில்லுங்கள்) |
| උඩපනින්න | உடபனின்ன | (துள்ளுங்கள்) |

**தேர்ச்சி**

- தமது நெருங்கிய நண்பர்களிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.

| | | |
|---|---|---|
| ඔබේ නම මොකක් ද ? | ஒபே நம மொகத்த? | (உமது பெயர் என்ன?) |
| ඔබේ ගම කොහේ ද ? | ஒபே கம கொஹேத | (உமது ஊர் எது?) |
| මගේ ගම ................. | மகே கம | (எனது ஊர்) |

**தேர்ச்சி**

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுங்கள்

| | | |
|---|---|---|
| එක | எ(க்)க | (ஒன்று) |
| දෙක | தெ(க்)க | (இரண்டு) |
| තුන | துன | (மூன்று) |
| හතර | ஹதற | (நான்கு) |
| පහ | பஹ | (ஐந்து) |

**தேர்ச்சி**

- ஐந்து நிறங்களின் பெயர்களைச் சிங்கள மொழியில் சரியாகக் கூறுவார்.

| | | |
|---|---|---|
| නිල් පාට | நில் பா(ட்)ட | (நீல நிறம்) |
| කොළ පාට | கொள பா(ட்)ட | (பச்சை நிறம்) |
| කහ පාට | கஹ பா(ட்)ட | (மஞ்சள் நிறம்) |
| සුදු පාට | சுது பா(ட்)ட | (வெள்ளை நிறம்) |
| කළු පාට | களு பா(ட்)ட | (கறுப்பு நிறம்) |

**தேர்ச்சி**

- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க (தாளத்தின்படி) அசைவுகளுடன் பாடுவார்.

**தேர்ச்சி**

- ஒருவரைச் சந்திக்கும் போது அவரைப் பிரிந்து செல்லும்போதும் மரியாதையுடனும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- ஆசிரியர் வழமைபோன்று மாணவரது எதிரில் நின்று வணக்கம் என வாழ்த்துத் தெரிவித்து, மாணவர்கள் அதற்கு பதில் வாழ்த்துத் தெரிவித்த பின்னர் கைகூப்பி "ආයුබෝවන්" (ஆயுபோவன் - வணக்கம்) என வாழ்த்துதல்
- "ආයුබෝවන්" (ஆயுபோவன் - வணக்கம்) எனக்கூறி ஆசிரியரை வாழ்த்துமாறு மாணவரை வழிப்படுத்துதல்

**செயற்பாடு - II**

- முதலில் மாணவர்கள் இருவரை வகுப்பின் எதிரே அழைத்து கைகூப்பி, ஒருவருக்கொருவர் "ආයුබෝවන්" (ஆயுபோவன் - வணக்கம்) எனக் கூறி வாழ்த்துமாறு வழிப்படுத்துதல்.
- இவ்வாறாக மாணவரைச் சோடி சோடியாக வகுப்பின் எதிரே அழைத்து ஒருவருக்கொருவர் "ආයුබෝවන්" (ஆயுபோவன் - வணக்கம்) எனக் கூறி வாழ்த்துத் தெரிவிக்க வழிப்படுத்துங்கள்.
- மீண்டும் ஒரு மாணவர் குழுவை எழுந்து நிற்கச் செய்து, மற்றைய குழுவுக்கு ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்) என வாழ்த்துத் தெரிவிக்கச் செய்க.
- இவ்வாறாக வாழ்த்துத் தெரிவித்த எல்லாக் குழுக்களுக்கும் சத்தமாக ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்) எனக் கூறி வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு - III**

- பிறிதொரு வகுப்பு ஆசிரியரொருவரை வகுப்புக்கு அழைத்து அவருக்கு ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்) என வாழ்த்துக்கூற வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் தினசரி காலையில் வகுப்பு ஆரம்பத்தில் தமிழ்மொழியிலும் பின் சிங்கள மொழியிலும் மாணவர்க்கு வாழ்த்துத் தெரிவிப்பதை வழமையாக்கிக் கொள்க.
- வகுப்பிற்கு பிறிதோர் ஆசிரியர் வருகை தரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வாழ்த்துத் தெரிவிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி**

- தனது பெயரைச் சரியாகவும் நட்புடனும் கூறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி தமது பெயரை මම කුමාරි (மம குமாரி - நான் குமாரி) என சில தடவைகள் திரும்பத்திரும்பக் கூறுதல்
- பின்னர் மாணவரொருவரை வகுப்பின் எதிரே அழைத்து, அவரது பெயரையும் அவ்வாறாகவே கூற வழிப்படுத்துக.

  உதாரணம்: මම සමන් (மம சமன் - நான் சமன்)
- இவ்வாறாக மாணவர் சிலருக்கு தமது பெயரைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - II**

- மாணவரை ஒரு வட்டம்போன்று நிறுத்துக.
- முதலில் ஆசிரியர் அவ்வட்டத்தின் மத்திக்குச் சென்று ஒரு பந்தைக் கையில் எடுத்து தம்மை அறிமுகஞ் செய்க.

  உதாரணம்: ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்)

  මම කුමාරි (மம குமாரி - நான் குமாரி)
- பின்னர் வட்டத்தில் இருக்கும் எவரேனும் ஒரு மாணவருக்கு பந்தை எறிக. அப்பந்தைப் பெற்ற மாணவன் வட்டத்தின் மத்திக்கு வந்து தமது பெயரைக் கூறி தம்மை அறிமுகஞ் செய்தல் வேண்டும் எனக் கூறுக.

  உதாரணம்: ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்)

  මම සමන් (மம சமன் - நான் சமன்)
- அம்மாணவன் பின்னர், வட்டத்தில் நிற்கும் அடுத்த மாணவனுக்கு பந்தை எறிதல் வேண்டும். பந்தைப் பெறும் மாணவன் முன்னர் போன்றே வாழ்த்துக் கூறித் தமது பெயரைக் கூறித் தம்மை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.
- இவ்வாறாக வட்டத்தில் இருக்கும் எல்லாப்பிள்ளைகளுக்கும் தமது பெயரைக் கூறித் தம்மை அறிமுகஞ் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - III**

- ஆசிரியர் மீண்டும் பின்வருமாறு தம்மை அறிமுகஞ் செய்க.

  මගේ නම කුමාරි (மகே நம குமாரி - எனது பெயர் குமாரி)
- அவ்வாறு கூறிச் செயற்பாடு இல 02 இல் தரப்பட்டுள்ளவாறு மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு - IV**

- வகுப்பு மாணவர் அனைவரையும் வட்டமாக நிறுத்துக.
- ஆசிரியர் வட்டத்தின் உள்ளே நிற்குக. ஆசிரியர் தமது எதிரில் உள்ள ஒரு மாணவனை நோக்கி ආයුබෝවන්. මම කුමාරි. මගේ නම කුමාරි (ஆயுபோவன் மம குமாரி, மகே நம குமாரி - வணக்கம், நான் குமார், எனது பெயர் குமார்) எனக் கூறுக.

- இவ்வாறு மாணவர்க்கும் தமது பெயரைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக எல்லா மாணவரையும் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று, வட்டமாக நிற்கச் செய்து ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நிற்குக.
- வட்டத்தில் உள்ள ஒரு மாணவனுக்கு கரடிப்பொம்மை பிள்ளைப் பொம்மை ஒன்று கொடுக்குக.
- மாணவர் பொம்மையை வட்டத்தின் வழியே ஆளுக்காள் கைமாற்றி ஆர்வத்தோடு ஆசிரியை வழங்கும் சமிக்ஞைப்படி அதனை நிறுத்துதல் வேண்டும்.
- ஆசிரியர் சமிக்ஞை செய்யும் வேளையில் பொம்மையைக் கையில் வைத்திருப்பவர் மேலே குறிப்பிடடவாறு தமது பெயரைக் கூற வேண்டும்.
- மாணவர் ஒருவருக்கொருவர் தமது பெயரைக் கூறச் சந்தர்ப்பம் கிடைக்குமாறு இச்செயற்பாட்டை நடத்துக.

**தேர்ச்சி**

- தமது வகுப்பு நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள்கள் விடுப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- ஆசிரியர் பந்தொன்றினை மாணவரொருவரின்பால் நீட்டி எடுங்கள் எனக் கூறுக.
- மாணவர் பந்தை எடுத்த பின்னர், தாருங்கள் எனக் கூறி பந்தை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- மீண்டும் அதே மாணவனுக்கு பந்தைக் கொடுக்கும் அதேவேளை ගන්න Gகன்ன (எடுங்கள்) எனக் கூறுக.
- දෙන්න dhதென்ன (தாருங்கள்) எனக் கூறிப் பந்தை மீளப் பெறுங்கள்.
- இவ்வாறாக மாணவர்கள் சிலருடன் ஆசிரியர் செயற்பாட்டில் ஈடுபடுக.
- வகுப்பு மாணவரை இருவரிருவராக குழுக்களாக்கி யாதேனுமொரு பொருளை (உதாரணம்: பென்சில், புத்தகம், மலர்) குழுவுக்கு ஒன்று வீதம் வழங்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வகுப்பறையில் ஆசிரியர் யாதேனுமொன்றை எடுக்கும்போதும் கொடுக்கும்போதும் (ගන්න, දෙන්න) இச்சொற்களை நிதமும் பயன்படுத்துவதோடு அவ்வாறு பயன்படுத்துமாறு மாணவரையும் தூண்டுக.

**செயற்பாடு - II**

- வகுப்பு மாணவரை மூன்று அல்லது நான்கு குழுக்களாகப் பிரிக்குக. குழுக்களைத் தனித்தனியாக அமரச் செய்க.
- வகுப்பறையில் போலிக் கடையொன்று அமைத்து, அதில் பென்சில், புத்தகம், விளையாட்:டுப் பொருள்கள், பேர்தல்கள் போன்ற பொருள்களை வைக்குக. கடைச் சிப்பந்தியாக ஒரு மாணவனை ஈடுபடுத்துக. ஆசிரியர் யாதேனும் பொருளைக் காட்டி, அவற்றைத் தருமாறு கேட்கும் விதத்தைக் காட்டுக.

  உதாரணம்:

  பென்சிலைச் சுட்டிக்காட்டி

  දෙන්න (dhதென்ன - தாருங்கள்) எனக்கூறி

  ගන්න (கன்ன - எடுங்கள்) எனக்கூறி மீண்டும் அதனைக் கடைச் சிப்பந்தி மாணவனிடம் கொடுங்கள்.
- இதனைச் சில தடவைகள் செய்து காட்டுக.
- ஆசிரியர் செய்து காட்டியதைப் போன்று மாணவர் சிலரை போலிக் கடையின்பால் வழிப்படுத்தி மேற்படி சொற்களைப் பயன்படுத்திச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு - III**

- ஆசிரியர் மாணவரின் எதிரே வந்து, அங்க அசைவுகளுடன் (கை அசைவு) வாருங்கள் என ஒரு மாணவனுக்குக் கூறுக. மீண்டும் கையினால் சைகை காட்டிப் போங்கள் எனக் கூறுக. அதே மாணவனுக்கு முன்னர் போன்றே கையால் சைகை காட்டி என்ன (வாருங்கள்) எனக் கூறுக. மீண்டும் சைகை காட்டி யன்ன (போங்கள்) எனக் கூறுக.
- இவ்வாறாக மாணவர்கள் சிலருக்குக் கட்டளை பிறப்பித்து மேற்படி சொற்கள் மாணவர்க்கு நன்கு பரிச்சயமாகும் வரை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

செயற்பாடு - IV

- நீலம், மஞ்சள், சிவப்பு, வெள்ளை நிறக் கடதாசிப் பூக்கள் - மாணவர் தொகைக்குப் போதுமான அளவுக்குத் தயார்படுத்திக் கொள்க. மாணவரை திறந்த வெளியில் ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக இருக்குமாறு நிறுத்துக. பின்னர் மாணவர்க்கு ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்) எனக் கூறி வாழ்த்துத் தெரிவிக்க கையினால் சைகை காட்டி, ஒரு மாணவனை நோக்கி வாருங்கள் எனக் கூறுக. பின்னர் கையால் சைகை காட்டி போங்கள் எனக் கூறுக.
- அதே மாணவருக்கு முன்னர் போன்றே கையால் சைகை காட்டி එන්න (என்ன - வாருங்கள்) எனவும் பின்னர் යන්න (யன்ன - போங்கள்) எனவும் கூறுக.
- மேற்படி இரண்டு கட்டளையும் நன்கு விளங்கிக் கொண்ட பின்னர் அதனுடன் கூடவே උඩපනින්න (உடபனின்ன - துள்ளுங்கள்) எனும் சொல்லைப் பயன்படுத்தி தொடர்ந்தும் செயற்பாட்டில் ஈடுபடுக.
- தயார்ப்படுத்திய மலர்களை வட்டத்தின்வழியே பரப்பி வைக்குக. மேலே குறிப்பிட்டவாறு ஒரு மாணவனை එන්න (என்ன - வாருங்கள்) எனக் கூறி அழைக்குக.
- ගන්න (கன்ன - எடுங்கள்) எனக் கூறி, கையினால் சைகை செய்து ஒரு மலரை எடுக்குமாறு வழிப்படுத்துக.
- பின்னர் දෙන්න (தென்ன - தாருங்கள்) எனக்கூறி அம்மலரைத் தமக்குத் தருமாறு சைகை காட்டுக. ஆசிரியர் மீண்டும் ගන්න (Gகன்ன - எடுங்கள்) எனக் கூறி மலரை மீண்டும் அம்மாணவருக்கு வழங்குக.
- යන්න (யன்ன - போங்கள்) எனக் கூறி மாணவரைத் திருப்பி அனுப்புக.
- இதனைச் சில தடவைகள் செய்து காட்டுக.
- ஆசிரியர் செய்து காட்டியதைப் போன்று, ஒரு தடவைக்கு இரண்டு மாணவர்கள் வீதம் மேற்படி சொற்களைப் பயன்படுத்திச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- හිනාවෙන්න (ஹினாவென்ன - சிரியுங்கள்) எனும் சொல்லின் பொருளை மாணவருக்கு விளக்குக. கலைத்திட்டத்தினைச் செயற்படுத்தும்போது பொருத்தமான சந்தர்ப்பங்களில் அதனைப் பயன்படுத்துக.

செயற்பாடு - V

- பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள யாதேனுமொரு தமிழ் அல்லது சிங்களப் பாடலை, மாணவருடன் பாடுக.
- பாடலைப் பாட ஆரம்பிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ගයන්න (Gகயன்ன - பாடுங்கள்) எனக் கூறி மாணவருடன் பாடலைப் பாடுக.
- ගයන්න (Gகயன்ன - பாடுங்கள்) எனும் சொல் மாணவருக்குப் பரீட்சயமாகும் வரையில் இவ்வாறு செய்க.
- ගයන්න (Gகயன்ன - பாடுங்கள்) எனக் கட்டளை பிறப்பித்தவுடன் பாடலைப் பாடுவதற்கு மாணவர் குழுக்களுக்கு தனித்தனியே சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - VI

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்கள் பெரிதாக எழுதப்பட்ட பெரிய 5 அட்டைகள் தயாரித்துக் கொள்க.
- கண்களை மூடிக்கொள்ளுமாறு மாணவர்க்கு அறிவுறுத்துக.
- ஆசிரியர் බලන්න (Bபலன்ன - பாருங்கள்) எனக் கூறியவுடன் கண்களைத் திறந்து படத்தைப் பார்க்குமாறு அறிவுறுத்துக.
- மேற்குறிப்பிட்டவாறாக பட அட்டைகளைக் காட்டி බලන්න (Bபலன்ன - பாருங்கள்) என்பது மாணவர்க்குப் பரிச்சயமாகும் வரையில் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இவ்வாறாக ஒவ்வொர் குழுவுக்கும் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

**தேர்ச்சி**

- வகுப்பறையில் ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- வகுப்பு மாணவர் அனைவரையும் அமர்ந்திருக்கச் செய்து கையால் சைகை செய்து නැගිටින්න (நெகிட்டின்ன - எழும்புங்கள்) எனக் கூறி மாணவரை எழுந்து நிற்கச் செய்க. பின்னர் கையால் சைகை செய்து, වාඩිවෙන්න (வாடிவென்ன - அமருங்கள்) எனக் கூறி மாணவரை அமரச் செய்க. இவ்வாறாகச் சில தடவைகள் செய்விக்குக.

**செயற்பாடு - II**

- இன்றைய தினத்தில் யாதேனும் நல்லதொரு செயலைச் செய்த ஒரு மாணவனை வகுப்பின் முன்னே அழைத்து ஆசிரியை அம்மாணவனைப் பாராட்டி ஏனைய மாணவர் அவரைப் பாராட்டும் வகையில் கைதட்டுமாறு கூறுக.
- கூடவே ஆசிரியையும் கை தட்டியவாறு අත්පුඩි ගසන්න (அப்புடி Gகசன்ன - கை தட்டுங்கள்) எனக் கூறி மாணவரையும் கைதட்ட வழிப்படுத்துக.
- இவ்வாறாக நல்லதொரு செயலைச் செய்த மற்றுமொரு மாணவனை எதிரே அழைத்து අත්පුඩි ගසන්න (அப்புடி கசன்ன - கை தட்டுங்கள்) எனும் சொல்லை வருடம் முழுவதும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு - III**

- மாணவரை வட்டமாக நிறுத்துக.
- இதுவரையில் கற்ற கட்டளைகளைப் பயன்படுத்தி பின்வரும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
  சைமன் சொன்னார் අත්පුඩි ගසන්න (அப்புடி Gகசன்ன- கைதட்டுங்கள்) எனக் கூறியவுடன் மாணவர்கள் கைதட்ட வேண்டும்.
  சைமன் எனும் பெயர் தவிர வேறு பெயர்களைக் கூறி கட்டளை பிறப்பிக்கும்போது மாணவர்கள் துலங்கல் காட்டக்கூடாது (கைதட்டக்கூடாது)
- தவறாக துலங்கல் காட்டும் மாணவர்கள் வட்டத்திலிருந்து வெளியேறி வருதல் வேண்டும். ஏனைய மாணவர்கள் சரியாக செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை அம்மாணவர்கள் அவதானித்தல் வேண்டும்.

**செயற்பாடு - IV**

- மாணவர் அனைவரையும் வட்டமாக நிறுத்துக.
- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நின்று பின்வரும் கட்டளைகளைத் தமிழில் வழங்குக.
- வட்டத்தைச் சுற்றி ஓடுங்கள், நில்லுங்கள் பின்னர் ஓடுங்கள் என்பதற்குப் பதிலாக දුවන්න (துவன்ன - ஓடுங்கள்) என்பதையும் நில்லுங்கள் என்பதற்குப் பதிலாக නවතින්න (நவத்தின்ன - நில்லுங்கள்) என்பதையும் செயற்பாட்டில் மீண்டும் மீண்டும் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி**

- தமது நெருங்கிய நண்பர்களிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- ஆசிரியை முதலில் ආයුබෝවන් (ஆயுபோவன் - வணக்கம்) என வாழ்த்துத் தெரிவித்தல்
- பின்னர் ஆசிரியர் தமது பெயரை මම කුමාරි (மம குமாரி - நான் குமாரி) எனக் கூறி ஒரு மாணவனை விழித்து உங்கள் பெயர் என்ன என வினவுதல்
  மாணவன் எனது பெயர் ................... எனக் கூறுதல்
- இவ்வாறாக மாணவர் சிலரிடம் அவர்களது பெயரை வினவி விடைபெறல்
- பின்னர் මම කුමාරි (மம குமாரි - நான் குமாரி) எனத் தமது பெயரைக் கூறி ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த - உமது பெயர் என்ன?) என வினவி விடைபெறல்
- இவ்வாறாக மாணவர் சிலரிடம் பெயர் வினவி விடைபெறுக.
- உங்கள் பெயர் என்ன என்பது சிங்களத்தில் ඔබේ නම මොකක් ද ? (ஒBபே நம மொக்கக்த - உங்கள் பெயர் என்ன?) எனப் பயன்படுத்தப்படும் என்பதை இந்தச் செயற்பாட்டின் மூலம் மாணவர் விளங்கிக் கொள்ளச் செய்க.
- மாணவர் இருவரிருவர் வீதம் மேற்படி சம்பாசணையில் பயிற்சி பெற வழிப்படுத்துங்கள்.
- பின்னர் குழுவில் அடங்கியுள்ள ஏனைய மாணவர்களுடனும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக. ஒருவரது பெயர் என்ன எனச் சிங்களத்தில் வினவுவதற்கும் தமது பெயரைக் கூறுவதற்கும் மென்மேலும் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - II**

- மாணவர்களை வட்டமாக நிறுத்துங்கள்.
- ஆசிரியர் பந்தொன்றை எடுத்துக் கொண்டு வட்டத்திற்குள் செல்லுங்கள்.
- ஆசிரியர் தனது பெயரை මම කුමාරි (மம குமாரி - நான் குமாரி) என்று கூறி ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த - உமது பெயர் என்ன?) என்று வினவி பந்தை ஒரு மாணவருக்குப் போடுங்கள்.
- பந்தைப் பிடித்த மாணவன் தனது பெயரை මම සමන් (மம சமன் - நான் சமன்), ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த - உமது பெயர் என்ன?) என வினவியபடி பந்தை வேறு ஒருவருக்கு செலுத்த வேண்டும்.
- பந்தைப் பிடித்த மாணவன் தனது பெயரை මම මාලා (மம மாலா - நான் மாலா) எனக் கூறிக் கொண்டு வட்டத்தில் உள்ள வேறு ஒரு நண்பருக்கு பந்தை போட்டபடி ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த - உமது பெயர் என்ன?) என்று வினவ வேண்டும்.
- இது போல் எல்லா மாணவர்களுக்கும் பந்தை அனுப்பி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**செயற்பாடு - III**

- ஆசிரியர் தமது ஊரின் பெயரை தமிழில் கூறுக
  உதாரணம்: எனது ஊர் கண்டி அல்லது வவுனியா ...
- இவ்வாறாக மாணவர் சிலரிடம் தமது ஊரின் பெயரை வினவி விடைபெறுக.
- பின்னர் ஆசிரியர் මගේ ගම බලංගොඩ (மகே கம, Bபலங்கொட - எனது ஊர் பலங்கொடை) எனக் கூறுக.
- இவ்வாறாக ஒவ்வொரு மாணவனுக்கும் தமது ஊர்ப்பெயரைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.

- பின்னர் ஆசிரியர் මගේ ගම බලංගොඩ (மகே கம Bபலங்கொட - எனது ஊர் பலங்கொடை) ඔබේ ගම කොහේ ද ? (ஒபே கம கொஹேத - உமது ஊர் எது?) என சில மாணவர்களிடம் வினவுக.
- ஆசிரியர் இவ்வாறாக எல்லா மாணவர்களிடம் வினவுதல் வேண்டும். பின்னர் தத்தமது குழுவில் ஏனைய மாணவர்களிடம் ඔබේ ගම කොහේ ද ? (ஒBபே Gகம கொஹேத - உமது ஊர் எது?) என்பதைப் பயன்படுத்தி அவர்களது ஊரின் பெயரை வினவியறிய வழிப்படுத்துக.

## செயற்பாடு - IV

- தடவைக்கு ஒரு மாணவர் வீதம் வகுப்பின் முன்னே அழைக்குக. அவரது கையில் ஒலிவாங்கியைக் (மைக்ரொபோன்) கொடுத்து මම සමන් (மம சமன் - நான் சமன்), මගේ ගම කොළඹ (மகே Gகம கொழும்பு - எனது ஊர் கொழும்பு) எனக் கூறி மற்றுமொரு மாணவனிடம் ஒலிவாங்கியை கொடுத்தல் வேண்டும்.
- ஒலி வாங்கியைப் பெற்ற மாணவன் அவ்வாறாகவே தம்மை அறிமுகம் செய்தல் வேண்டும்.
- இவ்வாறாக மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டை நடத்துக.


**தேர்ச்சி**

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்கள் தனித்தனியே எழுதப்பட்ட ஐந்து அட்டைகள் தயாரித்துக் கொள்க.




- மாணவருடன் பின்வரும் பாடலைப்பாடுக.

  எக்கய் எக்கய் லல்லலா லலா
  தெக்கய் தெக்கய் லல்லலா லலா
  துனய் துனய் லல்லலா லலா
  ஹதரய் பஹய் லல்லலா லலா

- 1 எனும் எண்ணைக் கொண்ட அட்டையை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி

  (எக்க - ஒன்று)

  என அறிமுகஞ் செய்க.

  எக்க ஒன்று என்பதை மாணவர்கள் பல தடவை கூறச் சந்தர்ப்பமளிக்குக.

- பின்னர் எக்க எக்க லல்லலா லலா

  ஒன்று ஒன்று லல்லலா லலா

  பாடலைப் பாடிக்காட்டி, மாணவர்களுடன் சேர்ந்து பாடுக.

- இவ்வாறாக 2, 3, 4, 5 ஆகிய இலக்கங்களைக் காட்டும் அட்டைகளை ஒவ்வொன்றாகக் காட்சிப்படுத்தி அந்தந்த எண்ணைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தும் சிங்களச் சொல்லைப் பரிச்சயப்படுத்துக.

  எக்க - 1 ஒன்று
  தெக்க - 2 இரண்டு
  துன - 3 மூன்று
  ஹதர - 4 நான்கு
  பஹ - 5 ஐந்து

- இடையிடையே மேற்படி பாடலையும் பயன்படுத்துக. பாடலைப் பாடும் வேளையில் கைவிரல்களையும் பயன்படுத்தி மேற்படி எண்களால் குறிக்கப்படும் எண்ணிக்கையை விரல்களை விரித்துக் காட்டுமாறு வழிப்படுத்துக.

செயற்பாடு - **II**

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்கள் தனித்தனியே எழுதப்பட்ட அட்டைகள் கொண்ட பெட்டிகளை மாணவர் குழுக்களுக்குத் தேவையான அளவு தயார்ப்படுத்திக் கொண்டு அவற்றுள் ஒரு பெட்டியை எடுத்து அதில் ஓர் அட்டையை வெளியே எடுத்து வகுப்பில் காட்சிப்படுத்தி அவ்வெண் எது என சிங்களத்தில் கூறுமாறு மாணவர்க்கு கூறுக.
- இவ்வாறாக எல்லா எண் அட்டைகளையும் காட்சிப்படுத்தி மாணவரிடம் விடைகளைப் பெறுக.
- அட்டைகளில் உள்ள எண்களை மாணவர் நன்கு இனங்கண்டு கொண்ட பின்பு பெட்டியை ஒரு மாணவனிடம் கொடுத்து ஏனைய ஒவ்வொரு குழுவிற்கும் அட்டைகள் அடங்கிய பெட்டி ஒன்று வீதம் வழங்குக.
- குழுவில் உள்ள ஒருவர் பெட்டியில் உள்ள ஓர் அட்டையை எடுத்து அதில் குறிப்பிட்ட எண்ணை சிங்கள மொழியில் கூறவேண்டும். இது போன்று பெட்டியில் உள்ள எல்லா எண்களையும் கூறிய பிறகு வேறு ஒரு மாணவனிடம் பெட்டியைக் கையளிக்க வேண்டும். அவரும் அவ்வாறு எண்களை உரத்துக் கூற வேண்டும்.
- இது போன்று எல்லா குழுவிலும் உள்ள எல்லா மாணவர்களும் இச்செயற்பாட்டில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குக.

செயற்பாடு - **III**

- 1 தொடக்கம் 5 வரையிலான எண்கள் தனித்தனியே எழுதப்பட்ட பந்துகளை ஓர் உறையில் இடுக.
- ஆசிரியர் மாணவனது பெயரைக் கூறி அழைத்தல் வேண்டும் සමන් එන්න (சமன் என்ன - சமன் வாருங்கள்)
- பின்னர் உறையைச் சுட்டிக்காட்டி ගන්න (Gகன்ன - எடுங்கள்) எனக் கூறுக.
- அப்போது மாணவன் உறையினுள் இருந்து ஒரு பந்தை வெளியே எடுத்தல் வேண்டும்.
- ஆசிரியர் කියන්න (கியன்ன - சொல்லுங்கள்) எனக் கூறியபின் அம்மாணவன்
  உதாரணம் : එක - (எக்க - 1)
  என்றவாறு அவர் வெளியே எடுத்த படத்தில் எழுதியுள்ள எண்களை சிஙகளத்தில் கூறுதல்
- இவ்வாறாக ஒரு பந்தை எடுக்கவும் அதன் எண்ணை சிங்களத்தில் கூறவும் எல்லா மாணவர்க்கும் சந்தர்ப்பமளிக்குக.
- அடுத்ததாக ஆசிரியர் சிங்கள மொழியில் ஒரு மாணவனை அழைத்து

  உதாரணம் : සමන් එන්න (சமன் என்ன - சமன் வாருங்கள்)
  ගන්න (Gகன்ன - எடுங்கள்) எனக் கூறுதல்

- மாணவன் பந்தை வெளியே எடுத்த பின்னர் ஆசிரியர் කියන්න (கியன்ன - சொல்லுங்கள்) எனக் கூறுதல்
- அப்போது மாணவன் அதில் அடங்கியுள்ள எண்ணைக் கூற வேண்டும். இவ்வாறாக எல்லா மாணவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டை நடத்துக.

**செயற்பாடு - IV**

- குழுவுக்கு ஒன்று வீதம் தாயக்கட்டைகள் ஆக்கிக் கொள்க.
- அவற்றில் 1, 2, 3, 4, 5 என எண்களை எழுதுக.
- ஆறாவது முகப்பில் 1 - 5 வரையிலான எண்களுள் யாதேனுமொன்றை எழுதுங்கள்.
- குழுவில் ஒவ்வொருவருக்கும் தாயக்கட்டையை மேலே போடச் சந்தர்ப்பளித்து மேற்பக்க முகப்பில் உள்ள எண்ணைச் சிங்களத்தில் கூற வழிப்படுத்துதல்.

**செயற்பாடு - V**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- சுயாதீனமாக நடந்து செல்லுமாறு மாணவருக்குக் கூறுக.
- ஆசிரியர் (எக்கய் - ஒன்று 1) எனக் கூறியவுடன் தனித்தனியாகவும் ஆசரியர் (தெக்கய் - இரண்டு 2) எனக் கூறியவுடன் இருவரிருவராகவும் ஆசிரியர் (துனய் - மூன்று 3) எனக் கூறியவுடன் மும்மூன்று பேராகவும் சேர்ந்து கைகளைக் கோர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்துக.
- முதலில் எண்களை ஒழுங்கு முறைப்படி கூறிச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி, எண்களில் பரிச்சயம் பெற்ற பின்னர் எண்களை ஒழுங்கின்றிக் கூறிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.


**தேர்ச்சி**

- ஐந்து நிறங்களின் பெயர்களைச் சிங்களத்தில் சரியாகக் கூறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- தனித்தனியாக நீலம், மஞ்சள், பச்சை, வெள்ளை, கறுப்பு ஆகிய 5 நிறங்களைக் கொண்ட ஐந்து நிற அட்டைகளை வகுப்பில் முன்வைத்து மாணவர்களுக்கு நிறங்களை அறிமுகஞ் செய்க.



- ஐந்து மாணவரை வகுப்பின் எதிரே அழைத்து மேற்படி நிற அட்டைகளை ஆளுக்கு ஒன்றாக வழங்குக.
- பின்னர் ஆசிரியர் அவற்றுள் யாதேனும் ஒரு நிறத்தைச் சிங்களத்தில் குறிப்பிட்டவுடன் அந்நிறத்துக்கு உரிய அட்டையை வைத்திருப்பவர் சற்று முன்னால் வந்து அந்நிறத்தின் பெயரைச் சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பமளிக்குக.


  உதாரணம்: ஆசிரியர் නිල් පාට (நில் பாட்ட - நீலநிறம்) எனக் கூறியதும் நீல நிற அட்டையைக் கையில் வைத்திருக்கும் மாணவன் முன்னால் வந்து නිල් පාට (நில்பாட்ட - நீலநிறம்) எனக் கூறுதல்
- பின்னர் மாணவர் அனைவரும் அச்சொற்களைக் கூறவேண்டும். சில மாணவர்க்கு இவ்வாறாக தனித்தனியே நிறத்தைக் கூறச் சந்தர்ப்பமளித்தல். ஏனைய நிறங்கள் தொடர்பாகவும் இவ்வாறாகவே செயற்பாட்டில் ஈடுபடுத்துதல்.

**செயற்பாடு - II**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க. செயற்பாடு 1 இல் பயன்படுத்திய நிற அட்டைகளைப் பொருத்தமான இடங்களில் நிறுத்துக.
- ஆசிரியர் ஓர் நிறத்தின் பெயரைக் கூறியவுடன் மாணவர்கள் குறித்த நிற அட்டை உள்ள இடத்துக்கு ஓடிச் செல்ல வேண்டும். தவறான நிறத்தை நோக்கியும் மாணவர்கள் செல்வாராயின் அவர்களைச் சரியான நிறத்தின்பால் வழிப்படுத்துக.
- நிறங்களின் பெயர்களை மாணவர்களுக்கு விளங்கிக் கொள்ளும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

**செயற்பாடு - III**

- வெவ்வேறு நிறப்பந்துகளை ஒரு பெட்டியில் இட்டு மத்தியில் வைக்குக. மாணவரை நான்கு குழுக்களாகப் பிரித்து பெட்டியின் நான்கு மூலைகளுக்கும் நேராக சற்று அப்பால் வரிசைகளில் நிறுத்துக.




- இனி ஆசிரியர் එන්න, නිල්පාට Bබෝලය Gගන්න (என்ன நில் பாட்ட Bபோளய Gகன்ன - வாருங்கள் நீல நிறப் பந்தை எடுங்கள்) எனக் கூறுக.
- முதலாம் குழுவின் முதலாம் மாணவன் சரியான நிறப்பந்தை தெரிவு செய்து නිල් පාට (நில்பாட்ட - நீல நிறம்) என ஆசிரியரிடம் கூறுதல். இவ்வாறாக நான்கு குழுக்களதும் எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - IV**

- நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை, கறுப்பு ஆகிய நிறங்களில் வர்ணத்தை கடதாசி அல்லது வேறு வகை கடதாசிகளை, பிறிஸ்டல் அட்டையொன்றில் ஒட்டுக. பின்னர் அந்த 5 நிறங்களிலும் ஒரே வடிவத்தில் பூக்கள் வெட்டிக் கொள்க. மாணவர் தொகைக்குச் சமமான தொகைப்பூக்களை அவ்வாறு வெட்டிக் கொள்க.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க. இருபது மீற்றர் நீள அகலமுள்ள ஒரு பிரதேசத்தில் அப்பூக்களைப் பரப்பி வைக்குக.
- மாணரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக. ஒரு குழுவை எதிரே அழைத்து ஆசிரியை சிங்களத்தில் கூறும் நிறத்தைக் கொண்ட ஒரு பூவை எடுத்துவருதல் வேண்டும் எனக் கூறுக.
- இவ்வாறாக குழுவை மாற்றியவாறு, மாணவர்கள் நிறங்களை நன்கு விளங்கிக் கொள்ளும் வரையில் செயற்பாட்டை தொடர்ந்து நடத்துக.

**செயற்பாடு - V**

- 


நிறங்களைப் பயன்படுத்தி அதிஷ்டச் சக்கர விளையாட்டில் மாணவருடன் ஈடுபடுக. சக்கரத்தைச் சுழற்றிய பின்னர், அம்புக்குறித்தலைக்கு நேராக அமையும் நிறம் எது என அனுமானித்து சிங்களத்தில் கூறுமாறு மாணவர்க்குக் கூறுக. பின்னர் சக்கரத்தைச் சுழற்றி அது நின்ற பின்னர் அம்புக்குறிக்கு நேராக இருக்கும் நிறத்தின் பெயரைச் சிங்களத்தில் உரத்துக் கூறுமாறு அறிவுறுத்துக.

- நிறங்களின் பெயர்களை கூறுவதில் மாணவர்கள் நன்கு பரிச்சயம் பெறும் வரையில் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- சரியான விடைகளுக்கு புள்ளி வழங்கியவாறு இதனை ஒரு போட்டியாகவும் நடத்தலாம்.

**தேர்ச்சி**

- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

| தமிழ் எழுத்தில் | சிங்களத்தில் பாடல் | | தமிழில் பொருள் |
|---|---|---|---|
| ஹா ஹா ஹரி ஹாவா | 1. හා හා හරි | හාවා | ஆகா ஆகா முயல் ஒன்று |
| கெலே மெதின் ஆவா | කැළේ මැදින් | ආවා | காட்டிலிருந்து வந்தது |
| ஹிட்டகென கங்க காவா | හිට ගෙන ගඟ | ගාවා | ஆற்றடியில் நின்றது |
| வட்ட பிட்ட அஹ லாவா | වට පිට ඇහැ | ලෑවා | சுற்றுமுற்றும் பார்த்தது |
| மகே பொடி தாரா | 2. මගේ පොඩි | තාරා | எனது சின்ன வாத்து |
| பீபீ காவா | පී පී | ගෑවා | பீபீ பீபீ என்றது |
| ஹொட்ட ரத்து பாட்டய் | හොට රතු | පාටයි | அலகு சிவப்பு நிறம் |
| எங்க சுது பாட்டாய் | ඇඟ සුදු | පාටයි | உடல் முழுதும் வெள்ளை |
| எங்க புராம தித்வெட்டிலா | 3. ඇඟ පුරාම තිත් | වැටිලා | உடல் முழுதும் புள்ளி |
| ஹரிம ஹரி ஹெடய் | හරිම හරි හැඩයි | | என்னே கொள்ளை அழகு |
| தழுகொல கன முவபெட்டியா | දළු කොළ කන මුව | පැටියා | இளந்தளிர் தின்னும் மான்குட்டி |
| ஹரி அஹிங்சகய் | හරි අහිංසකයි | | மிகவும் சாதுவானது |
| புஞ்சி பளு ராலே | 4. පුංචි බලු | රාලේ | சின்னச் சின்ன நாயாரே |
| மா கெதர நெத்தி வேலே | මා ගෙදර නැති | වේලේ | நான் வீட்டில் இல்லாத போது |
| கவுத மகே போலே | කවුද මගෙ | බෝලේ | யார் எனது பந்தை |
| பெரள பெரள ஹிட்டியே மிதுளே | පෙරළ පෙරළා හිටියෙ | මිදුලේ | முற்றத்தில் உருட்டி உருட்டி விட்டது |

# 5.0 விளையாட்டு முற்றம்

தரம் ஒன்றில் பிரவேசிக்கும் மாணவர்களின் சமநிலையான விருத்திக்கு அறிவாற்றல் விருத்தியும், உடல், மனவெழுச்சி, சமூக விருத்தியும் இன்றியமையாதனவாகும். அதற்காக வகுப்புக்கு வெளியே இரசனை பெறக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட சூழலில் செயற்பாட்டு ரீதியில் பங்கு கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். சகல மாணவர்களுக்கும் இரசனைமிக்க செயற்பாட்டு ரீதியான சந்தர்ப்பங்களை வழங்கக்கூடிய ஓர் இடமாக ‘‘விளையாட்டு முற்றத்தை’’க் குறிப்பிடலாம்.

விளையாட்டு முற்றத்தால் பெறக்கூடிய பல பயன்கள் உள்ளன. மீத்திறனுடைய பிள்ளைகள் வகுப்பறை வேலைகளை மிக விரைவாகச் செய்து முடிப்பர். அவ்வாறான பிள்ளைகளை, ஆசிரியர் தனது பார்வைப் புலத்திற்குட்பட்டதாகப் பாதுகாப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு முற்றத்தில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். இது வகுப்பறை வேலைகளை நன்றாகவும் விரைவாகவும் செய்து முடிப்பதற்கு வழிவகுக்கும். விளையாட்டு முற்றத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைக்கான வாய்ப்புகள் உள்ளன.

- நுழைந்து செல்வதற்கு
- ஆடுவதற்கு
- ஏறுவதற்கு
- தொங்குவதற்கு

✓ இதற்கமைய விளையாட்டு முற்றத்தில் மாணவர்கள் ஈடுபடும் செயற்பாடுகளின் ஊடாக நுழைதல், புரளுதல், ஓடுதல், பாய்தல், தொங்குதல் போன்ற அடிப்படை அசைவாற்றல்களை விருத்தி செய்யலாம்.

✓ அதனூடாக இசைவாக்க ஆற்றல், சமநிலை, சந்தம், நெகிழ்தன்மை, சரியான கொண்ணிலைகளைப் பேணல் ஆகியவற்றை விருத்தி செய்யலாம்.

✓ மாணவரின் கைத் திறன்களையும் விருத்தி செய்யலாம்.

✓ மொழி எண்ணக்கருக்கள், பார்வைப் பிரித்தறிகை, கேட்டல் பிரித்தறிகை, எழுத்துமுன் திறன், உளவியக்கத்திறன்கள் போன்ற மொழி முன் எண்ணக்கருக்கள், கணித முன் எண்ணக்கருக்கள் ஆகியவற்றின் விருத்திக்கு வழிகோலத்தக்க முக்கியமான ஓர் இடமாகும்.

**எடுத்துக்காட்டு** : ஏணிப்படிச் சட்டகத்தில் ஏற விடுக.
அவர்களுக்குச் சுயாதீனமாக எதேச்சையாக ஏற இடமளியுங்கள்.
மிக உயரத்தில் இருப்பவர் யார்? , அடுத்ததாக இருப்பவர் யார்? மிகக் கீழே இருப்பவர் யார்? என்றவாறு வினாக்களை வினவி எண்ணக் கருவை வலியுறுத்துக.

✓ நிறுத்தாடுபலகையைப் (See - Saw) பயன்படுத்தி மாணவரது நிறை தொடர்பான எண்ணக்கருவை உறுதிப்படுத்துக. (மேலே, கீழே, தூர, கிட்ட, வேகமாக, மெதுவாக, பெரிய, சிறிய....போன்ற) எண்ணக்கருக்கள் அடையலாம்.

✓ வரிசைப்படுத்தல் பற்றிய கணிதப் பாடத்துக்கு முன்னர் ‘டயர் ஏணியின்’’ செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.


✓ ஒத்துழைப்பு, கூட்டாகச் செயற்படல், பகிர்ந்து பரிமாறிக்கொள்ளல், உதவி ஒத்தாசை புரிதல் போன்ற நற்பண்புகள் விருத்தியடைய வழிகோலும்.

✓ உளத்திருப்தியையும், சுதந்திரத்தையும் வழங்குவதற்கு மிகப் பொருத்தமான ஓர் இடமாகும்.

ஆரம்பக் கல்விப் பாடப்பரப்புகளுக்குரிய எண்ணக்கருக்களை விருத்தி செய்யத்தக்க வகையில் விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துவது முக்கியமானது. எனவே விளையாட்டு முற்றத்தில் மாணவர்கள் உபகரணங்களைப் பயன்படுத்தும் போது ஆசிரியரின் தலையீடு அவசியமாகும். வெவ்வேறு உபகரணங்களைக்கொண்டு, பெரிய தசை நார்களின் வளர்ச்சி, நரம்பு - தசை இசைவாக்கம் போன்ற உடல் வளர்ச்சிக்கு உதவத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடுத்தும்

அதேவேளை எண்ணக்கருக்களையும் விருத்தி செய்யலாம். பின்வரும் எடுத்துக்காட்டினூடாக இதனை மேலும் விளங்கிக்கொள்ளலாம்.
எனவே மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய மேலும் உபகரணங்களைச் சேகரித்து விளையாட்டு முற்றத்தை விருத்தி செய்துகொள்வது ஆக்கபூர்வமான ஆசிரியர் எதிர்நோக்கும் சவாலாகும்.

*எடுத்துக்காட்டு:* **தரம் ஒன்று**
தாய்மொழிப் பாடத்திட்டத்தில் சிறிய கோடுகள் இரண்டுக்கு இடையில் (வெளி) கையின் நுண்ணிய தசைநார்களைப் பயன்படுத்தி எழுதுவதற்கான சந்தர்ப்பம் உருவாகும். இதற்கு நுண்ணிய தசைநார்ப் பயிற்சி அவசியமாகும். இத்திறனை விருத்தி செய்வதற்கு எழுத்துக்களை எழுத முன்னரும் அதற்குச் சமாந்தரமாக பொருத்தமாக பெரிய தசைநார்களைப் பயன்படுத்தி (முழு உடலையும் அசைக்கத்தக்க) செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் அவசியமாகும். இதற்கு விளையாட்டு முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள / நடப்பட்டுள்ள டயர் வரிசையினைப் பயன்படுத்தலாம்.



**ஆசிரியர் வழிகாட்டலை வழங்க வேண்டிய முறை**
யாருக்கு முடியும்?, யாருக்கு முடியும்? சுரங்கத்தின் ஊடாக, சுரங்கத்தின் சுவர்களில் படாதவாறு செல்வதற்கு யாருக்கு முடியும்? , யாருக்கு முடியும்? டயரில் படாதவாறு நுழைந்து செல்வதற்கு?


*எடுத்துக்காட்டு* : **தாய்மொழி - உயிர்க்குறிகளைப் பயன்படுத்தல்**
உயிர்க்குறிகளை எழுத்தின் மேலே, கீழே அல்லது பக்கத்தில் எழுத வேண்டி உள்ளது. எனவே ஏணிச் சட்டகத்தில் மாணவர்கள் இருக்கும் இடம் தொடர்பான எண்ணக்கருவை ஏற்படுத்த வேண்டும். இதற்கு ஆசிரியர் உரிய வழிகாட்டலை வழங்கலாம். இதனூடாக குறித்த எண்ணக்கருக்கள் விருத்தியடையும்.

- ✓ ஜெஸ்மின் எனும் மாணவி காந்தன் இருக்குமிடத்துக்கு மேலே இருக்கின்றாரா? கீழே இருக்கின்றானா?
- ✓ பின்னர் காந்தனை உயரத்தில் ஏறச் செய்து பின்வரும் விதத்தில் வினவ முடியும்.
- ✓ இப்போது ஜெஸ்மின் என்ற மாணவி காந்தன் இருக்குமிடத்துக்கு மேலே இருக்கின்றாரா? கீழே இருக்கின்றாரா?




என்றவாறு வினாக்களை மாணவர்களிடம் வினவி உயர்க்குறிகள் தொடர்பான எண்ணக்கருவை விருத்தி செய்யக் கவனம் செலுத்தல் பொருத்தமானது.

**கணித எண்ணக்கரு - வரிசைப்படுத்தல்**
பிள்ளைக்குப் பின் உள்ள டயர் சிறியதா? பெரியதா?




தரம் 2 இல் இந்த நிலையை மேலும் விருத்தி செய்யுங்கள். ஒவ்வோர் உபகரணத்தையும் பயன்படுத்த வழிசெய்யும் வகையில் படிவங்களைப் பயன்படுத்தலாம்.

**எடுத்துக்காட்டு:**
மாணவன் அடியெடுத்து வைப்பதற்கு ஏற்ப ஏனைய மாணவர்கள் தடவைக்கு ஒன்றாக கைதட்டி ஒன்றிற்கொன்று ஒத்திசை பார்த்தல்



கணித எண்ணக்கரு : எதேச்சையான அலகுகளினால் தளத்தை அளத்தல்.
***எடுத்துக்காட்டு*** : அடுத்த அந்தத்திற்கு எத்தனை பாதச்சுவடுகள்



எண்ணக்கரு : சார்பான அமைவு
***எடுத்துக்காட்டு*** : முதல் சிரட்டையை விட மூன்றாவது சிரட்டைக்கு ஏறியதும் எந்தளவு உயரமிருக்கும்?



## வீட்டு வேலை (HOME WORK)

பிள்ளைகளின் முதிர்வு, உளவியல் மற்றும் கல்விக் கோட்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்தே ஆரம்பக்கல்வி வகுப்புக்களின் நேரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதனை அடிப்படையாக வைத்தே முதன்மைநிலை ஒன்றின் பாடசாலை நேரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டு வேலையைக் (HOME WORK) கொடுக்கும் போது இது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தி பொறுப்புடன் செயல்பட வேண்டும். மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம் ஆகிய நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் வீட்டு வேலையை வழங்கும் போது சிறிய மாணவர்கள் இவை யாவற்றுக்கும் முகம் கொடுக்க நேரிடும். அதனால் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கும் களைப்பிற்கும் உள்ளாகலாம். எனவே வீட்டு வேலையை வழங்கும்போது மாணவரின் முதிர்விற்கு ஏற்ற, அவசியமான வேலைகளை மட்டும் சிறியளவில் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

அதேபோன்று தினமும் தங்களது பிள்ளைகளுக்கு பாடசாலையில் வழங்கப்படும் வீட்டு வேலை களுக்காக நேரத்தை ஒதுக்கக்கூடிய பெற்றோர்கள் மிகக் குறைந்த தொகையினரே உள்ளனர்.

குறித்த நேரத்துக்குள் பாடசாலைச் சூழலில் மட்டும் பெற்றுக்கொடுக்க முடியாத கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும் வீட்டு வேலைகளை (HOME WORK) வழங்க வேண்டிய அவசியம் ஏற்படும். இருப்பினும் அவை தொடர்பாக தெளிவாகவும் சரியாகவும் வழிப்படுத்துவது தொடர்பாகவும் தேவையான அளவு நேரத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

## 6.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

கற்கும்போது தமது மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள், வெளிக்காட்டும் திறமைகள் பற்றிய பூரண விளக்கத்தை, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காகப் பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்யும் திறனைப் பெற முடியும். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும், பொருந்தும் வகையில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்ய இது வழிகோலும். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவனது முன்னேற்றம் தொடர்பாக இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடாகும் எனக்குறிப்பிடலாம். ஆரம்பத் தரங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கணிப்பிடும் நோக்கங்கள் பலவாகும். இடப்படுத்தற் (Placement) பணிகள், கண்டறி பணிகள், போதனாப் பணிகள், சான்றிதழ் வழங்கல், ஆராய்ச்சிப் பணிகள் ஆகியன இவற்றுள் முக்கியமானவையாகும். ஆயினும், ஆரம்பத் தரங்களில் கண்டறி பணிகளையும், போதனாப் பணிகளையும் முதன்மையாகக் கொண்டே கணிப்பீட்டுச் செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன. ஆரம்பத் தரங்களில் கற்றலில் போது மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளைக் காட்டுகின்றனர். ஆசிரியைகள் கற்பிக்கும்போது இவ்விடர்பாடுகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாணல் வேண்டும். ஆகவே தனது வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனும் மாணவியும் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை இனங்கண்டு அந்த ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் பொருத்தமானவாறு கற்றல் பணிகளை ஒழுங்கு செய்தல் இதனூடாக இலகுவாக அமையும். கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்களை எல்லா மாணவரும் அடையக்கூடியவாறு ஆசிரியரினால் வழிகாட்ட முடியும். மாணவர்களை முதலாமவர், இரண்டாமவர் என வரிசைப்படுத்துவதோ **சிறந்த மாணவர், பலவீனமான மாணவர் என வகைப்படுத்துவதோ ஆரம்பத்தரங்களில் நடத்தப்படும் கணிப்பீட்டின் நோக்கமல்ல.**

### 2.0 மாணவரைக் கணிப்பபிடுவதற்காகப் பயன்படுத்தத்தக்க அணுகுமுறைகள்

மாணவர்களைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தும் நுட்பமுறைகளைப் பிரதானமாக இரண்டு விடயங்களின் கீழ் முன்வைக்கலாம்.

### 2.1 மாணவரின் முன்னேற்றத்தை முறைமையாகக் கணிப்பிடல்

கற்பித்தல் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி முன் கூட்டியே திட்டமிட்டு ஆயத்தஞ்செய்து, முழுக் கவனத்தையும் அதன் மீது செலுத்திச் செய்யப்படும் கணிப்பீட்டை முறைசார் கணிப்பீடு என அறிமுகஞ் செய்யலாம். இதற்காக முறைசார் பரீட்சைகளும் செயற்பாடுகளும் பயன்படுத்தப் படும்.

### 2.2 முறைசாரா உத்ததிகளைப் பயன்படுத்தி மாணவரின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும்போதே, அதற்குத் தடங்கல் ஏற்படுத்தாதவாறு தகவல்கள் சேகரிக்கப்படும். இங்கு பிரதானமாக வினாவுதல், மாணவருடன் தனித்தனியாகவோ குழுவாகவோ அளவளாவுதல், மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டுள்ளபோது அவர்களை அவதானித்துத் தகவல் சேகரித்தல், மாணவரின் வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற உத்திகள் பின்பற்றப்படும்.

**இங்கு ஆசிரியரின் தொழில்வாண்மை மிக முக்கியமானதாகும்.** தாம் எடுக்கும் முடிவுகள் மிகச் சரியானவையாக அமையும் வகையில் ஆசிரியர் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்.

எனினும் முறைசாரா உத்திகளின் மூலம் மாணவர்கள் பற்றி விரிவானதும், தரமானதுமான தகவல்கள் பெறப்படுகின்றமையால், அவை கற்றல் - கற்பித்தல் பணிகளைப் பொறுத்தமட்டில் மிகப்பயனுறுதியுள்ளவையாக அமையும் எனலாம்.

ஆசிரியர்கள் தமது மாணவர்கள் பற்றி முறைசாரா வழிகளில் எடுக்கும் முடிவுகளின் தகுதி (Validity) உயர்வானது எனப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன.

## 3.0 கணிப்பீட்டு வடிவங்கள்

**கணிப்பீட்டை** கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தலாம். அதற்கமைய கணிப்பீட்டுச் செயன்முறையை இறுதி நிலைக் (Summative) கணிப்பீடு, தொடர் (Formative) கணிப்பீடு என வகைப்படுத்தலாம்.

**தொடர் கணிப்பீட்டு முறை**

யாதேனும் கற்றல் கட்டத்தின் இடையில் தொடர்ச்சியாக மாணவரின் கற்றல் திறன்களையும், இடர்பாடுகளையும் கண்டறிவதே இதனால் கருப்படுகின்றது. இது தொடர் கணிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத் தரங்களில் மாணவர்கள் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். இல்லையேல் அவர்கள் தொடர்ந்து கற்றல் கடினமானதாக அமையும். இவ்வாறு கற்றலில் அடையும் தோல்வியினால் அவர்கள் மேலும் பின்னடைவார்கள். ஆகவே மாணவரைப் பற்றித் தொடர்ச்சியாகத் தேடியறிதல் ஆரம்பத் தரக் கணிப்பீட்டின் முக்கியமான ஒரு பண்பாகக் கருதப்படுகின்றது.

**இறுதிக்கணிப்பீடு**

குறித்த ஒரு கற்றல் கட்டத்தின் முடிவில், மாணவர்கள் தமது கற்றலை எந்த அளவு வெற்றிகரமாக அடைந்துள்ளனர் என்பதைப் பரீட்சித்தலையே இறுதிக் கணிப்பீடு என்பர். இதன்படி வருடமொன்றின் இறுதியில், குறித்த வருடத்தினுள் கற்பித்த விடயங்களை உள்ளடக்கித் தயாரித்த வினாப்பத்திரம் ஒன்றின் மூலம் மாணவரின் அடைவைக் கணிப்பிட முடியும். எனினும் **இவ்வாறானதொரு கணிப்பீட்டு முறை ஆரம்பத் தரங்களுக்குப் பொருத்தமானது எனக் கருத முடியாது.**

ஆரம்பத் தரங்களில் நியதி (Criterion) சார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனஞ் செலுத்தப்படும்.

**நியதிசார் கணிப்பீடு**

கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதைப் பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும். ஆரம்பத் தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியில், தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், கணிதம் ஆகிய பாடங்களுக்கான கணிப்பீட்டுப் படிவமும் பொதுக் கணிப்பீட்டுப் படிவமும் கணிப்பீட்டு நியதிகளும் தரப்பட்டுள்ளன. கணிதம், முதன்மொழி, சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களுக்காகவும் பொதுக் கணிப்பீட்டுக்காகவும் தயாரிக்கப்பட்ட சில கணிப்பீட்டு நியதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**கணிதம் :**

***எடுத்துக்காட்டு*** : வெவ்வேறு அளவுடைய மூன்று பொருள்களை அல்லது படங்களை ஒழுங்கு வரிசையாக வைப்பார்.

**முதன்மொழி** :

***எடுத்துக்காட்டு*** : இலகுவான வாக்கியங்களை உரத்து வாசிப்பார்.

**சுற்றாடல்சார் செயற்பாடுகள்** :

***எடுத்துக்காட்டு*** : நல்வாழ்க்கைக்காக சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார்.

**பொதுக் கணிப்பீடு**

***எடுத்துக்காட்டு*** : ஏனையோருக்கு உதவி செய்ய விருப்புக்காட்டுவார்.

## 4.0 செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான பிரச்சினைகளையும் அவர்களது திறன்களையும் தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறையாகிய இது அதிக முக்கியத்துவமுடையது. பொதுவாக ஆரம்பத்தர ஆசிரியர்கள் யாவரும் மாணவர் ஒவ்வொருவரதும் வேலைகளைத் தனித்தனியாகக் கோவைப்படுத்தும் வழக்கமுடையவர்களாவார்கள். இது ஒரு மெச்சத்தக்க முயற்சியாகும். எனினும் செயல் அடைவுக் கோவை முறையை இதனிலும் முன்னேற்றகரமான ஒரு முறையாகக் கருதலாம். இதன்படி செயல் அடைவுக் கோவை என்பது மாணவனது திறமைகளும் அவன் கற்றலின்போது எதிர்கொள்ளும் சிரமங்களும் வெளிப்படும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப்பாகும். இது மாணவர்கள் பற்றிய கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாகும். இதனைத் தயாரிக்கும் முறை அந்தந்த ஆசிரியருக்கு ஏற்ப மாறுபடும். இது பற்றிய ஒரு நியம முறை இல்லையாகையால் ஆக்கத்திறனுடைய ஒரு ஆசிரியரினால் தனது ஆக்கத்திறனுக்கேற்ப மிக உயர்மட்டச் செயலடைவுக் கோவையொன்றை வடிவமைத்துக்கொள்ள முடியும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகள் (Samples) உள்ளடங்கும். எழுத்துவேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் ஆகியன இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புக்களையும் இதில் உள்ளடக்கலாம்.

## 5.0 சுருக்கக் குறிப்பு எழுதுதலும் செவ்வைபார்ப்புப் பட்டியல்களை உபயோகித்தலும்

ஓர் ஆசிரியர் தனது மாணவர்களின் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்பாடுகளையும் இனங்காண முயற்சிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வைத்தல் அவ்வாசிரியருக்கு பயனளிக்கும். வகுப்பில் கற்பிக்கும்போது, மாணவர் பற்றிய பல தகவல்கள் ஆசிரியருக்குக் கிடைக்கின்ற போதிலும் இத்தகவல்களைக் கருத்தாழமுள்ளவாறு பயன்படுத்துவது கிடையாது. ஆகவே மாணவர்கள் பற்றி வெளிக்கொணரப்படும் தகவல்களைப் புத்தகமொன்றில் சுருக்கக்குறிப்பாக வைத்திருந்து அவற்றைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும். செவ்வை பார்ப்பு பட்டியல்களைப் பயன்படுத்துதல் பயன்மிக்க மற்றுமொரு முறையாகும். ஆசிரியர் வழிகாட்டற் கோவையின் இறுதியில் தரப்பட்டுள்ள நியதிகளை மாணவர் அடைந்துள்ளனரா எனத் தீர்மானிப்பதற்கு செவ்வை பார்ப்பு பட்டியல்களைப் பயன்படுத்தலாம்

## 6.0 தகவல் அறிக்கைப்படுத்தல் படிவமும் அதனைப் பயன்படுத்தலும்

சேகரித்த தகவல்களைக் குறித்து வைத்து அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நான்கு படிவங்களின் மாதிரிகள் ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன. அவை தாய்மொழி, கணித, சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கணிப்பீட்டுப் படிவங்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

அவற்றின் ஒவ்வொரு மாணவனின் பெயருக்கும் எதிரே, ஒவ்வொரு கற்றல் பேறுக்காகவும் ஒரு கட்டம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்தந்தக் கற்றல் விளைவுகளை அண்மித்துள்ளனரா இல்லையா என சோதித்தறிந்த பின்னர் அதனை இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். பொதுக் கணிப்பீட்டுப் படிவத்தில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டிய பெரும்பாலான ‘‘கற்றல் பேறுகள்’’ வருடம் முழுவதும் கண்டறிய வேண்டிய விதத்தில் பரந்தமைந்துள்ளன. இங்கு ஒரு தவணைக்கு ஒரு மாணவனுக்கு ஒரு கட்டம் வீதம் பயன்படுத்தக் கூடியவாறு ஒரு கற்றல் பேறுக்கு மூன்று கட்டங்கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பெறுபேறின் கீழும் நீங்கள் சேகரித்த தகவல்களின் உதவியுடன், பின்வருமாறு குறியீடுகளைப் பயன்படுத்தி அறிக்கை செய்யலாம்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

யாதேனும் ஒரு கற்றற்பேறு தொடர்பாக மாணவர் வெற்றியைக் காட்டுகின்றனரா என்பதை ஆசிரியர் முடிவு செய்வதற்காகக் குறித்த கற்றற்பேறுக்குப் பொருத்தமானதாகத் தாமே தயாரித்த நியதிகளைப் பயன்படுத்தலாம். வகுப்பிலுள்ள எல்லா மாணவரது அடைவு மட்டங்களையும் பற்றிய முடிவுகள் ஒரே நியதித் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுமாயின் அவற்றின் ஒருசீர்த்தன்மை ஏற்படுவதால், உத்தேசப் பெறுபேற்றை அடைவது கடினமாக அமையலாம்.

## 7.0 கண்டறிதலும் பரிகாரமும்

முறைசாரா - தொடர் கணிப்பீட்டு முறையின் பிரதான நோக்கம் கண்டறிதலாகும். ஒரு மாணவனதும் கணிப்பீட்டுப் படிவத்தில் ''• '' குறியீடு இடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவன் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பரிகாரம் கண்டு, பின்னர் மீண்டும் கணிப்பீட்டுக்கு உட்படுத்தல் வேண்டும். குறித்த ''•'' எனும் குறியீடு, ''✓ '' எனும் குறியீடாக மாறும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடாத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இனங்கண்ட கற்றல் இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அந்தந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானவாறு சிறப்பான பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். இவை ஒவ்வொரு மாணவனும் காட்டும் கற்றல் இடர்ப்பாடுகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படலாம்.

இவ்வாறே குறிப்பிட்ட சில கற்றல் நோக்கங்கள் தொடர்பாக வகுப்பு மாணவருள் பெரும்பாலானோர் ''• '' குறியீட்டைப் பெற்றுள்ளனராயின், அதற்கு ஏதுவான காரணங்கள் பல இருக்க முடியும். அவற்றை இனங்கண்டு பொருத்தமான ஒரு நடைமுறையைப் பின்பற்றி மாணவர்கள் உரிய கற்றல் பேறுகளை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

## 8.0 ஏனைய விடயங்கள்

- ✓ ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை மற்றொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்வி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தீர்மானங்களை எடுத்தல் கடினமானதாகும். ஆகவே மாணவ - மாணவ அடைவுகளை ஒப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

- ✓ ஒரு மாணவனின் தற்போதைய அடைவு மட்டத்தை அவனது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டு, மாணவனது முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெறலாம். எனவே இது பற்றி அக்கறை செலுத்துவதோடு கலைத்திட்டத்தின் நோக்கங்களை எந்தளவுக்கு அடைந்துள்ளனர் என அறிதலும் அவசியமாகும்.

- ✓ தனது வகுப்பிலுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டு உபகரணங்களை தயாரித்துக் கொள்வதில் வகுப்பாசிரியர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

## தாய்மொழி (தமிழ்) கணிப்பீடு - தகவல் அறிக்கைப்படுத்தற் பத்திரம்

| | | | | மாணவர் பெயர் | | வெற்றிகரமாக செய்கிறார் √<br>இடர்படுகிறார்/ மேலும் உதவி தேவை • |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1. | சுற்றாடலில் கேட்கும் ஒலிகளை துல்லியமாக இனங்காண்பார். | முன்மொழித்திறன்கள் |
| | | | | 2. | உருக்களின் ஒற்றுமை, வேற்றுமை, அமைவிடம், திசை ஆகியவற்றை இனங்காண்பார். | |
| | | | | 3. | இரு படங்களிடையே குறைந்த மூன்று வித்தியாசங்களை இனங்காண்பார். | |
| | | | | 4. | நுண் தசைநார் விருத்திக்காக கிழித்தல், வெட்டுதல், நிறந்தீட்டுதல் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுவார். | |
| | | | | 5. | நுழைதல், ஓடுதல், ஏறுதல் பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுவார். | |
| | | | | 6. | படங்களை இனங்கண்டு சரியாகப் பெயரிடுவார். | |
| | | | | 7. | ஒத்த படங்கள், உருக்கள், எழுத்துக்கள் ஆகியவற்றை இனங்காண்பார். | |
| | | | | 8. | வரையறைக்குள் சரியாக நிறந்தீட்டுவார். | |
| | | | | 9. | கோடுகள் வரைவதனூடாக வழியைக் கண்டு பிடிப்பார். | |
| | | | | 10. | மணற் தட்டில் விருப்புடன் எழுதுவார். | |
| | | | | 11. | பேசுவதனைச் செவிமடுத்து சுயமாக பேசுவதற்கு முன்வருவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 12. | படங்களைப் பார்த்து கூறுவதுடன் நினைவுபடுத்தியும் கூறுவார். | |
| | | | | 13. | கதைப் படங்களைப் பார்த்து கதையை கூறுவார். | |
| | | | | 14. | குறில், நெடில் எழுத்தொலிகளை இனங்காண்பார். | |
| | | | | 15. | சரியான கொண்ணிலையில் அமர்ந்து சரியான பென்சிலைப் பிடிப்பார். | |
| | | | | 16. | எழுத்துக்களை இனங்கண்டு சரியான உச்சரிப்புடன் வாசிப்பார். | |
| | | | | 17. | முதல் எழுத்தக்களை (30) அளவு திசைமுகம் உறுப்பு நேர்த்தி முழுமை ஆகியவற்றை அனுசரித்து எழுதுவார். | |
| | | | | 18. | ஒருமை, பன்மைச் சொற்களை படங்களின் துணையுடன் சரியாக இனங்கண்டு வாசித்து அறிந்து கொள்வார். | |
| | | | | 19. | இரட்டை நூள் அல்லது நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதுவார். | |
| | | | | 20. | ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துச் சொற்களை செவிமடுத்து படங்களின் துணையுடன் வாசித்து எழுதுவார். | |
| | | | | 21. | சொற்களை உரத்து வாசித்து சரியான திசைமுகத்துடன் உறுப்பமைய எழுதுவார். | |
| | | | | 22. | பாடல்கள், கதைகளை விருப்புடனும் இரசனையுடனும் போலச் செய்தும் வெளிப்படுத்துவார். | |
| | | | | 23. | விரல் பொம்மைகளை பயன்படுத்தி உரையாடுவதன் மூலம் கற்பனையாற்றலையும் ஆக்கத்திறனையும் வெளிப்படுத்துவார். | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 24. | ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து இரசனையுடனும் போலச் செய்தும் வெளிப்படுத்துவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 25. | பாடல்கள், கதைகளைப் புரிந்து கொண்டு விருப்புடன் சித்திரமாக முன்வைப்பார். | |
| | | | | 26. | பாடசாலையுடன் தொடர்புடைய அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றை விளங்கி சுயமாகத் துலங்குவார். | |
| | | | | 27. | தமது சுய விபரங்களை எழுதிக் காட்சிப்படுத்துவார். | |
| | | | | 28. | விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார். | |
| | | | | 29. | சொற்களைச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 30. | குறியீடுகளைச் சரியாகப் புரிந்து கொண்டு துலங்குவார். | |
| | | | | 31. | எல்லோருடனும் பணிவாகவும் அன்பாகவும் நட்புறவுடனும் உரையாடுவார். | |
| | | | | 32. | உணவுப்பட்டியல்கள், ஒட்டிகள் ஆகியவற்றை வாசித்து தெரிந்து கொள்வதோடு தகவல்களையும் குறித்துக் கொள்வார். | |
| | | | | 33. | செவிமடுத்த கதையொன்றை சுயமாகக் கூறுவார். | |
| | | | | 34. | கதைப் படங்களில் தொடர்பைக் கண்டு பிடித்து கதையொன்றைக் கட்டியெழுப்புவார். | |
| | | | | 35. | தாம் அறிந்த பிராணிகள், பழங்கள் பற்றிய சுயசரிதையைக் கூறுவார். (மூன்று சிறிய வாக்கியங்கள்) | |
| | | | | 36. | ஆத்திசூடிப் பாடல்களை மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார். | |
| | | | | 37. | கிராமிய விளையாட்டுக்களை அறிந்து விளையாடி மகிழ்வுறுவார். | |
| | | | | 38. | தாமாக முன்வந்து பண்டிகைகள் தொடர்பான அனுபவங்களை இரசனையுடன் முன்வைப்பார். | |
| | | | | 39. | பங்குபற்றிய சந்தர்ப்பங்கள், நிகழ்ச்சிகள், சுற்றுலா ஆகியன பற்றிச் சித்திரமாக முன் வைப்பதோடு சில சொற்களையும் எழுதுவார். | |
| | | | | 40. | ஒலி, ஒளி இறுவட்டுக்கள் ஊடாக கிரகித்த பாடல்கள், கதைகள், உரையாடல்கள், தகவல்களை நினைவுபடுத்திக் கூறுவதோடு வினாக்களுக்கும் விடையளிப்பார். | |
| | | | | 41. | சிறுவர் சஞ்சிகைகளில் தமக்கு விருப்பமான பகுதிகளைப் பார்வையிட்டு மிகச் சிறிய வாக்கியங்களைப் பார்த்து உறுப்பமைய எழுதுவார். | |
| | | | | 42. | தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை ஒலி, ஒளி இறுவட்டுக்களின் துணையுடன் வாசிப்பார், பேசுவார். | |
| | | | | 43. | இணையத்தளங்களை பார்வையிட்டு தான் ரசித்த விடயங்களை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்வார். | |
| | | | | 44. | காட்சிப்படங்களைப் பார்த்து சில சொற்களைப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 45. | மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து வாசித்து வினாக்களுக்கு விடையளிப்பார். | |

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் கணிப்பீடு - தகவல் அறிக்கைப்படுத்தற் பத்திரம்

கணிப்பீட்டு அளவுத்திட்டம்

| | |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார் | √ |
| இடர்ப்படுகிறார் மேலும் உதவி தேவை | • |

மாணவர் பெயர்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 1. பாடசாலையின் பொதுக் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார். |
| | | | | 2. ஏனையோர் தொடர்பாக உணர்வுடன் செயற்படுவார். |
| | | | | 3. குடும்ப உறுப்பினர்களால் குடும்பத்துக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு வேலை வீதம் குறிப்பிடுவார். |
| | | | | 4. பிராணிகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக எடுக்கத்தக்க இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிடுவார். |
| | | | | 5. பிராணிகளை அவதானித்து இனங்கண்டு இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுவார். |
| | | | | 6. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். |
| | | | | 7. போதுமான அளவு நீரைப் பருகுவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 8. புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் நிறைவேற்றப்படும் இரண்டு பாரம்பரியங்களைக் குறிப்பிடுவார். |
| | | | | 9. பண்டிகைக் காலத்தில் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து, பொருத்தமானவாறு அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 10. நல்வாழ்க்கைக்காகச் சுகாதாரப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். |
| | | | | 11. தகவல் பரிமாற்றத்தின்போது மரியாதையாகத் துலங்கல் காட்டுவார். |
| | | | | 12. எமக்குத் தேவையானவற்றை வீட்டுத்தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதன் முக்கியத்தவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 13. பயணங்களின்போது தமது பாதுகாப்புத் தொடர்பான கரிசணையை வெளிக்காட்டுவார். |
| | | | | 14. உணவு - பானாதிகள் மூலம் எமக்குக் கிடைக்கும் இரண்டு பயன்களைக் குறிப்பிடுவார். |
| | | | | 15. உணவு அசுத்தமடையும் ஒரு முறையைக் குறிப்பிடுவார். |
| | | | | 16. வேலை செய்யும்போது அதற்குப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறுவார். |
| | | | | 17. கண்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 18. இயற்கையாக நிகழும் எதிர்பாரா அவசர நிலைமைகளின்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பார். |
| | | | | 19. சூரிய ஒளியின் தாக்கம் காரணமாக மனிதனுக்குக் கிடைக்கும் ஓர் அனுகூலத்தையும் ஒரு பிரதிகூலத்தையும் குறிப்பிடுவார். |
| | | | | 20. சூழலின் அழகைக் கூறும் வாக்கியம், கவிதை, பாடல் ஆகியவற்றை முன்வைப்பார். |
| | | | | 21. சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானவாறு சரியான மெய்ந்நிலையை வெளிக்காட்டுவார். |
| | | | | 22. உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உதவி செய்ய முன்வருவார். |
| | | | | 23. விசேட நபர்களுடன் உணர்வு பூர்வமாகச் செயற்படுவார். |
| | | | | 24. கண்ட நிகழ்வை அனுபவத்தை அங்க அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவார். |
| | | | | 25. தாம் கற்ற ஒரு கவிதையைப் பாடலைப் பாடுவார். |
| | | | | 26. தாம் கண்ட ஒரு நிகழ்வைச் சித்திரமாக வரைவார். |
| | | | | 27. தமது சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கம் புரிவார். |
| | | | | 28. சுற்றுப்புறச் சூழல் குறித்துக் கவனமாக நோட்டமிடுவார். |
| | | | | 29. சேகரிக்கும் தகவல்களை வெவ்வேறு விதமாக அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 30. எளிமையான கையாண்டுபார்த்தல்களைச் செய்வார். |

## பொதுக் கணிப்பீடு - தகவல் அறிக்கைப்படுத்தற் பத்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மாணவர் பெயர்<br>கணிப்பீட்டு அளவுத்திட்டம்<br>வெற்றிகரமாகச் செய்கிறார் √<br>இடர்ப்படுகிறார் மேலும் உதவி தேவை • |
| | | | | 1. வகுப்பில் ஏனையோரின்பால் கௌரவத்துடன் செயற்படுகிறார். |
| | | | | 2. பகிர்ந்து பரிமாறிச் செயற்படுவதன் பெறுமானத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 3. சுய சுத்தம் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுகிறார். |
| | | | | 4. தமது சுற்றுப்புறச் சூழலை சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்கிறார். |
| | | | | 5. ஏனையோருக்கு உதவி செய்ய விருப்புக் காட்டுகிறார். |
| | | | | 6. ஏனையோருடன் நட்புடன் உரையாடுகிறார். |
| | | | | 7. நட்புடன் ஏனையோரிடம் உதவி பெறுகின்றார். |
| | | | | 8. சுற்றாடல் மீது அன்பு செலுத்துகிறார். |
| | | | | 9. முடிவை அடையும் வரையில் கவனமாக வேலை செய்கிறார். |
| | | | | 10. உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துகிறார். |
| | | | | 11. பயன்படுத்திய பின்னர் உபகரணங்களை உரிய இடத்தில் வைக்கிறார். |
| | | | | 12. வேலையின் முடிவில் உபகரணங்களையும் இடத்தையும் சுத்திகரிக்கின்றார். |
| | | | | 13. பாதுகாப்புக் குறித்து கவனமாகச் செயற்படுகிறார். |
| | | | | 14. சுய கற்றலில் விருப்புக் காட்டுகிறார். |
| | | | | 15. பொருத்தமான சந்தர்ப்பங்களில் எளிமையான சிங்களச் சொற்களைப் பயன்படுத்துகிறார். |
| | | | | 16. தருணத்துக்கு ஏற்ப சிங்களமொழியில் வாழ்த்து வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். |

# 7.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

## 1.0 அறிமுகம்

தேர்ச்சி எனக் கருதப்படுவது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றின் கூட்டுக் கலவையாகும். பல்வேறு விதங்களில் தேர்ச்சிகள் இருக்க முடியும். சில தேர்ச்சிகள் அதிகளவு திறன் சார்ந்ததாகவும் வேறு சில தேர்ச்சிகள் கூடியளவு அறிவு மனப்பாங்கு சார்ந்ததாகவும் இருக்க முடியும். முதன்மைநிலை ஒன்றைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் சகலரும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித் தியத்தை அடைய வேண்டும் என புதிய ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெளிவாக விளக்கம் பெற்றுக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் இக்கூற்றுகளில் உள்ளடக்கப் பட்டடுள்ளது. அதாவது;

- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என்பதால் கருதப்படுவது யாது?
- முதன்மை நிலை ஒன்றில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளால் கருதப்படுவது யாவை?
- பாண்டித்தியம் என்பதனால் கருதப்படுவது யாது?
- தேர்ச்சி ஒன்றில் பாண்டித்தியம் அடைந்துள்ளமையை எவ்வாறு உறுதி செய்யலாம்? இவ் ஒவ்வொன்றும் தொடர்பாகவும் விரிவாகப்பார்ப்போம்.

### 2.1 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என்பதால் கருதப்படுவது யாது?

கலைத்திட்டமொன்றினை விருத்தி செய்யும்போது அங்கு உள்ளடக்கத்தை தீர்மானிக்கும்போது முக்கிய இடம் வழங்கப்படும். பல்வேறு திறன் மட்டங்களில் இருக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமான விதத்தில் இலகுவானது போன்றே சிக்கலானதுமான சமான தேர்ச்சிகள் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

முதன்மை நிலை ஒன்றில் நிறைவு செய்வதற்கு முன்பு தரம் இரண்டில் மாணவர்கள் யாவரும் கட்டாயமாக உயர் மட்டத்தில் திறனை பெற்றிருக்கவேண்டிய தேர்ச்சித் தொகுதி கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சகல மாணவர்களாலும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கும் இத்தேர்ச்சிகளை நாங்கள் அத்தியாவசியத் தேர்ச்சிகள் என அழைப்போம். இதற்கேற்ப அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் உள்ளடக்கப் படுவதாவது;

- கற்றலை மேலும் விருத்தி செய்து கொள்வதற்குப் பெற்ற அறிவினை நடைமுறைப்படுத்தல்
- சிறந்த நற் பிரசையாகவும் சிறப்பாகவும் வாழ்வதற்கான அத்தியாவசியமான தேர்ச்சிகள்

''சகலருக்கும் கல்வி'' எனும் கோட்பாட்டின் கீழ் சகல மாணவர்களிடமும் குறைந்தபட்ச அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வகுப்பில் சகல மாணவர்களும் பெற்றிருக்க வேண்டிய அதியுயர் தேர்ச்சி மட்டம் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிதான் என ஒருபோதும் கருத வேண்டாம். மிகத் திறமைமிக்க மாணவர்களால் விருத்தி செய்துகொள்ளக் கூடியதெனக் கருதப்படும் தேர்ச்சிகள் இருந்தபோதும் சகல மாணவர் களுக்கும் அத்தியாவசியமானதெனக் கருதப்படாத உயர்மட்டத் தேர்ச்சித் தொகுதியும் இக்கலைத் திட்டத்ததில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை விருப்புக்குரிய (Desirable) கற்றல் தேர்ச்சிகள் என அழைக்கப்படும்.

வகுப்பிலுள்ள சகல மாணவர்களையும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியில் உயர் மட்ட நிலைக்குக் கொண்டு செல்வதுடன், வகுப்பு மாணவர்களில் அநேக மாணவர்களை விருப்பக்குரிய கற்றல் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆசிரியரின் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

### 3.0 முதன்மை நிலை ஒன்றில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளாகக் கருதப்படுபவை யாவை?

முதன்மைநிலை ஒன்றின் இறுதியில் மாணவர்கள் யாவரும் உயர்நிலையில் தம் ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொகுதியொன்று இனங்காணப்பட்டுள்ளது. அவற்றை இனங்காணும்போது தரம் ஒன்று, தரம் இரண்டுக்குரிய பாடத்திட்டங்கள், ஏனைய கலைத்திட்ட சாதனங்கள் யாவற்றையும் ஆழமாக ஆராய்ந்தறிந்ததோடு

மட்டுமன்றி ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள், கலைத்திட்ட விருத்தியாளர்கள், கல்வியியலாளர்கள் போன்றோரின் ஆலோசனைகளும் பெறப்பட்டன. அத்தோடு அத்தியாவசியமென எதிர்பார்க்கும் கற்றல் நிலைகள் பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட நூல்களும் உசாவப்பட்டன.

இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளின் தொகுதி பாட வாரியாக அல்லாது பொதுவான தேர்ச்சித் தொகுதியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்ச்சித் தொகுதியில்,

- **தொடர்பாடல் தொடர்பான**
- **ஆளுமை விருத்தி தொடர்பான**
- **சூழல் தொடர்பான**
- **வேலை உலகிற்கு தயார் செய்தல் தொடர்பான**
- **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான**
- **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுத் தொடர்பான**
- **கற்றலுக்குக் கற்றல் தொடர்பான**

ஆகிய அடிப்படைத் தேர்ச்சிகளுக்குப் பொருத்தமானதாகத் தேர்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4.0 பாண்டித்தியம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஒரு தேர்ச்சியில் உள்ளடக்கப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு தொடர்பான உயர் மட்ட இயலுமையை ஒரு மாணவர் தனது வயதுக்குப் பொருத்தமாக வெளிக்காட்டுவாராயின் அவர் குறித்த அத்தேர்ச்சியில் ''பாண்டித்தியம்'' அடைந்தவராகக் கருதப்படுவார். உயர் மட்டத்தில் திறனைப் பெற்றுள்ளாரா என்பதனை தீர்மானிப்பதற்கு கணிப்பீடு செய்வதனூடாக சேகரித்த பல்வேறு தகவல்களும் குறித்த நியதிகளையும் தேர்ச்சிகளுக்குப் பொருத்தமாக கவனத்தில் கொள்ள வேண்டி ஏற்படும்.

ஏதாவது ஒரு தேர்ச்சியில் **"பாண்டித்தியம்"** அடைந்த மாணவனிடம் காணக்கூடிய பிரதான இலட்சணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- குறித்த தேர்ச்சி மட்டத்திற்கு இயைபான அடுத்த உயர் மட்டத்திற்குப் பிரவேசிக்கத் தயார் என்பதைக் காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி மூலம் தொடர்ந்து கற்பதற்கான ஆர்வத்தைப் வெளிக்காட்டவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பாகத் தனக்குள்ள தன்னம்பிக்கையை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி சார்ந்த அறிவு, திறன் ஆகியவற்றை பிறிதொருவருக்குக் கூறுவதற்கோ, கற்பிப்பதற்கோ முடியும் என்பதை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பாக விசேட ஈடுபாடும், விருப்பும் உண்டென்பதை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றைச் சுயமாகத் தீர்த்துக் கொள்ளும் இயலுமையைக் காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பான கருமங்களை கூடியளவு சிறப்பாக ஆற்றுவார்.
- மனப்பாங்கு சார்ந்த தேர்ச்சிகளுக்கு உரிய மெய்ப்பாடுகளை எப்போதும் வெளிக்காட்டுவார்.

**5.0 தேர்ச்சி ஒன்றில் பாண்டித்தியம் அடைந்துள்ளமையை எவ்வாறு உறுதி செய்யலாம்?**

தேர்ச்சியொன்றில் பாண்டித்தியத்தை உறுதி செய்தலானது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போதிலேயே நிறைவேற்ற வேண்டிய செயலொழுங்காகும். அதற்குப் பயன்படுத்தக் கூடிய இரண்டு பிரதான முறைகள் இனங்காணப்படடுள்ளன.

(அ) முறைசாரா கணிப்பீட்டு முறை மூலம் தொடர்ச்சியாக சேகரித்த தகவல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுத்தல். (தொடர் கணிப்பீட்டுத் தகவல்கள் மட்டும்)

(ஆ) மேற்படி (அ) பகுதியில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக ஒரு இறுதிக் கணிப்பீட்டு மூலமாகவோ அதிக தடவைகளிலான இறுதிக் கணிப்பீட்டின் மூலமாகவோ தீர்மானம் எடுத்தல்

மேற்படி முறைகளைப் பயன்படுத்தி அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அண்மித்துள்ளார்களா என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள், அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.